

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# ஏச்சம்பாய்

சு. சமுத்திரம்

ஏகலைவன் பதிப்பகம்
சென்னை - 41

# ஈச்சம்பாய்

(சிறுகதைத் தொகுப்பு)
உரிமை ஆசிரியர்க்கு
முதல் பதிப்பு, டிசம்பர் 1998.
முகப்போவியம் - புகழேந்தி
192 பக்கங்கள்
விலை ரூ. 35/-
ஏகலைவன் ஒளி அச்சு

அச்சிட்டோர்
ஸ்டேட் ஃபாஸ்ட், சென்னை - 600 013.

வெளியீடு

ஏகலைவன் பதிப்பகம்
9, இரண்டாவது குறுக்குத் தெரு,
டாக்டர். இராதா கிருஷ்ணன் நகர்,
சென்னை - 600 041.

☎ : 4917594

# பதிப்புரை

சு. சமுத்திரத்தின் வாடாமல்லியும், பாலைப்புறாவும் இன்றைய சமூக இயக்கங்களுக்கு பயன்பாட்டு இலக்கியமாய் மாறி உள்ளன. இவரும், வாடாமல்லிக்கு அமரர் ஆதித்தனார் பரிசாகக் கிடைத்த ஐம்பதாயிரம் ரூபாயில், இந்த நாவலின் தாக்கத்தால் ஏற்பட்ட அரவானிகள் சங்கத்திற்கு பத்தாயிரம் ரூபாய் வழங்கினார். ஒரு எழுத்தாளன் எந்த மக்களை அடித்தளமாக வைத்து எழுதுகிறானோ, அந்தப் படைப்பிற்கு பரிசு கிடைத்தால், அதில் ஒரு பகுதியை சம்பந்தப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டும் என்பது ஏகலைவனின் கருத்துமாகும். இந்த எளிய பணி தொடரும்.

சு. சமுத்திரம், பயன்பாட்டு இலக்கியத்தைப் படைப்பதாக இந்த நூலின் பின் அட்டையில் தெரிவித்தக் கருத்து, இதற்கு ஆய்வுரை எழுதிய முனைவர் இரா. இளவரசு அவர்களின் பார்வைக்கு சென்றதில்லை. ஆனாலும், அவரும், பயன்பாட்டு இலக்கியம் என்ற சொற்பதத்தை சு. சமுத்திரத்திற்குப் பொருத்தியிருப்பது ஒரு ஒருமையைக் காட்டுகிறது. படைப்பாளியும், ஆய்வுரையாளரும் தங்களையறியாமலே ஒன்றிப் போகும்போது, அதுவே இலக்கியச் சிறப்பாகிறது.

ஏகலைவனின் ஆறாவது வெளியீடான இந்தச் சிறுகதைத் தொகுப்பிற்கு, ஆய்வுரை வழங்கிய முனைவர் இரா. இளவரசு அவர்கள், சென்னை மாநிலக் கல்லூரியில் ஒய்வுபெற்ற போராளித் தமிழாசிரியர். இந்த ஒய்விற்குப் பிறகும், ஒய்வு கிடைக்காமல் சமூக பணிகளையும், இலக்கியப் பணிகளையும் கண் துஞ்சாது, மெய் வருத்தம் பாராது இயக்கும் நேர்மையான சிந்தனையாளர். இந்த ஆய்வுரையே இவரது உழைப்புக்கு கட்டியம் கூறும். இவரது ஆய்வுரை, பதிப்பகத்திற்கும், படைப்பாளிக்கும் கிடைத்த ஒரு இலக்கிய கௌரவம்.

பேராசிரியர் இரா. இளவரசைப்போலவே, மிகச்சிறந்த சிந்தனையாளரும், மணிவாசகர் பதிப்பகத்தின் உரிமையாளருமான பேராசிரியர் மெய்யப்பன் அவர்களும், இந்தப் பதிப்பகத்தின் நிர்வாகி குருமூர்த்தி அவர்களும் இந்தத் தொகுப்பிற்கு அச்சுரதம் கொடுத்தவர்கள். இதற்கு முகப்போவியம் தந்த ஓவியப் போராளி புகழேந்தியும் மிகச் சிறந்த சமூகச் சிந்தனையாளர். இவர்களின் ஒத்துழைப்போடு இந்தத் தொகுப்பு வெளிவருகிறது. இது வெற்றிபெறுவதில் வியப்பேதுமில்லை.

**ஏகலைவன்**

# உரைகல்

## தமிழறிஞர் - முனைவர். இரா. இளவரசு

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் பெரும்பாலும் இதழ்சார் இலக்கியமே. இதழியல் நீக்குப் போக்குகளைக் கருத்தில் கொண்டு எழுதப்படும் கதைகள் இதழ்களின் பண்பு நிலைகளுக்கு ஏற்ப அமைவதை உணர முடியும். இதழ் நடத்துவோரின் விருப்பு வெறுப்பு, எதிர்பார்ப்பு முதலியவை எழுத்தாளனின் படைப்பு உரிமையில் பங்கு கொள்கின்றன. ஓர் எழுத்தாளனே, ஓர் இதழில் எழுதும் கதைக்கும் பிறிதோர் இதழுக்கு எழுதும் கதைக்கும் வேறுபாடு காண முடியும். எழுத்துக்களின் தரத்தை வரையறுப்பதில் இதழ்களும் பங்கு பெறுவதைத் தவிர்க்க முடியாது. இந்தத் தொகுப்பில் இடம் பெறும் சிறுகதைகள், இருபதாண்டுகளில் (1978-1998) பல்வேறு இதழ்களில் எழுதப்பெற்றவை. இதழ் நடத்துவோரின் கூட்டல், குறைத்தல், தலைப்பு மாற்றங்களுக்கு இவையும் உள்ளாகி இருக்கலாம். ஆனால் இந்தக் கதைகள் நூல் வடிவில் வரும்போது, தன் விருப்பத்திற்கு ஏற்பத் திருத்தியமைக்கும் வாய்ப்பு படைப்பாளிக்குக் கிடைக்கிறது.

### பயன்பாட்டு இலக்கியம்

மக்கட் பெருங்கடலுள் இரண்டறக் கலந்து 'மானிட சமுத்திரம் நானென்று கூவு' என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். எழுத்தாளர் சமுத்திரமும் இந்த மனித நேயக்குரலைத் தனது எழுத்துக்களில் இடைவிடாது எழுப்பிக் கொண்டு வருபவர். 'எழுத்து என்பது சுவையுணர்ச்சிக்குச் சொந்தமானது; இன்பம் பயப்பதே அதன் இறுதி நோக்கம்' என்பதை ஏற்றுக் கொள்ள மறுப்பவர். நூல் என்பது 'மாந்தரின் மணக்கோணல்களை மாற்றியமைக்க வேண்டும். அறட்,

பொருள், இன்பம், வீடு அடைதல் அதன் பயன்' என்பது நமது நெடிய மரபின் ஆணிவேர்க் குரலாகும். அம்மரபைத் தழுவி வையத்தைப் பாலித்திட எழுதுகோல் ஏந்திப் பயன்பாட்டு இலக்கியங்களைப் படைத்து வருபவர் நண்பர் சமுத்திரம்.

கண்முன்னே நடக்கும் கொடுமைகளை எதிர்த்துக் குரல் கொடுக்கும் துணிச்சல்!

காலில் விழும் பண்பாட்டுச் சீரழிவைக் கான்றுமிழும் நெஞ்சுரம்!

மனிதமனத்தின் மென்மையை மேன்மையை ஈரங்கசியும் இழைகளோடு எடுத்துக்காட்டும் நுட்பம்!

நெஞ்சிலுற்றதைச் செய்கையில் நாட்டும் நேர்மை!

## வெள்ளைக்கருப்பு

இப்பண்புகளின் ஒட்டுமொத்தமே சமுத்திரம் என்னும் படைப்பாளி. இவர் 'வெள்ளை வெளேரென்ற கருப்பு மனிதர்'! பூசிமெழுகாமல் ஒளிவுமறைவின்றித் தனக்குச் சரியெனப் பட்டதைப் பலர் நடுவே சாற்றும்போது, இவர் வெள்ளை மனிதர்! ஒடுக்கப்பட்டவர், ஒதுக்கப்பட்டவர்களாகிய 'பாவப் பட்ட மனிதர்கள்' பக்கம் சார்ந்து நின்று குரல் கொடுப்பதால் இவர் கருப்பு மனிதர்!

பல்லாண்டுகள், நடுவண் அரசில் பணியாற்றிய எழுத்தாளர் இவர். தன் கதைகளில் அலுவலகச் சூழலைக் காட்சிபடுத்தும் வகையில் நேர்த்தியாகப் படம் பிடித்து வருகிறார். சாகித்திய அக்காதெமி விருதுபெற்ற 'வேரில் பழுத்த பலா'விலிருந்து இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள 'ஈரத்துணி' உள்ளிட்ட பல கதைகள் இதற்குச் சான்றாக அமைந்துள்ளன.

'அலுவலகப் பவுர்ணமி நாள்' ஆகிய சம்பள நாளின் பரபரப்பும், கந்துவட்டிக்காரன், இன்ஸ்டால்மென்ட் புடவை வியாபாரி, மாதச் சீட்டுக்காரன், நொறுக்குத் தீனி வியாபாரி எனப் பலரின் படையெடுப்பும், சம்பளத்தில் பலவகையான

கடன் பிடிப்பும், பணியாளர்களின் உரையாடலும் அலுவலகச் சூழலைக் கண்முன்னே கொண்டுவந்து விடுகின்றன. (ஈரத்துணி).

**'சங்கக்'காலம்**

சாதி உணர்வு, மோதல்களாக வெடிக்கும் 'சங்கக்'காலம் இது! அண்ணன் தம்பியராய், அக்காள் தங்கையராய்ப் பல சாதி மக்களும் ஒட்டுறவாய் வாழும் ஊர்ப்புறங்களில் அடிக்கடி மோதலும் சாதலும்! வசதி படைத்த சிலர் தலைவர்களாய், அதிகாரிகளாய்ப், பின்னிருந்து, அப்பாவி மக்களை உசுப்பிவிடும் கொடுமை! பிற்பட்டோர் தாழ்த்தப்பட்டோரிடையே நடந்துவரும் இந்தச் சாதி மோதலைக் கதைகளாக்கித் தனது சமூகப் பொறுப்புணர்ச்சியைத் தொடர்ந்து வெளிப்படுத்திவருவதில் சமுத்திரத்திற்குத் தலையாய தனி இடமுண்டு. 'ஒரு சத்தியத்தின் அழுகை'யில் இருந்து இதை உணர்ந்து வருகிறேன். இத் தொகுப்பிலும் 'பிணமாலை' 'உயிர் ஊஞ்சல்' கதைகள் சாதிச் சிக்கலைக் கருவாகக் கொண்டவை. மோதிக் கொள்பவர்கள் எந்தச் சாதியினர் என்பதை வெளிப்படையாகச் சொல்லாமல் நம் உய்த்துணர்வுக்கே விட்டு விடுகிறார் ஆசிரியர். அதுவும் ஒரு கதையில் தாக்க வருபவர்கள், வெளியூர் எதிராளிகளின் சாதியைத் தெரிந்துகொள்ளப் பலமுறை முயன்றும் முடியாமற் போவதாகவும் இறுதியில் ஒரு நெருக்கடியால் இரு தரப்பினரும் ஒரே வண்டியில் இணைந்து செல்வதாகவும் இயல்பாகக் காட்டிச் செல்கிறார். மோதும் களத்தில் மனித மனத்தின் மேன்மையான பகுதியை வெளிப்படுத்தும் வகையில் ஒரு குழந்தையின் செயல்கள் சிறக்கின்றன. கத்தி கம்புகளோடு நிற்கும் எதிரிகள்! எதிரிகள் என்று அறியாத இரண்டு வயதுக் குழந்தை அவர்களைப் பார்த்துச் சிரிப்பதும், ஒருவரைத் 'தாத்தா' என்று அழைப்பதும், துண்டைப் பிடித்து இழுப்பதும் மங்கியிருக்கும் மனிதப் பண்பைத் தூண்டிவிடும் நிகழ்ச்சிகளாக அமைகின்றன.

## இ.ஆ.பா.க்கள்

ஆட்சித்துறையிலும், காவல்துறையிலும் இருப்பவர் சிலர் சாதிச் சங்கத்தினராகச் செயற்படுகின்றனர். தனக்கு வழங்கப் பட்ட பதவி நீட்டிப்பு வேண்டாமென்று உரிய காலத்தில் ஓய்வுபெற்ற நேர்மையான இ.ஆ.ப. அதிகாரி பழனிச்சாமி! இவரைச் சாதிச் சங்கத்திற்குத் தலைவராக்க முடிவு செய்து அறிவிக்க வந்த சாதிக்காரர்கள்! அவர்களில் சாதிவெறி பிடித்த இ.ஆ.ப. இளைய அதிகாரி ஒருவர் - பழனிச்சாமியின் மகளைப் பெண்பார்த்துச் சென்று மருமகனாவார் என்னும் எதிர்பார்ப்பில் இருப்பவர்! சங்கத் தலைவர்க்குப் பல வசதிகள் செய்து தரப்படும் என்று சொல்கின்றார். இந்த நிலையில் பழனிச்சாமி 'மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் வாங்குவோர் எல்லோரையும் சமமாகக் கருதவேண்டும். சாதி உணர்ச்சி கூடாது' என்று அறிவுரை கூறிச் சங்கப் பெறுப்பை ஏற்க மறுத்துவிடுகிறார். திருமணம் தடைப்பட்டு விடுமோ என வருந்துகின்ற மனைவி, மகள் ஒருபுறம். 'தேறாத கேஸ்' 'கிறுக்கன்' என்னும் சாதிக்காரர்கள் ஒருபுறம். இவர்களிடையே எதை இழந்தாலும் மனிதத் தன்மையை இழக்க விரும்பாத மாவீரராகப் பழனிச்சாமி! அதிகாரிகள் எப்படி இருக்க வேண்டும், எப்படி இருக்கக் கூடாது என்பதைப் பணியில் இருப்பவர்களுக்கும், ஓய்வு பெற்றவர்களுக்கும் உணர்த்தும் பயன்பாட்டு இலக்கியமாய்ச் சிறக்கிறது 'பிணமாலை'.

## ஒரு பூ மலர்வதுபோல....

என் நெஞ்சை மிகவும் நெகிழச் செய்த கதை 'கட்டக் கூடாத கடிகாரம்'. ஒரு பூ மலர்வதுபோல இயல்பாக அவிழ்ந்து மணக்கிறது. உணர்வு மயமாகி ஒன்ற வைக்கிறது. வழக்கமாக எதிர்கொள்ளும் கதை மாந்தர்கள் அல்லர் இதில் வருபவர்கள். பணியிடைக்காலத்தே பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு, தானே நடக்க இயலாத பஞ்சாபகேசன்! திறமையான அரசு அதிகாரியான அவரைக் குளிப்பாட்டுவது முதல் அலுவலகத்துக்குக் கொண்டுசெல்வது, அழைத்து வருவது உட்பட அனைத்துப் பணிவிடைகளையும் தோழியாய்த்,

தாயாய்ச் செய்துவரும் மனைவி லட்சுமி மாமி! குழந்தையில்லாத இவர்களின் நடப்புகளை உணர்வுகளைச் சுற்றிக் கதைப் பின்னல்!

பஞ்சாபகேசன் ஓய்வுபெறும் நாளில் அலுவலகத்தில் வழியனுப்பு விழா! இறுதியில் ஏற்புரை நிகழ்த்திய பஞ்சாபகேசன், மனைவியை விழி ஆடாமல் பார்த்துக் கைகளை உயரே உயரே தூக்கிக் கும்பிடுகிறார். உடனே இலட்சுமி மாமி "ஏன்னா, ஏன்னா' என்று பதறி எழுகிறார். "பஞ்சாபகேசன் கும்பிட்ட கரங்களை இறக்காமல், கொட்டும் விழிகளைத் துடைக்காமல், உடலாட, உயிராட நின்றார். பிறகு கூட்டத்தைப் பார்த்து மீண்டும் திரும்பி, 'எல்லாத்துக்கும் இந்த உத்தமி... இந்த' என்றார். பங்சாபகேசனால் பேச முடியவில்லை. கூட்டத்தினரின் கண்களிலும் ஒட்டுமொத்தமாய் நீர் சுரந்தது." கதையில் நெஞ்சைக் கரையச் செய்துவிடும் பகுதி இது. தியாகத்தின் உருவமான மாமிக்குக் கழுத்தில் புற்று. இன்னும் ஒரு மாதம்தான் உயிர் வாழப் போகிறார் என்று கதை முடியும்போது நெஞ்சம் கனத்துப் போகிறது. இந்தக் கதை என்னைப் பாதித்ததை நண்பர் சமுத்திரத்திடம் பகிர்ந்து கொண்டபோது 'பஞ்சாபகேசனும் லட்சுமியும் வாழ்ந்த மாந்தர்கள், நிகழ்ச்சிகளும் உண்மையானவை' என்றார். இரக்கம் இன்னும் அதிகமானது.

## கருநாடகக் கதைகள்

இரக்கம் என்பது அனுபவத்தைப் பகிர்ந்தளிப்பதோடு அறிவை, விரிவு செய்வதாகவும், கண்டவற்றைப் புதிய ஒளியில் காட்டுவதோடு காணாதவற்றைப் புலப்படுத்துவதாகவும் அமைய வேண்டும். கருநாடக மாநிலத்தில் செய்தி விளம்பரத் துறை அதிகாரியாகப் பணியாற்றியபோது அங்குப் பல பகுதிகளுக்கும் சென்று அடித்தட்டு மக்களோடு பழகி அவர்களை மையமாகக் கொண்டு பல கதைகள் எழுதியவர் சமுத்திரம். கருநாடக மக்களைப்பற்றி அதிகமான கதைகளை எழுதிய தமிழ் எழுத்தாளர் இவர் என்றும் கூறலாம். புதியனவற்றைப் புலப்படுத்தும் வகையில் அமைந்துள்ள அக்கதைகளில் மலைவாழ் மக்களின் பழக்க வழக்கங்கள்,

பழங்குடி மக்களிடையே நிலவும் தேவதாசிமுறை முதலியன பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள 'ஈச்சம்பாய்' அப்படி அமைந்த கதைதான். குருவி சாதி மலைமக்களின் உடைமுறை, நடைமுறை அடிப்படையில் பின்னப்பட்ட இக்கதையின் தலைவி பெல்லிபாய், ஒரு குழந்தைக்குத் தாயான விதவை. இவள் வேறு குலத்தைச் சார்ந்த ஒருவனைக் காதலிப்பதும் அதற்குத் தடையேற்படுவதும், காதலனா, குழந்தையா என அல்லாடித் தாய்மை மேலோங்குவதும் இயல்பாகச் சித்திரிக்கப்படுகின்றன.

ஆகக் கடன்பட்டு மகனை அமெரிக்காவுக்கு அனுப்பி விட்டுக் கடன் அடைபடாத கவலை ஒருபுறமும், மகன், பணம் அனுப்ப வில்லையே என்னும் வருத்தத்தையும் மீறி, அங்கு அவன் நன்றாக வாழ்ந்தால் போதும் என்னும் பாசம் ஒருபுறமாக ஊசலாடும் பெற்றோரைப் 'பாசக்கணக்கு' காட்டுகிறது.

**விலங்குகள் - பறவைகள்....**

**மனித உணர்வுகளைத் திறம்பட** வரையும் சொல்லோவியரான சமுத்திரம், விலங்குகள், பறவைகள் முதலியவற்றின் வாழ்முறை களையும், சுற்றுச்சூழல் இயற்கை வளங்களையும் கூர்ந்து நோக்குவதில் வல்லவர். 'ஞானப் பரிணாமம்' என்னும் உருவகக் கதையில் குரங்குகளின் இயல்பை நுணிகி நோக்கி விளக்கியுள்ள திறத்தை முன்னரே கண்டு வியந்திருக்கிறேன். இத்தொகுப்பில் "காதல் குருவிகளின் பார்வையிலே....' என்னும் கதையில் பறவைகளின் இயல்புகள், அவை கூடு கட்டும் நுட்பம் முதலியன விரிவாகப் பேசப்படுகின்றன. பறவைகளில் ஓர் இணை தனிமைப்படுத்தப் பட்டுக் கதையினூடே வரும் மானிடக் காதல் இணையொடு தொடர்புப் படுத்தப்படுகிறது. இறுதியில் மானிடக் காதலின் போலித்தன்மை புலப்படுத்தப் படுகிறது. நாய்களின் இயல்பைக் கூர்ந்து நோக்கி "ஒரு நாய் இன்னொரு நாயைத் துரத்தும்போது, துரத்தப்பட்ட நாய், வாலை, காலுக்குள் விட்டாலோ, இல்லன்னா மல்லாக்கப்படுத்து நாலு கலையும் மேலத் தூக்குனாலோ கடிக்க வந்த நாய் கடிக்காது. ஆனால் இந்த மனுசன்மட்டுந்தான், எதிரி

கையெடுத்துக் கும்பிட்டாலும் கும்பிட்ட கையையே வெட்டுவான்" என்று மனிதக் கீழ்மை பேசப்படுகிறது.

## சொல்லோவியம்

ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குச் செல்லும் வழியில் அச்சந்தரும் அடர்ந்த காடு: "இருபக்கமும் பாதைக்கு வேலியான தாவரக் குவியல்கள்... ஈச்ச மரங்களும் பனை மரங்களும் இடித்துக் கொள்கின்றன. கோணல் தென்னை மரங்கள் ஒன்றுடன் ஒன்று குஸ்திக்குப் போவதுபோல் முனைப்போடு நிற்கின்றன. கரடிப் பயங்காட்டும் கன்றுப் பனைகள். பழுத்த நரைவிழுந்த கிழவன்போல் புழுத்த ஓலைகளோடு நிற்கும் பனைமரங்கள்... இவற்றில் சில இடிவிழுந்த உச்சிப் பொந்துகள்... முட்பாம்புகளாய் படமெடுக்கும் கருவேல மரங்கள்.... அவற்றின் மேல் படரந்து உடம்பைச் சிதைத்துக்கொள்ளும் ஊணான் கொடிகள்... மற்போர் செய்வதுபோல் நெக்கியடித்து நிற்கும் சப்பாத்திக் கள்ளிகள், கற்றாழைகள்... இடைவெளிகளை இட்டு நிரப்பும் சுடுகாட்டு எருக்கஞ்செடிகள்...." நீண்ட வருணனையின் ஒரு பகுதி இது. பலவகை மரஞ்செடி கொடிகளை விளக்கும் இப்பகுதியில் இடம்பெறும் சொல்லாட்சிகள் கதையின் பிற்பகுதியில் நிகழவரும் கொலைவெறித் தாக்குதலைக் குறிப்பாகக் காட்டுகின்றன. இங்கே மொழியைச் சிறந்த கலைநுட்பத்துடன் கையாளும் தேர்ந்த கலைஞராகச் சமுத்திரம் தென்படுகிறார். (உயிர் ஊஞ்சல்).

ஒருவன், இன்னொருவன் மனைவியைப் புகழ்கிறான். "மேடம்... ஃபாரஸ்ட் பகுதிக்குப் போயிருக்கீங்களா... கோணலான தென்னை மரங்கள் பக்கத்துல, முள்ளம்பன்றி மாதிரியான ஈச்சமரங்களின் அருகில், கன்னங்கரேலென்று இருக்கிற பனைமரங்களுக்குச் சமீபத்துல ஒரு மரவகை மட்டும் பளபளப்பாய், ஆகாயத்துக்கும், பூமிக்கும் இடையே நேர்கோடு போட்டதுமாதிரி நளினமாய், ஒயிலாய் நிற்கும். அதுதான் பாக்குமரம். இந்தக் குடியிருப்புக் காட்ல வெவ்வேறு பெண் மரங்கள்ல நீங்க ஒரு பாக்குமரம். எஸ் மேடம் யூ ஆர் எ அரக்னட் ட்ரீ" கேட்பவள் மனத்தில் சலனத்தை ஏற்படுத்திய திட்டமிட்ட வருணனை இது. அந்தச் சலனமே, அவள் கணவன்

மனத்திலும் குடிபுகுந்து அல்லற்படுத்துவதே 'பாக்குமரம்' கதையின் மைய இழை.

**எகத்தாள நடை**

சொல்ல வருவதை நறுக்குத் தெறித்தாற்போல் ஒரு தொடரிலேயே உணர்த்திவிடுவது ஆசிரியர்க்கு ஆகிவந்த ஒன்று.

வாயை, ஆபாச ஊற்றாக்கி நாடறிந்த பேச்சாளராகி விட்டார்.

அப்போதைய நல்லவளான அந்தப் பெண் அமைச்சர்.

'அடப்போடா! என்பதுபோல் வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருந்தாள்.'

'அன்று அலுவலகப் பவுர்ணமி நாள்.'

இப்படிப் பல இடங்கள்!

புதுமைப்பித்தன் கதைகளில் இழையோடும் நையாண்டிக் குறும்பைச் சமுத்திரத்தின் பழைய கதைகளில் பரவலாகக் காணலாம். இந்தத் தொகுதியிலும் சில இடங்கள்:

அலுவலக நிர்வாகியான முதியவர் அங்குப் பணியாற்றும் மீனாவைக் கண்களால் அளவெடுக்கிறார். "அவளைப் பார்த்த அவரது கண்கள் மார்பகத்திற்கு வந்ததும், மூடிக்கொண்டன. 'சிவசிவ' என்று வாயைப் பேச வைத்தன. பின்னர் மனதிற்குள் கஷ்டப்பட்டு அவளை ஒரு மகளாகப் பாவித்துக் கொண்டார்."

சம்பள நாளில் அலுவலகத்தில் "இன்ஸ்டால்மென்ட் புடவை வியாபாரியைப் பார்த்த மல்லிகா, கட்டிய புடவை நழுவிப் போனதுபோல் தவித்தாள். மாதச்சீட்டுக்காரனைப் பார்த்த சிங்காரம், தானே ஏலத்தில்போகப் போவதுபோல் தவித்தான்."

"கோதையம்மா நீட்டிய டெலிபோனை, ஒரு பயில்வான் கர்லாக் கட்டையை எடுப்பதுபோல் ராமையா எடுத்தார். ஆத்திரத்தில் டெலிபோன் குமிழை, திருதராஷ்டிரன் வீமன் சிலையைப் பிடித்ததுபோல் பிடித்தபடியே எகத்தாளமான குரலில் கேட்டார்".

ஆம்! சமுத்திரத்தின் எகத்தாள நடைக்கு எடுத்துக்காட்டுகள் இவை.

கதை மாந்தர்களின் மன உணர்ச்சிகளை மிகத் துல்லியமாகக் காட்டும் உரையாடல் பகுதிகள் பல. அவற்றுள் இரண்டு:

எந்தக் குற்றமும் செய்யாத தங்களைக் கொலை செய்ய வரும் கூட்டத்தினரைப் பார்த்து "எங்க முகத்தப்பாருங்கய்யா... நாங்கெல்லாம் ஒங்களுக்கு எதிரியாய்யா? என்ன தப்புயா செய்தோம்? அதையாவது சொல்லிட்டு வெட்டுங்கய்யா" என்று முறையிடும் பகுதி ஒன்று.

## மொழி வழக்குகள்

தென்தமிழ் நாட்டைச் சார்ந்த சமுத்திரத்தின் கதைகளில் அந்தப் பகுதிப் பேச்சு வழக்கும், வட தமிழ்நாட்டுப் பேச்சு வழக்கும் கைகோர்த்துச் செல்கின்றன. அடித்தட்டு மக்கள் வழக்கோடு, அக்கிரகாரத்து வழக்கையும் அழகாகப் பதிவு செய்துவிடுகிறார். தொலைக்காட்சித் 'தமிங்கிலமும்' அவர் பார்வைக்குத் தப்புவதில்லை.

"ஏளா எருமைமாடு... அப்பா சொல்லுறது காதுல விழலே.... ஒன் சோலியப் பாத்துட்டுப் போயேம்ளா... முடிச்சாச்சா"

"முடிச்சாச்சு... இன்னுமாளா நிக்கே..."

- இது தென் வழக்கு. (118)

"என் கொயந்த... என் கொயந்த... என் கொயந்தயத் தூக்கிக்கினு போறான். கொயந்தய வாங்குங்க...." - இது வட தமிழ்நாட்டு அடித்தட்டு வழக்கு (142)

"நோக்கு இப்போ இருபத்தெட்டு வயசு இருக்குமோ? கல்யாணம் ஆகி ஆறு வருஷம்தானே இருக்கும்? கடைசி வரைக்கும் ஒன் ஆத்துக்காரர் எப்படி இருக்கார்னு பாருடி. இவரும் நானும் வாழ்ந்த வாழ்க்கையும் இவர் என்னை வச்சுண்டிருந்த நேர்த்தியும் லோகத்துல யாருக்கும் வராதுடி..."

இது எல்லோருக்கும் தெரிந்த வழக்கு.

இன்றைய இளந் தலைமுறை தொலைக்காட்சியின் தாக்கத்தால் சீரழிவுக்கு உள்ளாவதை இயல்பாக விளக்கும் 'பெரியம்மா மகன்' கதையில் தொலைக்காட்சித் தமிழை ஆங்கிலங் கலந்த தமிங்கலத்தை அப்படியே கையாள்கிறார் ஆசிரியர். தொலைக்காட்சி நிறுவனம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியொன்றுக்கு வந்திருப்பவர்களை நோக்கி அந்நிறுவனத்தின் சார்பில் சிம்பா என்னும் பெண்மணி பேசுகிறார்.

"ஹாய் பாய்ஸ் அண்டு கேர்ள்ஸ்! உங்கள் 'ஜிப்சி' சிம்பாவோட மார்னிங் வணக்கங்கள்... ஒகே... சப்ஜெக்ட்டுக்கு வருவோமா? 'ஜிப்சி' நிறுவனத்தின் சார்பில் தொலைக்காட்சியில் நான் கொடுத்த இன்விடேஷனுக்கு இணங்கி இங்கே வந்திருக்கிற உங்களுக்கு என்னோட மெனி மெனி தேங்ஸ். இந்த நிகழ்ச்சி புதுமையானது. பொதுவாக நம்மோட மெஜாரிட்டி எங்ஸ்டர்ஸ் காதலில் ஈடுபடுறதில்லங்க. கேக்கிறதுக்கே கஷ்டமாயில்ல? அதுதான் பேக்ட்டுங்க..."

பாத்திர வளர்ப்புக்குப் பயன்படும் இந்த உரையாடல் புதிய 'மணிப் பிரவாளமாக' அமைந்துள்ளது. தொலைக்காட்சித் தமிழ் நிகழ்ச்சிகளில்தான் களையப்படவேண்டிய இத்தகைய கலப்படம்! அளவுக்கதிகமான ஆங்கிலக் கலப்பில் சில படைப்பிலக்கியவாதிகளுக்கு ஆராக்காதல்! நண்பர் சமுத்திரத்தின் எழுத்துகளில் காலவோட்டத்தில் இக்கலப்பு குறைந்து வந்துள்ளது மனங் கொள்ளத்தக்கது.

## உய்த்துணர்தல்

சிறந்த இலக்கியம், சில செய்திகளை வெளிப்படையாகச் சொல்லாமல் உய்த்துணர்வுக்கு விட்டுவிடும். மகளுக்குப் பார்த்த மாப்பிள்ளை என்னும் மையக்கருத்தில் வரையப்பட்ட 'முகமறியா முகம்', மாப்பிள்ளை, 'சாண்பிள்ளை'தானா என்பதை இறுதிவரை விளக்காமல் செல்கிறது. வெளிப்படையாக விளக்காததே இக்கதைக்குரிய சிறப்பாக அமைந்து விடுகிறது. சாதி மோதல்கள் பற்றிய கதைகளில் முன்னர் வெளிப் படையாகச் சாதிகளைக் குறிப்பிட்ட சமுத்திரம், இப்போது

'உங்களுக்குத்தான் தெரியுமே, உய்த்துணர்ந்து கொள்ளுங்கள்' என்று விட்டு விடுகிறார். சில செய்திகள் சொல்லப்படாமல் உணர்த்தப்படுவது வாசகனை மேம்படுத்தும் இலக்கிய மதிப்பாகும்.

## விதிவிலக்கு இல்லாத விதிவிலக்கு

பொதுவாகச் சமுத்திரத்தின் கதைத் தொகுதிகள், ஒரு கதையைப் போல் இன்னொரு கதை இல்லை என்னும் முறையில் வகைமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருப்பன. இந்தத் தொகுதியும் அதற்கு விலக்கில்லை. ஓர் உணர்ச்சி, ஒரு நிகழ்ச்சி, ஒரு பண்பு என ஏதேனும் 'ஒன்றை'யே மையமாக வைத்து வரையப்பட்டவையே பல கதைகள். எனினும் 'கட்டக் கூடாத கடிகாரம்' ஒரு புதினத்துக்கான கதை விரிவைக் கருக் கொண்டுள்ளது. இருக்க வேண்டியதை இருப்பதைப்போல் சொல்லும் கலைத்திறனைப் 'பிணமாலை' முதலிய சில கதைகளில் காணலாம்.

கதைக் குழந்தைகளின் மேனியில் இங்கொன்றும் அங்கொன்றுமாய் படிந்திருக்கும் அழுக்குகளையும் சுட்டியாக வேண்டும். பின்னோக்கு உத்தியில் பின்னப்பட்ட 'ஒரு சபதத்தின் மறுபக்கம்' 'பூவம்மாவின் குழந்தை' ஆகிய கதைளில் செய்கைத்தனமும் நாடகமயமாக்கலும் தலைகாட்டித் திரைப்படப் பாணி முகங்காட்டுகிறது. 'காதல் குருவிகளின் பார்வையிலே' போன்ற கதைகளின் முடிவில் ஆசிரியர் நுழைந்து பேசும் பகுதிகள் தனித்து நிற்கின்றன. இவற்றைத் தவிர்த்திருக்கலாம்.

## படைப்பாளிகளின் மொழிப்பிழைகள்

தமிழ் மொழியின் எழுத்திலக்கணத்தில் மூன்றில் இரண்டு பகுதி புணர்ச்சி இலக்கணம். அதில் வல்லெழுத்து மிகுந்து வரும் இடங்கள், மிகாது வரும் இடங்கள் பேசப்படுகின்றன. அதனை அறிந்துகொள்ளத் தமிழ்ப்படைப்பாளிகள் பலரும் ஆர்வம் காட்டுவதில்லை. 'நொண்டி சென்றான்' என்பது ஒரு தொடர். இதில் நொண்டி என்பது நொண்டியாகிய ஆளைக் குறிக்கும்

பெயர்ச்சொல். இதனையே 'நொண்டிச் சென்றான்' என்று இடையில் வல்லெழுத்து மிகுந்துச் சொல்லும்போது, 'நொண்டிக்கொண்டு சென்றான் என்று பொருள் தந்து 'நொண்டி' என்பது வினையெச்சமாகிவிடுகிறது. புள்ளியெழுத்து வெளிப்படுத்தும் பொருள் மாற்றம் புணர்ச்சி இலக்கணத்தைப் புறக்கணிக்கக்கூடாது என்பதைப் புலப்படுத்தும். செங்கற்களிடையே சுதையைப்போலச் சொற்களைப் பிணைத்துச் செல்பவை இந்தப் புள்ளிகள். இவற்றை அறிந்து கையாள வேண்டும். அந்த, இந்த, எந்த என்னும் சொற்களின் பின் க்,ச்,த்,ப் ஆகிய வல்லெழுத்துக்களை முதலாக உடைய சொற்கள் வந்தால் முறையே அவ்வெழுத்துக்கள் மிகும் என்பது எளிய விதி. 'இந்த தொலைக்காட்சி' 'அந்த சுருட்டைத்தலையன்' என்று ஒற்றிடாமல் எழுதுவதைத் தவிர்க்க வேண்டும். நண்பர் சமுத்திரத்தின் எழுத்துக்களிலும் இப்படிச் சில பகுதிகள் இடம் பெற்றுள்ளன. அடிப்படைவிதிகள் சிலவற்றை மனங் கொண்டாலே போதும். பெரும்பாலான மொழிப் பிழைகளைப் படைப்பாளிகள் தவிர்த்து விடலாம்.

நண்பர் சமுத்திரம் முதலிய நாடறிந்த எழுத்தாளர்களின் இலக்கியப் படைப்புகள் பலவும் இதழ்களில் வெளி வந்தவையே. அதிலும் மிகுமக்களைச் சென்றடையும் வாணிக இதழ்களில் வெளிவந்தவையே அதிகம். அந்த இதழ்கள், மேட்டுக்குடி அல்லாதோர் நடத்துபவையாயிருந்தாலும், வெளிப் படுத்துவதும் தூக்கிப் பிடிப்பதும் மேட்டுக்குடிப் பண்பாடே. அதனால் அந்த இதழ்களில் எழுதும் எழுத்தாளர்களும் மேட்டுக்குடி கலாச்சார பங்களிப்பாளர்களாக மாறிவிடுகின்றனர். கருநாடகம், கேரளம் முதலிய அண்டை மாநிலங்களில் இந்தக் கருத்தோட்டம் மேலோங்கிய நிலையைப், படைப்பாளிகளிடையே பார்க்க முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழகத்தின் தனித்த இந்தச் சூழ்நிலையிலும் தனது வர்த்தகக் கலாச்சார எதிர்ப்புக்கண்ணோட்டத்தைச் சிறிதும் இழக்காமல் படைப்பாக்கம் செய்யும் சமுத்திரக் கலைஞனை 'நின் பணி தொடர்வதாக' என வாழ்த்துகிறேன். தமிழ்கூறு நல்லுலகத்திற்கு இந்நூலை மகிழ்வுடன் பரிந்துரைக்கிறேன்.

# உள்ளே...


1 காதல் குருவிகளின் பார்வையிலே... 17

2 பெரியம்மா மகன் 27

3 ஒரு சபதத்தின் மறுபக்கம் 42

4 ஈரத்துணி 56

5 கட்டக்கூடாத கடிகாரம் 69

6 காலுக்குச் செருப்பாய் 86

7 உயிர் ஊஞ்சல் 98

8 ஈச்சம்பாய் 110

9 முகமறியா முகம் 120

10 மருமகள் 130

11 பூவம்மாவின் குழந்தை 138

12 பிணமாலை 150

13 பாசக் கணக்கு 166

14 பாக்கு மரம் 179

# காதல் குருவிகளின் பார்வையிலே...

கோடைக் காலம் கொடுத்துவிட்டுப் போன கொடைக் காலமான வசந்த காலம். சென்ற கோடையின் கதகதப்பையும், வரப் போகிற குளிர் காலத்தின் குளிர்மையையும் உள்ளடக்கிய 'பருவ காலம்'. நிலத்திற்கு நரைமுடியாய்ப் பட்டுக்கிடந்த புற்கள், பசுமை தட்டித் தழைத்த நேரம். இலையுதிர்ந்த மரங்களில் இலை தழைகள் துளிர் விட்ட சமயம்.

கிளைகளே கரங்களாய், முட்களே நகங்களாய்க் கொண்ட ஓடைமேட்டின் உடைமரங்களில் உட்கார்ந்திருந்த தூக்கணாங் குருவிகள் ஆணும் பெண்ணுமாய் அமர்ந்திருந்தன. தொலைவில் உள்ள காடுகளில் கோடைக்குப் பதுங்கிவிட்டு நேற்றுதான் அவை வந்திருக்க வேண்டும். சுற்றுப்புறத்தை ஆராய்வதுபோல் அலகுகளை நிமிர்த்தின. பறவைகளில் 'கேடியான' வெள்ளைப் பிடறிக் காகங்கள் அருகே கூடு கட்டுவதால் சற்றே கலக்கமடைந்ததுபோல் தோன்றின. அதேசமயம், எந்தப் பறவையினத்திற்கும் தீங்கு விளைவிக்காத பறவையின 'ரவுடிகளான' அண்டங்காக்காக்கள் இருப்பதில் ஆறுதல் கொண்டன. ஆண் குருவிகளின் தலையில் சின்னச் சின்ன கொண்டைகள். மேனி முழுவதும் வண்ணக் கலவைகள். ஆண் குருவிகளின் மார்பு வெளிர் மஞ்சள் நிறத்திலிருந்து, இப்போது மஞ்சள் பழுப்பு நிறத்திற்கு வந்துவிட்டது. அதாவது காதல் வந்துடுச்சு'ன்னு அர்த்தம்! காரணமான காதலுக்கு, காரியமான கூட்டைப் பின்ன வேண்டும்.

மொத்தம் இருபது பறவைகள். ஆண் குருவிகள் பெண் குருவிகளை இடித்துக் கொண்டன. இவற்றின் இடிபாடு பிடிக்காததுபோல், பெண் குருவிகள் பறந்து எதிர்த் திசையில் அமர்ந்துகொண்டு அவற்றை முறைத்தன. சிறிது நேரத்தில், அப்படியே அமர்ந்திருந்த அந்த ஆண் குருவிகளும் பெண் குருவிகளும், மரங்களைவிட்டுத் தாவி ஆகாயத்தில் சஞ்சரித்தன. மேலும் கீழுமாகப் பறந்தன.

இவற்றைச் சட்டை செய்யாதது போல், சட்டையில்லாமல் பிரிண்ட் போட்ட பனியனோடும் கருட்டை முடியோடும் அழகுத் தோற்றத்தோடும் அங்கே வந்து நின்ற அந்த வாலிபன், சற்றுத் தொலைவில் வந்தவளைத் திரும்பிப் பார்த்தான். அவளோ தயங்கித் தயங்கி நடந்து வந்தாள். திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டாள். ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்ததும் அங்கேயே நின்றாள். இங்கே நின்ற அவன், அவளை 'வா வா' என்று கைகளை வளைத்து வளைத்துக் காட்டினான். அவள் வேண்டா வெறுப்பாக வருகிறவள் போல் வந்து, அவனுக்கு 'எட்டடி' தொலைவில் நின்றாள். காக்கா நிறக் கண்கள்; பூஞ்சிட்டுக் குருவி நிறம்; மைனா போன்ற பேதமைச் சாயல். அவனுக்குக் காதளவு உயரம். வோட்டுப்போடும் வயதிற்கு வந்திருக்கமாட்டாள். அவளையே ரசித்துக் கொண்டிருந்த வாலிபன் திடீரென்று ஓடிப்போய் அவளை அணைத்துக் கொண்டான். அவள் பயத்தால் கைகளை உதறினாள். அவன் தைரியப்படுத்துபவன் போல் அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தான்.

இந்த மனித ஜோடியை ஆகாயத்தில் வட்டமடித்தபடியே பார்த்த தூக்கணாங் குருவிகள், மெல்ல மெல்லக் கீழே இறங்கி உடைமரத்தில் அமரந்து கொண்டன. காதலர் இருவரும்

தங்களுக்குள்ளேயே மூழ்கியிருப்பதைப் பார்த்த தைரியத்தாலோ அல்லது சுவாரஸ்யத்தாலோ, அவை சற்றே நெருங்கி ஒரு திட்டில் ஒட்டுமொத்தமாக அமர்ந்தன. மனிதக் காதலால் பாதிப்பு ஏற்பட்டதுபோல், சில 'சின்னஞ் சிறிசுகள்' இறக்கைகளை ஆட்டிக் கொண்டன. அலகுகளால் இடித்துக் கொண்டன.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு அவனும் அவளும் புறப்பட்டார்கள்.

மானுடக் காதல் வியாதி தூக்கணாங் குருவிகளில் ஆண்களைத் தொத்திக் கொண்டது, அப்பட்டமாகத் தெரிந்தது. பெண் குருவிகளிடம் 'வாலாட்டின'. இதில் இரண்டு, மூன்று ஆண்கள் ஒன்றையொன்று தாக்கிக் கொண்டன. சண்டை ஓய்ந்ததும் எல்லா ஆண் குருவிகளும், தலைக்கு ஒன்றாகப் பெண் குருவிகளை இடித்தன. ஆனால் பெண்களோ, கால்களால் தத்தித் தத்தித் தாவி விலகிப் போயின.

'ஒரு கூடு கட்டத் துப்பில்ல... காதல் வாழுதாக்கும்... மொதல்ல கூடு கட்டு, அப்புறம் வாரேன்....

ஆண் குருவிகள் புரிந்து கொண்டன. எல்லாப் பெண் குருவிகளும் தன்னை மட்டுமே நம்பி இருப்பதாக ஒவ்வோர் ஆண் குருவியும் நினைத்துக் கொண்டு பிறகு 'ச்சூ ச்சூ ச்சோச்' என்று போர்க் கீதம் இசைத்தபடியே நான்கு திசைகளிலும் சிதறிப் பறந்தன.

சிறிது நேரத்தில் ஆண் குருவிகள் கால்களில் தேங்காய் நார், பனை நார், இலை நரம்புகள் முதலியவற்றைப் பற்றியபடி, அலகுகளில் ஈச்சம் இலை, கவ்வியபடி வந்தன. அனைத்தும் ஆவேசமாக இயங்கின. காதல் ஆவேசம்.... இப்போது கூடு

கட்டத் துவங்கினால்தான் இன்னும் பத்துப் பதினைந்து நாட்களிலாவது கூட்டை கட்டி முடிக்கலாம். கூடு இல்லாமல் கூடுவதற்கு பெண் குருவிகள் வராது என்பது இவற்றுக்குத் தெரியும்.

ஈச்சம் இலையின் முதுகுத் தண்டு போன்ற ஈர்க்குகளையும், கரும்புத் தோகை நாரையும் அலகுகளை வளைத்து நெளித்துக் கிழித்தன. கிழித்தெடுத்த நார்களை அலகு மூலம் கிளைகளில் இரண்டு பக்கமும் தொங்கும்படி சமமாகப் போட்டன. இப்படிப் பத்துப் பதினைந்து நார்களைக் குறுக்கும் நெடுக்குமாகத் தொங்கப் போட்டபின், தொங்கிய நார்களை அலகால் கவ்வி, முன்னாலும் பின்னாலும் பக்கவாட்டிலுமாகச் சுழற்றின. பம்பரம் சுற்றுவதுபோல் உடம்பை வளைத்தும் நெரித்தும் சுழித்தும் சர்க்கஸ்காரன் போலச் சுழன்று நார்களைச் சுழல வைத்தன. அப்பாடா! முடிச்சுகள் பதிந்து விட்டன. பிறகு, களைத்துப் போனவைபோல் கிளைகளில் அமர்ந்து, கொண்டைகளை நிமிர்த்தி லேசாக விசிலடித்தன. அப்பாடா...!

கூடு கட்டப்படும் உடைமரத்திற்கு எதிரே உள்ள திட்டில் ஆண் குருவிகள் இயங்குவதை வேடிக்கை பார்த்தபடி பெண் குருவிகள் ஜம்மென்று இருந்தன.

பத்து ஆண் குருவிகளில், எடுத்த உடனே அடையாளம் காணக்கூடிய ஒரு குருவியும் இருந்தது. மற்ற குருவிகள் தலை பழுப்பு நிற மஞ்சள் நிறத்தில் தோன்றும்போது, இதன் தலை மட்டும் பிரகாசமான மஞ்சளில் தோற்றம் காட்டியது. மார்பில் மற்றவற்றிற்கு வெளுப்பு மஞ்சள் என்றால், இதற்கு பழுப்பு மஞ்சள்.

இந்த மஞ்சள் பிரகாசிக்கு ஓர் ஆசை. எல்லா ஆசைகளுக்கும் இருப்பது போல், அந்த ஆசைக்கும் ஒரு பிரச்னை. எதிர்த்

திட்டில் உட்கார்ந்திருக்கும் பெண் குருவிகளில் வடக்கிலிருந்து நான்காவதாக உள்ள குருவியாள் மீதுதான் அதற்குக் காதல். அங்கிருந்த குருவியாளும் ஒய்யாரமாகவே தோன்றியது. இந்தக் குருவியை ஆத்திரமாகவும் பார்த்துக் கொண்டது. இன்னுமா கூடு கட்டத் துவங்கலே...? உம் சீக்கிரம்... நம்மளாலே காத்திருக்க முடியாது... இப்படி இருந்தியானால்... அப்புறம் காத்திருந்தவன் காதலியை நேத்து வந்தவன் கொண்டுபோன மனிதக் கதையாய் முடிஞ்சுடும்... சீக்கிரம் மச்சான்... சீக்கிரம்...!'

மஞ்சள் பிரகாசி நகரவில்லை. எல்லாக் குருவிகளையும்போல் ஈர்க்குகளைத் தயாரித்துவிட்டது; ஆனால் முடிச்சுப் போடவில்லை. வாழ்ந்தால் அந்தக் குருவியாளுடன் வாழ வேண்டும் என்ற ஆசை. அவள் தன் கூட்டைப் பார்த்து நிராகரித்துவிட்டு வேறொரு 'வில்லன்' கூட்டிற்குள் போய் விடக் கூடாதே என்ற அச்சம். அதே சமயம் அழகாகக் கூடு கட்டி, அதில் மயங்கி, வேறு எந்த மொக்கு மூதேவிப் பெண் குருவியாவது, 'நான்தான் ஒன்னோட இருப்பேன்'னு அடம் பிடிக்கக் கூடாதேன்னு ஆதங்கம். இந்த அச்சத்தாலும், சந்தேகத்தாலும் அதற்கு 'அலகும் ஓடவில்லை... கால்களும் ஓடவில்லை'! இதன் காதல் பைத்தியத்தை அசல் பைத்தியமாக நினைத்தபடி சில ஆண் குருவிகள் அதனருகே வந்து அனுதாபமாகப் பார்த்தன.

பத்து நாட்கள் பறந்திருக்கும்.

மஞ்சள் பிரகாசி கூடு கட்டும் பணியில் இறங்கி விட்டது. நார்களில் சிக்கலை ஏற்படுத்தி 'பக்கங்களை' உருவாக்கி விட்டது. குருவிக் காதலியாள் அடிக்கடி வந்து தட்டிக் கொடுத்தாள். இதர ஆண் குருவிகளுக்குப் பின்தங்கிய மஞ்சள் பிரகாசி, இப்போது முன் தங்க நினைத்து வேக வேகமாகச் சுழன்றது. சுற்றியது; பறந்தது; பற்றியது.

எல்லாக் கூடுகளும் கிட்டத்தட்ட முழுமை பெற்றன. ஆகாய சுரைக்காய்கள் அற்புதமாய்த் தொங்கின. கம்ப்யூட்டர் கால மனிதனின் வேகத்தையும் விறுவிறுப்பையும் மிஞ்சும் அற்புதத்தின் அதிசயமாய் அவை மின்னின.

இன்னோர் அதிசயம்...

கூடு கட்டிய ஆண் குருவிகள் தத்தம் கூடுகளில் முன் வாசலில் கால்களைப் பற்றிக் கொண்டு தலைகீழாகத் தொங்கின. பிறகு அப்படியே 'அந்தர்' அடித்துக் கூட்டுக்குள் போயின. பிறகு, வெளிப்பட்டு தலைகீழாகத் தொங்கி, பக்கவாட்டில் நிமிர்ந்து, எதிர் திசையில் உட்கார்ந்திருந்த பெண் குருவிகளைப் பார்த்து விசிலடித்தன. பெண்கள் பேசாது இருந்தபோது, ஆண்கள் முன்னிலும் அதிகமாகச் சுழன்றன. விசில் சத்தம் வலுத்தது. மஞ்சள் பிரகாசிதான் எல்லா ஆண் குருவிகளையும்விட அதிகமாகக் கர்ணம் போட்டது. வேகமாக விசிலடித்தது.

மஞ்சள் பிரகாசி கண் வைத்த குருவியாள் தத்தித் தத்தி நடந்து, பிறகு மேலே பறந்து, அங்குமிங்குமாக வட்டமடித்து, ஒப்புக்கு ஒரு சில கிளைகளில் உட்கார்ந்துவிட்டு, பிறகு மஞ்சள் பிரகாசியின் கூட்டருகே வந்து உள்ளே எட்டிப் பார்த்தது. உடனே கர்ணம் போட்டுக் கொண்டிருந்த எல்லாக் குருவிகளும் அங்கே கூடி விட்டன. குருவியாளைச் சுற்றி மொய்த்துக் கொண்டு 'என் கூடு இதைவிட நல்ல கூடு' என்பது போல் இறக்கைகளை அகலமாய் விரித்தபடி, 'ச்சூ ச்சூ... ச் ' என்று குரலெழுப்பிக் காதல் கீதம் இசைத்தன. சில கூடுகளைக் கடைக்கண் விரித்துப் பார்த்த குருவியாள் சிறிது 'பிகு' செய்துவிட்டு மஞ்சள் பிரகாசியின் கூட்டுக்குள் சென்றது. எல்லா ஆண் குருவிகளும் சோக கீதம் இசைக்க, மஞ்சள் பிரகாசியும் வெற்றி வாசலுக்குள் நுழைவதுபோல், தன் கூட்டுக்குள் நுழைந்தது.

இந்தச் சமயத்தில் வழக்கம்போல் அந்த இளஞ்ஜோடி வந்தது. ஒருவர் தோளில் ஒருவர் கை போட்டுச் சிரித்தபடி சிணுங்கியபடி, அவனும் அவளுமாய் வந்தார்கள். அன்று குருவிகளும் பார்க்க, கேட்க, நுழைய முடியாத ஒரு தொலைதூரத்துப் புதர் பகுதிக்குள் இருவரும் சென்றார்கள்.

ஒரு மணி நேரம் கழித்து அந்த மனிதக் குட்டிகள் திரும்பி வந்தன. மரக் கிளையில் சோர்வாக உட்கார்ந்திருந்த மஞ்சள் பிரகாசி அவர்களையே பார்த்தது. அவள் தலைமுடி வழக்கத்திற்கு மாறாகக் கலைந்திருந்தது. புடவை முழுக்க புழுதிக் கோலம். அடிக்கடி முகம் முழுவதையும் துடைத்துக் கொண்டாள். காலிலும் கையிலும் விழுந்த கீறல்களுக்கு மணலைச் சலித்துப் போட்டுக் கொண்டாள். அவனோ நிறைவோடு நிற்பவன் போல், காலில் சிக்கிய ஒரு உருளைக் கல்லை உருட்டியபடியே, 'சிறு தேர்' ஓட்டினான். திடீரென்று அந்தப் பெண் அழுதாள்: கைகளை உதறினாள். பிறகு முகத்தில் படரவிட்டுக் கொண்டு விம்மினாள்.

அவன், அவள் தோளைத் தட்டிக் கொடுத்தான். அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்தபடியே அவள் காதோரம் ஏதோ கிசுகிசுத்தான். அதில் என்ன மந்திரம் இருந்ததோ. அவள் விம்முவதை நிறுத்திவிட்டாள். அவனை நாணத்தோடு பார்த்தாள். பிறகு அழுகையைப் பழி வாங்குவதுபோல் சிரிக்கப் போனாள். பின்னர், என்ன நினைத்தாளோ, அவனைக் கையெடுத்துக் கும்பிட்டாள். அவன் ஏதோ சொல்ல, அவள் சிரித்தே விட்டாள். கால் மணி நேரத்திற்கப் பிறகு அவன் தயங்கித் தயங்கி எதையோ சொன்னான். அவள் எந்தத் தயக்கமும் இல்லாமல் தன் மூக்குத்தியைக் கழற்றி அவனிடம் கொடுத்தாள். அவனோடு இணைந்து, பிணைந்து நடந்தாள்.

வெளிறிப் போயிருந்த மஞ்சள் பிரகாசி, எதிர்ப்புறத்தில் அமர்ந்திருந்த குருவியாளையும், போகிற மானிடப் பெண்ணையும் மாறி மாறிப் பார்த்தது. நடந்ததை அதனால் நம்ப முடியவில்லை. கூட்டுக்கு வந்த குருவியாள் எல்லாவற்றையும் பார்த்தாள். கீழே தளம் போட்டதுபோல் இருந்த களிமண்ணைப் பார்த்தது. வெளிச்சத்திற்காக ஒட்டி வைக்கப்பட்டிருந்த மின்மினிப் பூச்சிகளையும் பார்த்தது. பக்கவாட்டில் திரைச்சீலை போல் வைக்கப்பட்டிருந்த பசும்புல் தழைகளையும், மஞ்சள் பிரகாசியே கூட்டுக்குள் உருண்டு ஏற்படுத்திய 'படுக்கை' அறையையும் பார்த்தது. எதற்காகவோ குருவியாள் உடம்பை ஒரு குலுக்குக் குலுக்கிக் கொண்டு மஞ்சள் பிரகாசியை அலட்சியமாக இடித்தபடி கூட்டுக்கு வெளியே வந்து, மீண்டும் பழைய இடத்தில் உட்கார்ந்தது.

மஞ்சள் பிரகாசி காதல் தோல்வியால் கூட்டுக்குள்ளேயே கூனிக் குறுகிக் கிடந்தது. பிறகு அதுவும் கூட்டுக்கு வெளியே வந்தது. இன்னொரு கூட்டில் ஆண் குருவியுடன் 'லாலி' பாட நுழையப்போன வேறொரு பெண் குருவி, மஞ்சள் பிரகாசியின் கூட்டருகே வந்து, 'வா போகலாம்' என்பது போல் அதைப்பார்த்தது. 'நீ— ஒரு 'சின்ன வீடு' தந்தால்கூடப் போதும்' என்பதுபோல் அதனை நோக்கியது. ஆனால் மஞ்சள் பிரகாசிக்கு அதன் போக்கும் நோக்கும் பிடிக்கவில்லை. 'சீ போ' என்பதுபோல முறைத்துவிட்டு, பிறகு குருவி நாகரிகத்தைக் கருதி, அதுவே வேறொரு கிளையில் போய் உட்கார்ந்து கொண்டது.

அந்தப் பெண் குருவி போனதும், மஞ்சள் பிரகாசி மீண்டும் கூட்டருகே வந்தது. இன்னும் எந்தக் கூட்டுக்குள்ளும் போகாமல் இருக்கும் குருவியாளையே பரிதாபமாகப் பார்த்தது. அதுவோ, அலட்சியத்தில் மஞ்சள் பிரகாசியைப் பார்த்தது. மஞ்சள்

பிரகாசிக்குப் புரிந்து விட்டது. அம்மாவுக்குக் கூடு பிடிக்கவில்லை. வேறொரு கூடு கட்டினால்தான் வரும். இன்னும் பத்து நாளைக்கு எப்படிக் கஷ்டப்பட முடியும்! கஷ்டத்தைத் தாக்குப் பிடிக்கலாம்! ஆனால் காதலை...?

மஞ்சள் பிரகாசி சோகத்தால் விழுங்கப்படாமல் சோகத்தை விழுங்கிக் கொண்டது. புதிய கூடு கட்டுவதற்காகப் புதிய இடங்களுக்குப் பறந்து புத்தம் புதுப் பொருட்களைக் கொண்டு வந்தது. நான்கு நாட்கள் போனதே தெரியவில்லை. அந்த இளம் பெண், தனியாகத் தினமும் வருவதைப் பார்த்தது. அதே சமயம் கூடு கட்டும் வேலை மும்முரத்தில் அந்தக் குருவிக்கு அதன் தாத்பரியம் புரியவில்லை.

அன்று மஞ்சள் குருவி, சிறிது கிறங்கிப் போயிருந்தது. சிறிது நேரத்திற்கு முன்பு ஒரு புதரில் கிடந்த பாம்புச் சட்டையைப் பற்றியபோது எங்கிருந்தோ குதித்த காட்டுப் பூனை, இதைத் துரத்தியது. பூனையின் கால்களுக்குள் பாம்புச் சட்டை மாட்டிக் கொண்டது. மஞ்சள் பிரகாசிக்கோ அதை நறுக்கி, கூட்டுக்குள் வைத்து, அதைக் குருவியாள் ரசிப்பதைக் கண் குளிரப் பார்க்க வேண்டும் என்ற ஆசை. அந்த ஆசையே ஒரு உந்து சக்தியாக, உயிரையும் பொருட்படுத்தாது, காட்டுப் பூனைக்கு நெளிந்தும் வளைந்தும் போக்குக் காட்டியது. எப்படியோ பாம்புச் சட்டையோடு மீண்டது. இந்தத் தியாகத்தைப் புரிந்துகொண்டதுபோல், குருவியாள் சிறிது நேரம் இதனருகே வந்து செல்லமாகக் குழைந்து விட்டுப் போய்விட்டது - பழைய இடத்திற்கு.

குருவியாள் காட்டிய சிறியதோர் காதல் வெளிப்பாட்டால் காதலின் வாய்ப்பாட்டையே அறிந்தது போல் லேசாக விசிலடித்த மஞ்சள் பிரகாசி, அப்போதுதான் அந்த மானுடப் பெண்ணைப் பார்த்தது. ஒரு மரத்தில் சாய்ந்தபடி,

ஆகாயத்தையே வெறித்துப் பார்த்த அந்தப் பெண் தன் தலையில் அடித்துக் கொண்டாள். பொங்கிய கண்ணீரை முழங்கைகளில் தேய்த்தாள். பிறகு திடீரென்று எழுந்து ஊரை நோக்கிப் பார்ப்பதும் கீழே அமர்வதுமாக இருந்தாள்.

மஞ்சள் பிரகாசியால் அவளின் சோகத்தைச் சுமக்க முடியவில்லை. மெல்லப் பறந்து அவள் காலருகே பறந்து வந்தது. மூக்குத்தி ஜொலிக்கக் காட்சியளித்தவள், இப்போது அந்த மூக்குத்தியையும், வேறு எதையோ ஒன்றையும் பறிகொடுத்த சோகத்தோடு இருப்பதை அந்தத் தூக்கணாங்குருவி புரிந்து கொண்டிருக்கலாம்.

மஞ்சள் பிரகாசி அவள் காலைச் சுற்றியே வலம் வந்தது. ஒப்பாரி வைப்பதுபோல், இறக்கைகளை அடித்துக் கொண்டே அவல ஒலியை எழுப்பியது. பின்னர், இறக்கைகளை அடக்கி, குரலை அமுக்கி அவள் காலைச் சுற்றிச் சுற்றியே வந்தது. ஏதோ சொல்லப் போவதுபோல் அதன் அலகுகள் துடித்தன. ஒருவேளை இப்படிச் சொல்ல முயற்சி செய்திருக்குமோ?

'ஒங்க இனத்தால் அற்ப இனம்னு ஒதுக்கப்படுகிற எங்க குருவி இனத்துல ஒரு பெண் குருவி, பாதுகாப்புக்காகத் தன்னோட நிஜமான காதலையும் உதறித் தள்ளுது. ஆனால் நீயோ-போலித் தனமான காதலுக்காக ஒன்கிட்ட இருந்த பாதுகாப்பயும் உதறித் தள்ளிட்டியே! ஒனக்காக இப்போ என் இறக்கைகள் படபடக்கே... நாடி நரம்பெல்லாம் துடிக்குதே... ஏன்னு கேக்கறியா....? நான் அற்ப ஜாதி... ஒருவரை அற்பத்தனமாய்ப் பயன்படுத்திக்காத குருவி ஜாதி.'

**ஆனந்த விகடன், 1981**

# பெரியம்மா மகன்...

அந்தப் பூங்காவில், ஆணும் பெண்ணுமாய் கலந்து நின்ற இளைஞர் கூட்டத்தை 'ஜிப்சி' சிம்பா, கலப்படமாக்க ஆயத்தமானபோது -

குமுதாவும் இளங்கோவும் இணை சேர்ந்து அந்தக் கூட்டத்தை நோக்கி நடந்தார்கள். உள்ளடக்கம் எப்படியோ அவர்களின் உருவப் பொருத்தம் பிரமாதம். அவனும் இவளும் ஒரே நிறம். சிவப்புக்கும் கறுப்புக்கும் இடைப்பட்ட மாநிறம். அவனது உருண்டு திரண்ட தேக்குமர உடம்பை உரசியபடியே அவளின் நளினப்பட்ட மேனி வெற்றிலைக் கொடியாய் நெளிந்தது. அந்தக் கூட்டத்தை நோக்கி நடந்தபடியே, குமுதா இளங்கோவின் கையைப் பிடித்துக் கொண்டு, அவன் முன்னால் ஒருச்சாய்த்து நின்று, அவனது நடை வேகத்தை நிறுத்திவிட்டு பதறிப் பதறி, கைகளை உதறி உதறிப் பேசினாள்.

'எனக்கு பயமாய் இருக்குது இளங்கோ... வேண்டாம். திரும்பிப் போயிடலாம்'.

'இந்தாப் பாரு குமுதா! -- இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிக்குப் பயப்படுறியா? இல்ல நான் உன்ன தப்பா நினைப்பேன்னு தயங்குறியா?'

குமுதா, நீல நிறத் துப்பட்டா துணியின் முனையை கடித்தபடியே மௌனமாக நின்று, தரையை ஒரு பூச்செடியோடு பெருவிரலால் துழாவிய போது, இளங்கோ புரிந்து கொண்டான். ஆனாலும் புரியாதபடியாய்ப் பேசினான்.

நான் வால்டேர் மாணவன்'....

இந்தச் சமயத்தில வால்டேரை ஏன் இழுக்கிறீங்க இளங்கோ...? அவர்தான் ரிட்டயர்டு ஆயிட்டாராமே?'

"உலக மக்கள் இருக்கும் வரை எப்போதுமே ரிட்டயர்டு ஆகாத பிரெஞ்சு சிந்தனையாளர் வால்டேரை சொன்னேன். 'உன் கருத்திலிருந்து நான் மாறுபடுகிறேன். ஆனாலும் அந்தக் கருத்தை நீ சொல்வதற்குரிய உரிமைக்காக போராடுவேன்'னு சொன்ன ஜனநாயக வாதி வால்டேர்".

இந்தக் குழப்பத்தோட உங்க குழப்பம் வேறயா?

இதுல குழப்பத்திற்கு அவசியமே இல்ல குமுதா... அந்தத் தொலைக்காட்சி நிலையத்தோட "கண்டதும் காதல்" என்கிற நிகழ்ச்சியில கலந்துக்க உனக்கு ஆசை. எனக்கோ உடன்பாடில்லாத செயல். ஆனாலும் என்னதான் நான் காதலனா இருந்தாலும், உன் சுதந்திர உரிமையைத் தடுக்க மாட்டேன். இப்போ மட்டுமல்ல. நமக்கு திருமணம் ஆனபிறகு கூட'.

'உங்கள காதலிக்கவும் திருமணம் செய்யவும் நான் கொடுத்து வைத்தவள்'.

'நானும்தான்'

'நீங்களும் இந்தப் புரோகிராமில கலந்து கொள்ளுங்களேன்'

'இப்போ நீ எனக்கு வால்டேர் ஆகணும். அதோட... சாதாரண பேண்ட் சட்டை போட்டவனையே கிண்டலடிக்கிற கூட்டத்துல, இப்படி வேட்டியும் ஜிப்பாவும்மாய் இருக்கிற என்னை சகிக்கமாட்டாங்க. நீ உன் வழியில போ. நான் என் வழியில போறேன். சாயங்காலமா இதே பொது வழியில் சந்திப்போம்.'

'மறந்திடப்படாது இளங்கோ. சும்மா ஒரு செஞ்சுக்காகத்தான் போறேன்.

'நீ விளையாட்டுப்பிள்ளைன்னு எனக்குத் தெரியாதா? சரி போய் வா

குமுதா, அவனைத் திரும்பத் திரும்ப பார்த்தபடியே 'ஜிப்சி' சிம்பாவை சுற்றிய வட்டத்திற்கு வெளியே, முட்டிக் கால்களுக்கு கீழே நிர்வாணமாய் கையில் 'பேடோடு' நின்ற ராஜியிடம் போய் தன்னைப் பற்றிய விவரங்களைச் சொன்னாள். அவள் கையில் வைத்துள்ள குறிப்பேட்டில் அதைக் குறித்துக் கொண்டாள். அது முடிந்ததும், குமுதா, அந்த இளைஞர் வட்டத்திற்குள் ஊடுருவி மனிதச் சங்கிலியில் ஒன்றானாள். அவள் அந்த வட்டத்தில் கரையும் வரை, அவளையே பார்த்து நின்ற 'ஜிப்சி' சிம்பா, தோளை ஒரு குலுக்கி குலுக்கி முகத்தை ஆட்டுவது தெரியாமல் ஆட விட்டு கண்களைக் கிறங்க வைத்து, கூட்டத்தை சுற்றுமுற்றும் பார்த்தாள். மனித வட்டத்திற்கு மையப் புள்ளியாய் நின்றபடியே அங்கு திரண்டு நின்ற கூட்டத்தை ஒட்டுமொத்தமாகப் பார்த்தாள். இந்தப் பார்வைக்கென்றே பயிற்சி எடுத்தவள். ஒட்டுமொத்தமாக பார்க்கும்போதுகூட ஒவ்வொரு இளைஞனும் தன் மீது உரிமை கொண்டாடலாம் என்பதுபோல் இரட்டைப் பார்வையாய் பார்ப்பவள். இதனால்தான், உயர்நீதி மன்ற நீதிபதியின் ஆண்டு வருமானம், இவளது மாத வருமானம். நுனி நாக்கில் அவள் பேசும்போது, நேயர்கள் சொக்கிப் போவார்கள். மழலைத் தமிழோடு அங்குமிங்குமாய் முகமாட்டி அவள் பேசுகிற தொனி அலாதியானது. அத்தனைத் தமிழர்களையும் கட்டிப் போடக் கூடியது. இப்போதும் அதே நுனி நாக்கில், ஒன்றும் தெரியாத பாப்பா போல லேசாய் சிணுங்கியபடியே பேசினாள். அவள்

பேசப் பேச வீடியோ கேமரா ஒன்று சுழன்றது. இன்னொரு என்.ஜி.வோ கேமரா, கூட்டத்தை லாங் ஷாட்டில் எடுத்து விட்டு அழகான பெண்களையும் ஆண்களையும், அவர்களது கிசுகிசுப்புக்களையும் குளோசப்பில் அம்பலப் படுத்திக் கொண்டிருந்தது. சிம்பா, கேமிரா பயம் ஏதும் இல்லாமல் சரளமாகப் பேசினாள்.

ஹாய்.... பாய்ஸ் அண்டு கேர்ள்ஸ்! உங்கள் 'ஜிப்சி' சிம்பாவோட மார்னிங் வணக்கங்கள் — ஓ.கே. — சப்ஜெக்ட்டுக்கு வருவோமா? 'ஜிப்சி' நிறுவனத்தின் சார்பில் தொலைக்காட்சியில நான் கொடுத்த இன்விடேஷனுக்கு இணங்கி இங்கே வந்திருக்கிற உங்களுக்கு என்னோட மெனி மெனி தேங்ஸ்.... இந்த நிகழ்ச்சி புதுமையானதுங்கோ. பொதுவாக, நம்மோட மெஜாரிட்டி யங்ஸ்டர்ஸ் காதலில் ஈடுபடுறதில்லங்கோ. கேக்கிறதுக்கே கஷ்டமாயில்ல? அதுதான் பேக்ட்டுங்க — ஆனால், ஒண்ணுங்க. அவங்க மனசுக்குள்ளேயும் ஒரு மானசீகமான உருவம்... முன்பின் பார்த்தறியாத உருவம் காதலனாகவோ — காதலியாகவோ நடமாடும். மேரேஜ் ஆன பிறகும், இவங்க இந்த மானசீக உருவத்தோட குடித்தனம் நடத்துவாங்க. இதனால கட்டுனதுக்கிட்டயும் பேசமுடியாம மனசுக்குள்ள எட்டுனதுக்கிட்டயும் பேசமுடியாம டிஸ்டர்ப் ஆவாங்கோ... இந்த மாதிரி எங்ஸ்டர்ஸ்க்கு, பாசிட்டிவ் சான்ஸ் கொடுக்க வந்திருக்கோம். இது ஒரு சமூக டூட்டி என்கிறதுல பெருமை படுறோம். இங்கே கூடியிருக்கிற நீங்கெல்லாம் இதுவரைக்கும் காதல் அனுபவம் இல்லாதவங்கதானே? சொல்லுங்கோ? இல்லாதவங்களா? ஓகே. ஓகே. இங்கு வந்திருக்கக் கூடிய ஒங்கள ஆண் பெண்ணா ஜோடி சேர்க்கப் போறோம். மகாபலிபுரத்துக்கு கூட்டி போறோம். அதுக்குள்ள

உங்களுக்கு காதல் வந்துட்டால், டெர்மினல் இடத்துல சொல்லுங்கோ. இப்படி கண்டதும் காதல் இன்றைய சமுதாயத் தேவைங்கோ. உங்களுக்கும் உங்களோட பைக்ல வருகிற பார்ட்னருக்கும் லவ் உண்டானால் எனக்கே லவ் உண்டானது மாதிரி. சும்மா ஒரு ஜோக்குக்குத்தான். ஆனாலும் புதுக் காதலர்கள உருவாக்கின புண்ணியம் எங்களுக்கு கிடைக்குங்கோ. -- அதனால பைக்ல போற உங்களோட பார்ட்னருக்கும் உங்க மானசீக உருவத்துக்கும் பொருத்தமாக இருக்குதான்னு பார்க்கப் போறீங்க. அப்படிப் பொருந்திப் போன ஜோடிகள குலுக்கல் முறையில தேர்ந்தெடுத்து ஒரு ஜோடியை மலேசியாவிற்கு அனுப்பப் போறோம். அந்த ஜோடியை அந்த நாட்டுலயே வெல்கம் பண்றதுக்கு நம்மோட யுனிவர்ஸல் ஸ்டார் கமல்நாத் குமார் தயாராய் இருப்பார். அந்த ஜோடியைப் பேட்டியும் காண்பார். இந்தப் பேட்டி உலகெங்கும் உள்ள தமிழர்களுக்காக ஒளிபரப்பாகும். இன்னொரு ஹேப்பி சமாச்சாரங்கோ. மலேசியா போகுறதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கபுள், தேவைப்பட்டால் அந்த நாட்டுல ப்ரீ ஹனிமூன் -- டமில்ல அதுக்கு என்ன பேரு?... வாட்... ஹனிமூன்னா தேன் நிலவு. அதுக்கு முந்தினது... பால் இரவா? குட்... சொன்னவருக்கு தேங்ஸ்... பால் இரவுக்கு ஏற்பாடு செய்வோம்.... அதனால இந்த நிகழ்ச்சியை சீரியஸா எடுத்துக்கணும். இந்தப் போட்டிக்குரிய கண்டிஷன்கள நம்மோட... சாரி உங்களோட ராஜி தெரிவிப்பாள்.

ஸ்கர்ட் ராஜி மார்பகத்தைக் குலுக்கியபடியே அந்த வட்டத்திற்குள் வந்தாள். இரண்டு கைகளையும் உயரத் தூக்கி ஒரடி உயரத்துக்கு குதித்தாள். பிறகு, காலை அங்கும் இங்குமாய் ஆட்டினாள். இரண்டு கைகளில் பிடிபட்டு கிடந்த

டப்பாக்களை முன்பக்கமாய் கொண்டு வந்தாள். ஒரே சமயத்தில், அத்தனை பேரையும் முத்தமிட போவது போல் உதடுகளை குவியவைத்து மம்மி'த் தமிழில் அசத்தினாள்.

'ஹலோ! மைடியர் அண்டு நியர் ஒன்ஸ்... இது கேர்ல்ஸ் பேரைக் கொண்ட பெண் டப்பா... அது பாய்ஸ் பேரைக் கொண்ட ஆண் டப்பா... இந்த ரெண்டு டப்பாக்களையும் இந்த எங் மேன் சூரியா... நெசமாவே நீ எங் தானடா... ஒகே. ஒகே. சூரியா குலுக்குவான். ரெண்டு டப்பாக்கள்லயும் வருகிற சீட்டுகள்படி ஜோடி சேர்ப்போம். ஓகேயா... இந்தச் ஜோடிங்க மகாபலிபுரத்துக்கு நாலு மணி நேரத்துல அதோ வரிசையா நிற்கிற மோட்டர் பைக்ல ஏறி... கடற்கரைப் பக்கம் இருக்கிற பாலடஞ்ச கோயில் பக்கம் வரணும். ஓகேயா. அங்கோ பிரபல நடிகை கம்பாகிட்ட, கண்டதும் காதல் வசப்பட்ட ஜோடிங்க, தங்கோ பேர்களக் கொடுக்கணும். அவங்க குலுக்கல் முறையில ஒரு ஜோடியத் தேர்ந்தெடுப்பாங்கோ. ஆனா ஒண்ணுங்கோ.. வழியில ஒருத்தருக்கொருத்தர் ஏடாகொடாமா நடக்கக் கூடாதுங்கோ. ஏன்னா நாம தமிளங்கோ. நம்மோட தமிள்நாட்டு கல்ச்சர கட்டிக் காக்கணுங்கோ. சூரியா!... வீரத் தமிள் மகனே! உன்னத்தான் சூரியா. குலுக்குடா.'

குமுதா துணுக்குற்றாள். இளங்கோவின் காதலியாக இருக்கும் அவளுக்கு, சிறிது மன உளைச்சல். அந்த உளைச்சலுக்குள் மனச்சாட்சி ஓணானாய் ஆடியது. ஆனாலும் அவள் கண்ட காட்சி அந்த ஓணானை ஒரே குத்தாய்க் குத்தியது.

சூரியா தன்னை ஒரு குலுக்கு குலுக்கிக் கொண்டே இரண்டு டப்பாக்களையும் குலுக்கி விட்டு, இரண்டு கைகளையும் அவற்றுள் துழாவ விட்டு இரண்டு துக்கடாப் பேப்பர்களை

தனியாக நின்ற இந்திக்கார வாணியிடம் ஒப்படைத்தாள். அவள் மார்பைப் பிளப்பதுபோல் பின்பக்கமாய் வளைந்து நெஞ்சை உயர்த்தி, உரத்துக் குரலிட்டாள்.

'தங்காத்துரை -- அண்டு லலிதா... ஹை'

ஒரே கைதட்டல். லலிதாவும், தங்கத்துரையும், சிம்பாவுக்கு அருகே போய் நின்றார்கள். சிம்பா, இருவரையும் ஒருவர் பக்கம் ஒருவரைத் தள்ளி விட்டாள். உடனே பலத்த கைதட்டல். அதைப் பார்த்து சிம்பாவே வாயில் கையை வைத்து உய், உய் என்று விசிலடித்தாள். என்றாலும் சிவப்பியான லலிதாவுக்கு கறுப்பன் தங்கத்துரையைப் பிடிக்கவில்லை. ஆனாலும் அழகற்ற கணவனை, அவன் சம்பளத்திற்காக பொறுத்துக் கொள்வது போல், இவளும் மலேசியப் பயணத்திற்காக பொறுத்துக் கொண்டாள். இரண்டாவது ஜோடியான நவீனுக்கு முன்பல் நீண்ட காந்தாவைப் பிடிக்கவில்லை. ஆனாலும் பெற்றோர் ஏற்பாடு செய்யும் மணமகளை கட்டிக் கொள்ளும் 'அடக்கமான மாப்பிள்ளைபோல் அவன் அடங்கி நின்றான்.

குமுதா தனக்கு வரப்போகும் ஜோடியைப் பற்றி துளிகூட கவலைப்படவில்லை. வெறுமனே மாமல்லபுரம் மட்டும் வரையான அட்வென்சர். லைப் அட்வென்சர் அல்ல. கெழவனா இருந்தாலும் ஓ.கே.தான்.

நடுக்கட்டத்தில், 'ஹாய்! -- குமுதா... பாண்டியன் என்று சூரியா குரலிட்டபோது, ஆண் பெயருக்குரியவன் நடந்தபடியே 'நோ பாண்டியன். அயாம் பாண்டியா... நாட் பாண்டியன்' என்று அட்டகாசமாகச் சிரித்துச் சொன்னான். கூட்டத்தினரின் கைதட்டலோடு, பாண்டியாவும் குமுதாவும் ஏற்கனவே ஜோடி சேர்ந்து நின்றவர்கள் பக்கம் போய் நின்று

கொண்டார்கள். குமுதா, தன் ஜோடியை ஏறிட்டுப் பார்த்தாள். இது என்ன அலங்கோலம் – முகத்தில் கரடித் தாடி. ஒரே ஒரு காதில் மட்டும் வளையம். பெண் மாதிரி லேசான கொண்டை. அவளை விட ஓரடி உயரம்.

பாண்டியன்... மன்னிக்கவும் பாண்டியா... குமுதாவின் கருங்கிப் போன கையைப் பிடித்து மெல்ல தன் பக்கமா இழுத்து கைகொடுத்தான். உடனே ஒரே கைதட்டுகள். ஒன்ஸ் மோர் கேட்டு இன்னொரு தட்டுகள். குமுதாவுக்கு அவமானமாக இருந்தது. பொறுத்துக் கொண்டாள். பேயனுக்கு வாழ்க்கைப்பட்டு புளியமரத்தில் ஏறிய கதை...

வரிசையாக நிறுத்தப்பட்ட பைக்குகளில் அத்தனை புதிய ஜோடிகளும் ஏறிக் கொண்டன. ஒரு காலத்தில், சோலை வனமாகி இப்போது பாலைவனமான அந்தப் பூங்காவின் சாம்பலில் துளிர்விட்ட செடிகளை துண்டித்தபடியே, புல்வெளிப் பாதையை சிதைத்தபடியே அத்தனை வண்டிகளும் சிதறிச் சிதறிச் சென்றன. சல்வார் கமிசுகள், பொம்மைச் சட்டைகள் மேலே தோன்ற அந்த பைக்குகள், யந்திர வண்ணத்துப் பூச்சிகளாய் - அந்த பூச்சிகளே பறப்பதை மறந்து துள்ளுவது போல் தோன்றியன.

குமுதா, மோட்டார் பைக்கின் பின்னிருக்கையில் விலகித்தான் இருந்தாள். மனம் 'இளங்கோ இளங்கோ' என்று ஜெபித்துக் கொண்டிருந்தது. குளிர்கால எதிர்க்காற்று, பருவக் காற்றாய் அவள் மூக்கில் இனம்பிரியாத வாசனையை தாவ விட்டது. ஆங்காங்கே சோடி சேர்ந்து போனவர்களை, அவள் பறவைப் பார்வையாய், பறந்தபடியேப் பார்த்தாள். ஒரு ஆங்கிலோ இந்திய இளைஞன், முட்டிக்கால் துணியோடு தன் தோளில் தலைபோட்டு நடந்த முக்கால் வெள்ளைக்காரியை

முதுகில் அணைத்தபடியே நடந்துகொண்டிருந்தான். குமுதாவிற்கு ஷூடு வருவதுபோல் இருந்தது. பாண்டியாவை இளங்கோவாக அனுமானித்துப் பார்த்தாள். அவன்தான் இப்போது அவளை அழைத்துச் செல்வதுபோல கற்பித்துக் கொண்டாள். ஆனாலும் அந்தக் கரடு முரடுச் சாலையின் ஒரு பள்ளம் தட்டி, அவள் பாண்டியாவின் முதுகின் மேல் தூக்கிப் போடப்பட்டபோது சுதாரித்துக் கொண்டாள். இவன் இளங்கோ அல்ல... இவன் அன்னியன்... நான்கு மணி நேரக் கூத்தின் நடிகன்... அவ்வளவேதான்...

ஆனாலும், சிறிது நேரத்தில், பாண்டியாவின் ஒற்றைக்காது வளையம் எதிர் திசைக் காற்றாலும் அவன் வண்டியை அங்குமிங்கும் திருப்புவதாலும் ஊஞ்சலாய் ஆடுவதைக் கண்டதும் சிரிப்பு தாளமுடியவில்லை. அந்த வளையத்தைத் தொட்டுப்பார்க்கக் கூட ஆசை... ஒரு விரல் உள்ளே போய்விடுமா என்று யோசித்தாள்... ஆள்காட்டி விரலை, அதன் அருகே கொண்டுபோய் விட்டாள்... அவன் கை கழுத்தில் பட்டு, திரும்பிய பாண்டியா 'ஹாய்' என்றான். அவன் சிரிப்பும், அந்தத் தோரணையில் அந்த வளையம் ஆடிய ஆட்டமும், இவளை ஆட்டுவித்தது. எவ்வளவு உயரம்... எவ்வளவு கம்பீரம்... அந்த வளையம்கூட அந்தக் கம்பீரத்த எடுத்துக்காட்டுறது போல இல்ல? இந்த இளங்கோவும் இருக்கானே -- எப்பவோ கடுக்கன் போட்டானாம் -- அவன் காது துளையை பார்க்க சகிக்காது --

குமுதா திடுக்கிட்டாள். தன் எண்ணத்தை மாற்றுவதற்காக முகத்தை நிமிர்த்தியவளுக்கு, பாண்டியாவின் முதுகு, வண்ணத் தொலைக்காட்சி பெட்டிபோல் தெரிந்தது. பல்வேறு டிசைன்கள் போட்ட சட்டை. டிவி. பெட்டியில் வருவது போன்ற தடங்கல்

கோடுகள். அழகான ஆண்களும் பெண்களும் காதல் களி நடனம் புரியும் ஓவியங்கள். -- இந்த இளங்கோ இருக்காரே... இவரும் இவரு ஜிப்பாவும். இந்த மாதிரி ஒரு சட்டை வாங்கி அவருக்கு மாட்டணும். சரியான நாட்டுப்புறம். --

பழைய மாமல்லபுரம் சாலையில் பெருங்குடிப் பக்கம் அந்த மோட்டார் பைக் ஓடியபோது, எதிரே முட்டப்போவதுபோல் வந்த லாரியைக் கண்டு, பாண்டியா தடுமாற, பைக்கும் தடுமாறித் தடம் மாறியது. உடனே குமுதா பயந்துபோய் அவன் தோளைப் பிடித்துக் கொண்டாள். - பயந்துபோய்தான்... பிறகு முன்னெச்சரிக்கையோடு, தன் உடம்பை, பின்பக்கமாக நகர்த்திக் கொண்டாள்.

என்றாலும், ஒற்றை வளையக்காரன், இடது கையைப் பின்பக்கமாய்க் கொண்டுபோய் இருக்கையைத் தடவினான். பிறகு, தடவிய கையை நீட்டி, அவள் கையைப் பற்றிக் கொண்டான். அவள் அவசர அவசரமாக கையை இழுத்தபோது, வண்டி மீண்டும் தாறுமாறாய் ஓடியது. உடனே, கையை இழுப்பதை நிறுத்தி, அந்தக் கையை, அவன் கையின் போக்கிற்கு விட்டுக்கொடுத்தாள்.... இல்லன்னா, வண்டித் தாறுமாறாய் போய் விபத்து ஏற்பட்டு விட்ப்பிடாதே... விபத்து ஏற்படப் போவதுபோலே எதிரே ஒரு சைக்கிள்காரன் தும்மல் போட்டபடியே குறுக்கே பாய்ந்தான். இதனால் பைக் குறுக்கு வெட்டாய்ப் பாய்ந்து, சரியப் போனது. குமுதா மீண்டும் பயந்தாள். மீண்டும் அவன் தோளைப் பிடித்தாள். வண்டி சரியானதும், பாண்டியா அவளைத் திரும்பி பார்த்தபடி பாடுவதுபோல் பேசினான். 'பயப்படாதே குமு! உன்னோட சேப்டி... என்னோட டியூட்டி... யூ ஆர் பியூட்டி... ஆனாலும் நான் அடிக்க மாட்டேன் லூட்டி... யூ ஆர் எ டெய்ட்டி.. ஓகே. குமு. பயப்படாதே... நான் ஜென்டில்மேன்.'

பாண்டியா, மீண்டும் முகத்தை, சாலைப் பக்கமாக முகத்தைத் திருப்பியபோது, குமுதா குபீர் சிரிப்பானாள். கன்னங்கள் உப்பின. கண்கள் நாட்டியமாடின. எப்படி இங்கிலீஸ்ல அடுக்கு மொழி பேசுறார்... குமுன்னு என் பேரக்கூட எப்படி ஜெண்டிலா உச்சரிக்கிறார். இந்த இளங்கோவும் இருக்குதே -- குமுதா... ஆ...ஆ... ன்னு ஒப்பாரி வைக்கும்...

குமுதா, ஆவலை அடக்க முடியாமல், அவன் இடது தோளுக்கு மேல் கழுத்தை ஒருச்சாய்த்து நீட்டி அவன் முகத்தைப் பார்க்கப் போனாள். ஜோடி சேர்ந்தபோது அவனை வேண்டா வெறுப்பாக பார்த்ததால் அவன் முகம் அவள் மனதில் சரியாக பதியவில்லை. இப்போது பதிவு செய்யப் போனாள். அந்தச் சமயத்தில் எதிரே ஒரு வண்டி. இவன் சடன் பிரேக் போட்டான். குமுதா, பயந்து போய், மார்பகம், அவன் முதுகில் கசங்கும்படி, அவன் இடுப்பைச் சுற்றி கைளை வளையமாக்கிக் கொண்டாள். பிறகு இளங்கோவை நினைத்து வளையத்தை உடைத்தெறிந்தாள். இதனால் என்னவோ பாண்டியாவுக்கு ஏகப்பட்ட உற்சாகம். மோட்டர் பைக்கின் இருக்கையில் இருந்து உடம்பை அரையடித் தூக்கி நிறுத்தியபடியே பாட்டு பாடினான். அந்தப் பாட்டிற்கு ஏற்ப தன்னையும், வண்டியையும் ஆட்டினான்... 'தில்லானா.. தில்லானா.. நீ தித்திக்கின்ற தேனா.. திக்கு.. திக்கு.. நெஞ்சில் தில்லானா.. மஞ்சக் காட்டு மைனா... நீ கொஞ்சிக் கொஞ்சிப் போனா..

பாண்டியா அந்தப் பாட்டிற்கு ஏற்ப அங்குமிங்குமாய் ஆடினான். குமுதாவுக்கும் ஆட வேண்டும் போல் இருந்தது. அவளுக்கு மிகவும் பிடித்த பாட்டு இது. எப்படி பாடுறார்! இந்த இளங்கோவும் இருக்குதே. தெரிஞ்சதெல்லாம் பாரதியார் பாட்டு, இல்லாட்டா... பாடாதி தேவாரம், திருவாசகம். இந்த மாதிரி மாடர்னா பாடத் தெரியலியே.....

பாண்டியாவின் பாடல் உச்சக்கட்டத்திற்கு போனபோது, மோட்டார் பைக்கும் உச்சத்திற்குப் போனது. பிறகு ஆமை போல் ஆனது. அந்த வண்டிக்குப் பின்னால் வந்து முன்னால் போய்க்கொண்டிருந்த கார்க்காரன் வண்டியை நிறுத்தியபடியே கத்தினான். அசல் நோஞ்சான். ஊதினால் பறப்பான் என்பார்களே - அப்படி.

'உனக்கு மூளை இருக்குதா மேன் -- புதுசா வண்டி ஓட்டுறியா. இல்ல இந்த பொண்ணு புதுசா?'

கார்க்காரன் பேசி முடித்துவிட்டு, வண்டியை வேகப்படுத்த போனபோது, பாண்டியா தனது மோட்டர் பைக்கை இடது பக்கமாய் ஒடித்து அந்த காருக்கு சாலைத் தடையை ஏற்படுத்தியவாறே, சினிமாக் கதாநாயகன்போல ஒரு சிகரெட்டை எடுத்து, நிதானமாக பற்றவைத்து, கார்க்காரனை பாராததுபோல் பார்த்தான். பிறகு ஒரு சினிமாவில் இதே சூழலில் கதாநாயகன் பேசிய டயலாக்கை அப்படியே ஒப்பித்தான்.

'ஏண்டா டேய்! இடது பக்கம் ஓவர் டேக் செய்யக்கூடாதுன்னு தெரியாதவங்க, ஏண்டா கார ஓட்டி ரோட்டை இம்சிக்கிறீங்க? ஒருத்தன்கூட, ஒரு பொண்ணு போயிடக்கூடாதே -- அதுவும் இந்தமாதிரி அழகான பொண்ண ஒரு ஆணோட ஜோடியாப் பார்த்தால் போதுமே. வயித்தெரிச்சல் வந்துடுமே... போகட்டும்... யோவ் பெரிசு... இப்போ நீ என்னோட காதலிகிட்ட மன்னிப்புக் கேக்கிறே. இல்லாட்டி.... இந்த மோட்டர் பைக்காலேயே உன் கார அடிச்சு நொறுக்குவேண்டா மச்சி.'

கார்க்காரன் பயந்துவிட்டான். 'சாரி சார். சாரி மேடம்...

ஏத்துக்கிட்டோம். எடுடா வண்டியை'

அசல் கார்த்திக் மாதிரி மிரட்டி - பிறகு ரஜினிகாந்த் மாதிரி அந்த ஆசாமியை விரட்டிய பாண்டியா, இப்போது குமுதாவின் மனதில் காலூன்றி விட்டான். இவளும் ஒரு கதாநாயகியாய் ஆகிவிட்டாள். அந்தச் சமயம் பார்த்து அவளை அறியாமலேயே ஒரு படுக்கையறை டூயட் பாட்டு காரணம் இல்லாமலே வாயில் முணுமுணுப்பாய் வெளிப்பட்டது... ஆனாலும் இளங்கோ அவ்வப்போது எட்டிப் பார்க்கத்தான் செய்தான். இவள், விசுஜயசாந்தி மாதிரி, அவனுக்கு ஒரு உதை கொடுத்து உருட்டி விட்டாள்... தெலுங்குப் படங்களில் கொடிகட்டிப் பறக்கும் அந்த நடிகையை இவளுக்கு ரொம்பப் பிடிக்கும்.

பாண்டியா, வ்ண்டியை நிதானமாக ஓட்டியபடியே பின்பக்கமாய்த் திரும்பி ஒரு வேண்டுகோள் விடுத்தான்.

'தப்பா நினைக்கப்படாது குமு! அந்தக் கார்க்காரப் பயல் பேசினது மாதிரிதான் இந்த ரோடுகாரப் பயலுக உன்னையும் என்னையும் ஒரு மாதிரிப் பார்க்காங்க. நீ விலகி இருக்கிறதனாலயும் பயந்து போய் அக்கம் பக்கம் பார்க்கிறதினாலயும் உன்ன நான் ஏதோ தள்ளிக்கிட்டுப் போறது மாதிரி நினைக்கிறாங்க. அதனால நெருக்கமா இருக்கிறது போல் நடித்தால் நல்லது'.

குமுதா ஓ.கே. சொல்லவில்லை. அதேசமயம் ஆக்ஷன் பெண்ணானாள். பின்னிருக்கையில் இருந்து முன்பக்கமாய் நகர்ந்து நகர்ந்து அவன் இடுப்போடு சேர்த்து வலது கையைக் கோர்த்துக் கொண்டாள். சும்மா ஒரு இதுக்குத்தான். இல்லாட்டி பார்க்கிறவங்க தப்பா நினைக்கப்படாதே... இந்த இளங்கோவும் இருக்கானே. அவன் மேல லேசா கைபட்டாபோதும் கற்பழிச்சிட்டது மாதிரி கதறுவான். பொது இடம், பொது இடமுன்னு பொலம்புவான். அவன எப்படித்தான் காதலிச்சேனோ?.....

பாண்டியா, கண்மண் தெரியாமல் ஓட்டினான். எண்பது கிலோமீட்டர் வேகம் இருக்கலாம். குமுதா சிறிது பயந்து போனாலும் அந்த வேகம் அவளுக்கு பிடித்துப் போய்விட்டது. பின்பக்கமாய் ஓவர்டேக் செய்ய வரும் லாரியை மறித்து முன் பக்கமாய் வரும் பேருந்துக்கு குறுக்காய் வண்டியை வளைத்து அவன் ஓட்டிய விதமே ஒலிம்பிக் போட்டிக்கு தகுதியைக் கொடுக்கும். இந்த இளங்கோவும் இருக்கானே -- தாம்பரத்துல லாரி வருதுன்னா சைதாப்பேட்டையிலேயே ஸ்கூட்டரை நிறுத்துவான். அட்வென்சர்னா என்னன்னே தெரியாதவன்.

பாண்டியா, நாவலூர் பக்கம் ஒரு கடை முன்னால் பைக்கை நிறுத்தினான். சுட்டு விரலை ஆட்டியபடியே, ரெண்டு கோலாக்களை கடைப் பையனையே கொண்டு வரச்செய்தான். ஒன்றைப் பல்லால் கடித்து, குப்பியை குதறி கடித்து, வீசினான். பிறகு பைக்கிலிருந்து இறங்கினான். ஆங்கிலப் படங்களில் வருமே அப்படி அவள் முன்னால் போய் மண்டியிடுவது போல் லேசாய் காலை வளைத்து அவளிடம் அந்த கோலாவை நீட்டினான். அவள், அவனைப் பார்த்தபடியே, சிரித்துக் குடித்தாள். அவனும் குடித்தான். பிறகு இவன் தான் குடித்து பாதியிருந்த கோலாவை அவளிடம் நீட்டினான்... உடனே அவள் அதை வாங்க மறுத்ததுபோல், தொலைக்காட்சியில் விமல் சேலை விளம்பரத்தில், ஒரு பைலட் அதிகாரிக்கு கைகளால் தனது முகத்தை மறைத்தபடியே சிரிப்பாளே அந்தப் பெண்ணைப்போல சிரித்தாள். பிறகு, அங்குமிங்குமாய் பார்த்தபடியே அவன் கையிலிருந்த கோலாவை வெடுக்கென்று பற்றிக்கொண்டு, தனது கோலாவை முந்தானையால் மறைத்த படியே அவனிடம் நீட்டினாள்.

குமுதாவின் மனம் அவனால் ஜில்லிட்டதா? அல்லது அந்த பானத்தால் ஜில்லிட்டதா என்று திண்டுக்கல் லியோனியால்கூட சொல்ல முடியாது. அப்படிப் பட்ட ஜில்லு. வாழ்க்கையின் அர்த்தத்தை புரிந்து கொண்ட ஜில்லு...

அந்தக் குளிர்காற்றிலும், வியர்த்துக் கொட்டுவதுபோல் பாண்டியா தனது சட்டைப் பொத்தான்களை தொப்புள் வரைக்கும் கழட்டி விட்டான். செம்மண் நிலத்தில் பசும்புல் முளைத்ததுபோன்ற மார்பு... அதில் டாலர் செயின் டாலடித்தது. அதைத் தூக்கித் தூக்கிப் போட்டு பிடித்தபடியே, பாண்டியா அவள் கண்களை நேருக்கு நேராய்ப் பார்த்தபடியே கேட்டான். எப்பா எப்பேர்ப்பட்ட கண்ணு...

'ஒன்ன ஸ்கூட்டர்ல கொண்டுவந்து விட்டானே -- ஒரு இம்போட்டண்ட் பெல்லோ... அதான் ஒம்போதுமாதிரி -- அவன் யாரு? உன் காதலனா?'

குமுதா, பாண்டியாவை ஒய்யாரமாகப் பார்த்தபடியே அவசர அவசரமாய் பதிலளித்தாள்.

'நோ... நோ... அவன் எங்க பெரியம்மா மகன்'

குமுதா, இப்போது, அவன் தோளைப் பிடித்தபடியே வண்டியில் ஏறினாள்.

- வாசுகி - தீபாவளி மலர் - 1998

# ஒரு சபதத்தின் மறுபக்கம்

அந்த மூன்றுகட்டு, பழம்பெரும் வீட்டில் நவீனமான மேக்கப் போடப்பட்ட முதற்கட்டின் தெருப்படிகளில் கால் மிதிக்க, தயங்கி நின்றான் மாரிமுத்து... அக்கம்பக்கம் திரும்பிப் பார்த்தான். அவன் பின்னால் வந்த சொந்த நாய் கூட அவனை ஒரு மாதிரி பார்ப்பதுபோல் இருந்தது. உடனே அவன் கீழே குனிந்து கல்லை எடுப்பதுபோல் பாசாங்கு செய்தபோது, அவன்மீது நம்பிக்கை வைத்ததுபோல், அது வாலாட்டி நின்றது. உடனே இவன் கல்லுக்குப் பதிலாக ஒரு மண்கட்டியைத் தூக்கி எறிந்தபோது அது செல்லக் கோபத்தோடு பின்வாங்கியது.

மாரிமுத்து, அந்தப்படிகளை மிதிக்கலாமா, வேண்டாமா என்று ஒரு நிமிடம் சிந்தித்தான். இருபதாண்டு காலமாக அந்த வீட்டுப் படியை மிதிப்பதில்லை என்று போட்டிருந்த சபதம்... அவன் தன்னைத்தானே திடப்படுத்திக் கொண்டான்... சபதம் முக்கியமல்ல... அதன் நோக்கம்தான் முக்கியம்... அந்த ஊரிலேயே கால் பகுதியை மடக்கிப் போட்டிருக்கும் இந்த அரண்மனை வீட்டிற்கு உறவாடுவதற்கோ யாசகம் கேட்டோ படி மிதிப்பதில்லை என்றுதான் சபதம்... இந்த சபதத்தால் தன்னைத் தோளில் தூக்கி கொஞ்சிய தாய்மாமன் செத்த போதுகூட இந்த வீட்டுப் படியேறியதில்லை... சுடுகாட்டுக்குப் பக்கத்திலுள்ள கருவேலமரக்காட்டில் தாய் மாமா எரிந்து முடிவதுவரைக்கும் ஒரு கௌரவ வெட்டியானாக காத்து நின்றவன். ஆனால் அப்பேற்பட்டவன் படிமிதிக்கப் போகிறான். ஆனாலும்

சமாதானம் செய்து கொண்டான்... அந்தச் சபதத்தின் மறுபக்கத்தைக் காட்டவே படிதாண்டப் போகிறேன்...

மாரிமுத்து, முதற்படிக்கட்டில் கால் வைத்தபடியே நின்றான். பின்னர் மூன்றுபடிகளையும் ஒரே தாவாய்த் தாவி, இருபக்கமாக உள்ள வெளித் திண்ணைகளின் இடைவெளிச் சமதளத்தில் நடந்து வாசற்படியில் நின்றான்... உள்ளே எட்டிப் பார்த்தான். கோவில் கருவறைபோல் மறுமுனையில் சமையற்கட்டு தெரிந்தது... இரண்டாவது கட்டில் உற்சவ மூர்த்திகளாய் ஆண்களும், பெண்களுமாய் ஐந்தாறுபேர்.... அத்தனை பேரிடமும் அட்டகாசமான சிரிப்புகள்... மாரிமுத்துவால் எந்தச் சிரிப்பையும் தனிப்படுத்த முடியவில்லை... அத்தனையும் கலப்படச் சிரிப்பு... அந்தச் சிரிப்பு அவனுள் ஒரு ஆவேசத்தை ஏற்படுத்தியது... கணுக்கால் வரைக்கும் வியாபித்த எட்டு முழ மல் வேட்டியை தார்ப்பாய்க்கப் போனான்... பிறகு அது மரியாதைக்குரிய செயல் அல்ல என்று நினைத்தவன் போல் வேட்டியை இறுக்கிக் கட்டினான். வெளிவாசலை பாதிமறைத்த தேக்கு கதவை ஒரு உதை, உதைத்து வழி ஏற்படுத்தினான்... அங்கிருந்து முதற்கட்டுக்கு வந்து, உள் திண்ணை இடைவெளியில் நடந்து மாட்டுத் தொழுவத்தையும், உறைக்கிணற்றையும் தாண்டி மலை மலையாய் அடுக்கி வைக்கப்பட்ட நெல் மூட்டைகளை ஏறெடுத்தும் பார்க்காமல், இரண்டாவதுகட்டு வாசற்படியையும் தாண்டி, நாற்புறமும் செவ்வக வடிவிலான மேல் தளங்களுக்கு நடுவிலுள்ள கீழ்த்தளத்தில் ஆவேசமாக நடந்தான். எதிர்திசையை கண்ணாடாமலேயே பார்த்தான்.

தென் பத்தியில் கிழக்குப் பக்கம் ஊஞ்சல் பலகை... இவன் அப்பா கொண்டு வந்து போட்ட மாம்பலகையாம்... அதன்

நடுவில் தம்பி முத்துவேல்.... அவனுக்கு இருபக்கமும் மாமன் மகன்கள்.... ச்சீ... இந்தப்பயல்களா மாமன் பையன்கள்... இடது பத்தியில் சுவரோடு ஒட்டிப்போட்ட ஒரு சாய்வு நாற்காலியில் மதயானை படுத்திருப்பதுபோல் அத்தைக்காரி... இவள் அத்தை இல்லை... தாய் மாமனோட பொண்டாட்டி... எந்த இரத்தக் கலப்பும் இல்லாத ஊடுறுவல்காரி... அவளருகே கோவில் தூண்போல், கடைந்தெடுத்த தேக்குத் தூணை, முத்துவேலின் முகமாக நினைத்து, முகம்போட்டு நிற்கும் பாப்பா... இயற்கைப் பெயர் என்ன இழவோ... இட்ட பெயர் போய், இட்டுக் கட்டிய பெயர் நிலைத்து விட்டது... உருண்டு திரண்ட அந்தத் தூணைப்போல உடற்காரி.... வழியில் போகிறவர்களை அவர்கள் தன்னைத் திரும்பிப் பார்ப்பதுவரைக்கும் நோண்டிப் பார்ப்பவள்... இந்த ஊரில் குழாய்ச் சட்டை போட்ட முதலாவது பெண்... நைட்டுக்கவுனாமே... அதைப் பகலிலும் போட்டுத் திரிகிறவள்... அசல் மான்குட்டி... இல்லை இல்லை. பைபிள் சொல்வதுமாதிரி அசல் விரியன் பாம்புக் குட்டி... இவளுக்கும் மாமியாருக்குமிடையே வாயுத் தொல்லையாலோ, அல்லது வீட்டுக்காரர் தொல்லையாலோ வயிறு துருத்திய முத்துக்கனி... ஆனாலும் பார்வையில் லட்சணம்... பார்ப்பதற்கும் லட்சணம்... மாமனுக்குப் பிறந்த பெரியதடியனின் மனைவி.... பாம்போ... பழுதோ அறியான்...

மாரிமுத்து, எதிர்திசைக்காரர்களை இளக்காரமாய்ப் பார்த்தபோது, ஊஞ்சல் பலகையின் கால்களை ஊன்றி ஊன்றி அதை ஆடவிட்டு ஆடிக் கொண்டிருந்த மூவரும் அப்படியே எழுந்தார்கள்... சாய்வு நாற்காலியம்மா, அடப்போடா என்கிறமாதிரி வெத்திலையை குதப்பிக் கொண்டிருந்தாள். பாப்பா பயந்து போனவளாய் அம்மாவின் அருகே வந்து

சாய்வு நாற்காலியைப் பிடித்துக் கொண்டாள்... அந்த கிழட்டுக் குழந்தையை, இவள் - இந்தப் பாப்பா, தள்ளுவண்டியில் தள்ளப் போவதுபோல் தோன்றியது... முத்துக்கனி மட்டும் எழுந்து, 'உட்காருங்க அண்ணாச்சி' என்றாள்... ஆனால் மாமியார்க்காரியோ, மருமகளை எரிச்சலாய்ப் பார்த்துவிட்டு ஊஞ்சல் ஆசாமிகளுக்கு ஆணையிட்டாள்...

உட்காருங்கடா... மருமவனே... ஒங்களயுந்தான்... உட்காருங்க... எல்லாம் நான் எதிர்பாத்ததுதான்...'

மாமன் மகன்கள் உட்கார்ந்தார்கள்... நடுவில் தயங்கி நின்ற முத்துவேலையும் ஆளுக்கொரு கையாக இழுத்து ஊஞ்சல் பலகையில் உட்கார வைத்தார்கள்.... ஆனாலும் ஊஞ்சலை அவர்களின் எடைக்கு தாக்குப் பிடிக்காமல் ஆடப்போனதையும் முன்கால்களை நீட்டி தரையில் அழுத்தி தடுத்துக் கொண்டார்கள்...

மாரிமுத்து, ஊஞ்சல்காரர்களை கோபம் தணியாமல் ஒருசேரவும், தனித்தனியாகவும் பார்த்தான்... வலது பக்கத்துத் தடியன் இவன் வயதுக்காரன்... பட்டுச் சட்டையின் மூன்று பட்டன்களைத் திறந்து போட்டு தங்கச் செயினின் டாலரை தூக்கி, தூக்கிப் போட்டு பந்தாடினான்... இடது பக்கத்துக்காரன் தம்பி முத்துவேலைவிட ஒரு வயது பெரியவன்... அதே சமயம் ஒரு வகுப்புக்குக் கீழே படித்தவன்... அண்ணன் சூரன்... தம்பி சூதன்... நடுப்பக்கம் ஊஞ்சலில் பட்டும் படாமலும் விட்டத்தைத் தூக்கியபடி, இருந்த கோலத்தை நின்ற கோலம்போல் தோற்றுவித்த முத்துவேல் ஜீன்ஸில் கிடந்தான்... அவன் உடைக்குள் இன்னொரு ஆளைத் தூக்கிப் போடலாம்... அச்சடித்த... அதுவும் டி.டி.பி... போட்டது மாதிரியான தெளிவான முகம்... அளவான அவயங்கள்... மாரிமுத்துவால் தம்பியைக்

கோபமாகப் பார்க்க முடியவில்லை... நாலு முழ வேட்டியையும், நொந்து போன சிலாக்கையும் கட்டிக் கொண்டு படித்துவிட்டும், வேலையில்லாமல் ஊரில் பரட்டைத் தலையனாய் திரிந்த தம்பியை இப்படி நாகரீகமாகப் பார்த்ததில் அந்தச் சமயத்திலும் அவனுக்கு பெருமையாகத்தானிருந்தது...

'பாத்தியளா... என் தம்பியை!' என்பது மாதிரி அங்கே இருந்த எல்லோரையும் தோரணையாகப் பார்த்தான்... அவர்களைப் பார்க்கப் பார்க்க, இவன் பார்வை அனலைக் கொட்டியது... வாய் அசிங்கமாகப் பேசப் போனது... மூன்றாவது கட்டில் உள்ள சமையலறையிலிருந்து, பலகாரங்களைக் கொண்ட பெரிய வட்டத் தட்டை, இரண்டு கைகளிலும் ஏந்தி வந்த, அத்தைக்காரியின் தங்கச்சி மகள், மாரிமுத்துவைப் பார்த்ததும், அச்சப்பட்டு பின்வாங்கினாள்... வரலாற்று உண்மை தெரிந்தவள்...

மாரிமுத்து ஒவ்வொரு சொல்லுக்கும், ஒவ்வொருவராய்ப் பார்த்து இளக்காரமாய்க் கேட்டான்...

என் தம்பிய வளச்சிப்போட திட்டம் போட்டுட்டீக... ஆனா அதுதான் நடக்காது... டேய் முத்துவேலு! எழுந்திரிடா...

அத்தைக்காரி, உடம்பில் ஒரு துரும்பைக்கூட அசைக்காமல் யாருக்கோ சொல்வதுபோல் சொன்னாள்...

'நாங்க ஒண்ணும் வளைச்சிப் போடல... அப்பிடிப் போட்டாலும் ஊரான் பிள்ளையப் போடல... என் நாத்துனார் மகனத்தான்...

'ஒங்ககிட்ட எனக்கு பேச்சில்லை... வாடா தம்பி, வீட்டுக்குப் போகலாம்.'

முத்துவேல் எழுந்திரிக்கப் போனான். அதற்காகவோ என்னவோ போய் வருகிறேன் என்பதுமாதிரி பாப்பாவை பவ்வியமாகப் பார்த்தான்… அவளோ பழையபடியும் ஒரு தூண் மறைப்பிற்குப் போய் மாரிமுத்துவின் கண்படாத கோணத்தில் நின்றுகொண்டு போக வேண்டாமென்று முத்துவேலுக்கு கண்ணாட்டி, முகமாட்டினாள்… அந்த கடைக்கண் பார்வையில் முத்துவேலுக்கு அண்ணன் ஒரு கடுகாகத் தெரியவில்லை- என்றாலும் கடுக்காய் கொடுக்கும் அளவிற்கு முக்கியத்துவம் அற்றவனாய் தெரிந்தான்… சாவகாசமாகப் பதிலளித்தான்…

நீ போண்ணே!… நான் வந்துக்கிட்டே இருக்கேன்.'

காலையில டெல்லியில் இருந்து வந்தவன். இரண்டு வருசமாய் பாக்கல… எங்கிட்ட முகத்தக் காட்டாமல் யாருகிட்ட காட்டக் கூடாதோ அவங்ககிட்ட முகம் காட்ட வந்துருக்கே.. என்னடா புது உறவு… எழுந்திரிடா…'

'போண்ணே.. பின்னால வாறேன்…'

'இப்போ நீ வந்துதான் ஆகணும்… ரெண்டு பேரும் சேர்ந்து ஊர்ல நடந்தா அதுதான் பெருமை…'

'ஒன் பெருமைக்கு நான்தானா கிடைச்சேன்?… நான்தான் வாரேன்னு சொல்றேனே…. கொஞ்சம்கூட ஒரு இது இல்லாம'

'சரி… ஒன்னை இப்போ தம்பியா கூப்பிடலை… பங்காளியாக் கூப்புடுறேன்… நம்ம ரெண்டு பேருக்கும் கணக்கு வழக்கு பாக்கணும்… பாகம் பிரிக்கணும்… வயசான அம்மா.. ஒன்கிட்ட இருக்கணுமா… இல்ல எங்கிட்ட இருக்கணுமான்னு தீர்மானிக்கணும்…'

எனக்கு... சொத்து... சோகம் எதுவும் வேண்டாம்... அம்மாவையும், சொத்தையும் நீயே வச்சி கட்டிக் காப்பாத்து. என்னை கால், கையோட விட்டாப் போதும்...'

'அது எப்படிடா முடியும்... அம்மாகிட்ட பால் குடிச்ச கணக்கு இருக்குது... நான் உன்னை ரெயில் ஏத்தி படிக்க வச்ச கணக்கிருக்கு... ஒன் அக்காமாறுங்க ஒனக்கு துணி துவைச்ச கணக்கிருக்குது... இதெல்லாம் கணக்கு பாக்க முடியாத கணக்குடா... எந்திரிடா...'

என்னண்ணே நீ... என்னை அடிமைமாதிரி நினைச்சுப் பேசுறே...

மாரிமுத்து, தம்பியை அதிசயத்துப் பார்த்தான்... நேருக்கு நேராய் பேசாதவன்.... சின்னத் தேவைகளை அம்மா மூலமும், பெரிய தேவைகளை அண்ணி மூலமும் தெரியப் படுத்தியவன்... டெல்லிக்கு வேலையில் சேர புறப்படும் போதுமட்டும் தன் கைகளைப் பிடித்துக்கொண்டு விம்மியவன்... டெல்லிக்குப் போனதும் பேசாக்குறையை பக்கம் பக்கமாய் கடிதமாய் எழுதியவன்... நீ அண்ணன் அல்ல... அப்பா! என்றவன்... 'ஒவ்வொருவருக்கும் ஒரு தாய்தான்... ஆனால் எனக்கு ரெண்டு தாய்கள்' என்று எழுதியவன்... அப்பேர்ப்பட்ட தம்பி.... ரெண்டு வருஷத்துக்கு முன்னால டெல்லியில வேலையில சேர்ந்த ஆறாவது மாதத்திலேயே வீட்டிற்கு ஓடி வந்தவன்... தன்னோடு காடுகழனிக்கு வந்தவன்... இந்த அத்தக்காரி வயலும் பக்கத்துலதான்... அங்கதான் இந்த மூதேவியோட இஸ்க்கு தொஸ்கு ஏற்பட்டிருக்குமோ?.....

மாரிமுத்து, சிறிது சிறுமைப்பட்டு நின்றான்... கடைசியாக அவன் மனப்போக்கை தெரிந்து கொள்வதற்காக ஒரு அஸ்திரத்தை வீசிப் போட்டான்.

ஒனக்கு, ஒரு பெண் வீட்டிலேருந்து துப்பு வந்திருக்குடா... நல்ல இடம்டா... எழுந்திரிடா...'

எனக்கு கல்யாணம் எதுவும் வேண்டாம். எந்த நேரத்துல நடத்தணுமுன்னு...

முத்துவேல், அண்ணனிடம் வெட்டு ஒன்று துண்டு இரண்டாய் பேசத்தான் நினைத்தான்... அப்படிப் பேசும் போது அவன் முகத்தைப் பார்த்தவுடனேயே பேச வந்த வார்த்தைகள் நாவோடு ஒட்டிக் கொண்டன... அப்போது பார்த்து அத்தைக்காரி குத்தலாய்க் கேட்டாள்.

'கல்யாணம்... பொல்லாத கல்யாணம்... தகப்பன் இல்லாத பிள்ளையை ஐந்தாறு லட்ச ரூபாய்க்கு விற்கிற கல்யாணம்... அந்தக் கணக்கு... இந்தக் கணக்குன்னு காட்டி அந்த ரூபாயையும் அமுக்குற கல்யாணம்...

'ஒன்ன மாதிரி நான் ஒண்ணும் கூட்டிக் கொடுக்கிற வம்சம் இல்லை...

'இந்தாப்பா மரியாதையாப் பேசு... என் பையன்களுக்கு கோபம் வருமுன்னே போயிடு...

'கோபத்தையும் பாத்துடலாம்...

'டேய் கடைசியாக் கேக்கேன்... வாரியா இல்லியா...'

'இப்போ வரமாட்டேன்...'

'அப்படின்னா- ஒன்னை உதைச்சு தூக்கிக்கிட்டு போவேண்டா.'

பெரிய மாமா பையன் தூளுரைத்தான்.

'வரமாட்டேன்னு சொல்றவர, தூக்கீட்டுப் போறதுக்கு அவர் என்ன ஆட்டுக் குட்டியா?... அதைப் பார்த்துட்டு சும்மா நிக்கிறதுக்கு... எங்க கையி வளையல் போடல...'

அதையும் பாத்துடலாம்... டேய் முத்துவேலு எந்திரிடா...

தேவையில்லாம இதைக் கௌரவப் பிரச்சனையாக்கிட்டே... எனக்கும் சுயமரியாதை இருக்கு... என்னால வரமுடியாது.... ஒன்னால...

முத்துவேல் சொல்லி முடிக்கும் முன்பே, மாரிமுத்து ஆவேசமாய்ப் பாய்ந்து முத்துவேல் கையைப் பிடித்து, ஊஞ்சலில் இருந்து இழுத்துக் கீழே போட்டான்...

கீழே விழுந்தவனைத் தூக்கி நிறுத்தி அவனைக் குண்டுக் கட்டாக சுமக்கப் போனான்... முத்துவேல், அண்ணனைத் திருப்பித் தாக்கலாமா என்று யோசித்தபோது, அத்தைக்காரி உசுப்பி விட்டாள்... 'ஏண்டா, பாத்துக்கிட்டு நிக்கீக... சவத்துப் பயல, இழுத்துக் கிடத்துங்கடா...'

இதற்குள், அம்மா சொல்லப் பொறுக்காதவர்களாய் மாமா பையன்கள் மாரிமுத்துவை நெருங்கினார்கள்... மாரிமுத்து தம்பியை விட்டுவிட்டு ஓடினான்... அவர்கள் மமதையாய் சிரித்தபோது, வடபத்தியில் ஒரு குலை தேங்காய்ப்பக்கம் கிடந்த ஒரு அரிவாளை அவர்களைப் பார்த்துக் கொண்டே எடுத்தான்... திருப்பாய்ச்சி அரிவாள்... கழுத்தில் பட்டால் தலையோடு வரும்... முனை வளைந்த அரிவாள்... வயிற்றில் பட்டால் குடலோடு வரும்...

மாரிமுத்து, அசல் அய்யனாராய் ஆனான்... வேட்டைக்குப் போகும் சுடலைமாடன்போல் அரிவாளை ஒருச் சாய்த்தபடியே அவர்களை நோக்கி அடிமேல் அடி வைத்தான்... கண்கள் பஞ்சாக்கினியாகின.... நாக்கு மகிசாசுரவர்த்தினிபோல் வெளிப்பட்டது... ஆயுதமற்ற இன்னொரு கையும் அரிவாளாய் விறைத்து நின்றது... அவன் யாருக்கு குறி வைக்கிறான் என்பது

புரியவில்லை... அத்தைக்காரி... 'அய்யய்யோ... அய்யய்யோ... என்று அரற்றியபடியே மகளையும் இழுத்துக் கொண்டு மூன்றாவது கட்டின் முதலறைக்குள் போய் கதவைத் தாழிட்டாள்...

பின்னர் சன்னல் வழியாக மகன்களை கூக்குரலிட்டாள்...

'ஓடி வாங்கடா... அண்ணன் பாடு... தம்பி பாடு...' என்று உஷார்படுத்தினாள்... அவர்களும் தாய் சொல்லைத் தட்ட விரும்பாமல், திரும்பாமல் பின்பக்கமாய் ஒரு அனுமானத்துடன் ஓடி, அம்மா இருந்த அறைக்குள் கதவில் சாய்ந்தபோது, அவள் அந்தக் கதவை வேக வேகமாய்த் திறந்து, அதே வேகத்தில் மூடினாள்... முத்துக்கனி மட்டும் தரையில் மெழுகுவர்த்தியாய் உறைந்து நின்ற முத்துவேல் பக்கம் போய் நின்றாள்... மாமியார்க்காரி பேசுவதை திரும்பிப் பாராமல் கேட்டுக் கொண்டிருந்தாள்...

'ஏய் முத்துக்கனி... உள்ளே வா... இல்லன்னா அந்தப் பக்கமா ஓடிப் போ... பாவி மொட்டை எந்த நேரத்துல முழுகாம ஆனாளோ எல்லாமே முழுகுது... இந்தாப்பா மாரிமுத்து! ஒன் தம்பிய வெட்டனுமுன்னா, வெளியில கொண்டு வெட்டு... ஒனக்கு கோடிப் புண்ணியம்... இந்தாப்பா முத்துவேலு! நாங்க ஒண்ணும் உன்ன வெத்தில பாக்கு வச்சு கூப்பிடல... ஒனக்கு இங்க வேலையுமில்ல... வெளியில போ... வெளியில போயி ஒங்கண்ணன நீ வெட்டு... இல்ல அவன் உன்னை வெட்டட்டும்... அந்தச் சமயம் பார்த்து, பாப்பாவும் குரல் கொடுத்தாள்... 'அண்ணி, இங்க வாங்க... ஓடிவாங்க.... அவங்க எப்படியும் போகட்டும்...'

மாரிமுத்து, அரிவாளை இப்போது ரெண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு, நிலை குலைந்து நின்ற முத்துவேலை

நோக்கி குறிபார்த்து நடந்தான்… முத்துக்கனி மன்றாடினாள்… எண்ணாச்சி… எண்ணாச்சி… இது ஒன் தம்பி… வளத்த கடா மாதிரி வெட்டிடாத… அப்புறம் நீதான் வருத்தப்படுவே…

மாரிமுத்துக்கு, எதிரே நிற்பவன், எதிரி அல்ல என்பதும் அவன் தன் கூடப்பிறந்த தம்பி என்பதும் மெல்லப் புரிந்தது… ஆனாலும் குருவி பறந்த கிளை ஆடுவதுபோல் ஆவேசம் முற்றும் கலையாமல் தம்பியின் தலை முடியை செங்குத்தாய் பிடித்துக் கொண்டு அவனை அங்குமிங்குமாய் ஆட்டிக் கொண்டே, அரிவாள் வீச்சாய் பேசினான்.

'நாம வாழ்ந்து கெட்ட குடும்பம் என்கிறத மறந்திட்டியடா… அப்பா, குடி… கூத்துன்னு இருந்த சொத்த அழிச்சுட்டு குடியிலே செத்ததால நம்ம குடி இப்படி ஆய்ச்சுதுன்னு ஒனக்கு எத்தனை தடவ சொல்லியிருப்பேன்… இதே அரண்மனை வீட்டுல பிறந்த நம்ம அம்மா, நொடிச்சு போயிட்டாள்னு, தான் சாப்பிட்ட எச்சில் சாப்பாட்ட, அம்மாகிட்ட நீட்டினவள் அந்த நீலி… நானும் பக்கத்துலதான் நின்னேன்… அன்னைக்கு போட்டோம் சபதம்… செத்தாலும் சாவோமே தவிர, இந்த வீட்டுப் படிக்கட்ட மிதிக்க மாட்டோமுன்னு அம்மாவும் நானும் ஒருத்தருக்கு ஒருத்தர் சத்தியம் செய்தோம்.. அந்தச் சத்தியத்தை பொய்யா ஆக்கிட்டியேடா பாவி…'

அண்ணனின் முடிப்பிடியில் தம்பியின் கண்கள், துருத்தின. மாரிமுத்துவின் அரிவாள் திடப்பட்டு நின்றது… முத்துக்கனி இப்போது 'எய்யோ… எம்மோ'என்று அவர்கள் இருவரையும் சுற்றிச் சுற்றி வந்தாள்…

'எண்ணாச்சி… எண்ணாச்சி… இது நீ வளத்த பிள்ள… மறந்துடாத'… என்று அவனுக்கு நினைவு படுத்தினாள்… அவன் மோவாயைப் பிடித்து தாங்கினாள்.

மாரிமுத்து தம்பியின் முடியைப் பிடித்தக் கையை எடுத்து, இன்னொரு கையையும் சேர்த்து, தம்பியின் கழுத்தில் கவுண் போல் போட்டுக் கொண்டான்... முத்துக்கனியை பார்த்தபடி ஒப்பித்தான்...

'இவன் பழச மறந்துட்டாம்மா... என் தங்கச்சிங்க புல்லுக்கட்டு சுமந்தும், நான் வாடகை வண்டி அடிச்சும் இவன படிக்க வச்சோம்... அப்போ உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி கழுகாகுமான்னு ஊர் முழுக்கச் சொன்னவள் ஒன் மாமியார்... ஒன் கொளுந்தன், அதோ ஒளிஞ்சு கிடக்கானே வீராதி வீரன்... அவன் காலேஜுக்கு பைக்குல போவான்... அதே காலேஜுக்கு என் தம்பி... ச்சீ... இவனா தம்பி... இந்தப்பய கால்தேய நடப்பான்... ஒரு தடவையாவது பைக்குல ஏறுடான்னு சொல்லியிருப்பானா... அவன்கிடக்கான்... இவன்மேல கண்ணு போடுற அந்தப் பாப்பா மட்டும் என்னவாம்... நாலு வருசத்துக்கு முன்னால் கோவில் திருவிழாவுல, இவன பார்த்துட்டு தெக்குத் தெரு மாடத்தி அக்கா பாப்பாவப் பார்த்து 'ஒன் முறை மாப்புள எப்படி ஜம்முனு இருக்கான் பாருன்னு' சும்மா ஒரு பேச்சுக்கு கேட்டிருக்காள்... ஒடனே இவள், 'எவன் எனக்கு முறை மாப்புளே... இந்த மாதிரி பேச்ச எந்தக் காலத்திலயும் பேசாதன்னு இவன் காதுபடவே சொல்லி இருக்காள்... இவன் என் சம்சாரத்துக்கிட்ட சொல்லி குமுறியிருக்கான்... அப்ப மட்டும் இல்லாத உறவு இப்போ எப்படி வந்துட்டாம்?... இவன் எடுத்த எடுப்பிலேயே ஆபிசர் ஆகாட்டா இந்த உறவு வந்திருக்குமா... இவன் டெல்லிக்கு ராசாவான்னாலும்... எச்சில் தட்டக் காட்டி, எச்சிப் படுத்துனதுக்காக, சபதம் போட்ட தாய்க்கு பிள்ளைதானே... நீயே சொல்லும்மா... அப்படியும் ஒன் நாத்தினார இவன்

கட்டிக்கணும்முன்னா சொல்லு... நான் இவனை இங்கேயே விட்டுட்டு போயிடுறேன்....

முத்துக்கனி பதில் சொல்ல முடியாமல் திணறினாள்... உடன்பட்டால் நியாயக் குற்றம்... உடன்படாவிட்டால் வீட்டுக் குற்றம்... தான் மாட்டிக் கொண்டது போதாதா...

மாரிமுத்து, அவளுக்கு பிரச்சனையைக் கொடுத்து இருப்பதைப் புரிந்து கொண்டவன்போல், தம்பி பக்கம் திரும்பிப் பேசினான்...

நீ எவளுக்கு ஏங்கிறியோ... அவள், தான் மட்டும் பதுங்கினதைப் பாத்தியா... ஒப்புக்காவது ஒரு சொல் சொன்னாளா... இதுக்குப்பேர்தான் தெய்வீகக் காதலுன்னா... நான் விடமாட்டேண்டா... அந்தச் சீமைப்பன்றி சொல்றமாதிரி ஒன் கல்யாணத்தை நான் வியாபாரமாக்கல... ஒனக்கு எங்க இஷ்டமோ அங்கே கட்டிக்கோ... எந்தச் சாதியாவும் இருந்துட்டு போகட்டும். சட்டைக்காரியா இருந்தாக்கூட தப்பில்லே... இந்த வீட்டுல நீ கட்றதுனால எனக்கு நஷ்டமில்லே... ஆனா இது ஒனக்கு புதைமண் வீடு... நம்ம அம்மாவ கேவலப்படுத்திய வீடு... பழசை மறக்கலாம்... மன்னிக்கலாம்... ஆனா அதே பழசு புதுசா வேடம் போட்டால் நாமதான் ஒதுங்கிப் போகணும்... இதையும் மீறி நீ இந்த வீட்டுலதான் சம்பந்தம் எடுப்பேன்னா இந்தா அரிவாள்... ஒங்கையாலயே என்ன வெட்டிப்போடு...

மாரிமுத்து, தோளோடு இடுக்கி வைத்திருந்த தம்பியின் வலது கைக்குள் அரிவாள் பிடியை திணித்துவிட்டு, அவனுக்கு வெட்ட தலைகொடுப்பவன்போல் தலை குனிந்தான். முத்துவேல், குத்துக்கல்லாய் நின்றபோது, மாரிமுத்து முதுகை நிமிர்த்தாமல், தலையை மட்டும் நிமிர்த்திப் பேசினான்...

'ஏலே... பேடிப்பயல்களா... வெளியில வாங்கடா... ஒங்கல ஒண்ணும் செய்ய மாட்டேண்டா... என் தம்பியால... என்னை வெட்ட முடியலையாம்... நீங்களாவது வந்து வெட்டுங்கடா... அவனையாவது வெட்டச் சொல்லுங்கடா... ஏன்னால்... அவன் ஒங்க சொல்லத்தான் கேட்பானாம்...

மாரிமுத்து, பொங்கிவந்த விம்மலை வெளிப்படுத்தப் போன வாயை ஒரு குத்துக் குத்தி நிறுத்தினான். ஆனாலும் அந்த அதிர்வில் கண்களில் திரண்டு நின்ற நீர்த் தாரை தாரையாய் அருவிப் பெருக்காய் உருண்டது... அவன் திரும்பி நடந்தான்... அவன் தோளில் ஒரு கை பட்டது. முத்துவேலின் கை... இப்போது மாரிமுத்து மனம்விட்டு, வெட்கம்விட்டு தம்பியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழுதான்.

முத்துவேல் அண்ணனை மார்போடு தாங்கி, தோளோடு சேர்த்து, அவனை நகர்த்து நகர்த்தி திரும்பிப் பாராமல் அந்த வீட்டைவிட்டு திரும்பிப்பாராமல் வெளியேறினான்...

- தினபூமி - தீபாவளி மலர் - 1997

# ஈரத்துணி

அன்று அலுவலகப் பவுர்ணமி நாள்; ஆனாலும் - பட்டப் பகலிலேயே உதித்த இந்தப் பவுர்ணமி, அந்த அலுவலகவாசிகளில் சிலருக்கு, வளர்பிறைகளின் பரிபூரணம். பலருக்கோ தேய்பிறைகளின் துவக்கம்... சுருக்கமாகச் சொல்லப்போனால், சம்பள நாள். துக்கமாய், துக்கிரியாய், விடை தெரியாப் புதிராய், விரக்தியாய், பற்றற்ற யோகியாய், மீனா போன்ற ஒரு சிலருக்கு மகிழ்ச்சியாய், பல்வேறு மனோ வடிவங்களைக் காட்டும் மாதக் கடைசி உழைப்பு நாள்.

அலுவலகப் பொருளாளன் - அதாவது கேஷியர் எனப்படும் காசாளர், தேசிய வங்கியில் இருந்து, கொண்டு வந்த பணக் கட்டுகளை ஒவ்வொன்றாய் எடுத்து எண்ணிக் கொண்டிருந்தான். பியூன் மாரிமுத்துக்கு பொறுமை இல்லை. கந்து வட்டிக்காரப் பயல் வரும் முன்னால் ஓட வேண்டும்... நல்ல வேளை... நாளையும், மறுநாளும் சனி, ஞாயிறு! திங்கள், செவ்வாய் சி.எல்., மீதி நாள் பற்றி அப்புறம் யோசிக்கலாம். என்ன இந்த முரளி...

"முர்லி... ஒரு கட்டுல... முதல் நோட்டு நம்பரையும்... கடைசி நோட்டு நம்பரையும் பார்த்தால் போதுமே... ஏன் நேரத்தை வேஸ்ட் செய்யுறே?"

"இடையில நாலைந்து நோட்டுக்களை உருவியிருந்தா ஒங்கப்பனா தருவார்?"

காசாளன், நோட்டுக்களை எண்ணுவதை விட்டுவிட்டு, அவை மேல் இரண்டு கரங்களையும் கிடுக்கிப் பிடியாய்

போட்டுக் கொண்டு, போன மாதம், இன்னொரு அலுவலகப் பொருளாளன், வங்கியிலிருந்து சம்பள நோட்டுக்களை வாங்கி வந்து, கால்குலேட்டரில் போட்டுப் பார்த்ததில், கணக்கு சரியாய் இருந்ததையும், பட்டுவாடாவில் பற்றாக்குறை ஏற்பட்டதையும் பார்த்துவிட்டு அசந்தானாம்... பிறகு அத்தனைபேரின் சம்பளத்தையும் வாங்கி, நம்பர்படி அடுக்கிப் பார்த்தால் மகாத்மா காந்தி படம் போட்ட பல நோட்டுக்களை காணலியாம்.

முரளி மேற்கொண்டும் விலாவாரியாக விளக்கியபோது, மீனா மட்டுமே அவன் பேசுவதை, முகநயங்களோடு கேட்டாள். மற்றவர்கள், அவன் பேசுவதைக் கேட்பதுபோல் பாசாங்குத் தனமாய் தலையாட்டியபடியே கேட்டுக் கொண்டிருந்தனர். இன்ஸ்டால்மென்ட் புடவை வியாபாரியைப் பார்த்த மல்லிகா, கட்டிய புடவை நழுவிப் போனதுபோல் தவித்தாள். மாதச் சீட்டுக்காரனைப் பார்த்த சிங்காரம், தானே ஏலத்தில் போகப் போவதுபோல் தவித்தான். அப்பளம், மிளகு, முறுக்கு, வடை, மிக்ஸர், அவரை, துவரை போன்ற நொறுக்குத் தீனி வியாபாரியை பார்த்த மாரியம்மா கண்களை மூடினாள்: திறந்தால் கண்ணீர்! எந்த வியாபாரியிடம் சிரித்து சிரித்து வாங்கினாளோ, அந்த வியாபாரியைப் பார்த்து, இந்த துப்புரவுத் தொழிலாளி அழப் போனாள். ஒவ்வொரு லெவலுக்கும் ஒரு துக்கம். இதில் மகாப் பெருந்துக்கம் டிரைவர் மணிக்குத்தான். மேலதிகாரியுடன் போய்விட்டு, திரும்பி வந்து பார்த்தால், அவன் மனைவி அலமேலு காசாளன் நாற்காலிக்கு எதிர் நாற்காலியில் அமர்ந்து காலாட்டிக் கொண்டு இருந்தாள்.

காசாளன், ஒவ்வொருத்தரையும் சீனியாரிட்டிபடி, சம்பளப் பணத்தை கொடுக்க கூப்பிட்டான். கணக்காளரான அக்கவுன்டன்ட் மீரா, சுருக்கெழுத்தாளப் பெண் மல்லிகா,

யூ.டி.ஸி.,யான சேகர், எஸ்டிசி.,களான மயன், மஞ்களா, இந்திரா, ராமஜெயம்... கடைசியில் மீனா. பிறகு 'கிளாஸ் போர்' வரிசை...

மீனா, தேர் நகர்வதுபோல் நகர்ந்து, காசாளன் அருகே போனபோது, டெப்திரி சண்முகம் குரலிட்டான்... ஒரு ஒதுக்குப்புறத்து நாற்காலி மேஜையில் காகிதக் கட்டுக்கள், ஊதுவத்திகள், தடித்த கவர்கள், பிரசவிக்கப் போவது போன்ற டெஸ்பாட்ச்டயரி ரிஜிட்டர்களோடு தனிக்குடித்தனம் நடத்துகிறவன்.

'இந்தாப்பா... முரளி... உன் ஆத்தாவுக்கு இப்போ எப்படி இருக்குது?'

'அந்தக் கவலை உனக்கு ஏன்?'

'என்னப்பா நீ... மூஞ்சில அடிச்சாப்போல...

'எங்கம்மா கார்ல அடிபட்டு ஆஸ்பத்திரில இருந்த சமயத்துல கேட்காம, 'டிஸ்சார்ஜ்' ஆன பிறகு கேட்கிறே... நீ எதுக்கு கேட்கிறேன்னு எனக்கு தெரியாதா?"

"நேர்மையா இருக்கிற நான், நேர்மையாய் நேரடியாகவே கேட்டிருக்கணும்! எம்மேலத்தான் தப்பு! உங்கம்மா எப்படிப் போனால் எனக்கென்ன? இந்த மாதச் சம்பளத்துல சொஸைட்டிக் கடன பிடிக்காதே, ஓ.டி., பேமென்ட்ல பிடிச்சால் போதும்!"

"என்கிட்ட எதுவும் பேசாதே. சொஸைட்டிக் கடன தயவு தாட்சண்யம் இல்லாமல் பிடிக்கணுமுன்னு டெப்டி டைரக்டர் சொல்லிட்டார்."

"அவர, எப்படி, யார் சொல்ல வச்சிருப்பாங்கன்னு எனக்கும் தெரியும். அவரையே, உங்கிட்ட வேற மாதிரி சொல்ல வைக்கிறேன் பார்க்கிறியா?"

"நீ இவ்வளவு சொல்றதால, அதே டெப்டி டைரக்கடர, நீ இன்னும் கணக்கு காட்டாத ஜி.பி.எப்., அட்வான்ஸ், எல்.டி.சி., கணக்குக்குக் கொண்டுவராத ஒன்னோட வெள்ள நிவாரணக் கடன், பெஸ்டிவல் அட்வான்ஸ், சைக்கிள் லோன்... இதுங்களையும் பிடிடான்னு சொல்ல வைக்கட்டுமா?"

"கோவிச்சுக்காத கண்ணா... சும்மா ஒரு பேச்சுக்குத்தான்... நீ சொல்றதையெல்லாம் பிடிச்சா நான் கோவிந்தாதான். ஏதோ பேசிட்டேன்... நீ இல்லாட்டி யாரு எனக்கு உதவறதுக்கு இருக்காங்க..."

"அப்படி வா வழிக்கு"

எப்போதும் உரத்த குரலில் பேசும் சண்முகமும், பொடி வைத்துப் பேசுவதில் நிபுணனான முரளியும், எங்கே அடித்துக் கொள்ளப் போகிறார்களோ என்று, குத்துக்கல்லாய் இருந்த எல்லாரையும் பதறிப் பார்த்த மீனா, இப்போது, குறுஞ் சிரிப்பாய் சிரித்தாள். முரளி நீட்டிய காகிதக் கட்டுக்களை அவள் காணாமலே நின்றபோது, தனியறையில் கனகசபாபதி வெளிப்பட்டார். அவரைப் பார்த்துவிட்டு, டிரைவர் மணியின் மனைவி ஓடி ஒளிந்து கொண்டாள். அவர், சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு கேட்டார். பதவிக்கேற்ற கனத்த குரல்... குரலுக்கேற்ற தடியுடம்பு...

"என்ன கலாட்டா? யோவ்... நீங்கள்லாம் யாருய்யா? கடன்காரக் கிராக்கிகளா? வெளியே போய் நில்லுங்கய்யா... இது என்ன சத்திரமா? சாவடியா? முரளி... இங்கே என்னமோ சத்தம் கேட்டது?"

"ஒண்ணுமில்ல சார்... புதுசா வேலைக்கு சேர்ந்த மீனாவுக்கு இது முதல் சம்பளம்! அதனால் ஸ்வீட், காரம், காபி கேட்டோம்."

"அப்படியாப்பா சண்முகம்?"

"அதேதான் சார்"

நிர்வாகக் கிழவர், மீனாவைப் பார்த்தார். பிரகாசமாய் வெளிப்பட்ட அவள் கண்களையும், உள்ளடங்கிய பற்களையும், அச்சம், மடம், நாணம், பேதமை என்பார்களே - அத்தனையும் மொய்த்த அவள் முகத்தையும் பார்த்த அவரது கண்கள், மார்பகத்திற்கு வந்ததும் மூடிக்கொண்டன. 'சிவ சிவ' என்று வாயைப் பேச வைத்தன. பின்னர், மனதிற்குள் கஷ்டப்பட்டு, அவளை ஒரு மகளாய் பாவித்துக் கொண்டார். முரளி, சண்முகம் சொன்னதை நம்பாதவர்போல், தனது காதுகளைத் தடவிய படியே, மீனாவைச் சாக்காக வைத்துக்கொண்டு, அதே மீனாவிடம் கேட்டார்...

"இந்த ஆபீஸ்ல எந்தப் பிடிப்பும் இல்லாமல் சம்பளம் வாங்குற முதல் எம்ப்ளாயி நீதான்!"

கொஞ்ச நாளாய், நிர்வாக அதிகாரியிடம் டூ விட்டிருந்த மல்லிகா! 'டூ'வை டாவு ஆக்க நினைத்தாள். அவளுக்கும் மீனாவே சாக்கு...

"இந்தப் பொண்ணு பிரில்லியண்ட் கேர்ள் சார்! வேலையில கட்டி. அதோட லக்கி கேர்ள்! சர்வீஸ் கமிஷன் பரீட்சையில், எடுத்த எடுப்பிலேயே நல்ல வேலையா வாங்கிட்டாள்! வேலையில் சேர்ந்த மறுவாரமே கல்யாணம்! இப்போ 'பேகமிஷன்' சிபாரிசுல இவள் சம்பளம் எங்கேயோ போகப் போகுது."

"குட்... வெரிகுட்..."

நிர்வாக அதிகாரி, மீனாவைப் பார்க்காமல், மல்லிகாவைப் பார்த்து, "உன்னை மெச்சினேன்" என்பது மாதிரி 'குட்' சொன்ன போது, மீனா, நாணங்கலந்த நளினத்துடன், கண்களைத் தூக்கியும், தாழ்த்தியும் விபரம் சொன்னாள்:

"அவர் வரதட்சணையே வாங்கல சார்... வேண்டான்னுட்டார் சார்..."

"குட்... ஆம்பளைன்னா அப்படித்தான் இருக்கணும்! என் சம்பளம் என்னய்யா ஆச்சு? சம்பளமுன்னு வந்தால் நான் ஜூனியர்....

'வழக்கப்படி ஒங்க ரூமுக்குள்ள வந்துதானே கொடுப்பேன்' கொண்டு வாறேன் சார்! இப்பவே சார்....இமிடியேட்லி சார்....

'ஏய்யா... ஏ.ஓ.,ன்னா ஜோக்கே அடிக்கப்படாதா? அப்புறமாய் கொண்டு வா..."

நிர்வாக அதிகாரி உள்ளே போய்விட்டார். கடன்கார ஆசாமிகளோடு, புதிதாய் வந்த கந்து வட்டிக்காரனும் சேர்ந்து கொண்டு அனைவரும் உள்ளே வந்தனர். டிரைவர் மணியின் மனைவி எங்கிருந்தோ ஓடி வந்தாள். முரளி, மீனாவைக் கெஞ்சினான்.

"அவர்கிட்ட வாய் தவறிச் சொல்லிட்டேன். ஸ்வீட், காரம் வகையறாவுக்கு ஒரு ஐம்பது ரூபாய் தர்றீங்களா?"

"இன்னாப்பா முரளி... அந்தப் பாப்பாவை 'லஞ்ச்' வாங்கிக் கொடுக்கச் சொல்லு. வரதட்சணை கேட்காத மாப்பிள்ளை லேசாய் கிடைத்திருக்கே"

"நீயெல்லாம் இருக்கியே... ஊரான் வீட்டு நெய்யே"

மீனா மேற்கொண்டு முரளியைப் பேச விடாது சொன்னாள்: 'இப்போ ஸ்வீட், காரம் நாளைக்கு லஞ்ச்' தயவு செய்து மத்தியான சாப்பாடு கொண்டு வராதீங்கோ'

"அப்பாடா... எனக்கு கால் கிலோ அரிசி மிச்சம்"

வயிற்றைத் தடவியபடியே சிரித்துக் கொண்ட மணியின் மனைவியை எல்லாரும் அசிங்கமாய் பார்த்தபோது, மீனா வினவினாள்:

"எவ்வளவு பணம் வேணும் முரளி சார்?"

முரளி, அலுவலகத்தாரின் முகம் பார்த்து எண்ணினான். டெபுடி டைரக்டரையும், நிர்வாக அதிகாரியையும் 'காக்க வைப்போர்' பட்டியலிலும், அன்று அலுவலகம் வராதவர்களை காத்திருப்போர் பட்டியலிலும் சேர்த்துக்கொண்டு பதிலளித்தான்.

"ஒரு ஐநூறு ஆகும்! நம்ம கேன்டீன்லயே வாங்கிக்கலாம்... மற்றபடி மட்டன்... சிக்கன்... வெளியில வாங்கிக்கலாம்"

"இந்தாங்க ஐநூறு"

"நாளைக்கு கொண்டு வாங்க"

"நாளைக்கு லேட்டா வருவேன். ஏ.ஓ.,கிட்ட 'ஒன் அவர்' பர்மிஷன் வாங்கிட்டேன். அதனாலதான்... லஞ்சுக்கு முன்கூட்டியே ஏற்பாடு செய்யணுமே... வச்சுக்கங்க சார்"

"ஆமா... தெரியாமத்தான் கேட்கறேன் ஏ.ஓ.,கிட்ட பர்மிஷன் கேட்டால் போதுமா? அப்போ அக்கவுண்டன்ட்டான நான் எதுக்கு இருக்கேன்?"

"சாரி மேடம்... 'ஒன் அவர் பர்மிஷன் கொடுங்க மேடம்..."

மீனாவிடம் பணம் வாங்கிக் கொண்ட முரளி உட்பட எல்லாரும் சிரித்தனர்.

அக்கவுண்டன்ட் மேடம், அவளை சூடாகப் பார்த்தாள். கிண்டலடிக்கிறாளா... இல்லை... அவள் முகத்தில் எந்த வில்லங்கமும் இருப்பதாய் தெரியல நானும், தனியாய்

கேட்டிருக்கணும்... சொல்கிற வேலை எல்லாவற்றையும் செய்கிறவள்... மல்லிகாவ மாதிரி காட்டேரி இல்ல.

மீனா புறப்படுவது வரைக்கும் காத்திருந்த அக்கவுண்டண்ட் மீரா, அவளோடு அலுவலகத்திலிருந்து வெளிப்பட்டாள். பிராயச்சித்தமாக, அவள் தோளில் கை போட்டபடியே, "சாரிம்மா... இந்த மல்லிகாவுக்கு உறைக்கட்டுமுன்னு... உன்கிட்ட பேசிட்டேன்." என்றாள். மீனா, அதைப் பொருட்படுத்தாமலே பேசினாள்:

"அவரு, காலையில் ஏழு மணிக்கு புறப்பட்டு, அபீஸ்ல இருந்து, அப்படியே ஈவினிங் காலேஜ் போயிட்டு, நைட் திரும்பறதுக்கு பதினோரு மணியாயிடுது மேடம்..."

"அதனாலதான் இன்னும் 'முழுகிக்'கிட்டே இருக்கியா?"

'போங்க மேடம்... வீட்ல ஒரே போர்னு சொல்ல வந்தேன். அதனால 'ஒரு 'டிவி' வாங்கலாமுன்னு நினைத்தேன். தவணை முறையில வாங்கலாமா மேடம்....'

'தாராளமாய்... எனக்கு தெரிந்த பேங்குக்கு கூட்டிட்டு போறேன். கன்ஸூமர் லோன் விண்ணப்பத்துல உன் மாதச் சம்பளத்துல பிடித்து தவணைப் பணத்தை அனுப்புறதாய், நம்ம நிர்வாக அதிகாரி எழுதிட்டால் போதும். இருபதாயிரம் ரூபாய் வரை கடன் வாங்கலாம். அப்புறம் என்ன? ஒரு வாரத்துல 'டிவி'யோட, டேப் ரிக்கார்டரும், டூ-இன்-ஒண்ணும் வாங்கலாம்'

பத்தரைக்கு மேல், 'ஒலியும் ஒளியும்,' இருக்குதா மேடம்?'

'ஏன் கேக்குறே? ரூடு தேவைப்படுதா?'

'அவருக்குத் தேவை'

நாற்பது வயது மீரா, அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தாள்.

'வீட்டுக்கு வீடு மூடில்லதான்' என்று சொல்லிச் சிரித்தாள். வெறுமையோ... பொறுமையோ...

அலுவலகத்திற்கு அருகேயே உள்ள தன் வீட்டிற்கு பொடி நடையாய் நடக்கப் போன மீனா, நின்ற இடத்திலேயே நின்றாள். அதோ வருகிறதே ஆட்டோ, அதில் போய் அப்பாவைப் பார்த்துவிட்டு வரலாமா? அவர் கையில் பணத்தைக் கொடுத்துவிட்டு, காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கலாமா...

எப்பேர்ப்பட்ட அப்பா... பெண்டாட்டி செத்தால், புருஷன் புது மாப்பிள்ளை என்கிற பழமொழி இருக்கிற நாட்டுல.... நாற்பது வயதிலேயே மனைவியை பறிகொடுத்தாலும், மறுமணம் செய்யாத பெருந்துறவி. பெத்த மகள்கள் முப்பது வயதைத் தாண்டினாலும், அவர்களின் வருமான வரவு களுக்காக, திருமணங்களைத் தள்ளிப்போடும் சுரண்டல் தந்தையர் உலகில், இவர் அத்திப்பூ தந்தை....

'இப்போ எதுக்கு கல்யாணம்?' என்று இவள் மறுத்தபோது, 'நல்ல பையன்... நல்ல லட்சணம்... நல்ல வேலை... அதோட வரதட்சணை வேண்டாமுன்னு சொல்கிற முற்போக்கு வாலிபன். இப்படிப்பட்டவன் எங்கேயும் கிடைக்க மாட்டான். இந்த வீட்டுச் சுமையே எனக்கு சுவை. நீ சுமக்கப்படாது' என்று அறிவுறுத்தியவர்.

பையன், நல்லவன் என்கிற சாக்கில், கையைக் கட்டிக் கொண்டிருக்காமல், இருபது பவுன் நகை போட்டவர்... கல்யாணச் செலவை ஏற்றுக் கொண்டதோடு, கட்டில், பீரோ இத்யாதிகளை வாங்கித் தந்தவர்.

மீனாவுக்கு, அப்பவே அப்பாவைப் பார்க்க வேண்டும்போல் தோன்றியது. ஆனாலும், அந்த ஆட்டோவைப் போல், அந்த ஆசையையும் திருப்பி விட்டாள். நாளைக்கு ஒரு மோதிரம் வாங்கிக் கொண்டு, அப்பாவைப் பார்க்க வேண்டும். அவர் முகத்தில் ஏற்படும் ஆனந்த ஆச்சரியத்தை ரசித்துப் பார்க்க வேண்டும். தங்கை வேதாவுக்கு, அவள் இதுவரை போட்டறியாமல் ஏங்கும் நைட்டியை வாங்கிப் போகவேண்டும்.

தம்பிக்கு ஒரு நல்ல பேனா. அடிக்கடி பேனாவை தொலைக்கிறவன்... இதைத் தொலைக்கிறது வாங்கிக் கொடுத்த அக்காவைத் தொலைக்கிறது மாதிரின்னு சொல்லணும். அய்யய்யோ.... அபசகுணமாய் பேசப்படாது. அவனுக்குத் தெரியாதா என்ன? கணவனோடு, புதுக்குடித்தன வீட்டுக்கு போனபோது கட்டிப்பிடிச்சு அழுதவனாச்சே.

இவர் மட்டும் என்னவாம்? 'டி' போட்டு பேசாதவர்.... சொல்லுக்கு சொல் அம்மாதான். இந்த வயசுலேயே அவ்வளவு நிதானம். அவரது ஆறடி உயரத்தில், படகுபோல் படர்ந்த மார்பில் சாய்வதே ஒரு தனிச் சுகம். அந்த உருளைத் தேக்கு மார்பில், செடியாய் படர்வது, சுகத்துள்ளே ஒரு சுகம். நிஜமாவே நான் கொடுத்து வைத்தவள். பிசிராந்தையாரின் நவீன பெண் வடிவம்.

மீனா, தனது இலக்கிய நயத்தில், தன்னைத்தானே கண்டுபிடித்தபடி நடந்தாள். தானாய் சிரித்தபடி நடந்தாள். எதிரே பேருந்துகளும், ஆட்டோக்களும் மறைந்து, அப்பா, அவர், அலுவலகம் என்று ஒவ்வொரு வாகனமும், ஒவ்வொருவரின் உருவமாய் தோன்றின. இதனால் சாவுக்கிராக்கி... சொல்லிக்கினு வந்துட்டியா? போன்ற வசவுகளை காதில் வாங்காமலே வீட்டுப் பக்கம் வந்து விட்டாள். என்ன அதிசயம்? ஏழாவதா... எட்டாவதா...

ஏ. 5.

அந்த வீட்டு வளாகத்தில் நுழைந்த மீனா, இரண்டாவது பத்தியில், உள்ள தன் வீட்டு வாசலில், 'அவர்' நிற்பதைப் பார்த்தாள். ஓடிப்போய், 'அவர்' கையைப்பிடித்துக் கொண்டாள். அக்கம் பக்கம் பார்த்துவிட்டு, குதிகாலில் நின்றபடியே, அவன் மோவாயில் வாய் பதித்தாள். அவனை உள்ளே தள்ளிக் கொண்டு போய் கட்டிலில் தள்ளினாள். 'என் கண்ணை நம்பலாமா?' என்று சொன்னபோது, அவன் ஆமாம் என்பதுபோல், அவளை இழுத்து மார்பில் போட்டுக் கொண்டு விளக்கமளித்தான்.

"இன்னிக்கு 'பே டேயா...' ஈவினிங் காலேஜ் ஏழு மணிக்குத்தான் துவங்கும்.... அப்புறம் சம்பளம் வாங்கிட்டியா?"

அவள், மார்பைத் தட்டிக் காட்டியபோது, அவன், அந்த மார்பகத்திற்குள் கைவிட்டு, ஒரு கவரை எடுத்தான். அதன் நுனியைக் கிழித்து, காகிதங்களை எண்ணினான். பிறகு, அவளை மென்மையாய் அப்புறப்படுத்திவிட்டு, பீரோமேல் உள்ள கால்குலேட்டரை குடைந்தான். குழைவாகத்தான் கேட்டான்:

"என்ன மீனு! கணக்குப்படி உனக்கு மூவாயிரத்து இருபது ரூபாய் வரணும். ஆனால், அறுநூறு ரூபாய் குறையுது?"

"அதுவா... எனக்கு நல்ல வேலையாய் கிடைச்சதுக்கு... ஆபீஸ் சினீயர்களுக்கு இன்னிக்கு ஸ்வீட், காரம் வகையில நூறு ரூபாய் செலவு! எனக்கு நல்ல மாப்பிள்ளையா கிடைச்சதுக்கு நாளைக்கு அவங்களுக்கு லஞ்ச், அது ஐநூறு ரூபாய்.. ஆக மொத்தம் அறநூறு ரூபாய்....

"பேசறத தெரிஞ்சுதான் பேசறியா?"

"எப்பவுமா இப்படி செலவழிக்கப் போறேன்? இந்த மாதம் மட்டும்தானே. இன்னைக்கு காலேஜுக்கு முழுக்கு போட்டுங்க! பிச்சர்... இல்லாட்டா பீச்சுக்குப் போயிட்டு வருவோம்."

'அவர்' அவளருகே வந்தான். படுக்கையில் ஒருக்களித்துக் கிடந்தவளை தலையைத் தூக்கி, இருக்க வைத்தான். கண் பக்கம் விரலாட்டிப் பேசினான்:

"அவங்க மிளகாய் அரைக்கிறதுக்கு, நீயே, உன் தலையை கொடுத்திருக்கியே! என் கஷ்டம் தெரிந்தால் இப்படி செய்வியா? பேசாமல் லஞ்ச்சை கேன்சல் செய்... தின்னிப் பயல்கள்...."

"எப்படிங்க கேன்சல் செய்ய முடியும்? எனக்குன்னு ஒரு முகம் வேண்டாமா?"

"மொதல்ல தாலி போட்டவன் முகத்தைப் பார்! உன் கல்யாணத்துக்கு வாங்குன கடன் இருபதாயிரம் இருக்குது. உனக்கு தாலி செய்ய வாங்கின கடன் பத்தாயிரம் ரூபாய்... காலேஜ்ல எம்.பி.ஏ., சீட் வாங்க கொடுத்த லஞ்சத் தொகை பதினையாயிரம்... இவ்வளவு கடனையும் அடைக்கணுமே. நீ இப்படி தான்தோன்றித்தனமா செலவழிச்சால் எப்படி?"

"என்னங்க... பெரிய பெரிய வார்த்தையா பேசுறீங்க? ஆபீஸ் மூலம் 'டிவி' செட், ரேடியோ செட் வாங்கலாமுன்னு நினைச்சேன். பேங்க்ல, கன்சூமர் லோன் இருபதாயிரம் தருவாங்களாம். நீங்க என்னடான்னா என் எதிர்பார்ப்புக்கு எதிரா பேசுறீங்களே?"

கட்டியவன், கட்டிலில் மீண்டும் உட்கார்ந்து, கட்டியவளைத் தழுவிக் கொண்டான். அவளை மார்போடு கவிழ்த்து, அவள் உச்சந்தலையில் முகம்போட்டு, அவள் பிடரியை வருடிக் கொடுத்தபடியே பாராட்டினான்.

"நிஜமாவே நீ என்னை விட புத்திசாலி. வேலையில் சேர்ந்த உடனேயே இருபதாயிரம் ரூபாய் கடன் வாங்கணுமுன்னு

தோணி இருக்குது பாரு. பேங்க்ல வாங்குற கடனுக்கு 'டிவி', 'டூ இன் ஒன்' வாங்குறதாய் ரசீது கொடுக்கிறது பெரிய விஷயமில்ல... எனக்குத் தெரிஞ்ச கம்பெனி இருக்குது. ஐந்து சதவிகிதம் கமிஷன் கொடுத்துட்டால், சூப்பர் கம்ப்யூட்டர வாங்கினதாக்கூட ரசீது கொடுப்பாங்க. பேங்க்கு ரசீதை காட்டினா போதும்... 'டிவி' வாங்க வேண்டாம்... இதுல கிடைக்கிற இருபதாயிரம் ரூபாய்ல உன் தாலி கடனையும், கல்யாண செலவுல பாதிக் கடனையும் அடைச்சுடலாம்! அப்புறம் இருக்கவே இருக்குது... 'பே கமிஷன்...' உனக்கு சம்பளத்துலயே ஆயிரத்து ஐநூறு கூடும்! எதுக்குமே திட்டம் போடணும்! திட்டம் போட்டு செய்யற எந்த காரியமும் சக்சஸ்தான்..."

கட்டியவன், மாலைநேரக் கல்லூரியின் நினைப்பில், கட்டப்பட்டவளை கட்டிலில் மல்லாக்கப் போட்டான். அவள் குப்புறப் புரள்வதைப் பார்க்காமலே எழுந்து பீரோவைத் திறந்தான். இன்னொரு சாவி எடுத்து, அதன் உள் அறையைத் திறந்து, மீனாவின் சம்பளக் கவரை வைத்துவிட்டுப் பூட்டினான்.

அவனுக்கு மீனாவிடம் சொல்லிக் கொள்ளக்கூட நேரமில்லை. கல்லூரிக்கு நேரம் தவறாமல் போகிறவன்... அதற்காக ஐநூறு ரூபாய் அவார்ட் வாங்கப் போகிறவன். அதோடு, சுவையான பாடம்... எம்.பி.ஏ., மாஸ்டர் ஆப் பிசினஸ் அட்மினிஸ்ட்ரேஷன். அதாவது வணிகத்தனத்தில் பட்ட மேற்படிப்பு...

**- தினமலர் - தீபாவளி மலர் 1997**

# கட்டக் கூடாத கடிகாரம்

மீனாட்சி, வீட்டுக்கு வெளியே, காலிங் பெல்லை அழுத்தி அழுத்திப் பார்த்து அலுத்து, மின்சாரக் கோளாறாக இருக்கலாம் என்று நினைத்து, கதவைத் தாம் தூம் என்று தட்டினாள். அது வாசலுக்கு மூடியாகவே இருப்பதைப் பார்த்துவிட்டு, ஒருவேளை உள்ளே மனிதக் கோளாறோ என்று சந்தேகப்பட்டு, கதவில் பொருந்தியுள்ள லென்ஸ் மாதிரியான வட்டக் கண்ணாடி வழியாகப் பார்த்துவிட்டு, பின்னர் காலிங் பெல்லையும், கதவையும் அழுத்திப் பிடித்தும், அழுத்தமாய் அடித்தும் அல்லாடிக் கொண்டிருந்தபோது, லட்சுமி மாமி, சத்தம் சங்கமிக்காத குளியலறையில், கணவரின் ஆடைகளையும் தன் துணிமணிகளையும் துவைத்து முடித்துவிட்டு கல்லில் தேய்த்த மஞ்சளை முகமெல்லாம் அப்பி, ஷவர்பாத்தைத் திறந்து, மேல்லூற்றாய் வந்த நீர்ச் சுருளில், தலையாடிக் கொண்டிருந்தபோது -

பஞ்சாபகேசன், கட்டிலில் உட்கார்ந்தபடியே, ஒரு தொள தொளப் பேண்டைச் சிரமப்பட்டு, உடம்புக்கு மேல் பூட்டிவிட்டு, கொடியில் தொங்கிய ஒரு சிலாக் சட்டையை எடுப்பதற்காக, கட்டில் விளிம்பில் கையூன்றி, பல்லைக் கடித்து, மூச்சையடக்கி, பெரும் பாடுபட்டு, தம் உடம்பைத் தானே தூக்கி நிறுத்தி, சுவரில் கை வைத்தபடி தத்தித் தத்தி நடந்து கொண்டிருந்தார்.

கதவு தட்டப்பட்ட சத்தத்தைப் பார்த்துச் சிறிது நிதானப்பட்டார். பிறகு, அது, மனைவி துணி துவைக்கிற சத்தம் என்று அவராகவே அனுமானித்து, பல்லி மாதிரி, சுவரில்

கைகளை அப்பியபடி, கால்களை நகர்த்தப்போனார். அதற்குள் காலிங்பெல் ஒலியும், கதவோசையும் விநோதமான ஓசையாய் கேட்பதை உள்ளூறப் பருகினார். "யாரோ வந்திருக்கா. அட கடவுளே! எவ்வளவு நேரமாய்க் காத்துண்டு இருக்காளோ?"

பஞ்சாபகேசன், தமக்கே கேட்காத குரலில் பதறியடித்துச் 'சத்தம்' போட்டார்.

"லட்சுமி, யாரோ வந்திருக்கா, பாரேன். யாரோ வெளில காத்துண்டிருக்கா. ஏய் லட்சுமி, லட்சுமீ ஈ....ஈ....ஈ...."

லட்சுமி மாமிக்கு, கணவர் கூப்பிட்டது கேட்கவில்லை. அடுப்பு வேலையை முடித்துவிட்டு, ஆடைகளைத் துவைத்து விட்டு, வேலை முடிந்த திருப்தியில் கசகசவென்றிருந்த உடம்பில், அருவிபோல் தண்ணீர் படும்போது எவ்வளவு சுகம்! எவ்வளவு குளிர்ச்சி! காலைதோறும் பாத்திரங்களைக் கழுவும்போதும், வீட்டைக் கூட்டும்போதும், 'குளிக்கப் போகிறோம், குளிக்கப் போகிறோம்' என்ற ஆனந்த எதிர்பார்ப்பில் அத்தனை வேலைகளையும் அத்துபடி ாய்ச் செய்து பழக்கப்பட்ட மாமிக்கு, வெளியே ஒலித்த சத்தம், குளியலறைக்குள் ஒலித்த நீர்ச்சத்தம்போல் தோன்றியது. போதாக்குறைக்குத், தன் நெடிய கூந்தலைக் காதுகளை மூடும்படி பரப்பிவிட்டு மாமி நீரில் லயித்துக் கொண்டிருந்தாள்.

பஞ்சாபகேசனால் பொறுக்க முடியவில்லை. கொடியில் கிடந்த ஸிலாக் சட்டையைக் கைப்பற்றிய கையோடு, சுவரில் கைப்பதித்துத் தத்தித் தத்தி நடந்தார். அங்கும் இங்குமாய் ஆடிய தலையைச் சுவரோடு சேர்த்து அழுத்தியபடியே, மெல்ல மெல்ல கால்களை நகர்த்தி நகர்த்தி, கைகளை ஊன்றி ஊன்றி, வரவேற்பறைக்கு வந்தார். பலமான கதவோசையைக் கேட்டுக்

காதுகளைக் குவித்தபடி 'வந்துட்டேன், வந்துட்டேன் என்று கூவியபடியே நகர்கிறார். வரவேற்பறையிலிருந்து, கதவுக்குப் போவதற்குக் கையூன்றச் சுவர் இல்லை. நடந்துதான் போக வேண்டும். அவரைப் பொறுத்த அளவில், அது தலைகீழாக நடப்பது மாதிரி. என்ன செய்யலாம்?

"லட்சுமி... லட்சுமி!"

பதில் இல்லை.

'டொக் டொக் டொக்.'

கதவுச் சத்தம் வலுத்தது.

'அய்யய்யோ. எவ்வளவு அவசரமாய் இருந்தால், இவ்வளவு நேரம் பொறுமையாய்க் கதவைத் தட்டுவாளோ?

பஞ்சாபகேசன், யோசிக்கவில்லை. தம்மால், தனித்து நடக்க முடியாது என்பதும் அப்போது தெரியவில்லை. சுவரில் அப்பிய கரங்களை எடுத்தபடி, கதவை நோக்கி நடந்தார். ஒரே ஒரு தடவைதான் கால்களை மாற்றி வைத்தார். அதற்குள், "அய்யோ... ஓ, காட்" என்று சொல்லியபடியே மல்லாக்க விழுந்தார். அவர் விழுந்த வேகத்தில், அவர் கைபட்டு நாற்காலியும் மல்லாந்து சாய்ந்தது. நாற்காலியின் இடுக்குக்குள் கைகளை விட்டபடியே, பஞ்சாபகேசன், கால்களை அந்தரத்தில் துழாவிக் கொண்டிருந்தார்.

பஞ்சாபகேசன் போட்ட சத்தம் சின்னதுதான் என்றாலும், அது ஆன்மாவின் சத்தம் என்று அறிவுறுத்தப் பட்டவள்போல், லட்சுமி மாமி, புடைவையை, உடம்பு எங்கும் தாறுமாறாய்ச் சுற்றியபடியே, கதவை உடைப்பதுபோல் திறந்து, கணவனை அந்தக் கோலத்தில் பார்த்த பிரமிப்பில் நின்றாள். சில விநாடிகளில் பிரமை கலைந்து, அவர் கரங்களை நாற்காலிப்

பிடியிலிருந்து விடுவித்து, அவரைத் தூக்கி நிறுத்தி, அருகே கிடந்த சோபாவில் உட்கார்த்தினாள்.

அவர் கையிலும் கால் முட்டிகளிலும் தெரிந்த ரத்தச் சிராய்ப்புக்களைப் பார்த்துவிட்டு, ஏதோ ஒரு களிம்பு பாட்டிலை எடுத்தபடியே, "என்ன ஒங்கபாட்டுக்கு இப்டியா நடக்கிறது? நேக்கு ஒரு குரல் கொடுத்தால் என்ன?" என்று செல்லமாய் அதட்டியபடியே, களிம்பை எடுக்கப் பாட்டிலைத் திறக்கப் போனாள்.

வெளியே இருந்து உள்ளே ஊடுருவி வந்த கதவோசை, அவளுக்கு அப்போதைய பதற்றத்தில் கேட்கவில்லை. ஆனால் அவருக்குக் கேட்டது. பல்லைக் கடித்தபடியே கத்தினார்.

"மொதல்ல கதவைத்திற.... பாவம், எவ்வளவு நேரமாய் ஒருத்தரைக் காக்க வைக்கறது?"

லட்சுமி மாமி வேண்டாமல் எழுந்து, வெறுப்பாக நடந்து கதவைத் திறந்தாள். கணவருக்குக் கேட்காத குரலில், "கதவு திறக்காட்டால் போக வேண்டியதுதானே" என்று தட்டும் கரங்களுக்கு வார்த்தைகளால் சூடு போட நினைத்தபடியே கதவை விலக்கினாள். சிரித்தபடியே உள்ளே வந்த மீனாட்சி, சோபாவில் தலைவிரி கோலமாய்க் கிடக்கும் பஞ்சாபகேசனைப் பார்த்துவிட்டு முகத்தை ஆச்சரியமாக்கினாள். பிறகு, "குத்துவிளக்குப் பூஜை சம்பந்தமாக் கேட்டுண்டு போலாம்னு வந்தேன்" என்றாள்.

மாமி பதிலளித்தாள்.

"அதுக்குத்தான் நாள் இருக்கே? இப்ப என்ன அவசரம்?"

"இப்பவே பேரைக் கொடுத்து ரிஜிஸ்டர் பண்ணிக்கணுமாம், மாமி. நேக்கு வீட்டுல அவசரம் வேலையை நடுவுல விட்டுட்டு வந்தேன்."

"கதவைத் திறக்காட்டி போயிட்டு அப்புறமாய் வந்து இருக்கலாமே. உன்னால மாமாக்கு எவ்வளவு கஷ்டம் பார். என்னோட உடம்பையும் பார்."

புடைவையை ஒழுங்காய் உடுத்தாமல், நீர்சொட்டும் தலையோடு நின்ற மாமியை, மீனாட்சி நேருக்கு நேராய்ப் பார்த்துவிட்டு, "சாரி" சொல்லப் போனாள். அதற்குள் வேறுவகையான சத்தங்கள் கேட்டன. அவை ஒலித்த திசையையும் அவற்றை ஒலிக்க வைத்த மனிதரையும் மீனாட்சி அதிர்ச்சியோடு பார்த்தாள். மாமி மௌனமாகப் பார்த்தாள்.

பஞ்சாபகேசன், களிம்புப் பாட்டிலை எடுத்து, டைனிங் டேபிளில் எறிந்தார். முன்னால் கிடந்த நாற்காலியைக் காலால் சுண்டி விட்டார். கையில் கிடந்த கடிகாரத்தைக் கழற்றி வீசி அடித்தார். பிறகு கால்களைத் தரையில் உதைத்தபடியே, தனது தலையில் தம் கரங்களால் மாறி மாறி அடித்துக் கொண்டார். மாமியைப் பார்த்துப் பல்லைக் கடித்தபடியே பலம் கொண்ட மட்டும் தலையிலடித்துவிட்டு, பிறகு அடித்து முடித்த களைப்பில் ஆவேசம் அடங்காமல் முகத்தைக் கோணல்களாக்கிக் கொண்டிருந்தார்.

மீனாட்சி, இங்கிதம் தெரியாமல் அங்கேயே கேட்டாள்:

"என்ன மாமி இது? மாமா இப்படிப் பண்றார்?"

"ஒண்ணுமில்ல, ஒன்னைக் காக்க வச்சுட்டேனாம். மாமாக்கு பொறுக்கல்ல."

"அதுக்காக இப்படியா? எங்காத்துல இப்டி நடந்தால், நான் ஒரு நிமஷம்கூட இங்கு இருக்கமாட்டேன். பெட்டி படுக்கையோட பொறந்தாத்துக்குப் போய்டுவேன்."

லட்சுமி மாமிக்குக் கோபமும் வந்தது; கூடவே ரோஷமும் வந்தது.

"நோக்கு இப்போ இருபத்தெட்டு வயசு இருக்குமா? கல்யாணம் ஆகி ஆறு வருஷந்தானே இருக்கும்? கடைசி வரைக்கும் ஒன் ஆத்துக்காரர் எப்டி இருக்கார்னு பாருடி. இவரும் நானும் வாழ்ந்த வாழ்க்கையும், இவர் என்னை வச்சுண்டிருந்த நேர்த்தியும் லோகத்துல யாருக்கும் வராதுடி. ஏதோ இப்போ, அதுவும் ஒனக்காக ஏதோ பண்ணிட்டார்னு ரொம்பத்தான் ஜட்ஜ்மென்ட் கொடுக்கறே."

"அய்யோ மாமி... என்னைத் தப்பாய் நினைச்சுட்டேள். நான் ஒங்களுக்குத்தான் வக்காலத்து வாங்கறதா நெனச்சுப் பேசிட்டேன். தப்புத்தான், மன்னிச்சுடுங்கோ."

மேற்கொண்டு எதுவும் பேசாமல் தன்னையே மலங்கப் பார்த்த மீனாட்சியைப் பார்க்கப் பார்க்க மாமிக்குக் கண்கள் பனித்தன. "குழந்தையைச் சாபம் போடற மாதிரி வைதுட்டேன். பகவானே! என் வாயில ஏன் இப்படிப்பட்ட வார்த்தைகளை வைக்கறே?"

மாமி பிராயச்சித்தம் செய்பவள்போல் பேசினாள்.

"ஏண்டி, நழுவப் பார்க்கிறே? ஒங்கிட்டே நேக்கு உரிமை இல்லையா? கிட்டே வா... குங்குமம் வைக்கிறேன். என்னோட பேரையும் ரிஜிஸ்டர் செய்துடு, வாடி."

மீனாட்சி, தயங்கித் தயங்கி மாமியை நெருங்கினாள். மாமியின் பெருவிரல் அவள் நெற்றிப் பொட்டை வருடியபோது அவள் மெய் சிலிர்த்தாள். "எப்பவும் குங்குமத்தை ஆள்காட்டி விரலால் எடுக்கக்கூடாது. பெருவிரலால்தான் எடுக்கணும். இதெல்லாம் இந்தக் காலத்துப் பொம்மனாட்டி

களுக்குத் தெரியாது" என்று மாமி திலகமிட்டபடி சொன்ன வார்த்தைகளை மீனாட்சி காதுகளில் பயபக்தியோடு வாங்கிக் கொண்டாள்.

மௌனித்து வெளியேறப்போன மீனாட்சி, லட்சுமி மாமியையும், பஞ்சாபகேச மாமாவையும் மாறி மாறிப் பார்த்தாள். பெண் ஆஜானுபாகு என்று மாமியைச் சொல்லலாம். செம்பருத்திப் பூ நிறம். ஐந்தரை அடிக்கும் மேலான உயரம். இந்த ஐம்பது வயதிலும் தொந்தி போடாத வயிறு. உடையாத உடம்பு. பாதாதி கேசம் வரை நேர் கோடாய் இருக்கும் மேனி; லேசாக நரையோடிய கூந்தல்.

மஞ்சளும் குங்குமமும் கலந்து மங்களமாய்ப் பொங்கிக் கொண்டிருப்பதுபோன்ற முகம். ஆனால் மாமா, மாமி அளவு உயரந்தான்... நிறம்தான்... என்றாலும் உள்ளடங்கிய உடம்பு... காய்ந்து போய்க் கட்டையாய்ப் போனது போன்ற கால் கைகள். ஆனாலும் கண்ணாடி வழியாகப் பார்க்கும் அந்தக் கண்களிலோ எவரிடமும் காணப்படாததுபோன்ற ஒரு ஜீவ ஒளி. குழந்தைத்தனமும் மேதைத் தனமும் இரண்டறக் கலந்து ஒளிமயமானது போன்ற விழிப்பு.

மீனாட்சி போனதும், லட்சுமி மாமி, நிதானமாக குனிந்து கீழே கிடந்த கடிகாரத்தை எடுத்தபடி கணவனை நோக்கி நடந்தாள். உடனே அவர் குழந்தையைப்போல் தம் கையை நீட்டினார். கடிகாரத்தை அவர் மணிக்கட்டில் கட்டிவிட்டு, டைனிங் டேபிளில் இருந்த கண்ணாடி டம்ளரை உடைத்தாலும், உடையாமல் கிடந்த களிம்புப் பாட்டிலைக் கொண்டு வந்து கணவரின் உராய்ப்புகளுக்குக் களிம்பிட்டாள். பஞ்சாபகேசன் குழந்தைபோல் கேட்டார்:

"லட்சுமி! லட்சுமி! என்னைத் திட்டேன். திட்டேன். அப்போத்தான் நேக்கு திருப்தி. ரொம்பத்தான் துஷ்டனா நடந்துக்கறேன்? டீ... திட்டேன், திட்டேன்".

மாமி 'திட்டினாள்.'

"ஏன் குழந்தை மாதிரி என்னை இம்சிக்கிறேள்? ஒருத்தி காத்துண்டிருந்தாலு இந்தக் கூத்தடிச்சேளே, ஆபீஸ்லே நமக்காக எத்தன பேர் காத்துண்டிருப்பா? சட்டையைப் போடுங்கோ. நான் பத்து நிமிஷத்துலே ரெடியாயிடறேன்."

பஞ்சாபகேசன், அசல் குழந்தை மாதிரி தலையாட்டியபோது, மாமி அவசர அவசரமாக குளியலறைக்குள் போனாள். பத்து நிமிடத்தில் வெளியே வந்து, தன்னுடைய பட்டுப் புடைவையை எடுத்துக் கட்டிக் கொண்டாள். சில நகைகளை எடுத்துப் போட்டுக் கொண்டாள். கணவன் முகத்தில் கண்ணாம்புபோல் தெரிந்த பவுடர் தூள்களை முந்தானையால் துடைத்து விட்டாள்.

"அய்யய்யோ... ஏன்னா, ஷர்ட்லே இங்க் போட்டுட்டேளே" என்று சொல்லியபடியே அவரது சட்டைப்பித்தான்களைப் பிரித்து அவரிடமிருந்து அதை அப்புறப் படுத்திவிட்டு, வேறொரு சட்டையை மாட்டிவிட்டாள். பிறகு, "உம் புறப்படுங்கோ..." என்றாள்.

லட்சுமியின் தோளில் ஒரு கையைப் போட்டபடி, பஞ்சாபகேசன் நடந்தார். மாமி, தன் வலக்கையை, அவருடைய இடுப்போடு சேர்த்துக் கோர்த்துக் கொண்டாள். அவர் நடக்கிறார் என்றுதான் பேரு, மாமி கிட்டத்தட்ட அவரைத் தூக்கிக் கொண்டே போனாள். பஸ் நிலையத்துக்குப் போகும் வழியில் பார்த்தவர்களை எல்லாம் பார்த்து, "எங்காத்துல இன்னிக்கு ரிட்டயர் ஆகறார், தெரியுமோ. சென்ட் ஆஃப் பார்ட்டிக்காகப் போறோம்" என்றாள்.

பார்த்தவர்களில் பாதிப்பேர் அவளுக்காகவும், மீதிப்பேர் அவருக்காகவும் பரிதாபப்பட்டுக் கொண்டார்கள். ஒரு நாளா இரு நாளா? இந்த அஞ்சு வருஷமா, மாமி காலைல இந்த மாமாவ பஸ் நிலையத்துக்கு இப்படித் தூக்கிண்டு போறதும், அவரோடு ஆபீசுக்குப் போயி, அங்கேயும் ஆபீஸ்வரை தூக்கிண்டு போறதும், அப்புறம் சாயங்காலமாய் பெசன்ட் நகர் பஸ் ஸ்டாண்டுல மூன்று மணியிலேருந்து மாமாவுக்குத் தவம் கிடக்கறதும், எல்லாருக்கும் தெரியும். ஒரு நாளைக்கு மழை வந்துவிட்டால், மாமி துடிக்கிற துடிப்பு சொல்லி மாளாது.

ஆட்டோவையோ டாக்சியையோ பிடிச்சிண்டு ஆபீசுக்கு ஓடுவாள். மாமா, மத்தியானம் இரண்டு மணியிலிருந்து எப்ப வேணாலும் ஆபீசிலேருந்து வீட்டுக்குப் பொறப்படலாம். ஆகையால் மாமி மூன்று மணிக்கே பஸ் நிலையத்தில் இருக்கணும். ஒரு அஞ்சு நிமிஷம் தவறிட்டாலும் பஞ்சாபகேசன் கைக்கடிகாரத்தை வீசி எறிவார். தலையையும் வீசி எறிவதுபோல அடிச்சுக்குவார். ஒரு வருஷமா... ரெண்டு வருஷமா. டெல்லியில் இருந்து வந்த நாள் மொதலா இதே கதைதான்....

மாமி, தங்களை அனுதாபத்தோடு பார்த்தவர்களை, அன்பொழுகப் பார்த்தபடியே, கணவனோடு நடந்தாள். "இவங்களுக்குப் பிள்ளையா குட்டியா? எதுக்காக இந்த மாமி இப்படி அவஸ்தப் படணும்? ஒரு வேலைக்காரனைப் போட்டால் மாமாவை கூட்டிண்டு போறான். எல்லாம் பணம் போயிடுமோன்னு பயம். மாமி கஞ்சம். மாமா மகா கஞ்சம்" என்று அவ்வப்போது வம்பு பேசும் வாய்கள் இப்போது புன்னகையாய் விரிவதை மாமி பார்த்தாள்.

"வேலைக்காரன்னு சொல்றேள். எங்காத்துக்காரர் அடிக்கடி தடுமாறி விழுறவர். வேலைக்காரன், ஆத்திரத்துலே அவர ரோட்ல தள்ளிட்டுத் தானா விழுந்துட்டார்னு சொல்லிட்டா

அப்போ இதே நீங்கதான், மாமிக்கு என்னப்பா வந்தது குத்துக்கல்லு மாறி இருக்காளே? போய்க் கூட்டிண்டு போனா என்ன'ன்னு கேப்பேள். ஆனாலும் நான் ஊர் வாய்க்காக, இவரை இப்படி செமந்துட்டுப் போறதுல. இதுல எனக்கும் ஒரு சொகம் இருக்கு. உடம்ப, உடலுறவுக்கு மட்டுமுன்னு நினைக்கிற சின்னஞ் சிறுககளா -- ஒங்களுக்கு இந்த சொகத்தோட அருமை தெரியாது."

சாஸ்திரி பவனில், அந்த அலுவலகத்தில் சுமார் நூறு பேர் கூடியிருந்தார்கள். பஞ்சாபகேசனின் உதவி அதிகாரி விழாவுக்கு வந்த பல்வேறு அதிகாரிகளையும் ஊழியர்களையும் வரவேற்றுக் கொண்டிருந்தார். யாருடைய ஓய்வு விழாவுக்கும் இந்த மாதிரி கூட்டம் கிடையாது என்று பேசிக் கொண்டார்கள். பெண்கள் கண்களில் நீர் பொங்கின. ஆண்கள் மனத்தில் ஏதோ ஒருவித அடைப்பு.

மாமியும், மாமாவும், மேடையில் நடு இருக்கைகளில் அமர்த்தி வைக்கப்பட்டார்கள். ஒருவர் மாற்றி ஒருவராகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒருவர், "மாமா இப்போது ஒரு குழந்தை. அவரது மனைவி இப்போது அவருக்கு அன்னை. இவருக்குச் செய்வதுபோன்ற தொண்டை, எந்த அன்னையும் செய்திருப்பது சந்தேகம்" என்றார். இன்னொருவர், பத்திரிக்கையாசிரியர் "சோ எழுதிய 'எங்கே பிராமணன்?' என்ற நாவலைப் படித்தேன். அவர் மட்டும் இந்த பஞ்சாபகேச மாமாவைப் பார்த்திருந்தால், தம் கேள்விக்கு விடை கண்டிருப்பார். மனத்தாலும் எதிரிக்குத் தீங்கு நினைக்காத மா மனிதர் இவர். பகவத் கீதையின்படி ஒரு பிராமணன் வாழ்கிறான் என்றால் அது இந்தப் பிராமணன்தான். பிராமணன் என்ற நினைப்பில்லாத மிக உயரிய பிராமணன் இவர்" என்றார்.

பேச்சாளர்களுக்கு மத்தியில், கணவரோடு மாலையும் கழுத்துமாய் உட்கார்ந்திருந்த லட்சுமி மாமி, வாழ்க்கையின் முன்படிக்கட்டில் நின்றபடி மேல்நோக்கி நடந்தாள். அந்தக் காலத்திலேயே கணக்கில் எம்.ஏ. பட்டம் வாங்கிவிட்டுப் புது தில்லியில் அதிகாரியாகப் பணியாற்றி இவரை முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கைப்பிடித்த ரம்ய காட்சி கண் முன்னால் வந்தது.

"மாட்டுப் பொண்ணு அசல் மாடுதான். பஞ்சு துரதிருஷ்டக்காரன்" என்று அக்கம் பக்கத்தில் பஞ்சாபியாய்ப் போன பிராமணப் பெண்களும் மற்றவர்களும் நையாண்டி செய்யும்போது, இவள், அவரிடம் அழுவாள். அப்போதெல்லாம், "அடி பைத்தியம். பன்றிகளைக் கண்டால் யானைதான் தானாய் விலகிப் போகணும். ஒருவேளை என்னைக் கல்யாணம் பண்ணிண்டதாலே நீ துரதிருஷ்டகாரியோ என்னவோ? நேக்கு எம்.ஏ.வுல பஸ்ட் கிளாஸ் கிடச்சதைவிட, எடுத்த எடுப்பிலேயே ஜேர்னலிஸ்ட் டைப் உத்தியோகம் கிடைச்சதைவிட நேக்கு நீ கிடைச்சதுதான் சூப்பர் கிளாஸாக்கும்" என்பார்.

மாமி கண்களை துடைத்துக் கொண்டாள்.

"அப்போதெல்லாம் எப்படி இருப்பார்? தில்லியில் விண்டர் வரும்போதெல்லாம் டை கட்டி, கோட் போட்டுண்டு வந்தார்னா பார்க்கறதுக்கு எப்படி இருக்கும்? இவரோட பார்க்காதா பிக்சர் இல்ல. கேளாத கச்சேரி இல்ல. போகாத இடம் இல்ல. வாங்காத பொருள் இல்ல... பொறந்தாத்துலேருந்து அப்பா, அம்மா இறந்த துக்கம் தாங்காமல் வந்தபோது, அவரை இருபது வருஷமா ஒரு முணுமுணுப்பு இல்லாமப் பேணினவர். என்னோட அக்கா வாழாவெட்டியா வந்தப்போ, அவளுக்குச் சாகறவரைக்கும் இருக்க இடம் கொடுத்தவர். பத்து வருஷத்துக்கு முன்னால வரைக்கும், ஒரு வார்த்தை கூட அதட்டிப் பேசாதவர்.

பகவான் நேக்கு ஒரு குழந்தைதான் கொடுக்கல்ல. இவரையாவது நன்னா வச்சுக்கக் கூடாதோ? பத்து வருஷத்துக்கு முன்னாடி பார்க்கின்ஷன் நோயோ... பக்கவாதமோன்னு ஏதோ வந்து இவர என்ன பாடு படுத்துது? இவர மட்டுமா, இவர வச்சு என்னையும் என்ன பாடு படுத்துது? ஒருவேளை, ஒரு காலத்துல அவர் சொன்னமாதிரி நான்தான் துரதிருஷ்டக்காரியோ... இதுவரைக்கும் ஆபீஸ் ஆபீஸ்னு அடிச்சுண்டார். இனிமே வீட்டுக்குள்ள எப்படி இருப்பாரோ? என்னாலதான் எங்கேயாவது நல்லது கெட்டதுக்குப் போக முடியுமா?"

லட்சுமி மாமி திடுக்கிட்டாள். கணவர் நடக்க முடியாமலும் அப்படி நடந்தால் கீழே விழுந்து எழ முடியாமலும் இருக்கும் பரிதாப நிலையைப் பெரிதாய் நினைக்காமல், தான் படும் பாட்டைப் பெரிதாய் நினைத்ததில் சிறிதாய்ப்போனவள்போல் கூனிக் குறுகினாள். கூட்டத்தைச் சங்கோஜமாகப் பார்த்துவிட்டுத் தலை கவிழ்ந்தாள்.

பேச்சாளர்கள், புகழாரம் முடிந்தது. மனைவியின் தோளைப் பற்றியபடியே பஞ்சாபகேசன் ஏற்புரைக்கு எழுந்தார். தில்லியில் "ரெஃபரன்ஸ் இந்தியா" புத்தகத்தைத் தயாரிப்பதிலும் நேருஜியின் சொற்பொழிவை, தமிழாக்கம் செய்வதிலும் தமக்கு ஏற்பட்ட பெருமித உணர்வை நினைத்தார். தம் கட்டுரைகளை மேலதிகாரிகள் தங்கள் பெயரில் பிரசுரித்துச் சபாஷ் வாங்கிக் கொண்டதும், பிறகு உண்மை தெரிந்த தலைமை அதிகாரி, அவர்களை டிரான்ஸ்பர் செய்யப் போனதும், தாம் தலையிட்டு, மேலதிகாரியிடம் அப்படிச் செய்ய வேண்டாம் என்று கெஞ்சியதும், மாமாவுக்கு, நினைவுகளாய், நிகழ்ச்சிகளாய் வந்தன.

அதோடு, தம் பேச்சு மிக அருமையாக எடிட் செய்யப் பட்டிருப்பதாகவும், அப்படிச் செய்தவருக்கு தம் நன்றியைத் தெரிவிக்கும்படியும் நேருஜி டிபார்ட்மெண்டுக்கு எழுதிய கடிதம் நினைவுக்கு வந்தது. உடனே தலைமை அதிகாரி, தன்னைப் பாராட்டிச் சர்க்குலர் போட்டு, நோட்டீஸ் போர்டில் தொங்க விட்டதும் நினைவுக்கு வந்தது.

அவற்றையெல்லாம் சொல்லத்தான் போனார். ஆனால் அவற்றைவிட, ஓர் உருவம் அவர் கண் முன்னால் தோன்றியது. நினைவுகளின் சுமையில் அதுமட்டும் சுவையாக வந்திருக்க வேண்டும். அவர் எடுத்த எடுப்புக்கெல்லாம் ஈடுகொடுத்த சிநேகிதி, தோழி - மனைவி - தாய் - ஆதிபராசக்தி கண் முன்னால் தோன்றி இருக்க வேண்டும்.

கூட்டத்தை எதிர்நோக்கி நின்ற பஞ்சாபகேசனால் பேச முடியவில்லை. லேசாகத் திரும்பினார். மனைவியை விழி ஆடாமல் பார்த்தார். இடுப்பின் இருபக்கமும் கிடந்த கைகளை மெல்லத் தூக்கினார். உயரே உயரே கொண்டு போனார். அவளைப் பார்த்தபடியே கை கூப்பினார்.

லட்சுமி மாமி, "ஏன்னா, ஏன்னா" என்று பதறி எழுந்தபோது, பஞ்சாபகேசன் கும்பிட்ட கரங்களை இறக்காமல், கொட்டும் விழிகளைத் துடைக்காமல், உடலாட, உயிராட நின்றார். பிறகு கூட்டத்தைப் பார்த்து மீண்டும் திரும்பி, "எல்லாத்துக்கும் இந்த உத்தமி... இந்த".... என்றார்.

பஞ்சாபகேசனால் பேச முடியவில்லை. கூட்டத்தினரின் கண்களிலும் ஒட்டு மொத்தமாய் நீர் சுரந்தது. மாமாவை விட்டுவிட்டு, மாமியையே பார்த்தார்கள். ஆண்கள், தத்தம் மனைவியரை ஒப்பிட்டுப் பார்த்தார்கள். பெண்களோ, அவளைப் பயத்தோடும் பக்தியோடும் பார்த்தாலும் அந்தப்

பார்வைகளுக்குள் தங்களுக்கு இப்படி ஒரு நிலைமை வரக்கூடாது என்ற அச்ச உணர்வும் மறைந்திருந்தது.

எப்படியோ ஓய்வு விழாவை முடித்துவிட்டு, இருவரும் வீட்டுக்குத் திரும்பும்போது இருட்டிவிட்டது. அலுவலக ஊழியர்கள் இருவர், அவர்களை டாக்சியில் கொண்டுவந்து போட்டுவிட்டு அழுதபடியே போய்விட்டார்கள். இதுவரை அழுதழுது மாமாவுக்குச் சில சின்னச் சின்ன உதவிகளைச் செய்தவர்கள், இப்போது நிஜமாகவே அழுவதைப் பார்த்து விட்டு, மாமி அழுதாள். மாமாவும் அழுதார்.

மறுநாள், காலையில் எழுந்ததும் மாமா காபி சாப்பிட்டபடியே, "வெந்நீர் ரெடியா?" என்றார். உடனே லட்சுமி, "இனிமேல் ஆத்துலதானே இருக்கப் போறேள். சாவகாசமா குளிக்கறதுக்கென்ன?" என்றாள்.

பஞ்சாபகேசன் மாமா, பாதி காபியை நல்லவேளையாக வீசாமல் தள்ளி வைத்தார். மாமி புரிந்து கொண்டாள். "நேக்கு ஒடம்புக்கு முடியல. கழுத்துல கட்டி வந்துருக்கு. ஒரே வலி. டாக்டர்ட்டே காட்டலாமுன்னு ஒரு வாரமா நெனைக்கிறேன். அதனால்தான் வெந்நீர் ரெடியாகல. காபியைக் குடிங்கோ" என்றாள்.

அவ்வளவுதான்.

பஞ்சாபகேசன், அருகே இருந்த ரேடியோ பெட்டியைக் காலால் இடறினார். அது பாட்டோடு பாட்டாய்த் தரையில் விழுந்து ஒப்பாரி வைத்தது. அதோடு நிற்காமல் தம் பனியனைப் பல்லைக் கடித்தபடியே கிழித்தார். தலையிலும் அடித்துக் கொண்டார். பிறகு, "ஒடம்புக்கு ஒண்ணுன்னா டாக்டர்ட்டே போகாம ஏன் இருந்தே. என்னை மட்டுமே

கவனிச்சா எப்படி? உன்னைக் கவனிக்க வேண்டாமா? போ, சீக்கிரம் போ" என்று கத்தினார்.

மாமி, கண்களைத் துடைத்துக் கொண்டாள். மாமா கட்டிலில் படுத்தார். மாமி அருகே வந்து "சமர்த்தாய்த் தூங்கணும். நேக்கு டாக்டரப் போய்ப் பார்த்துட்டு வர நேரமானாலும் ஆகலாம்" என்றாள். மாமா குழந்தையைப் போல் தலையை ஆட்டினார். பிறகு கையை நீட்டினார். மாமியை வரும்படி சைகை செய்தார். மாமி தம் அருகே வந்ததும், அவள் கழுத்தைத் தடவி விட்டார்.

லட்சுமி மாமி, வீட்டைப் பூட்டி விட்டு வெளியேறினாள்.

காலையில் போனவள் மாலையில்தான் திரும்ப முடிந்தது. ஆயிரம் பரிசோதனைகள். ஏழெட்டு டாக்டர்கள். இப்போது வந்ததே பெரிய விஷயம்.

கணவர் எப்படி இருக்கிறாரோ என்று படபடப்பில், கதவைத் திறந்தாள். மீண்டும் கதவை மூடினால் நேரமாகும் என்று பயந்தவள் போல் நடந்தாள். மாமாவைப் பார்க்க காலதாமதம் ஆகும் என்று கருதியவள்போல் அவசரம் அவசரமாகப் படுக்கை அறைக்குள் ஓடினாள். பஞ்சாபகேசன் தூங்கிக் கொண்டுதான் இருந்தார். மேஜையில் இருந்த பிளாஸ்க் காலி யாய் இருந்தது. வாழைப்பழத் தோல்கள்தான் இருந்தன.

மத்தியானம் சாப்பிட்டுவிட்டு, மீண்டும் அவர் தூங்குவதை அனுமானித்துக் கொண்டாள். திடீரென்று வரவேற்பறையில், "மாமி" என்ற சத்தம். லட்சுமி மாமி வெளியே வந்தாள். மீனாட்சி தன் கணவனுக்காகத் தான் செய்யப்போகும் காரியப் பெருமிதத்தில் பேசினாள். "மாமி, ஞாபகம் இருக்கோ. நாளைக்குக் கந்தசாமி கோயில்ல குத்துவிளக்குப் பூஜை பண்றோம். சுமங்கலிப் பிராத்தனையும் செய்யறோம். ரெடியா இருங்கோ."

லட்சுமி மாமி, சலனம் இல்லாத முகத்தோடு பதிலளித்தாள்.

"நான் வரல."

"ஏன் மாமி...?

"மாமா இன்னும் ஒரு மாசத்துக்கு மேலேயே உயிரோடு இருப்பார். என்னோட தாலிக்கு ஒண்ணும் ஆபத்து வரல்ல."

"என்ன மாமி கன்னா பின்னான்னு? நீங்க வராம நான் போகல."

"அசடு. அப்படிப் பேசப்படாது. இங்கே வா. நான் சொல்றத யார்கிட்டயும் சொல்ல மாட்டேன்னு சத்தியம் செய்யுடி. நீ மாவிளக்கு எத்திறியோ இல்லியோ... ஒனக்கு ஒரு கொறையும் வராது. உம்... கையில அடி."

மீனாட்சி, சத்திய உணர்வில்லாமல், மாமி சொல்லப் போவதைக் கேட்கும் ஆர்வத்தில், அவள் கையில் மாறி மாறி அடித்தாள்.

"யார்கிட்டயும் சொல்லாதடி! இப்ப அடயாறிலிருந்துதான் வரேன்... கழுத்து வலிக்குதுன்னு, ஃபாமிலி டாக்டர்ட்ட போனால், அவர் இங்க அடயாறுக்கு அனுப்பினார். அங்க கான்சர் இன்ஸ்டிட்யூட்ல டெஸ்ட் பண்ணினால், நேக்கு கழுத்துல கேன்சராண்டி.... அட்வான்ஸ்ட் ஸ்டேஜாம். இன்னும் ஒரு மாதத்துல உயிர் போயிடுமாம்."

மீனாட்சி, மாமியைத் திடுக்கிட்டுப் பார்த்தாள். அவளுக்கு ஒரு பிரமை. அந்தரலோகத்தில், மாமி, தான் அல்லாத வேறு யாருடனோ அந்தரங்கமாய்ப் பேசுவதுபோல் கேட்டது. ஆனால் லட்சுமி மாமியின் முகமோ எந்தவிதச் சலனத்தையும் காட்டவில்லை. சாவை ஏற்கனவே சந்தித்ததுபோன்ற கண்கள், அதனுடன் பேசுவது போன்ற வாய். மாமி தரையை நோக்கித் தன்பாட்டுக்குப் பேசுவதுபோல் பேசினாள்.

"நான் சாகறதைப் பத்திப் பயப்படல. ஆனால் கவலைப் படறேன். எனக்குப் பிறகு இவரை யார் பார்த்துப்பா? ஒரு நிமஷங் கூட இவரை யாராலயும் பார்த்துக்க முடியாதே. ஆண்டவா, பகவானே, நான் மனசாலேயும் ஒரு பத்தினின்னா, அவருக்கு எதையும் தாங்கிக்கிற சக்தியைக் கொடு. யாரையும் அண்டாமல் நிற்கற வலுவக் கொடு. பகவானே, ஈஸ்வரா, எம்பெருமானே... மீனாட்சி! ஆண்டவன் கைவிட்டாலும் நீ மாமாவைக் கைவிட்டுடாதே... அப்பப்ப அவர பார்த்துக்கோடி."

மீனாட்சி, மாமியின் கால்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தாள். அங்கிருந்தபடியே சுவரில் மாட்டியிருந்த அவர்களது இளவயது போட்டோவைப் பார்த்தாள். மாமி சொன்ன நோய், தனக்கு வந்ததுபோலவும், மாமியிடமே ஆறுதல் தேடுவதுபோலவும் எழுந்து, அவள் தோளில் சாய்ந்து கொண்டாள். ஆதிபராசக்தியை அடையாளம் கண்டவள்போல் மாமியைப் பிரமையயோடு பார்த்தாள். பார்த்தபடியே நின்றாள்.

திடீரென்று படுக்கை அறையில் சத்தம் கேட்டது.

லட்சுமி மாமி, மீனாட்சியை உதறிவிட்டு உள்ளே ஓடினாள். பஞ்சாபகேசன் தூக்கத்தில், பிளாஸ்கைத் தட்டிவிட்டு, இன்னும் தூங்கிக் கொண்டிருந்தார். அவரையே பார்த்தபடி அப்படியே நின்றாள் மாமி. பிறகு, அவரது கைக் கடிகாரத்தைக் கழற்றி வைத்தாள்.

இனிமேல் அவர் கை மொட்டையாகவே இருக்கணும். இன்னும் ஒரு மாதத்துக்கு அப்புறம், அவர் கைக் கடிகாரத்தை வீசி எறிந்தால்,' யார் அத எடுத்துக் கொடுப்பா?

**- அமுதசுரபி, தீபாவளி மலர் - 1985**

# காலுக்குச் செருப்பாய்...

"ஒங்க காலுக்குச் செருப்பா கிடந்த என் பிள்ளாண்டான இப்படி வீசிட்டியேப்பா.... நாய்க்கு எலும்புத் துண்ட வீசற மாதிரி நா பெத்த மவன போலிசில வீசிட்டியே... ஒன்ன விட்டா அவனுக்கு ஆருப்பா"

மாருதியின் நவீன அவதாரமான அந்தக் காரை பளபளக்க வைத்துவிட்டு கீழே எறியப்பட்ட கந்தல் துணிபோல் கீழே கிடந்த பொன்னம்மா எழுந்தாள். சற்றே உடம்பை நகர்த்தியவள் சுந்தரத்தைப் பார்த்து விட்டாள். அந்த அழுக்குத்துணி காற்றால் தூக்கப்பட்டு ஒரு கம்பு முனையில் விழுந்தால் எப்படித் தோன்றுமோ அப்படிப்பட்ட தோற்றத்தோடு எழுந்தவள், கார்க்கதவைத் திறக்கப்போன சுந்தரத்தை வழிமறிப்பவள்போல் நின்று கொண்டு இப்படிக் கேட்டுவிட்டாள்.

சுந்தரம் திடுக்கிட்டார். பிறகு அவளைத் திட்டப் போவதுபோல் முகத்தை வீராப்பாக்கினார். பழக்கப்பட்ட முகம் என்பதால் சிறிது நிதானித்தார். ஆனாலும், அதற்குள் "என் சிநேகிதனை எப்படித் திட்டலாம்" என்று கேட்பதுபோல் பங்களாவுக்குள் கிடந்த நாய் கேட்டுக்கு மேல் முன்னங்ககால்களைப் பற்றிக் கொண்டு, பின்னங்காலில் ஒரு மனிதன்போல் நின்றபடி குரைத்தது. அந்தக் குரைப்பு, பங்களாம்மாவையும் வாசல் வரை கொண்டு வந்து விட்டது.

சுந்தரம் கார் முனையில் ஒரு கையை ஊன்றியபடியே குரைத்த நாயை இன்னொரு கையால் ஆற்றுப்படுத்தி விட்டு அவளைக் கேட்டார்.

'என்ன பொன்னம்மா... என்ன நடந்தது... ஏன் இப்படி ஒப்பாரி வைக்கிறே'

"ஏன் பிள்ளாண்டான ராவோடு ராவா போலீசு பிடிச்சுட்டு போயிடுச்சேயப்பா... அதுவும் நீ சொல்லி பிடிச்சுட்டு போயிடுச்சேயப்பா..."

'இந்தா பாரு... தத்துப் பித்துனு உளறாதே... உன் மகன் எனக்கு கூடப்பிறக்காத பிறப்பு மாதிரி... அவன நான் எப்பவுமே வேலைக்காரனா நினைச்சதில்லே... அப்படி இருக்கையிலே அவன பிடிச்சுக் கொடுப்பேனா... என்ன நடந்தது... சட்டு புட்டுனு சொல்லு"

பொன்னம்மா கிழவி சிறிது நிதானப்பட்டாள். ஒண்டியாய்ப் பிறந்த மகன் பாக்கியமுத்து அப்போதே ஜாமினில் வந்துவிட்டது போல் நினைத்தாள். வருத்தக்குறைவே அவளுக்கு மகிழ்ச்சியாய் தோன்றியது. 'அய்யாவைப்பார்த்து கேட்கக் கூடாத கேள்வியைக் கேட்டதுபோல் நாணினாள். 'மன்னிச்சுடுப்பா' என்று சொன்னபடியே அவர் கையைப் பிடிக்கப் போனாள். ஆனாலும் கூச்சம். டாலடித்த கடிகாரக் கையை தன் அழுக்குக் கையால் தீண்ட அச்சம். அவள் கை மேலேயே ஒரு அருவருப்பு.

சுந்தரம் பரபரத்தார்.

விவரமா சொல்லு பொன்னம்மா... எதுக்கும் நான் இருக்கேன்.'

இதுவே போதும் ராசா... இதுவே போதும்' முந்தாநாளு உன்ன ரயிலுல வழியனுப்பிட்டு நைட்ல வீட்டுக்கு வந்தான்... வந்தானா... வந்ததும் வராததுமா என் மருமக அவனுக்கு தட்டுல சோறு போட்டாள். ஒரு கவளம் சாப்பிட்டுருக்க மாட்டாம்பா...

நாலஞ்சு போலிஸ்காரங்க திபு திபுனு வந்தாங்க. அதுல ஒருத்தன் வாய்குள்ள போன சோத்துக் கையை முறுக்குனான்... இன்னொருத்தன் என் பிள்ளய மல்லாக்கத் தள்ளுனான். ஏதோ பேசப்போனவன் வாயிலே ரத்தம் வரும்படியா குத்தினான். 'போலிஸ் ஸ்டேசனுக்கு, டயர் திருட்ட விசாரிக்க வான்னா வரமாட்டியா... போலீச ஒன் மாமான்னு நெனச்சியா'ன்னு ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொருத்தனும் அடிச்சு என் பிள்ளய பிடிச்சிட்டுப் போய்டான்யா. நீ செல்லமா வச்சிருந்த என் பிள்ளாண்டான என் கண்ணு முன்னாலேயே கைய வளச்சுக் கட்டி, அடி அடின்னு அடிச்சு, நாய இழுத்துட்டுப் போய்டாம்பா.'

சுந்தரம் ரத்த அழுத்தம் கூடாமலிருக்க மத்தியானம் உட்கொள்ள வேண்டிய மாத்திரையை கைப்பையிலிருந்து எடுத்து மனைவியைப் பார்த்தார். அந்தம்மாவும் உள்ளே ஓடிப்போய் ஒரு டம்ளரோடு வெளியே வந்து கணவனிடம் நீட்டிவிட்டு தன் பங்குக்கும் பேசினாள்.

'நீங்க எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் போலிஸ்காரங்க கேட்கல பாருங்க... அவனுகள விடப்பிடாது... ரெண்டுல ஒண்ணு பார்த்தாகணும்... பொன்னம்மா! நீ வீட்டுக்குள்ள வந்து சொல்லி இருக்கலாம்... கூட்டம் கூடிட்டுப் பாரு...'

'நீ நினைக்கிற மாதிரி ஒன் நாய் நினைக்க மாட்டேங்குதே... ஒரு மணி நேரமா அல்லாடுறேன்.... ஆனாலும் அந்த நாய் முறைச்ச முறைப்புல என் கொலயே நடுங்கிட்டு... சீக்கிரமா போப்பா... என் பையன பண்ணாத கோலமில்லாம் பண்ணுறாங்களாம்... பழய பகை வேற உண்டுப்பா... எங்க சேரிப்பக்கம் சாராய மாமூலுக்கு வார போலிசுகளை இந்தத் தத்தேரிப்பய ஒரு நாள் திட்டிட்டான்... சார் போட்டுத்தான்

திட்டினான்... ஆனாலும் போலிசுக்காரன், யானை கண்ணாம்புத் தேங்காய மறக்காதது மாதிரி மறக்கல...

சுந்தரம், போலிசை மடக்க யூகம் வகுப்பதுபோல் தலையைச் சொரிந்தார்... மூக்கை ஆள்காட்டி விரலால் அடித்தார்... அவர் மனைவிதான் உஷார் படுத்தினாள்.

'சீக்கிரமா போங்க... அவங்க மசியாட்டா உங்க பிரெண்டு டெபுடி கமிஷனர்கிட்ட போங்க.... அழாத பொன்னம்மா... இன்னும் அரைமணி நேரத்துல உன் மகன் உன் பக்கத்துல வந்து நிப்பான்... போதுமா... அவருக்கு வழிய விட்டுட்டு உள்ள வா... பாத்திரங்களும் இருக்கு பழய சாதமுமிருக்கு...'

காரில் பறந்த சுந்தரத்திற்கு கடந்த ஓராண்டு காலத்தில் இந்த மாதிரியான கோபம் வந்ததில்லை. அதன் வெளிப்பாடாக கார் அங்கும் இங்குமாய் லைன் மாறி ஓடியது. சில கார்க்காரர்களிடம் திட்டுக்களை வாங்கிக் கொடுத்தது. ஒரு ஓரமாய் ஹாயாய் நடந்த ஒரு சல்வார் கம்மீஸை அலறி அடித்து ஓட வைத்தது. ஆனாலும் அவர் காரின் போக்கு பற்றியோ, காதில் விழுந்த திட்டுகளைப் பற்றியோ மனதில் பதிக்காமல் அதே மனதின் முன்னைய நிகழ்ச்சிகளை பாதிப்புக்களாக்கிப் பார்த்தார்.

'என்ன அநியாயம்... எங்கேயும் நடக்காத அநியாயம்... போன மாதம் வாங்கின கண்டசலா கார் டயர்கள எந்தப் பயலோ அல்லது கும்பலோ கழட்டிட்டுப் போனது நிசம்தான்... இரவோடு இரவா நடந்த திருட்ட மறுநாள் ஆமை மாதிரி கிடந்த காரைப் பார்த்ததும், உடனே போலீசுல புகார் செய்தது இந்த பாக்கியமுத்துதான்... போலீசுக்காரங்க லத்தியும் கையுமாய் வந்ததும்... பாராட்டுக்குரியதுதான்... ஆனா அவங்க பாராட்டும்

படியாகவா நடந்துக்கிட்டாங்க?.. வெறுப்பேத்தினாங்க.. காரோட டிரைவர், வீட்டில் இப்போது வேலை பார்ப்பவர்கள், வேலையில் இருந்து நீக்கப்பட்டவர்கள், நின்றவர்கள், வண்டிக்காரர், பேப்பர்க்காரன், ஆவின் பால் போடும் சிறுமி, குப்பை அள்ளும் எக்ஸனோரா பையன், பிளாட்பாரத்தில் தொழில் நடத்தும் செருப்புத் தைக்கும் தொழிலாளி, இஸ்திரி போடும் ஒரு இளவட்டம், காய்கறிக்காரி, பூக்காரி - எல்லாவற்றுக்கும் மேலாக புகார் கொடுத்த இந்த பாக்கியமுத்து அனைவரையும் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரிக்க வேண்டும் என்றார்கள். வயிறுகளில் குத்தினால் வாய் உண்மையைக் கக்கும் என்றார்கள். இதற்கு இவரும் உடன்படவில்லை. வாய்மொழி மூலம் கொடுத்த புகாரையும் வாபஸ் வாங்கியாயிற்று... அவர்களிடம் சட்டம் பேசிய பாக்கிய முத்தையும் அடக்கியாயிற்று.. காவலர்களுக்கும் ஆட்டோவில் வந்ததற்கும் போனதற்கும் நூறுரூபாய் நோட்டை வேறு கொடுத்தாயிற்று.. அப்படியும் பசி அடங்கலன்னா.. என்ன நினைச்சிட்டான் இந்தப் போலீஸ்..?'

'இந்தப் பாக்கியமுத்து எப்பேர்ப்பட்டவன்.. இவன் காலுக்கு மட்டுமா செருப்பு.. மார்புக்குக் கவசம்.. தலைக்குத் தொப்பி.. பின்பக்கம் புதர்க்காடாயும் முன்பக்கம் வீடுகளாயும் உள்ள இந்த எரியாவிலே கைப்பம்பு, மோட்டார் செட்டு, சைக்கிள், டாங்கி மூடி, நேரம் கிடைத்தால் வாசல் கேட்டு போன்ற திருடுகள் ஆரம்பத்தில் இரவில் நடந்தது... அதை நாலும் தெரிந்த வீட்டுக்காரர்கள் கண்டுக்காததால் பகலிலும் நடந்தது.. இப்படி ஒரு தடவ பாக்கிறதுக்கே பயங்கரமான ஒரு பச்சக்குத்திப்பயல் பக்கத்து வீட்டு கைப்பம்பை கழட்டியபோது அவனைக் கண்டிக்க வேண்டியதாயிற்று.. அவனோ.. நாளைக்கு ஒன் வீட்டில் திருடிக்காட்டுறேன் பார்' என்று சவால் விட

எங்கிருந்தோ வந்த இந்தப் பாக்கியமுத்து அவன்மேல் பாய்ந்து பம்பரமாய்ச் சுழற்றி காலில் விழவைத்தான். 'இன்னும் ஒரு வாரத்திலே ஒனக்கு இருக்குடா ஆப்புன்னு கத்திக்கிட்டே ஓடின பச்சைக்குத்தியை வெறுங்கையோடு துரத்தியவன் இந்த பாக்கியமுத்து. பத்து வருஷமா ராமனுக்கு அனுமார் மாதிரி பயபக்தியோட பணிவிடை செய்கிறவன். உண்மையத்தவிர எதையுமே பேசாதவன். அவனப் போய் பிடிச்சுட்டுப் போனால், இனிமேல் நாட்டிலே போலீசுக்காரன் எவன வேணும்னாலும் பிடிக்கலாம்... ரெண்டுல ஒண்ணப் பார்த்தாகணும். ஆனாலும் லோக்கல் போலீசு... அதிகமாப் பகைக்கப்படாது. அளவுக்கு மேலே போனா இருக்கவே இருக்கார் டெப்புடி கமிஷனர்...

அந்தக்காவல் நிலையத்திற்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்ட செங்கல் லாரிகள், பயணிகளோடு கூடிய வேன்கள், டெம்போக்கள், ஆட்டோக்கள், டயர்போய் மண்ணோடு மண்ணாய் மக்கிப்போன கார்கள், கசமுசா என்று கம்பிகள் மூலம் பேசும் ஒரு கம்பீரமான மோட்டார் பைக் ஆகியவற்றிற்கு இடையே காரை எப்படியோ நுழைத்துவிட்டு அதிலிருந்து வெளிப்பட்ட சுந்தரத்தின் பாதங்களில் இரண்டு கரங்கள் பதிந்தன. கண்ணீர் அவற்றை நனைத்தது. வாய் ஒப்பாரியாய், விம்மலாய், விக்கலாய், தலையடியாய், முகமடியாய், ஒப்பித்தது.

'அய்யா... என் புருசனக் கொல்லாமக் கொல்றானுங்க ஐயா... சோறு கொண்டுபோன என்னை வெண்டை வெண்டையாப் பேசி துரத்திட்டாங்க சாமி... அப்படியும் நானும் என்னோட பிள்ளிங்களும் இங்கதான்யா பழிகிடக்கோம்... ராத்திரி அவர் போட்ட கூச்சல காது கொடுத்துக் கேட்க முடியாதய்யா... என் ஆம்புடயான கண்ணால பார்ப்பேனாய்யா...'

சுந்தரம், ஆபத்துக்குப் பாவம் இல்லையென்பதுபோல் அவளைத் தூக்கி நிறுத்தினார். தலையில் அடிக்கப்போன கரங்களைப் பிடித்துக் கொண்டார். இவருக்குப் பரிச்சயப் பட்டவள்தான். பலதடவை வீட்டுக்கு வந்தவள். ஒருவர் உருமாற ஆண்டுக்கணக்கில் ஆகும். இளமயான குண்டுக் கன்னங்களும், துருத்திய கண்களும், குழிகளாக மாற ஆண்டுக்கணக்கில் ஆகும். ஆனால் இப்படி ஒரே நாளில் கூட ஆகுமா...

ஆக முடியும் என்பதற்கு அத்தாட்சியாக, நின்றவளுக்கு கண்களால் கருணைகாட்டி - யாமிருக்கப் பயமேன் என்பதுபோல் பார்த்துவிட்டு 'அதான் நான் வந்திட்டேனில்ல... இன்னும் ஏன் அழுகிறே...' என்று சொல்லிவிட்டு, அவரை கொக்குகள் போல் தலைநிமிர்த்திப் பார்த்த ஆறு வயதுப் பையனையும், எட்டு வயது சிறுமியையும்... "நல்லா படிக்கணும்... படிப்பீங்களா... அம்மாவ அழாதிங்கன்னு சொல்லுங்க...' என்று சொல்லிக் கொண்டே நடந்தார்.

சுந்தரம், காவல் நிலைத்தின் ஆறுபடிக்கட்டுக்களையும் மூன்று மூன்றாய்த் தாவி, மேட்டுத்தளத்தில் நின்று உள்ளே எட்டிப் பார்த்துவிட்டு, நுழைந்தார். அங்கே இருப்பவர் களையும், இருந்தவற்றையும் பார்க்கப் பார்க்க அவரது ஆவேசத்தில் பாதி ஆவியாகியது. மீதி வேர்வையானது. பல்லி கள் மாதிரி சுவரில் அப்பிய துப்பாக்கிகள்... கழுத்தும் காலும் சேர்த்துக் கட்டப்பட்ட ஒரு இளைஞன்... சிறிது தொலைவில் அய்யோ அம்மா என்று கேட்கும் கூக்குரல்... அதற்குப் பதிலாக அவர்களது அம்மாக்களையும் அக்காக்களையும் வம்பிற்கிழுக்கும் வார்த்தைகள்... பகாசுர வயிறுகள்... இரைச்சல் போடும் மைக்குகள்... வெளியுலகம் தெரியாத உள்ளுலகம்... அதுவே பலருக்கு நரகம்... அந்த நரகமே சிலருக்குச் சொர்க்கம்...

சுந்தரத்திற்கு ஆவேசமே பயமானது. அவரது நண்பரான டெபுடி கமிஷனரின் உருவத்தை மனதில் நிறுத்திக் கொண்டார். அவருக்கும் தனக்கும் உள்ள உறவை பூதக்கண்ணாடிபோல் பெரிதாக்கிக் கொண்டார். தன் பக்கம் நியாயம் இருப்பதை நினைத்துக் கொண்டார். யாரிடம் போவது என்று கண்களைச் சுழற்றினார். யாருமே அவரைக் கண்டுக்கவில்லை. அதட்டுவதைவிட மோசமான உதாசீனம். அதுவே அவமானமாகப்பட்டது. ஆனாலும் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு பார்த்தபோது... பழக்கமான ஒரு காக்கிச் சட்டை. விசாரணைக்கு என்று வந்து நூறு ரூபாய் நோட்டை வாங்கிக் கொண்ட சப் இன்ஸ்பெக்டரோ - ஏட்டோ. நாற்பது வயதுக்குள்ளேயே முகம் பழுத்த வீரர். அவருக்கு எதிரே எஸ் வடிவ நாற்காலியில், ஒரு கிடா மீசை மனிதர். பார்த்தால் பயம் வரும் தோற்றம். அதைப்பற்றிக் கவலைப்படாமலேயே ஒருத்தன் - அதுவும் கைலி கட்டிய ஆசாமி அட்டகாசமாக பேசுகிறான். வீரப்பா போல் சிரிக்கிறான். அவர் காதில் கிசு கிசுக்கிறான்.

இன்ஸ்பெக்டர் நிமிர்ந்து பார்க்கிறார். சுந்தரத்தை முகத்தை ஆட்டிக் கூப்பிடுகிறார். அவர் வந்ததும் என்ன என்கிறார். இதற்குள் எதிர் நாற்காலியில் இருந்தவர் 'சார் சார் இவர்தான் உள்ள புடிச்சுப் போட்டிருக்கிறோமே... பாக்கியமுத்துப் பய... அவனோட முதலாளி... உட்காருங்க சார்' என்கிறார். பிறகு இவரு நம்ம டி.சி. சௌத்துக்கு வேண்டப்பட்டவர்' என்று கண்களைச் சிமிட்டுகிறார். உடனே, சொன்னவரின் அருகே உள்ள நாற்காலியில் இரண்டு கால்களையும் தூக்கிப் போட்டிருந்த இன்ஸ்பெக்டர், அந்தக் கால்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, சுந்தரத்தை கண்களால் உட்காரச் சொல்லுகிறார்.

சுந்தரம், மீண்டும் டெபுடி கமிஷனரை நினைத்துக் கொண்டு பயத்தால் பயங்கரவாதிபோல் கேட்கிறார்.

'என் பேர் சுந்தரம்… பாக்கியமுத்தோட பாஸ்… நான்தான் வாய் மொழியாக் கொடுத்த புகாரை வாபஸ் வாங்கிட்டேனே… நீங்களும் எப்.ஐ.ஆர் போடல… அப்படியும் என் செர்வன்ட எப்படி சார் லாக்கப்பிலே போடலாம்…'

இன்ஸ்பெக்டர், ஒரு பேப்பர் வெயிட்டை அவர் மேல் எறியப்போவதுபோல் தூக்கினார். எதேச்சையா… டெக்னிக்கா தெரியவில்லை. பிடித்த பிடியை விடாமலேயே, சுந்தரத்தைப் பார்க்காமலேயே, சுந்தரத்திற்குப் பதில் அளித்தார்.

'லுக் மிஸ்டர்… ஒவ்வொருத்தரும் எங்களுக்கு எழுத்துமூலம் புகார் தரணுமின்னு அவசியமில்ல… நாங்களே சுயோ மோட்டோவா, அதான் தன்னிச்சையா நடவடிக்கை எடுக்கலாம். எப்போ ஒரு திருடு நடந்திட்டதா எங்க பார்வைக்கு வந்திடுதோ… அப்ப புகார் முக்கியமில்ல… சட்டந்தான் முக்கியம்… எந்த கேசையும் எல்லாக் கோணத்திலயும் பார்க்கிறதுதான் போலிசு. நீங்க கூட இன்ஸூரன்ஸ் காரனுகள ஏமாத்துறதுக்கு இப்படி செய்திருக்கலாம் இல்லியா…'

'என்னப்பற்றி டெபுடி கமிஷனர் மிஸ்டர் கொண்டையா கிட்ட கேட்டுப்பாருங்க சார்…'

'சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன்… இவர் உங்ககிட்ட விவரமாச் சொல்வார்… நான் இப்ப அவசரமா வெளியிலே போறேன்… இந்தாப்பா இந்த அப்பாவி மனுஷனுக்கு அந்த ஸ்டேட்மென்ட காட்டு…'

இன்ஸ்பெக்டர் இடுப்பைச்சுற்றிய பெல்டோடு, உறைபோட்ட துப்பாக்கியோடு, லத்திக்கம்பு வீச்சாக

புறப்பட்டார். அவர் தொப்பி மறைவதுவரைக்கும் கண்களால் சல்யூட் அடித்தபடியே பார்த்த ஏட்டோ, சப் இன்ஸ்பெக்டரோ, சுந்தரத்தை சிநேகிதமாகப் பார்த்தார். பிறகு மேஜையின் அண்டிராயர் மாதிரியான ஒரு அடைப்பை இழுத்து, குப்பையாய் கிடந்த காகிதக் குவியலை நிமிர்த்தி, கைகளால் இஸ்திரி போட்டுவிட்டு, சுந்தரத்திடம் நீட்டினார்.

சுந்தரம், அந்தக் காகிதங்களை மேலோட்டமாகவும், மேலும் கீழுமாகவும் பார்த்தார். சந்தேகமில்லை. இது பாக்கியமுத்து வோட எழுத்துத்தான்.

சுந்தரம், பாக்கியமுத்துவின் இறந்துபோன அப்பன், இறக்கத்துடிக்கும் அம்மா, உறங்கமுடியாத வீட்டு முகவரி, வயது, ஜாதி, தொழில் ஆகியவை பற்றிக் கொடுத்த விவரங்களை உதாசீனமாய் ஒதுக்கிவிட்டு, அதற்குப் பிறகு வந்த தகவல்களை மாறி மாறிப் படித்தார். 'அடப்பாவி... இரண்டாவது குறுக்குத் தெருவுல மொபட்ட திருடினானாம்... அஞ்சாவது அவின்யூவில புத்தம் புது ஏ.சி. மெஷின கழட்டி வித்தானாம்... பிள்ளையார் கோவில் பக்கம் ஒருத்தியோட தாலியை அறுத்திட்டு, அடயாளம் தெரியாத ஒரு பாவி தப்பிச்சு ஓடினானே. அவனுக்கு இடம், பொருள், ஏவல் சொல்லிக் கொடுத்ததே இவன்தானாம்... போன வாரம் ஒரு பச்சப் பொறுக்கிய அடிச்சுப் போட்டானே... அது கூட ஒரு நடிப்பாம்... திருடின சாமான்களை எங்கே விற்றான்னு அட்ரசையே கொடுத்திருக்கிறான்... இந்த லட்சணத்திலே ஒவ்வொரு பக்கமும் இவன் கையெழுத்து... நம்பவும் முடியல, நம்பாமவும் இருக்க முடியல...'

சுந்தரம், விழி பிதுங்க பிரமித்தார். இரண்டு கைகளையும் முயல்வேடம் போட்டதுபோல் காதுகளோடு வைத்துக்

கொண்டார். அந்த போலீஸ்காரரை புதிராகப் பார்த்தார். அவருக்கும் புதிதாக வந்திருக்கும் ஐநூறு ரூபாய் நோட்டை ஒத்தையாகவோ, இரட்டையாகவோ பார்க்க ஆசை. இயல்பாக பேசுவதுபோல், பேசினார்.

'ஏன் சார் அப்படிப் பார்க்கிறீங்க... உங்களால நம்ப முடியாததுதான்... இதுதான் புகார் கொடுக்கிற ஒரு அப்பாவிக்கும், புகாரை விசாரிக்கிற போலிசுக்கும் உள்ள வித்தியாசம்... எத்தன பொம்பளைங்க கள்ளக் காதலனோட சேர்ந்து கட்டுன புருஷனக் கொன்னுட்டு கண்ணகி வேஷம் போட்டத பார்த்திருப்போம்... எத்தன புருஷனுங்க பொண்டாட்டிய கொளுத்திட்டு... தீப்பிடிச்சப்போது அவளக் காப்பாத்தப் போனதா அழுகிறதையும்... அதுக்கு அடையாளமா கை, கால்களிலே சூடு போடுறதையும் பார்க்கிறோம்... ஆமாம் சார்... உங்களுக்கு வெளுத்ததெல்லாம் பாலு... எங்களுக்கோ பாலுகூட விஷத்தைக்கூட மறைக்கிற வெளுப்பு... இந்த மாதிரி அனுகூலச் சத்ருவா இருக்கிற பசங்களை நம்பவே கூடாது... நாளைக்கி உங்க மனைவியோ, மகளோ நகை போட்டிருந்தால், அதைக் கைப்பற்றப் பார்க்கலாம்... பொதுவாய் இவங்க ஆள் வச்சுத்தான் செய்வாங்க... அடையாளம் தெரிஞ்சிட்டால், கொலை கூடச் செய்வாங்க... சொல்றதைச் சொல்லியாச்சு... இன்னும் எப்.ஐ.ஆர் போடல... வேணுமின்னா, அவனை ஜாமீன்ல எடுத்துட்டுப் போங்க... கிரைம் நாவல்களெல்லாம் படியுங்க.... நிறைய விஷயங்களைத் தெரிஞ்சுக்கிடலாம்....'

சுந்தரம் அசைவற்றுக் கிடந்தார். அவரைக் கையைப் பிடித்து இழுத்து சுயத்திற்குக் கொண்டு வந்த போலீஸ்காரர் பவ்யமாகக் கேட்டார்...

அடிச்ச அடில, பய எல்லாத்தையும் ஒத்துக்கிட்டான்... வேணுமின்னா அவனப் போய்ப் பார்த்து நாலு கேள்வி கேட்கறீங்களா... நீங்க டிசிக்கு வேண்டியவர் என்கிறதாலதான் இவ்வளவும் செய்திருக்கிறோம். இல்லன்னா இது பத்தோடு பதினொன்னாவது கேசு...'

சுந்தரம், யோசிக்கவில்லை. மனைவியிடம் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்ற எண்ணமும் எந்த வேகத்தில் வந்ததோ, அந்த வேகத்திலேயே போய்விட்டது. தீர்மானமாகச் சொன்னார்.

'அந்தத் துரோகிப்பயல பார்த்தாலே பாவம் சார்... அடிபட்ட பாம்பு... அவன என் வம்புக்கு வராம பார்த்துக்க வேண்டியது உங்க பொறுப்பு... இதுக்கு எவ்வளவு செலவானாலும் சரி...'

சுந்தரம், எழுந்தார். புறப்படுவதற்காக வாசலைப் பார்த்தார். அந்தச் சமயம் பார்த்து வாசலுக்குள் நுழையப்போன ஒரு பச்சைகுத்தி கைக்குட்டையால் முகத்தை மறைத்துக் கொண்டே, ஒதுங்கிக் கொண்டான்.

- தினமலர் தீபாவளி மலர் - 1996

எ. 7.

# உயிர் ஊஞ்சல்

'கழுதை தேய்ந்து கட்டெறும்பாகும்' பழமொழியை 'குதிரை தேய்ந்து கழுதையாகும்' என்று புதுமொழியாய் சொல்லலாம்போல், கருப்புக் கண்ணாடிப் பாளமாய் ஒளிர்ந்த அந்த தேசிய நெடுஞ்சாலையில் குதிரைப் பாய்ச்சலாய் ஓடிவந்த அந்த வேன், அந்தச் சாலையில் கிளை பிரிந்த கப்பிச் சாலையில் நொண்டியடித்தது.

உள்ளுக்குள் சுமார் இருபது பேர் இருக்கலாம். அத்தனை பேர் கால்களிலும், கைகளிலும் உழைப்பின் முத்திரைகளான கன்னங்கரேல் காய்ப்புகள்; ஆனாலும் சிறிது வெள்ளையும், சொள்ளையுமாய்தான் காணப்பட்டார்கள்.

பாம்படம் போட்ட கிழவிகள் இரண்டு பேர். கம்மல் வைத்த நடுத்தரப் பெண் ஒருத்தி, மதர்ப்பான இளம் பெண் ஒருத்தி. அவள் மடியில் கன்னங்குழியச் சிரித்து, ஓரம் சாய்ந்துச் சிரிக்கும் அலங்காரப் பொம்மை போன்ற இரண்டு வயதுக் குழந்தை... இரண்டு, மூன்று சிறுவர், சிறுமிகள்... தள்ளாடும் தாத்தா... அவருக்கு மகனாய்த் தோன்றிய அறுபது வயதான காந்தி வேட்டிக்காரர். எஞ்சியவர்கள் இருபதுக்கும், நாற்பதுக்கும் இடையே... மூன்று தலைமுறைக்காரர்கள்... ஏதோ ஒரு பட்டியில் நடக்கும், கல்யாணத்திற்குப் போவதாக இருக்கலாம்.

மாப்பிள்ளை மிடுக்கில் ஒரு இளைஞன்; ஜரிகை ஊடகமான பட்டு வேட்டியில், பட்டுச் சட்டையோடு இரவில் நடப்பதற்கு, பகலில் ஒத்திகை கொடுப்பதுபோல் தோன்றியது.... அந்தச் சமயம் பார்த்து, 'அந்த அரபிக் கடலோரம்' பாட்டு: அதற்கு ஏற்றாற்போல் சிறுவர்கள் ஆடுகிறார்கள்.

அவர்களோடு ஆடப் போவதற்கு முயற்சித்த சிறுமிகளின் எலிவால் பின்னல்களை, தாயோ, பாட்டியோ இழுத்துப் பிடிக்கிறார்கள். ஆனாலும், அந்தச் சிறுமிகள் பாட்டிற்கேற்றபடி உடலாட்டி, பாட்டிகளையும், தாய்களையும் ஆட்டுவிக்கிறார்கள்.

அந்தத் தொண்டுக் கிழவர் மட்டும் டிரைவரின் இடதுபக்கமுள்ள வேன் தளத்தில் வைக்கப்பட்ட டிரங்க் பெட்டிகளையும், பூக்கூடைகளையும் அடிக்கடிப் பார்த்துக் கொள்கிறார். 'நீயெல்லாம் ஒரு பிள்ளையா' என்பது போல் குறட்டை விட்டுத் தூங்கும் அறுபது வயது மகனை கண்களால் கொத்தப் பார்க்கிறார்.

அந்த வேன் இரண்டு கிலோ மீட்டர் தூரம் வரை அங்குமிங்கும் சிதறிக் கிடந்த செங்கற்சூளைகளையும், சின்னச் சின்ன வீடுகளையும், மக்கிப் போன தேங்காய் நார் குவியல்களையும் கடந்து கப்பிச் சாலை முடியும் கரடுமுரடான மண்சாலைக்குள் திரும்பியதும் வாயாடியவர்களை, வாயடைத்துப்போக வைக்கும் சுற்றுப்புறச் சூழல்...

அந்தப் பகுதிக்கு எப்போது வந்தாலும், எப்படி வந்தாலும், எங்கிருந்து வந்தாலும் வெளியூர்க்காரர்களுக்கு ஒரு கலக்கத்தை ஏற்படுத்திவிடும். புறம், அகத்தைத் தீர்மானிக்கும் ஒரு பொல்லாங்குச் சூழல்.

இருபக்கமும், பாதைக்கு வேலியான தாவரக் குவியல்கள்... ஈச்ச மரங்களும், பனை மரங்களும் இடித்துக் கொள்கின்றன. கோணல் தென்னை மரங்கள், ஒன்றுடன் ஒன்று குஸ்திக்குப் போவதுபோல் முனைப்போடு நிற்கின்றன. கரடிப் பயங்காட்டும், கன்றுப் பனைகள்.... பழுத்த நரை விழுந்த கிழவன் போல், புழுத்த ஓலைகளோடு நிற்கும் பனை மரங்கள்... இவற்றில் சில, இடி விழுந்த உச்சிப் பொந்துகள்...

முட்பாம்புகளாய் படமெடுக்கும் கருவேல மரங்கள்… அவற்றின் மேல் படர்ந்து, உடம்பை சிதைத்துக் கொள்ளும் ஊணான் கொடிகள்… மற்போர் செய்வதுபோல் நெக்கி அடித்து நிற்கும் சப்பாத்திக் கள்ளிகள், கற்றாழைகள்… இடைவெளிகளை இட்டு நிரப்பும் கடுகாட்டு எருக்கஞ் செடிகள்…

உடும்போ, பெருச்சாளியோ, உள்ளிருக்கும் மண் பாதாளக் குகைகள்… கரையான் அமைத்து, கருநாகம் குடிபுகுந்த செதிர் மண் புற்றுக் கோபுரங்கள்… இதற்கு சுற்றுப்புற வேலிகளான பாறைக் குவியல்கள்…. சவுக்குத் தோப்பு நரிகள்…. எதிரும் புதிருமான ஒரு ஓணான். ஒரு காக்கா… காக்கா ஓணானைக் கொத்தப் போகிறது… ஓணான் அதன் காலைக் கடிக்கப் போகிறது.

பனைப் பொந்திலிருந்து மேலே எழும்பி, புறாக்கள் பதறி அடிக்கின்றன… ஏழைகளின் உடைபோல், இலை கிழிந்த கல்வாழையில் ஏறி நின்ற அணில், மூக்கில் ரத்தம் சொட்டச் சொட்ட கத்துகிறது.

அந்த வேன் ஒரு 'விலக்கில்' ஆமையாய் ஊர்ந்து மறுபக்கமாய்த் திரும்பிய, பாதையற்ற வழித்தடயத்தில் ஒப்புக்கு கழுதைபோல் ஒரு கனைப்பு கனைத்துவிட்டு ஓடிய சக்கரங்களை நடக்க வைக்கிறது…

'போயும், போயும் இந்தப் பக்கமா பொண்ணு எடுக்கணும்' என்று மைத்துனன் காதில் விழவேண்டும் என்பதற்காகவே ஓங்கிக் கத்திய கைக் குழந்தைக்காரி, மூக்கைப் பிடித்துக் கொள்கிறாள். சிறிது வினாடிகளில்… சில மீட்டர் தூரத்தில், அழுகிப் போன ஒரு நாய் கவிழ்ந்து கிடக்கிறது. தலை சப்பிப் போய், தரையோடு தரையாய் கிடக்கிறது. அதன் பிட்டம், ரத்தக் கட்டிகளாய்ச் சிதறிக் கிடக்கின்றன.

பறவைகள், அதை இரையாக்கிக் கொண்டிருக்கின்றன. அதை வயிற்றைக் கொத்திய சிட்டுக் குருவிகளை விரட்டும் மைனாக்கள்; மைனாக்களை விரட்டும் காகங்கள்; அவற்றை விரட்டும் கரிச்சான்கள்; அந்தக் கரிச்சான்களோடு மல்லுக்குப் போக மனமில்லாமல் விலகி நிற்கும் பருந்துகள்.

இந்த வீச்சமிக்க பகுதியைத் தாண்டுவதற்காக, வேகப்பட்ட அந்த வேன், டிரைவரின் ஆணையில்லாமலே கரா முரா சத்தத்தோடு நிற்கிறது. பராக்கு பார்த்த டிரைவர், "என்ன இழவு" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு இருக்கையில் இருந்து எழுந்து எம்பிப் பார்க்கிறார்... வேனுக்கு முன்னால் பாதையடைத்த பாறாங்கற்கள். அத்தனையும் மூன்றுபேரால்கூட தூக்கவோ, இரண்டு பேரால்கூட நகர்த்தவோ முடியாத பாறாங்கற்கள்... இடையிடையே செங்குத்தாய் நட்டு வைக்கப்பட்ட கற்றாழை முட்கள்... கருவேல முட் குவியல்கள்.

அந்த வேனின் பயணிகள் எழுந்து நின்று எட்டிப் பார்த்தபோது, திபுதிபுவென்று ஆயுதம் தாங்கிய ஆட்கள் ஓடி வருகிறார்கள். இதைப் பார்த்த உடனே டிரைவர் உட்பட நான்கைந்துபேர், முன்பக்கமும், பின்பக்கமுமாக குதித்து புதர்களுக்குள் ஓடுகிறார்கள். டிரைவர் சப்பாத்திக் கள்ளிகளையே செருப்புகளாக்கி, வேதனையற்றுப் போய் ஓடுகிறார்...

இதற்குள் ஆயுதம் தாங்கிகளின் தலைவன்போல் ஒரு கையில் வேல் கம்பையும், இன்னொரு கையில் அரிவாளையும் வைத்திருந்த ஒரு சண்டியன், ஒரு 'சிலர் காதுகளில் ஊதுகிறான். உடனே அவர்கள் அந்தச் சாலையின் முன்பக்கத் திருப்பத்திற்கும், பின்பக்கத் திருப்பத்திற்கும் ஓடுகிறார்கள்...

இந்த வேவு போதாது என்பதுபோல் இரண்டுபேர், அருகிலுள்ள ராட்சத கல் மேட்டிலும் ஏறுகிறார்கள்.

அந்த வேனுக்குள் ஒரே கூக்குரல்கள்.... "எம்மோ... எய்யோ" என்ற புலம்பல்கள். சிறுவர்கள், இருக்கைகளுக்குள் பதுங்குகிறார்கள். பாம்படக் கிழவிகள் தலைக்கு மேல் கைதூக்கி, சுடலைமாடனையும் மயான புத்திரனையும் கூப்பிடுகிறார்கள்.... கைக்குழந்தைக்காரி குழந்தையை மாராப்புக்குள் மறைத்துக் கொண்டு, அந்த ஆயுதங்களைப் பார்க்கப் பயந்து கண்களை மூடிக் கொள்கிறாள்.

அதற்குள் உச்சி முதல் பாதம் வரை அழுத்தம் திருத்தமாக இருந்த சண்டியன், தொண்டர்களான குண்டர்களை அதட்டுகிறான். ரத்தக்கட்டிகளே, அவன் வார்த்தைகளாயின.

"ஏழுல பித்துப்பிடிச்ச நிக்கீக... ஆம்பளையா இல்லாதவன் மட்டும் கீழ நிக்கட்டும்... கலப்பட ஜாதிப் பயகளும் சேர்ந்து நிக்கட்டும்... மத்தவங்க, மேலே ஏறுங்க. எதிர்ச்சாதிப் பயலுக, நம்ம சாதியில இந்த வட்டாரத்துல மட்டும் இருபதுபேரக் கொன்னுட்டான். நாம பத்துப் பேரைத்தான் கொன்னுருக்கோம். இன்னைக்கு, குறைஞ்சது பதினோரு பேரையாவது கொல்லணும். சட்டுப்புட்டுன்னு காரியத்தை முடிப்போம்.

"நேத்தே நம்ம சாதி இன்ஸ்பெக்டர்கிட்ட சொல்லிட்டேன். 'சீக்கிரமா முடிச்சுடுங்க'ன்னு சொல்லிட்டார். இன்னும் ஏண்டா யோசிக்கீக? வழக்கு, கிழக்குன்னு எதுவும் வராம, நம்ம சாதி தலைவன்க பார்த்துக்குவாங்க. வேலையை முடிப்போம்."

இறக்கை கிழிந்த குருவியைப் பார்த்து நடக்கும் பூனையைப் போலவே, அந்த ஆயுத பாணிகள் அசாத்தியமான நம்பிக்கையோடு அந்த வேனிற்குள் ஏறினார்கள். அவர்களில்

இரண்டிரண்டு பேர் முன் வாசலையும், பின் வாசலையும் உடம்புகளைச் சாத்தி அடைத்துக் கொண்டார்கள். மற்றவர்கள் அரிவாள்களை ஓங்கியும், வேல் கம்புகளை தடவிவிட்டும் ஒவ்வொருவரையும் உற்றுப் பார்த்தார்கள்.

முகம் தெரிந்த எவரையும் காணோம் - குய்யோ, முறையோ என்று கூப்பாடு போட்டவர்கள்; அப்போதே செத்தவர்கள் போல் மூர்ச்சித்து கிடந்தவர்கள்; செத்துப் பேயாகி கத்துவதுபோல் கத்தியவர்கள்.

இதற்குள் வெளியே தப்பித்து ஓடிய, தொண்டுக் கிழவரின் மகன், "எய்யா... எய்யா" என்று வேனுக்கருகே வருவதும், பிறகு ஓடுவதுமாக இருந்தார். 'என்னையும் கொல்லட்டும்' என்று முண்டியடித்த கல்யாண மாப்பிள்ளையை கக்கத்தில் அடக்கிக் கொண்டார். அதற்குள் இரண்டு பேர் கீழே குதித்து அந்த இருவரையும், வேல் கம்புகளை முதுகில் போட்டு அந்த வேனுக்குள் திணித்தார்கள்.

வேன்வாசிகள் ஆளுக்கு ஆள் முறையிட்டார்கள். "எங்க முகத்தப் பாருங்கையா... நாங்கெல்லாம் ஒங்களுக்கு எதிரியாய்யா? என்ன தப்புயா செய்தோம்? அதையாவது சொல்லிட்டு வெட்டுங்கையா."

சண்டியர் தலைவன் ஒரு குரூரப் புன்னகையோடு கொடூரமாக விளக்கமளித்தான்:

"ஒங்க சாதிக்காரன், எங்க சாதிக்காரங்கள வெட்டிக் கொன்னா, எங்க கையி புளியங்காயா பறிக்கும்?"

"எங்க சாதி என்ன சாதின்னு தெரியாமலே கொல்ல வர்றது நியாயமா? நாங்க ஒங்க சாதியாக்கூட இருக்கலாமே..."

வேல் கம்புகள், இடுப்போடு தொங்கின. தலைக்கு மேல் போன வெட்டரிவாள்கள் வயிற்றைத் தொட்டன. சூரிக்கத்திகள் குறி விலகி நின்றன. அந்தச் சமயம் பார்த்து அந்த இளம் பெண்ணின் மாராப்பிலிருந்து திமிறி வெளிப்பட்ட இரண்டு வயதுக் குழந்தை, ஒரு வேல் கம்பனைப் பார்த்து, கழுத்தைச் சாய்த்து ஒய்யாரமாகச் சிரித்தது. அந்தக் கம்பைப் பிடித்து 'தாத்தா' என்று இழுத்தது. கைக்குழந்தைக்காரி விக்கலும், விம்மலுமாய் அழுதழுது சொன்னாள்:

"நீங்க எங்க அய்யா மாதிரி, அதான் இவா தாத்தா மாதிரி இருக்கீக. அதனாலதான் இவா இப்படிச் சிரிக்கா... வேணு முன்னா வெட்டிட்டுப் போங்கய்யா. ஆனாலும் ஒரே வெட்டா வெட்டுங்க. வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டாகணும். கை போயி, கால் போயி, எங்கள முடமா மட்டும் விட்டு வைக்காதீங்க."

தாத்தா பட்டம் வாங்கிய வேல்கம்பருக்கு என்னவோ போலி ருந்தது. அவர் பேத்தியும் இவள் மாதிரிதான். மகள் கூட, அந்தக் குழந்தையின் அம்மா சாயல்தான். சண்டியன் தோளில் கைபோட்டு, தோழமையாய் யோசனை சொன்னார்:

"ஒருவேள இவங்க நம்ம சாதியா இருக்கலாம்... பாண்டவர்கள் அரவான பலி கொடுத்தது மாதிரி, நாம கொடுத்துடக் கூடாது. ஏமுல நீங்க எந்த சாதிடா?"

வேன் பொறிக்குள் சிக்கியவர்கள் பதிலளிக்கும் முன்பே, சண்டியன் பதிலளித்தான்.

"இதுகூடவா ஒனக்கு தெரியல? நம்ம சாதி உயரம்... இவனுக குள்ளம். நாம பெரிய பெல்ட்டா போட்டிருக்கோம்... இவனுக சின்ன பெல்ட்டா போட்டிருக்கானுக. நம்ம சாதி எதிர்த்து

நிற்கிற சாதி... இவனுக பிச்சைக்காரன் மாதிரி கெஞ்சுறான். சட்டுபுட்டுன்னு முடிச்சுடணும்."

அரிவாளை ஓங்கி ஒருவருக்கு குறிபாத்த சண்டியனின் கையை வேல்கம்பர் பிடித்துக்கொண்டு கெஞ்சாமலும், மிஞ்சாமலும் பேசினார்:

"பொறுப்பா... நான் இவனுக எந்த சாதின்னு கண்டுபிடிச்சு சொல்றேன். பெல்ட்டுன்னு பாத்தா, அதோ அந்த கிழவர் பெரிசா போட்டிருக்கார். உயரமுன்னு பாத்தா அதோ ஒரு ஒட்டடைக்கம்பன். உயிருன்னு வந்துட்டா... அதுவும் நிதானமான கொலைன்னு வந்துட்டா, ஒருத்தன் எந்த சாதியா இருந்தாலும், கதறுவான்; காலைத் தொட்டு கும்புடுவான். ஒரு அஞ்சே அஞ்சு நிமிஷம் பொறு."

"போலீஸ்காரங்க வந்து நம்மள விலங்கு போட்டு இழுத்துட்டு போகணுங்கிறியா?"

சண்டியருக்கு, ஒரு குயுக்தி. அந்த சாதிப் பயகள வெட்டுற சாக்குல, இந்த சொந்த சாதிப் பயலையும் வெட்டிக் கொல்லணும்; இல்லாட்டா பிழைக்க விடமாட்டான். ஒவ்வொரு தலைக்கும் ஐயாயிரம் ரூபாய் தலைவர் தந்திருக்கார். இந்தக் கொலை செய்தி பேப்பர்ல பாத்ததும் இன்னும் ஐயாயிரம் தருவார். இப்போ எந்த சாதியை வெட்டணும் என்கிறது முக்கியமல்ல... எத்தனை பேரை வெட்டணும் என்கிறதுதான் முக்கியம்.

'ஏலே! நீங்க ஆம்புளைங்களா... இல்ல பொம்பளைங்களா...

"பொறுண்ணே... மனுசங்களா விசாரிப்போம். அப்புறம் இருக்கவே இருக்கு, அரிவாள். ஏமுல... நீங்க எந்த சாதிடா?"

வேல்கம்பர் அந்த வாசிகளில் ஒரு நடுத்தர வயது நோஞ்சான் மனிதரை உற்றுப் பார்த்துக் கேட்டார். உடனே அந்த நோஞ்சான் எழுந்து பதிலளித்தார்:

"சாதின்னு பாத்தா, இதுல பாதிபேரு இரண்டு சாதிக்கும் பிறந்தவங்கன்னு வச்சிக்கலாம். மத்தவங்க இருக்காங்களே... அந்த மத்தவங்க..."

"ஏய்! பாசாங்கா செய்யுற...? உன் சாதியை நானே கண்டுபிடிக்கேன். மத்தவங்க சும்மா இருக்கணும். இந்தாடா நீயே சொல்லு, ஒங்க குலதெய்வம் எதுடா? சொல்றியா? இல்லே ஒரே வெட்டா..."

"சொல்லுறேன்... அய்யா சொல்லுறேன்... எங்க குலதெய்வம் சுடலைமாடன்... வீட்டுத் தெய்வம் மாரியம்மன்... ஊர் தெய்வம் மயான புத்திரன்."

"ஒங்க பொழப்பு என்னடா?"

"கொஞ்ச நஞ்சை நிலம்... கூலிக்கு விவசாய வேலை. காலையில கஞ்சி... சாயங்காலம் சாராயம். நம்புனவனுக்காவ தலையைக் கொடுக்கிறது... நம்பி நம்பியே ஏமாந்து போறது. இதுதான நம்ம ஜாதியோட குணம்."

வேல்கம்பரை ஒரு தள்ளு தள்ளிவிட்டு சண்டியன் அரிவாளை தடவி விட்டபடியே கேட்டான்:

"சரி... ஒங்க சாதியைச் சொல்லவேண்டாம். எங்க சாதியாவது எந்த சாதின்னு சொல்லுங்க, பார்ப்போம்."

"நம்ம சாதின்னு சொல்லுங்கையா... நெஞ்சு கொதிக்குதய்யா... நம்ம சாதி சனங்கள, அந்த சாதிப் பயல்க வெட்டிப் போடுறதை நினைச்சா ரத்தம் கொதிக்குதய்யா... அந்த சாதியில ஒருத்தன கொன்னுட்டுத்தான் மறுவேலைன்னு வைராக்கியம்

வச்சிருக்கேன்யா... நம்ம கண்ணே, நம்மள குத்திடக் கூடாதுய்யா..."

"ஏலே... இந்தப் பசப்புற வேலை வேண்டாம். ஒரு நிமிஷம் டைம் கொடுக்கேன். எந்த சாதின்னு சொல்லு. இல்லாட்டா மாறு கை... மாறு காலுதான். ஏமுடா பாத்திட்டு நிக்கீக? இவனுக, எதிர் சாதிப் பயலுக. இதுக்கு மேல விட்டு வைக்கக்கூடாது..."

சில தாழ்ந்த அரிவாள்கள் மேலோங்கின. தொங்கிய வேல்கம்புகள் சாய்வாயின. ஓணானோடு விளையாடிவிட்டு, இறுதியில் அதைக் கடித்துக் குதறிப்போட, உடம்பை விறைக்குமே தெருநாய்... அந்த தெரு நாய்கள், வெறி நாய்கள் ஆனதுபோல் ஆயுதபாணிகளின் கண்களில் ஒரு செஞ்சிவப்பு: வாயில் ஒரு கொடூரப் புன்னகை. அந்தக் குழந்தை, வேல்கம்பர் பக்கம் தாவியது. அந்தக் கம்பை இழுத்துப் பிடித்து, தாத்தா... தாத்தா... என்று மாறி மாறிச் சொன்னது. உடனே அவர் ஓங்கிக் கத்தினார்:

"நாம எந்த சாதின்னு தெரியாததால, இவங்களும் சாதியை மறைக்காங்க. எனக்கு சந்தேகமே இல்லை, இவங்க நம்ம சாதிதான். வேணுமுன்னா இவங்களோட வேனை ஊருக்கு கடத்திக்கிட்டுப் போயி, அக்கம் பக்கம் விசாரிச்சு அப்புறமா கொல்லலாம். அதுவரைக்கும் நம்மகிட்டயே சிறை இருக்கட்டும்..."

"இந்தா பாரு சின்னச்சாமி அண்ணே! நீ எங்களுக்குத் தலைவர்தான்... இல்லேங்கலெ... ஆனா இவங்களுல ஒருத்தன் தலையாவது உருண்டு, அது நம்ம சாதித் தலைன்னா, ஒன் தலை விழும்... குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் கம்பா நாம ஆயிடக்கூடாது. எதிர்ச் சாதிக்காரப்பயக இளக்காரமா சிரிக்கக் கூடாது."

கொலையாளிகளுக்குள் சிறிது குழப்பம். போதாக்குறைக்கு அந்தக் குழந்தையின் வாயில் கொள்ளைச் சிரிப்பு... கண்களை ஓரம் சாய்த்து கைதட்டுகிறது: இடுப்பில் கை வைத்து கழுத்தை கேள்வியாக்கிச் சிரிக்கிறது. கள்ளச் சிரிப்போ... கேலிச் சிரிப்போ... ஆனாலும், கொள்ளைச் சிரிப்பு. ஒருத்தன் துண்டைப் பிடித்து இழுக்கிறது: இன்னொருத்தன் கையைப் பிடித்து செல்லமாகக் கடிக்கிறது.

அதற்குள் சாலையின் மேல் முனையில் உளவு பார்த்த இருவர் ஓடிவருகிறார்கள். ராட்சதக் கல்மேட்டில் நின்றவர்கள், எக்கி எக்கிப் பார்த்துவிட்டு கீழே குதிக்கிறார்கள்... ஓடியபடியே கத்துகிறார்கள்... சொல்லி முடிக்காமலே புதர்களுக்கள் தாவுகிறார்கள். தலையை எடுப்பதைவிட, தலை தப்பித்தால் போதும் என்கிற உயிர்பயம். அல்லது உயிர் ஆசை... ஆசை, பயமான யதார்த்தம்.

"ஓடுங்க, ஓடுங்க... ஆயுதப்படை போலீஸ் வருது. துப்பாக்கி வேனுக்கு துருத்தி நிக்குது. ஓடுங்க. ஓடுங்க, ஏய் சின்னச்சாமி! கூட்டி வந்து கழுத்தறுத்திட்டியடா... ஊருக்கு வா, பாத்துக்கிறோம்... ஓடுங்கப்பா ஓடுங்க."

அந்த வேனுக்குள் எல்லோரும், சண்டியரையும், வேல் கம்பரையும் மாறி மாறிப் பார்த்தார்கள். வெட்டிவிட்டு ஓடணுமா... இல்ல வெட்டாமலே ஓடணுமா?

அந்தப் பயணிகளில் பாம்படக் கிழவி ஒருத்தி உறை நிலையிலிருந்து உயிர் நிலைக்கு வந்து, சண்டியனின் மோவாயைத் தாங்கியபடியே பேசினாள். அவளுக்குள் லேசான பயத் தெளிவு.

"இந்தாப் பாரு மவராசா... மாடு முட்டி மாடு செத்ததில்ல. மனுஷன் வெட்டி, மனுஷன் சாகலாமய்யா?'... வண்டியில வார

போலீஸு, இரண்டு சாதியும் இல்லாம வேற சாதியா இருக்கும். கண்டவுடனே சுடுவானுக. நம்மள மாதிரி அவனுகளுக்கும் இத்தனை பேரைச் சுடணுமுன்னு ஒரு எண்ணிக்கை இருக்குதாம்... மூட்டைப் பூச்சி கூட, அத நசுக்கப் போகும்போது செத்துப் போனது மாதிரி பாவலா செய்யும். உயிரோட மதிப்பு அதுக்குத் தெரியுது... நமக்குத் தெரிய வேண்டாமாய்யா? அதோ, போலீஸ் லாரி சத்தம் கேட்குது. ஒண்ணு ஓடுங்க... இல்லாட்டா, எங்ககூட வந்தது மாதிரி இதுல உட்காருங்க. ஒங்கள காட்டிக் கொடுக்க மாட்டோம்."

நோஞ்சான் மனிதர் பாம்படக் கிழவிக்கு, பக்க பலமாகப் பேசினார்:

"ஆமாங்கய்யா... நாங்க உயிரோடு இருந்தாத்தானே ஒங்கள காட்டிக் கொடுக்க முடியாது? எங்க பிணம், ஒங்களுக்கு எதிரா சாட்சி சொல்லுமே! இதுக்கு பேர்தான் விதி அல்லது யதார்த்தம். நம்ம ரெண்டு சயிடும் உயிரோடு இருந்தாத்தான் ஒருத்தர் உயிரை இன்னொருத்தர் உயிரு, முட்டுக் கொடுக்கும். எங்க அக்கா சொன்னதைக் கேளுங்க. ஊர்ல அவளுக்கு வழக்காளின்னு பேரு. ஒரே சொல்லுல நிக்கிற அக்கா..."

போலீஸ் வாகனம் நெருங்கிக் கொண்டிருப்பதை அதன் குரல் காட்டியது. அந்த வேனுக்குள் நுழைந்தவர்களில் சண்டியன் உட்பட சிலர் வெளியே குதித்து ஓடினார்கள். வேல்கம்பர் உட்பட பலர், ஆயுதங்களைப் புதர்களுக்குள் எறிந்துவிட்டு, பால்குடிக்கத் தெரியாத பூனைகள்போல் இருக்கையில் உட்கார்ந்தார்கள். அந்த வேன்காரர்களோடு விரவிக் கிடந்தார்கள்.

- தமிழன் எக்ஸ்பிரஸ் - பொங்கல் மலர் 1998

# ஈச்சம்பாய்

காட்டிற்குக் காடாகவும், மலைக்கு மலையாகவும் தோன்றிய காட்டு மலை அல்லது மலைக்காடு. கர்நாடக மாநிலத்தில் மலெநாடு' என்று அழைக்கப்படும் வளம் கொழிக்கும் தபோவனம் போன்ற நிசப்தப் பகுதி. நாட்டியப் பெண்கள்போல், பாக்கு மரங்களும், நட்டுவாங்கனார்போல் தென்னை மரங்களும் இடைவெளி கொடுக்காமல் இணைந்து நிற்க-முக்காடு போட்ட பெண்கள்போல், தென்னை ஓலைகளால் மூடப்பட்ட தென்னங்கன்றுகள், தாவர மான்போல் தாளலயத்தோடு நிற்க, இயற்கைச் சிற்பி, தன் மேலான படைப்பாற்றலில் பூரித்துப் போனது போன்ற விதவிதமான மரங்களாலும் செடிகளாலும் வியாபிக்கப்பட்ட ஊர் -

நாற்பது நாற்பத்தைந்து கல் கட்டிட வீடுகள் - ப வடிவத்தில் அமைக்கப்பட்டு, ஒரே தொடர்ச்சியாக வியாபித்திருந்த 'மேளா' கட்டு. கட்டிட முற்றத்தின் மையத்தில், மிகப் பெரிய அடுப்பு: அதன்மேல் ஒரு குண்டாப்பானை சவாரி செய்து கொண்டிருந்தது. மல்லிகார்ஜுன சுவாமிக்கு விழா நெருங்குவதால், இங்குள்ள 'குருவி' ஜாதி மலை மக்கள் கூட்டாஞ்சோறுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆண், பெண், குழந்தைகள் அத்தனை பேரும் விழா மயக்கத்தில் இருப்பதுபோல், புதுத்துணி வாங்குவது பற்றியும், கூட்டாக முயல் வேட்டைக்குப் போவது பற்றியும் பேசிக் கொண்டிருந்த காலை நேரத்தில் -

அந்த மேளாக் கட்டில், தென் மேற்கு மூலை வீட்டில் இருந்த பெல்லிபாய்க்கு, ஒரு கவலை. நேற்று மாலையில் இருந்து,

இந்தக் காலை வரைக்கும் யோசிக்கிறாள் யோசிக்கிறாள், அப்படி யோசிக்கிறாள்; ஆனாலும் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. வீணை மாதிரியான மரப்பெட்டிமேல் கிடந்த அந்தப் புடவையையும், ஜாக்கெட்டையும் எடுக்கிறாள். இடுப்பில் சுற்றப் போகிறாள். பிறகு சுற்றப்போனதை தலையைச் சுற்றிக் கீழே போடுகிறாள். தாழை மட்டையில் செய்யப்பட்ட தொப்பியை, தலையில் இருந்து எடுக்கிறாள். பிறகு தலையையே எடுத்ததுபோல் துடிக்கிறாள். மார்புக்கு மேல் ஒன்றுமில்லாத நிர்வாணப் பகுதிக்கு நிவாரணமாக, ஜாக்கெட்டை எடுக்கிறாள். அதைப் போட்டே ஆகவேண்டும் என்பதுபோல், கழுத்தில் மார்பகங்களை மறைத்துக் கிடக்கும் பச்சைப்பாசி, நீலப்பாசி முதலிய பாசி மணிகளைக் கழற்றுகிறாள். பின்தலையை மறைக்கும் செம்பருத்திப் பூக்களை எடுக்கிறாள். பிறகு, தலைக்குள் நுழையப்போன ஜாக்கெட்டை வீசியடிக்கிறாள். வீசிப்போட்ட பாசி மணிகளைக் கழுத்திற்கு, கருக்குகளாக்கிக் கொள்கிறாள்.

மரப் பெட்டியில் கலைந்து கிடந்த புடவையையும், இரண்டு கைப் பகுதிகளும் கருட்டி நிற்கக் கையில்லாத பொம்மைபோல் கிடந்த ஜாக்கெட்டையும் பார்க்கப் பார்க்க, அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. திட்டுப் பகுதியில் வாயில் கொசு மொய்க்கத் தூங்கும் ஒரு வயதுப் பயல் மேல் அந்தப் புடவையை எடுத்து மூடப் போனாள்.

அவளால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. ஒரு முடிவுக்கு வரும்படி சொன்ன சிக்கையா மேல், மனதுக்குள் சீறுகிறாள். அவன், நேற்று மெல்லச் சொன்ன வார்த்தைகள், காதுகளில் இப்போதோ துள்ளத் துடிக்கக் கேட்கின்றன.

"பெல்லிபாய், இந்தக் காட்டுப் பகுதியில் சர்க்கார் பள்ளிக்கூடம் கட்டுறதுக்கு, ஆட்களோட ஆட்களா வந்த என் கூட, மூணு மாசமாய்ப் பேசறே. என்னைப் பற்றிப் புரிஞ்சிட்டிருப்பே. நாம ஒருவரை ஒருவர் தொட்டதில்லே. கெட்டதில்லே... ஆனாலும் ஒருத்தர் மேல் ஒருத்தர் ஆசைப் படாமலும் இல்லை. நாளையோட கட்டிட வேலை முடியுது. நாளை சாயங்காலமாக எல்லோரும் போகப் போறோம். நீயும் வர்ரதாக இருந்தால் என் கூட வா. காலமெல்லாம் உன்னை ராசாத்தி மாதிரி காப்பாத்துறேன். ஹேமாவதி அணைக்கட்டு இருக்கிற கோரூர்ல எனக்கு வேலை கிடைச்சிருக்கு. ரெண்டு பேரும் அங்கே போயிடலாம். என்ன சொல்றே? சரி, உடனே ஒன்னால சொல்ல முடியாது. இதோ புடவை, இதோ ஜாக்கெட். உனக்கு என்கூட வரச் சம்மதமுன்னா, நாளைக் காலையிலேயே, எங்க கௌடா பொண்ணுங்க மாதிரி, ஒங்க ருக்மணிபாய் மாதிரி, கொசுவம் வச்சுப் புடவை கட்டி ஜாக்கெட் போட்டு வா. அப்படி வந்தால் ஒனக்கு, என்கூட வாழ இஷ்டமுன்னு அர்த்தம். இல்லைன்னா, மூகாம்பிகா விட்ட வழின்னு எடுத்துக்கிறேன். சரி, இப்போ உன் வீட்டுக்கு புறப்படு."

அப்போது அருகில் நின்றாலும் தொலைவில் நின்று பேசுவதுபோல் தென்பட்ட சிக்கய்யா, இப்போது அவள் அருகே நிற்பதுபோல் தோன்றினான். 'என்னோட வா... வா' என்று பல்லவி பாடினான். பிறகு, 'பெல்லி, கல்யாணமான ஆறு மாதத்திலேயே உன் வீட்டுக்காரன் குடிச்சுக் குடிச்சு இறந்துட்டான்னு சொல்றே. அப்புறம் உன் பெரிய மச்சான், சின்ன மச்சான், அவன்க சம்சாரங்கள், பிள்ளைக் குட்டிகளோட கூட்டாய் வாழ்ந்துவாரே... ஒன் புருசன் நிலமும் அவங்க பராமரிப்பிலேயே இருக்குதுன்னு சொன்னே... ஆனாலும், ஒன்

மச்சான் பெண்டாட்டிங்க ஒனக்கு சரியா சோறு போடல. ஒன் பச்சைக் குழந்தை பாலில்லாம சாகுற நிலைக்குப் போயிட்டுது. மேளாவுல சொன்னேன். எவனாவது தட்டிக் கேட்டானா? என் சொத்தைப் பிரிச்சுக் கொடுக்கச் சொல்லுங்கன்னு சொன்னப்போ, மேளா எஜமானன் என்னா சொன்னான்னே... 'ஒழுங்கா, கொடுக்கிறதை தின்னுட்டு இரு. இல்லன்னா....' என்று மிரட்டுற இப்படிப்பட்ட இவங்களோட நீ எதுக்காக சாகாமச் சாகணும்? இந்த இருபத்திரண்டு வயசுல, கிராமத்துப் பெண்கள்கூட ரெண்டாம் கல்யாணம் செய்துக்கிற இந்தக் காலத்திலே, நீ எதுக்காக வாடி வதங்கணும்? மேளாக் கட்டத்துல தனியாய் தவித்து வாழ்ந்த நீ என்னோட என் கூட்டாய் வாழப்பிடாது? இப்பவே சொல்ல வேண்டாம். நாளைக்குச் சொல்லு. இந்தப் புடவை மூலம் சொல்லாமல் சொல்லு: ஜாக்கெட் மூலம் பேசாமல் பேசு."

பெல்லிபாய், வீரியப்பட்டாள். கதவைச் சாத்திக் கொண்டாள். மார்பு வரை கட்டியிருந்த மலைஜாதிப் புடவையை வீசியடித்தாள். சிக்கையாவின் புடவையை இடுப்பில் சுற்றினாள். அவனே புடவையைக் கட்டிவிடுவதுபோல் ஒரு பிரமை. பாசி மாலைகளை வீசியெறிந்துவிட்டு, ஜாக்கெட்டை எடுத்தாள். தலை தட்டியது. ஓ... தொப்பியா... தாழை மட்டைத் தொப்பியை எடுத்து, மூன்று தடவை தலையைச் சுற்றி வட்டமடித்துத் தூக்கி எறிந்தாள். ஜாக்கெட்டைப் போட்டாள். சரியாய் இருக்கே! நல்லாத்தான் அளவு எடுத்திருக்கான்!

பெல்லிபாய், புதிதாய்ப் பெண்ணுருவம் கொண்டவள்போல் மின்னினாள். உடம்பில் பட்ட ஆடைபோல், மனதுக்கு உறுதி உடையாகியது. கைக் கண்ணாடியை எடுத்து, அதை உடம்பில் பல்வேறு இடங்களுக்கு எதிராகக் காட்டிப் பிடித்தாள். சற்று

முன்புவரை, மார்புக்கு மேல் ஒன்றுமில்லாமல் இருந்தவள். இப்போது லேசாய் தெரிந்த வயிற்றை புடவையால் மறைத்தாள். இறுகப் பற்றிய ஜாக்கெட், அவளுள் ஒரு கிளுகிளுப்பையும், மார்பை மறைத்த முந்தானை ஒரு மதமதப்பையும் கொடுத்திருக்க வேண்டும்.

திண்ணையில் ஈச்சம் பாயில் தூங்கும் மகனை, கண்ணால் ரசித்தபடியே, மேளா முற்றத்துக்கு வந்தாள். 'திருவலில்' கேழ்வரகை மாவாக்கிக் கொண்டிருந்த பெண்களைப் பார்த்தாள். தாழை மட்டைத் தொப்பியில் புத்த பிட்சுகள் மாதிரி தெரிந்த கிழவிகளைக் கண்ணால் ஓரம் காட்டினாள். மேளா எஜமானரு பாபன் நாயக்கனைப் பார்த்தாள். என்னடி புதுமாதிரியான புடவை என்று ஒருத்தனாவது, ஒருத்தியாவது கேட்கட்டுமே? இல்லன்னா திட்டவாவது செய்யட்டுமே... எல்லோருமே அவள் அங்கே இல்லாததுபோல் 'பாவலா' செய்தார்கள். 'கூலி வாங்கிட்டு வாரேன்' என்று பொதுப்படையாய் வலியச் சொன்னாள். ஒருத்தராவது அவளைத் திரும்பிப் பார்க்கட்டுமே?

பெல்லிபாய், அலட்சியப்படுத்துபவர்களை லட்சியம் செய்தபடியே மெல்ல நடந்தாள். பூசி முடித்த பள்ளிக் கட்டிடத்தின் படிக்கட்டில் சாய்ந்தபடி கிடந்த சிக்கையாவைப் பார்த்துவிட்டாள். மேளாக்கட்டோ அங்கே பார்த்த முகங்களின் பாரா முகமோ அவள் மனத்தில் இருந்து தூள் தூளாயின. ஓட்டமும் நடையுமாய்ப் பாய்ந்து, சிக்கையாவின் முன்னால் நாணத்தோடு நின்றாள். அவனோ, வாயும் ஒரு கண்ணாவதுபோல், அகலமாக அவளைப் பார்த்தான். பாக்கு மரத்தின் பாளை நிறத்தில் - காட்டுக் கற்றாழையின் ஒற்றைச் சூலம் போன்ற கம்பீரத்தில், அசல் கௌடா பெண்ணாய் மாறிய அந்த மலைமகளை, அவன் மலைத்துப் பார்த்தான். அவள்

மேனியை மானசீகமாகக் கலைத்துப் பார்த்தான். பிறகு, தன்னம்பிக்கையோடு சொன்னான்:

'நீ வருவேன்னு தெரியும். என் னோடு வாழ்வேன்னு புரியும்.'

'எனக்குப் பயமாய் இருக்குதுய்யா. துக்கம் வருது.

'இன்றைய துக்கம் நாளைய சந்தோஷம்.'

'அப்புறம் இந்தச் சிக்க சம்சாரா சொக்க சமசாரா விஷயம்....

'என்ன சொல்றே?'

'என்னால உனக்குப் பிரயோஜனம் இருக்காதுன்னு சொன்னதை ஞாபகப்படுத்திப் பாருய்யா. குழந்தை பிறந்தவுடனேயே, மேளா ஆட்கள் எனக்குக் குடும்பக் கட்டுப்பாடு செய்துட்டாங்க. அதனால எனக்கு....'

'அடி பைத்தியம்! நீ அந்த விஷயத்தை சொன்ன பிறகுதான், உன்னைக் கல்யாணம் செய்துக்கிறதுன்னே முடிவுக்கு வந்தேன். ஏற்கனவே நமக்குத்தான் ஒரு குழந்தை இருக்கே. பயல் இன்னும் ஈச்சம் பாயிலிருந்து எழுந்திரிக்கலியா? அவனை ஒரு அப்பன் வீட்டுக்குக் கூட்டிப் போறது மாதிரி கூட்டிவா. சரி. இனிமேல் பேச வேண்டிய விவகாரங்களை அப்புறமாய்ப் பேசிக்கலாம். காண்டிராக்டரோட லாரி, சாயங்காலத்துக்குப் பதிலா இன்னும் அரை மணி நேரத்துக்குள்ளே வரப் போகுது. நீ மேளாவுக்குப் போய்க் குழந்தையை உன் அப்பா வீட்டுக்குக் கூட்டிட்டுப் போறது மாதிரி கூட்டிட்டு வந்துடு. நீ வருகிற விஷயம் எங்க ஆட்களுக்கும் தெரியும். அதனால பிரச்சினை இருக்காது. உம், புறப்படு.'

பெல்லிபாய், அவனைப் பார்த்துப் பார்த்து கால்களை நகர்த்தினாள். முகம் பூரித்துப் போய் கண்கள் மின்னின.

கூடவே குறும்புச் சிரிப்பு... அவனை நாணத்தோடு, ஏறிட்டு நோக்கி, நளினத்தோடு நடை போட்டாள். கடந்த காலத்திலேயே வாழ்ந்தவள், அதைக் கடப்பதுபோல், கிழக்குப் பாறை மேட்டில் இருந்து, இன்னொரு பாறை மேட்டிற்குத் தாவி நடந்தாள். ரோஜாப்பூக்களைத் தடவி விட்டபடி, வாழைக் குலைகளை வருடியபடி, ஆலம் விழுதுகளை ஆட்டியபடியே நடந்து மேளா சுற்றத்திற்கு வந்தவள், தன் வீட்டிற்குள் சுகபோக நினைவுப் போதையுடன் திரும்பப் போனபோது -

"ஏய், பெல்லிபாய். இங்கே வா."

மேளா எஜமானரு பாபன் நாய்க்கரும், இன்னும் நாலைந்து கிழடு கட்டைகளும் பாறை மேட்டில் உட்கார்ந்திருக்க, மலைக்கூட்டம் பொதுக் கூட்டம்போல் கீழே வியாபித்திருந்தது. பெல்லிபாய், சத்தம் கேட்டுத் தடுமாறியபோது, இரண்டு பெண்கள், அவளை வலுக்கட்டாயமாக இழுத்து, மேளாத் தலைவர்கள் முன்னால் நிறுத்தினார்கள். திடீரென்று 'அம்மா' என்ற அலறல் சத்தம் - பிள்ளைச் சத்தம். பெல்லி ஆவலோடு திரும்பியபோது, அவள் மகன், மச்சான் பெண்டாட்டியின் கைச் சிறைக்குள் துடித்துக் கொண்டிருந்தான்.

மேளா எஜமானரு பாபன் நாய்க்கன், அதட்டலோடு பேசினார்.

"பெல்லிபாய், நீ எதுக்காகப் புடவை கட்டுனே, எதுக்காக அங்கே போயிட்டு இங்கே வரேன்னு எல்லோருக்கும் தெரியும். நீ அந்தக் கல்வெட்டுக்காரனோட பேசற பேச்சும், குழையுற குழையலும் நல்லாவே தெரியும். காலம் மாறிட்டதால், உன்னையோ, அவனையோ நாங்க முயல வெட்டறது மாதிரி வெட்டல. போகணுமுன்னால் போ. மத்த மேளாக்காரங்க

முன்னால நம்மோட கறால்மேளா அவமானப்படும் என்றாலும், உன்னை நாங்க போகவிடாமல் தடுக்கப் போறதாய் இல்லே. ஆனால் போயிட்டால், திரும்பி வரப்படாது. உன்னை மாதிரியே ஒருத்தனோட ஓடிப் போயிட்டு அப்புறம் இங்கே திரும்ப வந்து பிள்ளையைப் பார்க்கறதுக்குத் துடிச்சாளே, லட்சுமிபாய்... அவளை மாதிரிதான் நீ ஆகவேண்டியது வரும். அப்போ இந்த லட்சுமிபாய்க்குப் பிடிச்ச பைத்தியம், ஒனக்கும் பிடிச்சால், நாங்க பொறுப்பில்லே. போகணுமுன்னால் போயிடு. ஆனால் குழந்தை உன்னது இல்லே. இது கறால் மேளாவோட பிள்ளை. இந்த மேளாவோட பெருமையை வருங்காலத்துலேயும் நிலைநாட்டப் போகிற ஆம்பிளை. நீ பொம்பிளை. போகணுமுன்னால் போ."

பெல்லிபாயின் காதில் எங்கிருந்தோ அவள் குழந்தையின் அழுகைக் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தாள். குரல் கேட்கிறது. குரலுக்குரிய பிள்ளையைக் காணவில்லை. தாய்மையில் தவித்தாள்; பலாமரக் கிளைகள் வழியாய்ப் பள்ளிக் கட்டிடத்தைப் பார்த்துக் காதலியாய் துடித்தாள். கட்டிடம் முழுவதையும் கண்களால் வட்டமடித்து, தனிமை உணர்வில் அல்லாடினாள். குழந்தையின் அழுகை அடங்கி, ஏதோ ஓர் ஈன முனகல் இறங்குமுகமாய்க் கேட்டது.

மேளாத் தலைவன் அதட்டினான்.

"உம். போகணுமுன்னால் இப்பவே போ! எக்கேடு கெட்டுப் போ. இங்கே இருந்து எங்க மானத்தை வாங்குறதைவிட, ஒரேயடியாய்ப் போயிடு."

பெல்லிபாய், சிறிது நேரம், தலையைப் பெருவிரலால் கீறினாள். முகத்தை முந்தானையால் மூடினாள். சிக்கையா

இருக்கும் திக்கைப் பார்த்தாள். புருஷன் புதைக்கப்பட்ட திசையைப் பார்த்தாள். பிறகு, மடமடவென்று நடந்தாள். அவளுக்கு எல்லோரும் வழி விட்டார்கள். அவளை வழிமறித்துப் புத்திமதி சொல்லப்போன சில கிழவிகளை மேளாப் பிரமுகர்கள் அதட்டினார்கள்.

பெல்லிபாய், காட்டிற்குள் காடாகி, மலைக்குள் குகையான நேரம். சத்தமாகத் துவங்கிய மேளாக்கட்டு, நிசப்தமாக முடியப்போன சமயம்.... அவளைத் தலைமுழுகிவிட்ட நிதர்சனத்துடன், கூட்டம் கலையப்போன வேளை.

பெல்லிபாய், திரும்பி வந்தாள். அவசர அவசரமாய் வீட்டிற்குள் ஓடினாள்... கால்மணி நேரம் அவளின் தடயம் தெரியவில்லை. கூட்டம் அப்படியே திரண்டு நின்றது. மீண்டும் அவள் கோலத்தைப் பார்த்ததும் முதலில் திகைத்தது... பிறகு சிரித்துக் கொண்டது.

பெல்லிபாய், மார்புவரை புடவைகட்டி, காதுகளில் லொண்டான் லொடுக்கு வளையங்களைப் போட்டு - மார்பில் சாவிக் கொத்துகள் தொங்கிய பாசி மாலைகளுடன், முன் தலையில் தாழைமட்டை தொப்பி போட்டு, பின் தலையில் ஊமத்தம் பூக்குவியல்களை சுமைபோல் வைத்து, வந்தாள். மறுபடி பிழைத்த அல்லது செத்த மலைஜாதிப் பெண்ணாய் வந்தாள். கூட்டம், இப்போது அவளை அங்கீகரித்துப் பார்த்த போது -

மேளாக் கட்டு எஜமானர் பாபன் நாய்க்கர் காலில், பெல்லி பாய் தன் தலைபடும்படி நெடுஞ்சாண்கிடையாக விழுந்தாள். இனிமேல் தலையெடுக்கப் போவதில்லை என்பதுபோல் அப்படியே கிடந்தாள். எவளோ - எவனோ அவளைத் தூக்கி விட்டபோது -

*பெல்லிபாய், மேளாத் தலைவனைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டாள். பள்ளிக் கட்டிடத்தின் முன்னால், லாரியில் சாய்ந்தபடி, அவசரக் கோலமாய் நின்ற சிக்கையாவை நோக்கி, மேளாத் தலைமைக்கு கும்பிடு போடுவதுபோல் போட்டாள். மாறி மாறிக் கும்பிடு போட்டாள். 'மன்னிச்சுடணும்,' என்று சிக்கையாவுக்கும் கேட்கும்படி அலறலோடு கும்பிட்டாள்.*

*அப்போது -*

*லாரியின் ஓடல் சத்தம் எல்லோருக்கும் கேட்டது. ஆனால் பெல்லிபாய்க்கு மட்டும் அவள் குழந்தையின் சத்தமே கேட்டது.*

**- குமுதம், 2-5-1985**

# முகமறியா முகம்

ஊரு ஒலகத்தில் காதலிப்பதுபோல், தானும் காதலிக்காமல் போனதுக்கு ராசகுமாரி, வட்டியும், முதலுமாய் வருத்தப்பட்டாள். அந்த 'அரங்கு' வீட்டின் கடைசி அறைக்குள் வாசல்படியில் உட்கார்ந்து கொல்லைப்புறத்தைப் பார்த்தபடியே குழைந்தாள். இரண்டு சிட்டுக்குருவிகள், அவள் முன்னால் சல்லாபம் செய்து கொண்டிருந்தன. முன்பெல்லாம் அவற்றை ரசித்துப் பார்க்கும் அவள், இப்போது, கைகளை ஆட்டி அவற்றை கலைக்கப் போனாள். பிறகு அவையாவது நல்ல ஜோடியாகி இருக்கிறதே என்று நினைத்தவள்போல், சும்மாயிருந்தாள். அப்படியும் இருக்க முடியவில்லை. பிடரிமுடியை மேற்பக்கமும், முன்முடியை பின்பக்கமும் இழுத்து இழுத்து அல்லாடியபடியே சிந்தித்தாள். அவளவள், ஒரு காதலோடு நிற்காமல், மறுகாதல், மறுபடியும் காதல்னு ஜோடி மாற்றம் செய்கிறாள்கள். இவளோ ஒரு சிலரை ஏறெடுத்துப் பார்த்தாலும் அவர்களில் எவனையும் காதலிக்காமல் இருந்தவள். 'பொம்பளைன்னா ஒரு அடக்கம்... ஒடுக்கம் வேணும்'னு சின்ன வயதிலிருந்தே அம்மா திட்டித் திட்டியும், அப்பா சாட்டைக் கம்பை ஆட்டி ஆட்டியும், அவள் அக்காவுக்குச் சொன்னது, அப்போது அவளுக்குக் கேட்டதோ என்னமோ, இவளுக்குக் கேட்டது. அவளை அடித்தபோது அவள் 'மந்தக்குறத்தி' மாதிரி சும்மா இருந்தாலும், இவளுக்கு வலித்தது. இப்படிப்பட்ட தனக்கா இந்தத் தண்டனை என்று அவள் தடுமாறினாள். நினைக்க நினைக்க கோபம் கூடிக்கொண்டே போனது. அரை மணி நேரத்திற்கு முன்புதான்,

அந்த எதிர்பாராத செய்தியை அவள் கேள்விப்பட்டாள். வெளியேயிருந்து வந்த அப்பா கருப்பசாமி, கக்கத்தில் இருந்த குடையை வீசியடிக்காமல், கால் செருப்புக்களைத் தூக்கி எறியாமல் இதமாக வந்ததிலிருந்தே, அம்மா புரிந்து கொண்டு 'காரியம் பழந்தானே' என்றாள். அவர் லேசாய்ச் சிரித்தார். அதற்காகவே, அவருக்கு பரிசளிக்க விரும்பியதுபோல், அம்மா உள்ளே போய், மோர் கொண்டு வந்தாள். அப்பாவோ, கருத்த மீசைக்கு நரை நிறத்தைக் கொடுத்த மோர்த்து துளிகளைத் துடைக்காமலே, மனைவியிடம் விஷயத்தைச் சொல்லப் போனார். பிறகு அதட்டினார்.

"மொதல்ல உன் மகள உள்ளயாவது... வெளியிலயாவது போகச் சொல்லு..."

"அவள் கிடக்காள்... பையன் எப்படி..."

"உனக்கு புத்திகெட்டுப் போச்சுடி... அவளுக்குத் திமுறப் பாரேன்... காலம் கலிகாலம். அது நம்ம வீட்டுக்கும் வந்துட்டா..."

"ஏளா எருமைமாடு... அப்பா சொல்லுறது காதுல விழலே... ஒன் சோலியப் பாத்துட்டுப் போயேம்ளா... முடிச்சாச்சா..."

"முடிச்சாச்சு... இன்னுமாளா நிக்கே..."

கருப்பசாமி, மகளை பல்லைக் கடித்துப் பார்த்தார். அவளும் 'எனக்கும் தெரியட்டுமேப்பா' என்பதுபோல் கால்களைத் தேய்த்தபடி நின்றாள். பிறகு 'எனக்குத்தான் தெரியணும்' என்பதுபோல் நிலைப்படியில் உள்ள சீப்பை எடுத்து, சிறிது தள்ளி நின்று, ஜன்னல் வழியாக அவர்களைப் பார்த்தபடியே தலையை வாரினாள். அவர்களோ அவளை 'வாருவது'போல் திண்ணையிலிருந்து எழுந்து, சமையலறைக்குள் போய் விட்டார்கள். இவளுக்கும் வீம்பு வந்துவிட்டது.

தொழுவிலிருந்து கிழக்குப் பக்கமாகத் திரும்பி, சமையலறையின் பின் சுவரில் சாய்ந்து கொண்டு ஒட்டுக் கேட்டாள்.

ராசகுமாரிக்கு, அவர்கள் பேசுவது கிசுகிசுப்பாகவே கேட்டது. "மூணு ஏக்கர் நிலம், அக்கா தங்கச்சின்னு பிச்சுப் பிடுங்கல் கிடையாது... அம்மாவும் நல்லபடியா போய்ச் சேரந்துட்டாளாம்... ரொம்பத் தோதானது... நெனைச்சதுக்கு ஒருபடி மேலதான்... சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளதானடி...."

ராசகுமாரி மருண்டு போனாள். அந்த 'சாண்பிள்ளை' என்ற வார்த்தை அவளை உலுக்கி எடுத்தது. உற்றுக் கேட்டாள். மீண்டும் கிசுகிசுப்பு. ஒலிகள் அவளைப் பொறுத்த அளவில், அருவ நிலையிலேயே ஒலித்தன... அப்போ... ஒருவேளை மாப்பிள்ளை.... குள்ளமா இருப்பானோ... போன மாசம் பஞ்சாண்டி ஊருல, இப்படித்தான் ஒரு அநியாயம் நடந்துதாம்... வெளியூர் மாப்பிள்ளை மேள தாளத்தோட காருக்குள்ள இருந்தபடியே வந்திருக்கான். குண்டு முகமாம். அத வச்சு மாப்பிள்ளை பெரிய சண்டியர்னு எல்லாரும் நினைச்சிட்டாங்க.... ஜன்னல் வழியா பார்த்த பொண்ணுகூட சந்தோஷப்பட்டாளாம். கடைசியிலே மணவறையிலே பொண்ணோட காலு தரையில நேரா பட முடியாமல்... அவளே அதை வளைச்சு வச்சாளாம். அந்த அளவுக்கு அவள் உயரமாம்... ஆனால், மாப்பிள்ளை காலு தரையிலருந்து ஒரு அடிக்கு மேல நிக்குதாம். இவ்வளவுக்கும் முழுக்காலுதான். ஆசாமிதான் குள்ளக் கத்திரிக்காய். எல்லோரும் கசாமுசான்னு பேசினாங்களாம். பொண்ணு அங்கேயே அழுதாளாம். ஆனாலும், போனது போச்சு, ஆனது ஆச்சுன்னு, ஊரும் உறவும் தாலி கட்டும்போது, பூமாரி பொழிஞ்சுதாம்.

அய்யய்யோ... எனக்கும் அப்படிப்பட்டவன்தான் வருவானோ... சீ அப்பா அப்படியா என்னை பாழும் கிணத்துல தள்ளுவாரு... தள்ள மாட்டாருதான்... அவருகிட்டயும் ஆள் மாறாட்டம் செய்திருந்தால், மாட்டிக்கப் போறது நான்தானே... தலைவிதின்னு தப்பிக்கப்போறது அப்பா. அதுல அவரு சுமையும் எறங்கிப் போகும்.

சமையலறைப் பக்கம் இருக்க மனமில்லாமல், ராசகுமாரி கொல்லைப்பக்கமாக வந்தாள். தலை கனத்தது. உள்ளுக்குள், கருப்போ, சிவப்போ ஏதோ ஒன்று அவள் குரல்வளையைப் பிடிப்பதுபோலிருந்தது. எல்லாமே அந்நியமாய்த் தெரிந்தது. மீண்டும் பெற்றவர்கள் திண்ணையில் வந்து பிறந்தவளைப் பற்றி பேசுவது கிசுகிசுப்பாய்க் கேட்டது. இரண்டில் ஒன்றைக் கேட்டுவிட வேண்டும் என்ற வேகத்தில், ராசகுமாரி அவர்கள் பக்கம், வந்து நிலைப்படியில் இரண்டு கைகளையும் விரவிப்போட்டு, தலையை வாசலுக்கு வெளியே கொண்டு போனாள். அவர்கள் பேசி முடித்து விட்டார்கள் போலும்... கிண்ணிப் பெட்டியில் இருந்த எள்ளுருண்டையை இருவரும் தின்று கொண்டிருந்தார்கள். எட்டிப் பார்த்த மகளுக்கு அம்மா, எள்ளுருண்டையைக் கொடுத்தாள். இவளும், அதை வாங்கிக் கொண்ட அந்த எள்ளுருண்டையைக் கசக்கிப் பிழிந்து எண்ணெயாக்கினாள். 'எனக்கத் தெரியாம, எங்கிட்ட கேக்காம என்ன பாக்க விடாம... என் தலையில எவனையும் கட்டுறதுக்கு ஒங்களுக்கு எத்தனாவது சட்டத்தில் இடமிருக்கு' என்று கேட்பதற்காக, அம்மாவை விட்டு விட்டு, அப்பாவையும், அப்பாவை விட்டுவிட்டு, அம்மாவையும் மாறி மாறிப் பார்த்தாள். ஆனாலும் ஒன்பதாவது வகுப்பு படிக்கும்போது, பெரியவளானதும், 'இவள் படிச்சுக் கிழிச்சதுபோதும், வீட்டு

வேலையைப் பார்க்கச் சொல்லுன்னு அப்பா சொன்னபோது, அதற்குப் பதிலாய் இவள் சிணுங்கியபோது, அப்பா எப்படி கண்களை உருட்டிப் பார்த்தாரோ, அப்படி இப்போதும் பார்த்தார். கண்கள் ரத்தக் கட்டிகளாக, அவளை ரத்தமும் சதையுமாய் குலைக்கப் போவதுபோல் பார்த்தார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, வாசற் படியில் நின்றவளை கருப்பசாமி கறாராகப் பார்த்தாரே தவிர, கண்டிக்கவில்லை. இதுவே அவளுக்குக் கொஞ்சம் தெம்பைக் கொடுத்தது. கைகள் இரண்டையும் திருவோடுபோல் குவித்தபடி, அப்பாவை கோவில் மூலவரைப் பார்ப்பதுபோல் பார்த்தாள். உதடுகள் துடித்தன.

"ஒங்ககிட்ட பேச பயமா இருக்குப்பா... வெட்கமாகவும் இருக்குப்பா... நீங்களே சொல்லுங்கப்பா... மாப்பிள்ளை எப்படிப்பா... எப்படிப்பா... நான் முந்தானைய முகம் தெரியாதவனுக்கா விரிக்கணும்? .இடம் தெரியாத வீட்டிலா இடறி விழணும்? சொல்லுங்கப்பா... ஒரு தடவ... ஒரே ஒரு தடவ ஒங்கள தலை குனிய வைக்காம நடந்தவப்பா... என்னையும் தலைகுனிய வச்சுடாதிங்கப்பா..."

ராசகுமாரி, தந்தையின் முகத்தை மலங்க மலங்கப் பார்த்தபோது, அவர் மகளுக்கு ஒரு செய்தியை மனைவி மூலம் சொன்னார்.

"இந்தா பாரு... ஒன்னத்தான் பிள்ள... இவளுக்கு கல்யாணம் நிச்சயமாயிட்டு பாரு... இனிமே வீட்டுக்கு வெளியில போகவேண்டாமுனு சொல்லு... பீடி சுத்துனதுபோதும். நான் தட்டாசாரியைப் பார்த்துட்டு வாறேன்... நாளைக்கு தென்காசியில தங்கம் வாங்கணும்...."

"நகையா வாங்கினால் என்ன..."

"பாக்கிறதுக்கு அழகா இருக்கும்... ஆனா ஒரே போலி... நம்ம தட்டாசாரியும் கொஞ்சம் கரண்டத்தான் செய்வான்... ஆனாலும் அவ்வளவு மோசமிருக்காது. ஒனக்கு தாலி செய்ததே அந்த மனுஷந்தான்..."

ராசகுமாரி, தந்தைக்கு எதிரே வழி மறிப்பதுபோல் நின்றுகொண்டு அவரையே மலங்க மலங்கப் பார்த்தாள். "அப்பா... அப்பா... தங்கத்துலயே தரம் பாக்குற அப்பா... எனக்கு வாச்சவன் தரம் எப்படிப்பா..."

"ஏமுளா அபசகுனம் மாதிரி நிக்கே?... ஒதுங்கி நில்லேமுளா தடிமாடு..."

கருப்பசாமி பேசிய பேச்சைவிட அவர் பார்த்த பார்வையில் பயந்துவிட்ட ராசகுமாரி சிறிது ஒதுங்கிக் கொண்டாள். பின்புறமாய், நகர்ந்து விலகிக் கொண்டாள்.

ராசகுமாரிக்கு, வீறாப்பும், விம்பும் ஏற்பட்டன. அதே சமயத்தில் அந்த அநியாயத்தை யாரிடமாவது சொல்ல வேண்டும் போலிருந்தது. அங்கே எவ்வளவு நேரம் நின்றாலும் அவர்கள் பேசப் போவதும் இல்லை.

ராசகுமாரி வீட்டைவிட்டு வெளியே பாய்ந்தாள். 'பார்த்துப் போகப்படாதா' என்று பொய் அதட்டலாய்க் கேட்ட மாரியம்மாப் பாட்டியை ஏறிட்டுப் பார்த்தபோதுதான், தனது வலுவான மோவாய் பாட்டியின் இற்றுப்போன தலையில் மோதியது தெரிந்தது. ஆனாலும், அந்த கரணைகூட இல்லாமல் அவளைக் கடந்து நடந்தாள். மேயப் போகிற ஆடுமாடுகள் குவியல் குவியலாய், நிற்கும் ஊர் மந்தையைத் தாண்டி,

இரண்டு வைக்கப் போர்களின் இடுக்கு வழியாய் நடந்து, அதற்குப் பக்கத்திலுள்ள புளியமரக் கிளையைப் பிடித்து தலையை தொங்கப் போட்டு நின்றவள், சத்தம் கேட்டு நிமிர்ந்தாள். துரைச்சாமி, ஒரு பக்கமாக நடந்து கொண்டிருந்தான். உலக்கை தரையில் பட்டு பள்ளம் பறிப்பது போன்ற நடை. இவள் செருமினாள். அவன் திரும்பிப் பார்த்துவிட்டு, போய்க் கொண்டே இருந்தான். அவனிடம் கேட்டுப் பார்க்கலாமா... அய்யய்யோ அவனுக்கும் நிச்சயமாயிட்டே...

ராசகுமாரி, கீழே விழாமலிருப்பதற்கு புளியங்கொம்பைப் பிடித்துக் கொண்டாள். சொல்லி வைத்ததுபோல், மூன்றுபேர் அந்த வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். இளவட்டங்கள். அந்த கருட்டைத் தலையன் ஒரு ஒயர்மேன். அவளைப் பார்த்து பலதடவை பல்லைக் காட்டியிருக்கான். இவளும், அவனுக்கு சலுகை காட்டுவதுபோல் பல்லைக் கடிக்காமல் இருந்தாள். ஒரு தடவை அவன் நடுங்கிய குரலில் 'ராசகுமாரி, நான் மத்தவங்க பார்க்கிற அர்த்தத்துல ஒன்னப் பார்க்கலே... நெசமாவே ஒன்னை... என்று சொன்னபோது, நின்று கேட்டவள். பிறகு ஓடிப் போய்விட்டாள். அதற்குப் பிறகும் அவனைப் பார்க்கும் போதெல்லாம் ஒதுங்கிக் கொண்டாள். 'அடுத்த சாதிக்காரன பார்க்க முடியுமா... அப்படியே நாம நினைச்சாலும்... அப்பா நினைப்பாரா... தூக்குப் போட்டுச் செத்துட மாட்டாரா... சரி, அவன விடு... அதோ ரெண்டு பேரு போறானுவளே... அவங்களும் ஒங்கிட்ட எத்தன தடவை வளைய வளைய வந்தாங்க.... ஏறெடுத்துப் பார்த்தியா... ஒனக்கு என்ன கெடைச்சுது... ஒன் மாப்பிளைய நீ தீர்மானிக்க கூட வேண்டாம். ஒன்னால பாக்கக்கூட முடியலியே... அப்பா தூக்குப் போடக்கூடாதுன்னு நீயே தூக்குக் கயிற ஒரு தாலியா போடப் போறியா...'

ராசகுமாரி, பித்துப் பிடித்து நின்றாள். இரண்டு கிளைகளுக்குள் கூடு கட்டியிருந்த காகம், அவள் தலைக்கு மேலே அங்குமிங்குமாய் பறந்து உச்சக் குரலில் கத்திக் கத்தி, கால்களால் அவள் தலையைப் பிராண்டியது. அவள் அசைவற்று நிற்பதைப் பார்த்துவிட்டு, கொத்துவதற்குக்கூட குறி பார்த்தது. ஆனாலும் அவள் பித்தம் கலையாமல் நடந்துகொண்டே இருந்தாள். எப்படி நடந்தாளோ எல்லோரும் சுற்றி நிற்பதுபோலிருந்தது. பீடி சுற்றும் பெண்கள் தட்டும் கையுமாக அவளைச் சுற்றி வட்டமிட்டு நின்றார்கள். அவர்களில் ஒருத்தி கேட்டாள்.

"ஒனக்கு கலியாணம் நிச்சயம் பண்ணிட்டாங்களாமே... மாப்பிள்ளை எப்படியாம்..."

"நீ ஒருத்தி... நம்மள மாதிரியா இவள்?... அடக்க ஒடுக்கமானவளாச்சே... அப்பா எவனக் காட்டுறாரோ, அவன கட்டுறவளாச்சே... குட்டையான் மாப்பிள்ளைன்னா, அவன இடுப்புல எடுக்க கழுத்த குனிவாள்... கொக்கனா் இருந்தால், அவன் இடுப்புல ஏறி, கழுத்த நிமிர்த்துவாள்... ஒன்னை மாதிரியா... என்னை மாதிரியா... தங்கமான பொண்ணாச்சே..."

ராசகுமாரிக்கு, அழுகை வந்தது.

ஆனால், அந்த இரண்டு பெண்களும் அப்படிப் பேசியதால், அவள் அழுகை மேகம் கலைந்து, மனம் ஒரு புயலானது. ஆமாண்டி நான் அப்படித்தான்' என்று சொல்லப் போனாள். இதற்குள் தெய்வயானை மயினி வெளியூரிலிருந்து அந்த ஊரில் வாக்கப்பட்டவள் கேட்டாள்.

"ஏ... ராசகுமாரி... ஒப்பா நல்லா பார்த்தாராமா... தீர விசாரிச்சாராமா. என்னை மாதிரி மாட்டிக்காதடி..."

ராசகுமாரி, மயினியைப் பார்த்தாள். குரங்கு மூஞ்சுக் குடிகாரனிடம் மாட்டிக் கொண்ட பூமாலை. அவளைப் பார்க்கப் பார்க்க, அவளுக்காகவும், தனக்காகவும் ரெட்டிப்பாக அழுதாள். முந்தானையை வாயில் வைத்து திணித்துக் கொண்டே நின்றவளின் தலை தானாக ஆடியது. பிறகு அங்கிருந்து ஓடினாள். அழுகை ஆவேசமாகியது. இரண்டில் ஒன்றைக் கேட்டுவிட வேண்டும். வாழப்போகிறவளுக்கு சாகப் போகிறதுகள் நிச்சயிக்க முடியாது.

ராசகுமாரி, வீட்டுக்குள் கோபமாகத்தான் காலடி வைத்தாள்.

அப்பா, அவளைப் போல் ஒரு மதர்ப்பாய்த் தோன்றிய தேங்காயை மண்வெட்டியில் குத்திக் குத்தி 'உரித்துக்' கொண்டிருந்தார். லேசாய் இடைவெளி கொடுத்த, தேங்காய் மட்டையை பல்லைக் கடித்து, பல்லால் இழுத்து, வாயில் கவ்வி வெளியே துப்பினார். அப்படியும் முரண்டு பிடித்த அந்தத் தேங்காயை தூக்கி, அம்மிக்கல்லில் ஒரே போடாக போட்டு, மீண்டும் அதைத் தோலுரித்தார். அதைப் பார்க்க பார்க்க, ராசகுமாரிக்கு பயமெடுத்தது. அண்ணன்காரன், தொழுவத்து ஒற்றை மாட்டை அழைத்து தொட்டியில் தண்ணீர் காட்டிக் கொண்டிருந்தான். அண்ணிக்காரி, புண்ணாக்கையும், தவிட்டையும் எடுத்து தொட்டிக்குள் போட்டு, பனை மட்டையால் கலக்கிக் கொண்டிருந்தாள். அண்ணன் அப்பாவிடம் கேட்பது அவளது இரைந்த காதுகளுக்குள் ஊடுறுவியது.

"எத்தனை நாளைக்குப்பா இந்த ஒத்த மாட்ட வச்சு தண்டத் தீனி போடுறது?— ராமாசாமி மச்சான் மாடு என்ன ஆச்சு? அதை வாங்க வேண்டியதுதானே?"

வாங்கிடலாம்தான்... ஆனால், அது நம்ம மாட்டுக்கு ரெண்டு 'விரக்கடை' கட்டையா இருக்குது... ஜோடி சேராது அதனாலதான் வேண்டாம்னு விட்டுட்டேன்..."

ராசகுமாரி, அந்த 'அந்நியர்களை' கோபம் கோபமாகப் பார்த்தாள். ஆனாலும், அடி மனப்பயம், அந்தக் கோபத்தை அழுகையாக்கியது. மீண்டும் வீட்டுக்குள் போனாள். வாயை வாயே மெல்வதுபோல், உதடுகளை மூடவிட்டு, உள்ளுக் குள்ளே பற்களை மோதவிட்டு, நாக்கை ஊழிநடனம் போல் ஆடவிட்டாள். அவளையறியாமலே ஒரு நாடோடிப் பாடல், எப்போதோ கேட்டது இப்போது பல மடங்காய் ஒலித்தது.

"முகமறியா மனிதருக்கு முந்தானி விரிக்கணுமோ?

இடமறியா வீட்டிலே இடறித்தான் விழுணமோ?"

- உஷா - 22-1-95

# மருமகள்

கண் சிகிச்சை முகாமுக்கான ஜீப், கிழவர் - கிழவியர் சகிதம், பொன்னம்மா பாட்டியின் வீட்டு முன்னால் வந்து நின்றது. பாட்டியின் மகன் முனுசாமியிடம், கிராம சேவக்கும் சேவிகையும் விளக்கமாக எடுத்துரைத்து, பொன்னம்மாவை ஜீப்பில் ஏற்றினார்கள். மருமகள்காரி வாசல்வரை வந்தாள். மாமியாரை ஜீப்பில் பார்த்ததும், தனக்கும் வயதாகி, கண்ணும் கெட்டிருந்தால், இந்த ஜீப்பில் எறியிருக்கலாமே என்று ஏங்கியவள் மாதிரி, பெருமூச்சு விட்டாள்.

ஏதோ ஒரு வழியாக, கண் சிகிச்சை முகாம் துவங்கியது. அந்த டிவிஷனைச் சேர்ந்த ஆறு பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களும், இதர அதிகாரிகளும், கோட்ட வளர்ச்சி அதிகாரி தலைமையில், அந்தப் பஞ்சாயத்து யூனியனை முற்றுகை இட்டார்கள். யூனியன் 'கவுன்சில் ஹால்' ஆபரேஷன் தியேட்டராகியது. சென்னையிலிருந்து வந்த கண் டாக்டர்கள், கொண்டு வரப்பட்ட முதியவர்களின் சிலரது கண்கள் 'இன்னும் பழுக்கவில்லை' என்று கூறி, அவர்களைத் தள்ளிவிட்டார்கள். அப்படியும் நூற்றைம்பது கிழவர் - கிழவியர் தேறினர். இவர்கள் அனைவருக்கும் 'கண்புரை அறுவைசிகிச்சை' வெற்றிகரமாக நடந்தது. இது துவங்கியதிலிருந்து முடிவது வரைக்கும் - நான்கு நாட்களும் - நல்ல சாப்பாடும், ஆரஞ்சு, ஆப்பிள், அது இது என்றே ஏக அமர்க்களம். யூனியன் அருகே பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்காக இருந்த 'சென்ட்ரல் கிச்சனில்' சமையல் செய்யப்பட்டது.

கிழடுகளுக்கு அந்த நாளும் வந்தது. அன்று மாலையில் ஒவ்வொருவருக்கும் கலெக்டர், கண்ணாடி வழங்க வேண்டும். டி.வி. வரும். ரேடியோக்காரர்கள் வருவார்கள். மேடையில் பேசுவதற்குச் சொற்பொழிவாளர்கள் வருவார்கள்.

கிராம சேவக் சீனிவாசனை, ஆணையாளர் தம் அறைக்குள் வரவழைத்தார்.

"சபாஷ் சீனி.... நாமதான் அதிகமாகப் பிடிச்சிருக்கோம். ஆனா குவான்டிட்டி மட்டும் போதாது, குவாலிட்டி ஆப் சர்வீஸ் முக்கியம். அதனால கலெக்டர் ஏதும் கேட்டால், நம்ம ஆட்கள், அவங்கள நல்லா கவனிச்சதாச் சொல்லணும், சொல்ல வைக்கணும். இந்தக் கலெக்டர் ரொம்ப இண்டலிஜன்ட் மேன். பல ஊர் தண்ணிய குடிச்ச மனுஷன். எந்தச் சமயத்துல என்ன கேட்பார்னு தெரியாது. அதனால பெரிசுகள உஷாரா கவனிச்சுக்கோ. புரியுதா? யாரும் கம்ப்ளெயிமனட் பண்ண மாட்டாங்களே? எதுக்கும் நீ சரிக்கட்டுற விதமாச் சரிகட்டு. போய்யா கண்ணு".

சீனிவாசன் 'சரிக்கட்டப்' போனார். "தாத்தாமாரே, பாட்டிமாரே, கலெக்டர்கிட்ட நாங்க நல்லா கவனிச்சதாச் சொல்லணும்." என்று மன்றாடினார். அப்படி மன்றாடியது தப்பாய்ப் போயிற்று.

"யோவ்... நீ கொடுத்த அழுவுன ஆரஞ்சி இங்கதான் இருக்கு. கலெக்டர்கிட்ட காட்டப்போறேன்" என்றார் ஒருவர். "சோறுல... இருந்த கல்லுங்களப் பொறுக்கி வச்சிருக்கேன். கலெக்டர்கிட்ட காட்டப் போறேன்" என்று ஒரு படுகிழவி பல்லவி பாடினாள்.

மேற்கொண்டு பேசாமல் சீனிவாசன், வெறுப்போடு வெளியே வந்து முனங்கினார். கல்லைப் பொறுக்குகிற அளவுக்கு இதுங்களுக்குப் பார்வை கொடுத்தது எவ்வளவு பெரிய தப்பு' அட கடவுளே...

யாரோ தன் கையைப் பிடிப்பதைப் பார்த்து, அவர் திடுக்கிட்டார். பொன்னம்மா பாட்டி வெற்றிலை வாயுடன் அங்கே வந்தாள்.

"ஏண்டாப்பா, அந்தக் கிழடுங்கள விடு. ஒன்னப்பத்தி நான் கலெக்டர் கிட்ட நல்லா சொல்றேன்... கவலப்படாத ராசா..."

"ரொம்ப ரொம்ப நன்றி பாட்டி, ஒனக்காவது நன்றி இருக்கே."

"ஆனால் ஒண்ணு, நான் அப்படிச் சொல்லணுமுன்னா நீ எனக்கு மூணு ஆப்பிள் தரணும். எட்டணா கையில் கொடுக்கணும்."

"லஞ்சமா?"

"அப்படித்தான் வச்சிக்கயேன்."

"பாட்டி, இது அநியாயம்..."

"எதுடாப்பா அநியாயம்? நீ எத்தன பேருகிட்ட எவ்வளவு லஞ்சம் வாங்கியிருப்பே? அதுலதான் கேக்கேன். இப்பவே கொடுக்கணும். அப்பதான் நல்லபடியாச் சொல்லுவேன். இல்ல..."

சீனிவாசன் மார்பில் அடித்துக்கொண்டே, அதே மார்புப் பையிலிருந்த எட்டணாவை எடுத்துக் கொடுத்தார். கோட்ட வளர்ச்சி அதிகாரிக்கு வைத்திருந்த அத்தனை ஆப்பிள் பழங்களையும் பாட்டியிடம் கொடுத்துவிட்டார். பாட்டி

பழங்களை முந்தானைக்குள்ளும், காசை அதன் முனைக்குள்ளும் பத்திரப்படுத்திக் கொண்டாள்.

மாலை வந்தது. கலெக்டர் வந்தார். கண்ணாடிகள் தந்தார். சீனிவாசன் பயந்ததுபோல் அங்கிருந்த எந்த ஒரு கிழவரோ அல்லது கிழவியோ குறை சொல்லவில்லை. பொன்னம்மா கிழவிக்கு அவசரப்பட்டுக் காசையும் ஆப்பிள்களையும் கொடுத்துவிட்டோமோ என்று சீனிவாசன் 'பின்யோசனை' செய்தார்.

கண் சிகிச்சை முகாம் ஒரு வழியாக முடிந்தது. கிழவர்-கிழவியரும் யூனியன் ஜீப்பில் ஏற்றப்பட்டு, அன்று இரவே தத்தம் வீடுகளில் இறக்கப்பட்டார்கள். மிகப் பெரிய கல்யாணம் ஒன்று நல்ல விதமாக நடந்து முடிந்த திருப்தி.

மறுநாள், கமிஷனர் எல்லோரையும் கூப்பிட்டார்.

இந்த முகாம்ல நாமதான் முதல்ல வந்திருக்கோமாம். கலெக்டர் சொல்லிவிட்டாராம். டிவிஷனல் ஆபீஸ்ல இருந்து சொன்னாங்க. நாளைக்கு ஷீல்டு வருமாம். ஒங்க எல்லோருக்கும் நன்றி. பப்ளிஸிட்டி ஸார், இதக் கண்டிப்பா பேப்பர்ல போடணும். வாங்கப்பா. இந்தச் சந்தோஷமான சமாசாரத்த கொண்டாடாம விடக் கூடாது. நைட்ல எங்கயாவது போயி டின்னர் சாப்பிடலாம். டி.டி.ஓ.வையும் வரச் சொல்லலாம். சீனி, பணத்த கலெக்ட் பண்ணுய்யா. ஒனக்கு உண்மையிலேயே மோதிரம் போடணுமுய்யா - பித்தளையிலாவது."

'கலெக்ஷன்' நடந்து கொண்டிருந்தபோது, ஒரு மனிதர் வெளியே இருந்து கத்திக்கொண்டே உள்ளே வந்தார். பொன்னம்மா பாட்டியின் மகன்.

"யோவ்! எங்க அம்மா எங்கய்யா? அவள என்னய்யா செய்திங்க? சொல்லுங்கையா. எல்லார் அம்மாவும் வந்தாச்சு. எங்கம்மா மட்டும் வரல... என்னய்யா பண்ணுனிங்க? பாவிங்களா...."

ஆணையாளர் திடுக்கிட்டார். நழுவப் போன பப்ளிசிடி ஆபீசரைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டே, 'நேத்து நைட்லயே ஜீப்ல அனுப்பிட்டோமே... என்னய்யா இது, பெரிய இழவாப் போச்சு. சீனி! வாய்யா டிரைவர கூட்டியாய்யா. சீக்கிரமா கூப்பிடுய்யா. கூப்புடு கூப்புடு...' என்றார்.

டிரைவர் வந்த கையோடு, விளக்கினார். "ஓ. ம்ஞ்சப் புடவை பாட்டியா? ஜீப்ல ஏறமாட்டேனுட்டு இந்த ஊர்லயே மகள் வீடு இருக்கதாச் சொல்லி, அங்க போறேன்னு பிச்சிக்கிட்டு..."

"பிச்சுப்புடுவேன் பிச்சு. எங்கம்மாவுக்கு நான் ஒருத்தன் தான் பிள்ள. பொண்ணுங் கிடையாது, மண்ணுங் கிடயாது. என்னய்யா பண்ணுனிங்க? பாவிங்களா... கொன்னுட்டீங்களா? லாரிக்குக் குறுக்கே தள்ளிப்பிட்டிங்களா? என்னய்யா பண்ணுனிங்க...? அம்மா... அம்மா... யோவ்! இன்னும் அரை மணி நேரத்துல அம்மாவக் காட்டலன்னா, நான் கலெக்டர்கிட்ட போவேன்... இல்லன்னா அண்ணங்கிட்ட (மந்திரி) போகட்டுமா?"

கமிஷனர் எள்ளுங்கொள்ளுமாகப் பேசினார். "நீ யாருகிட்டயும் போகவேண்டாம். என்கிட்டயே வா. யோவ் சீனி! சைக்கிள்ல வடக்குப் பக்கமா போ. ஜல்தி... என்ஜினியர் ஸார், உங்க மோட்டார் சைக்கிள்ல கிழக்கா போங்க. ஒங்க காண்ட்ராக்டர ஸ்கூட்டர்ல தெற்கா போகச் சொல்லுங்க. இந்தாப்பா டிரைவர்! நீ மேற்காப் போ. பப்ளிஸிடி ஸார்! ஒங்க

காரை கொஞ்சம் குடுக்கிறீங்களா? காமாட்சி! நீ பஜார்ல போயி தேடு. ஒரே பேஜாரு போச்சு... சீக்கிரம்... அவசரம்... போங்க... ஆளோடு வரணும். வெறுங்கையோட வரக்கூடாது. போங்கய்யா. சீக்கிரமா.... ஜல்தியா.... குயிக்கா.... போங்கய்யா... போங்க. இந்தாப்பா, ஏய்யா அழுவுற? ஒம்மா கிடச்சிடும்... நானிருக்கேன்..."

"நீ எதுக்குய்யா? எனக்கு அம்மாதான் வேணும்."

ஒருமணி நேரம் உருண்டோடியது.

வெறுங்கையோட வர விரும்பாதவர்கள்போல் அத்தனை பேரும் தத்தம் வாகனங்களில் ஆளுக்கொரு கிழவியாகக் கொண்டு வந்தார்கள். அத்தனை கிழவிகளும், 'இந்த அநியாயத்தக் கேக்க ஆளில்லயா? அட கடவுளே, சும்மா போய்க்கிட்டிருந்த எங்கள இழுத்துக்கிட்டு வந்தா என்னடாப்பா அர்த்தம்? நாங்க என்ன தப்பு பண்ணினோம்? அநியாயமா கொண்டாறதுக்கு எத்தனாவது சட்டத்துல இடமிருக்கப்பா?" என்று கேட்டபோது, ஆணையாளருக்கு மூளை குழம்பியது.

இந்த அமளிக்குள், ஊர்நல ஊழியர் சீனிவாசன், திமிறிக் கொண்டிருந்த பொன்னம்மா பாட்டியை, சைக்கிள் கேரியரில் பலவந்தமாய்ப் பிடித்து வைத்துக்கொண்டே, சைக்கிளை உருட்டிக் கொண்டு வந்தார். முனுசாமி, கண்ணீரைத் துடைத்துக்கொண்டு புன்னகைத்தான். தாயும் தனயனும், ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டார்கள். சீக்கிரமாய் வீட்டுக்குப் போக நினைத்து, ஜீப்பில் போகாமல், டிரைவரிடம் அவனை முட்டாள்தனமாக ஒப்படைத்த சீனிவாசனுக்கு நிம்மதி. கமிஷனருக்குச் சந்தோஷம். பப்ளிசிடி ஆசாமிக்குத் தன் கார் திரும்பக் கிடைத்ததில் மகிழ்ச்சி.

இதற்கிடையே,, பலவந்தமாகக் கொண்டு வரப்பட்ட கிழவிகளின் கூக்குரல் அதிகமாகியது. ஒரு பாட்டி, வாயில் அடித்துக் கொண்டாள். இன்னொரு கிழவி வயிற்றில், "அய்யய்யோ... அம்மம்மோ... அக்கிரமக்காரங்களக் கேக்க ஆளு இல்லியா? நாசமாப் போற பயலுகளா. எதுக்குடாப்பா, இப்டி அக்ரமம் பண்றீய? அழிஞ்சிப் போயிடுவிங்கடா அநியாயக்காரப் பாவிங்களா..." என்று தலையில் அடித்துக் கொண்டாள்.

ஆணையாளர் ஆணையிட்டார்.

"யார் யார் எந்தெந்தப் பெரியம்மாக்கள எந்தெந்த இடத்துல பிடிச்சிங்களோ... அந்தந்த இடத்துல அதுங்கள விட்டுட்டு வாங்க. உம்.. ஜல்தி... குயிக்..."

கிழவிகள் காரிலும் ஸ்கூட்டரிலும் சைக்கிளிலும் பறந்தார்கள். பொன்னம்மா பாட்டி மட்டும் மகனோடு அங்கே நின்றாள். அவள் முந்தானை கனத்திருந்தது. ஆணையாளர் கத்தினார்.

"பாட்டி! ஒனக்குக் கொஞ்சமாவது மூளை இருக்கா? பொறுப்பில்லாம நீ பாட்டுக்குப் போயிட்டால் என்ன அர்த்தம்? யூஸ்லஸ்... கலெக்டரு என் தாலிய அறுத்தால், நீயா திருப்பிக் கட்டுவ? என் பதவிக்கு உலை வைக்கப் பாத்துட்டியே. யோவ் சதுரவட்டை! ஒன் அம்மாவ நாங்க ஏதோ கடத்தனதுமாதிரி குதிச்சியே! இப்போ என்ன சொல்லுற... சிரிக்காதய்யா..... அசிங்கமா இருக்குது."

"கோவிச்சுக்காதப்பா! நீ மவராசனா இருக்கணும். என்னோட மருமகள் மச ,,கையா இருக்கா. இந்த ஆப்பிள் பழத்தைக் கொடுத்தா, ஆசையோட திம்பா. அதுக்காவத்தான் அடாவடியா பஸ் சார்ச்சிக்கு எட்டணா வாங்கிக் கிட்டுத் தலமறவாயிட்டேன்.

ஆனா பஸ் எங்க நிக்குமுன்னு... தெரியாம ராத்திரி முழுதும் சுத்திக்கிட்டே இருந்துட்டேன். கோவிச்சுக்காதப்பா!"

"ஆமா. ஜீப்ல போனால் என்ன? எதுக்காவ பஸ்ல போக நினைச்சே?"

"ஜீப்ல இருக்கிறவங்க பழத்த பிடுங்கிக்கிட்டா, மருமவகிட்ட குடுக்க முடியுமா? டிரைவரே பழத்தைத் தந்திடுன்னு கேக்கலாம். கோவிச்சுக்காதப்பா. இந்தா, பழஞ் சாப்பிடு. முனியா! ஏண்டா அழுவுற? நான்தான் வந்துட்டேனே.... அவா.... மூளியலங்காரி... மூதேவி சண்டாளி... உன் பொண்டாட்டி... எப்படிடா இருக்கா? அவளுக்காவ இம்மாம் பழத்தையும் ஒளிச்சி வச்சிருந்தேன். வா போவலாம். அவா தேடிக்கிட்டு இருப்பாள். மசக்கக்காரி... சீக்கிரமாப் பழத்தக் குடுக்கணும்."

ஆணையாளர் சிரித்தார். அவர் சிரித்ததைப் பார்த்து, சீனிவாசன் சிரித்தார். காமாட்சியும், சிரித்தாள். விவகாரம் சிரிப்பாய் சிரிக்காமல் நல்லபடியாய் முடிந்ததற்காக எல்லோரும் சிரித்தார்கள்.

**- குமுதம், 9-3-78**

# பூவம்மாவின் குழந்தை

இறுகத் தார் பாய்ந்த வேட்டியில் மரத் தூள்களும் மண் தூள்களும் இரண்டறக் கலந்த செம்மண் கோலத்தில் குடிசைக்கு வந்த கன்னையா, கழுத்தில் தொங்கிய கோடரியைக் கீழே வைத்துவிட்டு, குடிசைக்கு முன்னால், வேலிகாத்தான் முட்செடிகள் மொய்த்த இடத்தருகே இருந்த மண் பானையில் இருந்த நீரை, கையாலேயே மொண்டு கால் கைகளைக் கழுவிக் கொண்டே, பாதி திறந்திருந்த குடிசைக்குள் நோட்டம் விட்டபடி, "டேய் ராமா... டேய் ராமா..." என்றான்.

ராமன் திருப்பிக் குரல் கொடுக்கவில்லை. வெய்யில் அடிக்கிற மாலைப் பொழுதில், தந்தை வந்து விடுவார் என்ற அனுமானத்தோடு எங்கெல்லாமோ விளையாடிவிட்டு, அங்கே வந்து திண்ணையில், இரண்டு முழங்கால்களையும் பின்னால் மடித்துப் போட்டுக் கொண்டு, இரண்டிற்கும் இடையே உள்ள இடைவெளியில் தவமிருப்பதுபோல் உட்கார்ந்திருக்கும் அந்த ஏழு வயதுப் பயலுக்கு என்ன வந்து விட்டது? வீட்டுக்குள்ளே படுத்துக் கிடக்கிறானா? கையில் காலில் அடிபட்டு, அப்பா பார்த்தால் அடிப்பார் என்று பயந்து குடிசைக்குப் பின்னால் நிற்கிறானா?

மகனுக்காக வாங்கி மடியில் கட்டியிருந்த ஆழாக்கு அரிசிப் பொடியும் அரையாழாக்கு 'உடச்ச' கடலையும் கொண்ட மிக்ஸ்சர் பொட்டலத்தை ஒரு கையால் பிடித்துக் கொண்டே கன்னையா குடிசைக்குள் வந்தான். அங்கே, பையனின் நோட்டுப் புத்தகங்கள் சிதறிக் கிடந்தன.

கன்னையாவுக்குக் கொஞ்சம் பயம் பிடித்துக் கொண்டது. வெளியே வந்தான். அக்கம் பக்கத்துக் குடிசைகளைப் பார்த்தான். அப்போதுதான், ஆண்களும் பெண்களுமாக வேலையிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் கேட்டுப் பிரயோசனமில்லை.

கன்னய்யா, மீண்டும் குடிசைக்கு வந்தான். கை கால் கழுவிய மண்பாணையின் நிழலையே வெறித்துப் பார்த்தான்.

அவனுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. யாராவது நரபலிச் சாமியார் வந்திருப்பானோ...

தொலைதூரத்தில் தெரிந்த சுடுகாட்டில், சில பையன்களின் தலைகள் தெரிந்தன. கன்னையா ஓட்டமும் நடையுமாக அங்கே பாய்ந்தபோது, அங்கே நின்ற பையன்கள் அவனைப் பார்த்து ஓடி வந்தார்கள்.

"ராமனைப் பார்த்தீங்களாடா?"

"அதச் சொல்லத்தான் ஓடி வாறோம்..."

"சொல்லுங்கடா... சீக்கிரமாச் சொல்லுங்கடா..."

"ராமன அவனோட அம்மா வந்து தூக்கிக்கினு போனாங்க..."

"யாரு?"

"அதான் ஒங்களோட பழைய சம்சாரம்..."

"எப்போடா வந்தாள்?"

"மத்யானமா ராமன் ஸ்கூல்ல இருந்து வீட்டுக்கு வந்தப்போ அவனோட அம்மா வந்தது... ராமனத் தூக்கிக்கினு போச்சுது..."

"அவன் சும்மா இருந்தானா?"

"இல்ல. திமிறினான். அம்மா வாயில குத்தினான். வயித்துல உதச்சான். அப்பா அப்பான்னு அயுதான்."

கன்னய்யா குடிசைக்குள் ஓடினான். பரணில் சொருகி வைத்த பிச்சுவாக் கத்தியை இடுப்பில் சொருகிக் கொண்டான். ஏழு கிலோமீட்டர் தொலைவில் உள்ள இன்னொரு சேரிப் பகுதியை நோக்கி ஓடினான்.

பத்து வருடங்களுக்கு முன்பு, பூவம்மாவைப் பிடித்த கையை இப்போது நெறித்துக் கொண்டான்.

டெய்லர் சுந்தரத்தை நினைக்க நினைக்கப் பற்கள் தானாகக் கடித்துக் கொண்டன.

அவனோடு ஓடிப்போன நாய் இப்போது ஏன் வந்தாள்? என்ன தைரியத்தில் பையனைத் தூக்கிப் போனாள்?

அய்ந்து வருடத்திற்கு முன்பு, டெய்லர் சுந்தரத்திற்குப் பெண் பார்த்ததே இவன்தான். அவசரக் கைமாற்று நூறு ரூபாய் கொடுத்ததும் இவன்தான். அவன் மனைவி, தன்னை 'அண்ணாத்த... அண்ணாத்த...' என்று வார்த்தைக்கு வார்த்தை சொல்லும்போது, சொந்த சகோதரன்போல அவளைப் பார்த்து, பாசத்தால் பாகானவனும் இவன்தான். இரண்டு வருடத்திற்கு முன்பு, டெய்லர் சுந்தரம் ஊரில் வீடு கட்டியபோது, அந்த வீட்டிற்கு ஒரு குத்துவிளக்கை வாங்கி வைத்தவனும் இவன்தான்.

அந்த விளக்கையே அணைக்கிறவள் மாதிரி, பூவம்மா அந்த வீட்டுக்கு ஓடி விட்டாள். சுந்தரத்தின் மனைவிக்கும் துரோகம், இவனுக்கும் துரோகம்...

கன்னய்யா குரங்குக் குல்லாய் மாதிரி நுனி சிறுத்து அடி பெருத்த செங்கல் மகுடத்தைச் சூட்டிய அந்த வீட்டுக்குள்

நுழைந்தான். நுழைந்ததும், தன்னையறியாமலே, வலது கால் தரையை மிதித்த வேகத்தில், பூமியே குலுங்குவது போல் இருந்தது. ஏதோ ஒரு ஆபாசமான மாத நாவலைப் படித்துக் கொண்டிருந்த பூவம்மா, அவனைப் பார்த்ததும், கண்கள் நிலை குத்த, வலது கையின் பெருவிரலும், சிறு விரலும் ஒன்றை ஒன்று அழுத்த, சிறிது நேரம் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தவள். பிறகு இடது கையை தரையில் ஊன்றிக் கொண்டுபோய் உடம்பை மேலே நிமிர்த்தவும் முடியாமல், கீழே வீழ்த்தவும் முடியாமல், கையை காலாக, ஒற்றைக்கால் மிருகம் போல் அவனைப் பார்த்தாள்.

டெய்லரின் ஒரிஜினல் மனைவி பாப்பம்மாள், குப்புறப் படுத்துக் கிடந்தாள்.

பூவம்மா, மீண்டும் எழுந்திரிக்கப் போவதைக் கண்டதும் கன்னய்யா அதட்டினான்.

"அப்படியே இருந்த இடத்துல இருடி.... இல்ல... நான் ஜெயிலுக்குப் போவ வேண்டியிருக்கும்."

பூவம்மாளின் அருகே, நீர்த் திட்டங்கள் இரு கன்னக் கதுப்பிலும் கரையாய்ப் படிந்திருக்க, விழியோரத்தில் ஈரப் பசை, இமை இரண்டையும் ஒட்டும்படி பிடித்திருக்க, தொண்டையைச் சொறிந்து கொண்டே, சூன்யமாகப் பார்த்துக் கொண்டிருந்த ஏழு வயதுச் சிறுவன் ராமன், அசுர வேகத்தில் ஓடி வந்து கன்னையாவின் கால்களைக் கட்டிக் கொண்டான். மோவாய், தந்தையின் முட்டிக் கால்களில் தொட்டு நிற்க, முட்டிக் கால்களுக்கு மேலே நீட்டிய தலையை அங்குமிங்குமாக ஆட்டினான்.

டெய்லரின் மனைவி, கண்களைத் திறந்து கழுத்தை வளைத்துப் பார்த்தாள். பிறகு, திடீரென்று எழுந்து, அந்த

நிலையிலும் தன் மாராப்புச் சேலையைச் சரியாக்கிக் கொண்டு, சிறிது நேரம் அவனையே மௌனமாகப் பார்த்தாள். முப்பது வயதிருக்கும். பூஞ்சை உடம்பு நிஜக் கருப்பு. திடீரென்று அவள் கத்தினாள்.

'அடுத்துக் கெடுத்த துரோகியின் வீடு இது அண்ணாத்தே! இங்கேயா அண்ணாத்தே வந்து நிக்கிற? என்னால ஒன்னை உட்காருன்னு சொல்ல முடியலியே அண்ணாத்த. சொல்ல முடியலியே! என் மனசே இந்தப் பாடு படும்போது, ஒன் மனசு என்ன பாடு படுதோ– நான் சண்டாளி அண்ணாத்தே! எனக்குச் சந்தேகம் வந்தப்பவே ஒங்கிட்ட சொல்லியிருக்கணும். புருசனைக் காட்டிக் கொடுக்கக் கூடாதுன்னு நெனச்சு கட்சீல என்னையே காட்டிக் கொடுத்துட்டேன். ஒன் மனசு கஷ்டப்படக் கூடாதுன்னு நெனச்சு இப்போ ஒனக்கும் எனக்குமா கஷ்டத்த குடுத்திட்டேன் அண்ணாத்தே. நான் யார் கிட்ட சொல்ல? சொன்னாலும் தீருற குறையா?"

கன்னையா, அவளை வெறித்து வெறித்துப் பார்த்தான். பிறகு, நாவல் புத்தகத்தைப் பிரித்து, பாதி முகத்தை மூடிக் கொண்டிருந்த பூவம்மாவைப் பார்த்தான். மகனைத் தூக்கி வலது தோளில் அணைத்தபோது, அந்தச் சிறுவன் காலை உதறினான். பிச்சுவா பட்டதால் பயல் உதறுவதைப் புரிந்துகொண்ட கன்னையா, சிறுவனை வலது கைக்குப் பதிலாக, இடது கை அணை போட இடது தோளுக்குக் கொண்டு வந்து போட்டான். சிறுவன், தன் மோவாயைக் கன்னையாவின் தோள் பட்டையில் அழுந்திப் பதித்து, கண்களை மூடிக் கொண்டான். கன்னையா வெளியே நடக்கப் போனான்.

டெய்லரின் மனைவி அவனை வழி மறித்தாள்.

"அண்ணாத்தே... தயவு செஞ்சி இந்தக் கழுதையை கூட்டிக்கிட்டுப் போ அண்ணாத்தே... அப்படிப் பாக்காத. எனக்குப் பயமா இருக்கு. ஒன்ன இவளோட குடித்தனம் பண்ணுன்னு சொன்னா... என் வாய் அழுவிடும். அப்படி நீ குடித்தனம் பண்ணினால் நீ அழுவிப் பூடுவ... நான் அப்படிச் சொல்லல. ஆனால் இவள் இங்கே வந்ததிலிருந்து என் புருஷன் என்னை தினம் அடி அடின்னு அடிச்சி மிதிமிதின்னு மிதிச்சுப் போடறான்..."

அவள் விம்மினாள்.

கன்னய்யா, முதல் தடவையாகப் பேசினான். புருவத்திற்குக் கீழே இருந்த இரண்டு ரத்தக் கட்டிகள் தெறித்து விடும்படி கத்தினான்.

"என்னை என்ன செய்யச் சொல்ற? நான் இன்னாதான் பண்ண முடியும்? ஒண்ணே ஒண்ணு பண்ணலாம். என் மவனை எந்த மவராசன் கையக் காலாவது பிடிச்சு அனாதை ஆசிரமத்துல அடச்சிட்டு, நான் தூக்குப் போட்டுச் சாவலாம். வேற என்னத்த பண்ண முடியும்?"

"இவள இங்க இருந்து முடியப் பிடிச்சி இஸ்துக்கினு போ. வெளில கொண்டு போயி என்னா வேணுமானாலும் பண்ணு. கொல்லணும்னாலும் கொல்லு. அண்ணாத்தே, இந்தக் கயிதய கழுத்தப் பிடிச்சி வெளில தள்ளு அண்ணாத்தே..."

கன்னய்யா பல்லைக் கடித்துக் கொண்டே பதிலளித்தான்.

"இவள் கழுத்தப் பிடிக்க எனக்கு ரைட் இல்ல. அதுல கிடக்கிறத வாணும்முன்னால் கேக்கலாம். பூவம்மா! ஒன்னத்தான் ராசாத்தி... ஒன் கயுத்துல கிடக்கிற தாலிய மரியாதியா கழட்டிக் கொடுக்கிறியா மவராசி? புண்ணியவதி! கொடுத்திடும்மா.

ஏதோ நாலு பேரு தீர்மானிச்சாங்களேன்னு போட்டேன். நான் போட்ட கயிறு ஒனக்கு சுருக்குக் கயிறா பூட்டுது. பரவால்ல. இப்போ அதை கழட்டிக் கொடுப்பியாம். ரெண்டு குண்டுமணி தங்கத்துக்காவ கேக்கல. நம்ம நாட்ல தாலிக்கு இன்னும் மதிப்பிருக்கு. அதனாலதான் கேக்கறேன். குடுக்கிறியா புண்ணியவதி?"

பூவம்மாள் கழுத்துப் பக்கம் கைகளைக் கொண்டு போகவில்லை.

"கழட்டுடி தாலிய. தேவடியாளுக்கு எதுக்குடி தாலி? அதக் கழட்டுறியா... இல்ல, கழுத்தோட சேத்துத் தாலிய எடுத்துக்கணுமா? உம் சீக்கிரம்!"

பூவம்மாள் தன்னை நோக்கி இரண்டி நடந்த கன்னய்யாவைப் பார்த்துக் கொண்டே, தாலிக் கயிற்றைக் கழட்டி அவனிடம் நீட்டினாள். அவன் அதட்டினான்.

"தரையில வைடி."

வைத்தாள்.

கன்னய்யா அந்தத் தாலிக் கயிற்றை எடுத்து, தலையைச் சுற்றி மூன்று தடவை கொண்டு வந்துவிட்டு, பிறகு அதன்மேல் காறித் துப்பிவிட்டு, வீட்டுக்கு வெளியே எறிந்தான். அது எச்சிலையை நக்கிக் கொண்டிருந்த நாயின் மூக்கில் போய் விழுந்தது.

டெய்லர் மனைவி கேவிக் கொண்டே பேசினாள்.

"இவள் கொண்டையப் பிடிச்சு எங்கேயாவது இழுத்துப் போட்டுட்டுப் போயிடு அண்ணாத்தே. இவள் என்னைக்கு வந்தாளோ அப்போ பிடிச்சு உதை திங்கறேன் அண்ணாத்தே.

இந்தா பாரு என் முதுகில... அவன் சூடு வச்சிருக்கிறத... தோ பாரு கழுத்து பிஞ்சி இருக்கிறதை.... ஒனக்குப் புண்ணியம் உண்டு அண்ணாத்தே... இந்தத் துத்தேறி முண்டயைக் கண் காணாத இடத்துல விட்டுட்டுப் பூடு..."

கன்னய்யா பதிலேதும் சொல்லாமல் பையனோடு அந்தக் குடிசையிலிருந்து வெளியேறப் போனான். திடீரென்று, யாரோ மோதுவதுபோல் தோன்றவே, திரும்பிப் பார்த்தான்.

டெய்லர் சுந்தரம், அவனை முறைத்துப் பார்த்துக்கொண்டே, வாசலின் ஒரு பக்கம் சாய்ந்துகொண்டு, வலது கையை நீட்டி, அவனை வழி மறித்தான். இதற்குள், பூவம்மா ஓடிவந்து கத்தினாள்.

"என் கொயந்த... என் கொயந்த... என் கொயந்தயத் தூக்கிக்கினு போறான்.... கொயந்தய வாங்குங்க.... கொயந்த இல்லாம என்னால இருக்க முடியாது. கொயந்த... அய்யோ... குயந்த...."

டெய்லர் சுந்தரம் நீட்டிய கையை மடக்காமலே, "கொயந்தய இங்கே விட்டுட்டுப் போ. இல்லே, நீ எங்கேயும் போக முடியாது" என்றான்.

கன்னய்யா பதில் பேசவில்லை. இடுப்பில் சொருகியிருந்த பிச்சுவாவை எடுத்து வலது கையில் பிடிப்பக்கத்தைப் பிடித்துக் கொண்டே, "கைய எடுக்கிறியா, இல்லே, இதால எடுக்கணுமா?" என்றான்.

இதை எதிர்பாராத சுந்தரம், வெளியே ஓடினான். ஓடியவன், ஒரு பெரிய கல்லோடு திரும்பி வந்தான். கல்லாலும், கத்தியாலும் ஒருவரை ஒருவர் குறி பார்த்தபோது, டெய்லரின்

கட்டிய பெண்டாட்டியும் கட்டாத பெண்டாட்டியும் கன்னய்யாவின் தோளில் கிடந்த ராமனும் பயத்துடன் கூச்சலிட்டார்கள். அவர்கள் கூச்சல் அக்கம் பக்கத்துக்காரர்களை கூட்டி விட்டது... கூலி வேலைக்குப் போய்விட்டு, திரும்பி வந்தவர்கள், தத்தம் வீடுகளுக்குப் போகாமலே, அங்கே கூடிவிட்டார்கள். எப்படியோ விவகாரத்தை கிரகித்துக் கொண்ட ஒரு இளைஞன், கன்னய்யாவுக்குச் சவாலிட்டான்.

"ஏண்டா, ஊர்விட்டு ஊர் வந்தா அடிக்க வந்தே? நீ, அவன் மேலே கத்திய நீட்டுறது எங்க மேல நீட்டுறதுக்குச் சமானம். இந்த ஏரியாக்காரனுகள பொட்டைன்னு நினைச்சியா?"

ஒரு நடுத்தர வயதுக்காரர் அந்த இளைஞனை அடக்கினார்.

"சும்மா கிடடா... அவன் பெண்டாட்டியப் பறிகொடுத்த பேஜாருல நிக்கிறான்... இதுல ஏரியா மானம் எங்க வந்திருக்கு? நம்ம வீட்டுப் பொண்ணுங்களை யாராவது கூட்டிக்கினு போனால் நாம சும்மா இருப்பமா? குடும்ப விஷயத்துல ஊரைக் கட்டித் தோரணம் போடப்படாது. இந்தாப்பா, அவதான் உன்னை உதறித் தள்ளிட்டு வந்துட்டாளே, ஒனக்கு வேற பொண்ணா கிடையாது? அவளப் போயி ஏன் கூப்பிட வந்தே?"

கன்னய்யா, அமைதியாகப் பேசினான். "நான் அவளைக் கூப்பிட வரலை... என் பையனைத் தூக்கிட்டு வந்துட்டாள். அவனை எடுத்துப் போக வந்தேன். ஒங்க டெய்லரு என்னையக் கைய வச்சு அளவெடுக்கப் பாக்காரு. சோறுபோட்ட மனுசன சாப்பிட்ட பெரிய மனுசன்... திருடுபோன என் குழந்தையைத் தூக்கிட்டு போறேன்... அவ்வளவுதான் விஷயம்."

பூவம்மா, ஒரு மூலையில் நின்று கத்தினாள். "என் கொயந்தயக் கொடுக்க முடியாது. முடியாதுன்னா முடியாது."

டெய்லர் சுந்தரத்தின் மனைவி - பழைய சட்டைபோல் நைந்திருந்த அவள் - கத்த முடியாமல் கத்தினாள். "அப்படின்னா நீ ஓடிவந்தியே, அப்பவே கொயந்தயக் கொண்டு வந்திருக்கணும்... ஆசையில கொயந்தய விட்டுட்டே. தாய்க்காரி செய்ற வேலயா?"

கூட்டத்தில், பழைய பஞ்சாயத்துத் தலைவர், பஞ்சாயத்துப் பேசினார். "எதுக்கு வீண் பேச்சு? இந்தப் பையங்கிட்ட கேப்போம். யார்கிட்ட இருக்கணுமுன்னு நினைக்கானோ, அவங்ககிட்ட இருக்கட்டும். இதுக்குப் போய்க் கத்தி எதுக்கு, கல் எதுக்கு? அவனை இறக்கி விடப்பா..."

கன்னய்யா, தோளில் கிடந்தவனை இறக்கப் போனான். அந்தச் சிறுவன், அவனை நண்டு மாதிரி பிடித்துக் கொண்டு, அட்டை மாதிரி ஒட்டிக் கொண்டான். கன்னய்யா, அவனை வலுக்கட்டாயமாய் விலக்கி, தரையில் நிறுத்தியபோது, மீண்டும் அவன் கால்களைக் கட்டிக் கொண்டான். யாரும் கேட்குமுன்னாலேயே, "அப்பாதான் வேணும்... அப்பாதான் வேணும்." என்றான்.

"சரி... அப்பாகிட்டயே இருப்பா" என்றார் பஞ்சாயத்து.

பூவம்மா, இப்போது கூட்டத்திற்கு மத்தியில் வந்து நின்று கொண்டு அழுத்தமாகப் பேசினாள். "அப்பாகிட்ட இருக்கணுமுன்னு பஞ்சாயத்து செய்துட்டால், கொயந்த அவர்கிட்ட இருக்க முடியாது...?"

பூவம்மா கன்னையாவின் எதிரே வந்து நின்று சொன்னாள்: 'எட்டு வருஷத்துக்கு முன்னாடி ஒரு நாள் பின்னி மில்லுக்கு காலையிலேயே வேலையில சேருறதுக்கு சைக்கிள்ல போனியே ஞாபகம் இருக்கா? அன்னிக்கு நல்ல மழை. ஞாபகம் இருக்கா? திண்ணையில் படுத்திருந்த இவர வீட்டுக்குள்ள படுக்கச்

சொன்னியே... ஞாபகம் இருக்கா? நீ காலையில நாலு மணிக்கெல்லாம்.. வண்டி பூட்டினு பூட்டியே, ஞாபகம் இருக்கா? இந்தக் கொயந்த...!"

கூட்டத்தில் பெண்கள், காதுகளைப் பொத்திக்கொண்ட போது, ஆண்கள் பற்களைக் கடித்தார்கள். கன்னய்யாவைப் பரிதாபமாகப் பார்த்தார்கள்.

கன்னய்யாவும் ஞாபகப்படுத்திப் பார்த்தான். அவள் சொல்லும் தடயங்கள், நெஞ்சில் பாரவண்டிச் சக்கரம் பதிவது போல் தடங்களை ஏற்படுத்தின.

கூட்டத்தில், அவன் மீது அனுதாபத்துடன் உபதேசங்கள் விழுந்தன... "அடுத்தவன் பிள்ளை ஒனக்கு வாண்டாப்பா."

"வெட்கங்கெட்ட மூதேவி பேசுறத பாரு... நீ போப்பா... ஏதோ ஒன் போதாத காலம். இவள் நாயை விடக் கேவலமாப் போகப் போறாள் பாரு."

கன்னய்யா, நெஞ்சமே கண்ணாம்புக் கால்வாயாக, நெற்றி நரம்புகள் முன்னும் பின்னுமாகத் பின்னிக்கொள்ள, கூட்டத்தைப் பரிதாபமாகப் பார்த்தான். பிறகு கால்களைக் கட்டியபடியே, அதன் இடுக்கில் முகம்போட்டுக் கிடந்த சிறுவனின் கரத்தை விலக்கி, சபையின் முன்னால் நிறுத்தி விட்டு மெல்ல நகரப் போனான்.

அதற்குள் அந்தச் சிறுவன் அவன் பின்னால் ஓடினான். கழன்ற நிஜாரை கழட்டிப் போட்டுவிட்டு, கன்னய்யாவின் கையைப் பிடித்து கொண்டு, அதைத் தன் முதுகோடு சேர்த்து இணைத்துக் கொண்டு, விறைப்பாக நின்றான்.

கன்னய்யா அந்தச் சிறுவனையே பார்த்தான்.

ஏழு வருடமாகக் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்த பிள்ளை... இரவில் வீடு திரும்பும் போதெல்லாம், அப்பா என்று சொல்லி அரவணைத்த மகன்... பெற்றால்தான் பிள்ளையா? இந்த லோலாயி டெய்லரோடும் அதிக நாள் வாழ மாட்டாள். இவளிடம் குழந்தையும் பலியாகணுமா? முடியாது. இவன் என் பிள்ளையா இல்லாட்டியும் இவனுக்கு அப்பன் நான்தான். குயில் முட்டையைக் காகம் அடை காக்கலியா? பெத்தேனோ இல்லியோ, இவன் என் பிள்ளை... இவனைச் சீரழிய விடப்படாது.

கன்னய்யா அந்தச் சிறுவனை மெளனமாகத் தோளில் போட்:டுக் கொண்டான். அனைவரும் அசைவற்று நின்றபோது, அவன் மட்டும் குழந்தையோடு அசைந்து அசைந்து நடந்தான். சிறிது தூரம் கடந்ததும், மடியிலிருந்த அரிசிப் பொரி கடலையை பையனின் வாயில் போட்டான்.

பையன் சிரித்தான்.

- குமுதம், 15-5-80

# பிண மாலை

'நான், அயோக்கியனாய் ஆகாமல் போனதற்காக வருத்தப்படும் யோக்கியனோ?'.

இப்படி, தன்னைத்தானே கேட்டுக்கொண்டார் பழனிச்சாமி. அந்த சுய விமர்சனத்தில், எதிரில் சின்னத்தனமான காட்சிகளை மாட்சிமைப் படுத்தும் சின்னத்திரையை பார்க்கவுமில்லை, கேட்கவுமில்லை. ஒலியும் ஒளியும் பார்த்துக் கொண்டிருந்த புனிதா, வீட்டின் காம்பவுண்டு கேட் போடுகிற ஒலியை வைத்தும், காலடிச் சத்தத்தை வைத்தும் அப்பா வருவதை அறிந்து கொண்டாள். அவசரத்தில், தொலைக்காட்சிப் பெட்டியை நீல நிறமாக்க மறந்துபோய், அதில் தோன்றிய நீலக் காட்சிகளை, அப்படியே தக்கவைத்துவிட்டு, அவசரத்தில் உள்ளே ஓடி விட்டாள். அப்பா மட்டும் அவளை ஒலியும், ஒளியுமாக பார்த்திருந்தால், எள்ளும் கொள்ளுமாய் ஆகியிருப்பார். காம்பவுண்டு கதவு, இசை மயமாய் ஒலித்தால் அதைத் தந்தை திறப்பதாக அர்த்தம். ராணுவ வீரன் போல் டக், டக் என்று சத்தம் கேட்டால் தந்தையின் நடை என்று கண்டுகொள்ளலாம். அவள் எதிர்பார்த்தபடியே அவர் தந்தை பழனிச்சாமிதான் வந்தார். வந்ததும் வராததுமாக, சமையல் கட்டில் தட்டுமுட்டுச் சாமான்கள் எழுப்பிய ஓசையை அடக்கும் வகையில் உரத்த குரலோடு, 'மாப்பிள்ளை வீட்டில இருந்து சேதி வந்ததா?' என்று வயிற்றை எக்கி ஆவலோடு கேட்டார். உடனே 'தெரிஞ்சதுதானே' என்று பாத்திரக் குரல்களோடு இன்னொரு சத்தம். அது மகளைப் பற்றியோ அல்லது

அவளைப் பார்த்துவிட்டுப் போன மாப்பிள்ளையைப் பற்றியோ எழுந்த விமர்சனமல்ல என்பதைப் புரிந்து கொண்டார். அவரது இன்றைய நிலையைப் பற்றிய விமர்சனம். மனைவியின் அந்த ஒற்றை வார்த்தை விமர்சனம், அவரை, பிரம்பு நாற்காலியில் சாய்வாக உட்கார வைத்தது. ஓராயிரம் நடப்புக்களை சுட்டிக் காட்டியதோடு, அவரையும் சுட்டது.

பழனிச்சாமிக்கு, அரசுப் பணியின் பழைய பொறுப்பையும், இப்போது சுமத்தப்பட்டிருக்கும் புதிய பொறுப்பையும் அந்த விமர்சனம் நினைவுபடுத்தியது. இரண்டு மாதங்களுக்கு முன்பு, அவர் தமிழக அரசில் முக்கியத் துறை ஒன்றிற்கு செயலாளராக இருந்தபோது, புனிதாவைப் பெண் பார்க்க வந்தார்கள். சப்-கலெக்டர் மாப்பிள்ளை. இவரைப் போலவே எடுத்த எடுப்பிலேயே ஐ.ஏ.எஸ் அதிகாரி ஆனவன். ஆரம்பத்தில் இவரிடம் அண்டர் செகரட்டரியாகவும் வேலை பார்த்தவன். பெற்றோர் உற்றோரோடு வந்தான். இன்னும் பதிலளிக்கவில்லை. கல்யாணத்தைப் பொறுத்த அளவில் மௌனம் சம்மதத்தின் அடையாளமல்ல என்பது அவருக்குப் புரிந்தது. மனைவியின் 'தெரிஞ்சதுதானே' தெரியவேண்டிய அளவிற்குமேல் தெரியவைத்தது. இ.ஆ.ப. வான இவர் ஐம்பத்தெட்டைக் கடந்தாலும், அரசு, பதவி நீடிப்பு கொடுப்பதாக ஒரு பேச்சு அடிபட்டது. அந்தப் பின்னணியில் தான் அவர்கள் பெண்பார்க்க வந்திருக்க வேண்டும். ஆனாலும் இவர் மறு வாரமே ஓய்வு பெற்றுவிட்டார். சும்மா சொல்லக் கூடாது. அரசு, இவருக்கு நீட்டிப்பு கொடுக்க முன் வந்தது. கடந்த ஆட்சியிலும், இந்த ஆட்சியிலும் கறை படியாதவர் என்று பெயர் எடுத்தவர்.

என்றாலும், பதவி நீட்டிப்பு சம்பந்தப்பட்டவரின் பாரபட்சத்தை பலவீனப்படுத்தும் என்பதை அறிந்தவர். அதோடு, கீழே இருப்பவர்கள் சாபம் இடுவார்கள் என்பதை விட, ஒரு பதவி நீட்டிப்பில் பத்துக்கு மேலான பதவி உயர்வுகள் அடிபட்டுப் போகும், என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தவர். பின்னால் இருப்பவர்களுக்கு வழிவிட வேண்டும் என்று வழிகாட்டியாய் இருக்க விரும்பியவர். இதனால் நீட்டிப்பை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார். மனைவியிடமும் இதைச் சொல்லிவிட்டார். அப்போது அந்த அம்மா எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. இவர் காதில் அவர்சொல் அம்பலம் ஏறாது என்பது அந்த அம்மாவுக்கே தெரியும். ஆனாலும் இப்போது சமயம் பார்த்து தாளிக்கிறாள். மனைவி சொல்வதும் ஒருவகையில் சரிதானோ... மகளுக்கு, மனைவிப் பதவி கிடைக்காமல் போவதற்கு இவரது பதவி ஓய்வும் ஒரு காரணமோ...

பழனிச்சாமி யோசித்தார். தப்புசெய்துவிட்டேனோ... மகாத்மா காந்தியைப் பற்றிய விமர்சனங்களில், அவர் தனது சத்திய சோதனைக்கு இந்தியாவை ஒரு சோதனைக் கூடமாக்கினார் என்பது ஒரு விமர்சனம். நாடளவில் அவர் என்றால், வீடளவில் இவரோ... நேர்மை, சுயமரியாதை ஆகியவற்றை, சகல விளைவுகளோடும் சோதித்துப் பார்க்க வீட்டையே சோதனைக் கூடமாய் ஆக்கிவிட்டாரோ.... பதவி நீட்டிப்பை ஏற்றுக் கொண்டிருந்தால், புனிதா, இந்நேரம் மாங்காய் கடித்திருப்பாள். நீட்டிப்பு கிடக்கட்டும்.... பதவியில் இருந்த முப்பதாண்டுக் காலத்தில், சக அதிகாரிகளைப் போல், சாதிய மனப்பான்மையுடன் செயல்பட்டிருந்தால், இந்த மாப்பிள்ளையை மட்டும் நம்பியிருக்க வேண்டிய அவசியம்

ஏற்பட்டிருக்காது. காலில் விழாத குறையாக, கையெடுத்துக் கும்பிட்ட ஒரு சில தொழில் அதிபர்களுக்கு, சலுகை காட்டியிருந்தால் ஏதாவது ஒரு பிரபல கம்பெனியில் இப்போது 'கன்ஸல்டண்டாக' இயங்கி இருக்கலாம். இப்போது ஊமையாகிப் போன டெலிபோன் தொடர்ந்து ஒலித்திருக்கும். வாசலை அடைப்பதுபோல் ஒரு கார் 'பழி' கிடக்கும். அரசுக் கடனில் எப்போதோ வாங்கிய பாடாதிக் காரைத் தள்ளுவதற்கு ஆள்தேடும் சிரமம் ஏற்பட்டிருக்காது. எல்லாவற்றிற்கும் மேலாக, புனிதாவிற்கு ஒரு 'எக்ஸிகியூட்டிவ்' மாப்பிள்ளை கிடைத்திருக்கும். முன்பெல்லாம் வீடு கொள்ளா விசிட்டர்கள். இப்போதோ இவர்தான் எங்கேயாவது விசிட்டராகப் போகவேண்டிய நிலை....

பழனிச்சாமி, ஆங்காங்கே முடியுதிர்ந்த தலைப் பொட்டல்களைத் தடவியபடியே நிமிர்ந்தார். படித்ததையும், பார்த்ததையும் மனப் படிவங்களாக்கினார். எளிமையில்லாமல் நேர்மையாய் இருக்க முடியாது. 'தாசில்தார் செத்தால் போகமாட்டார்கள்.... ஆனால் அவர் நாய் செத்தால், துக்கம் விசாரிக்கத் துடித்துப் போவார்கள்' என்ற அலுவலக பழமொழி நெசந்தானோ...

அப்போதுதான், அங்குமிங்குமாய்ப் பார்த்த பழனிச்சாமியின் கண்களில், அந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சி பட்டது. ஒலியும் ஒளியும் போய், இப்போது 'நாடும் நடப்பும்', அமைச்சர்கள் உருவத்தில் அல்லாடின. ஒருவர் மத்திய அமைச்சர்.... இன்னொருவர் மாநில அமைச்சர்... இருவரும் 'இருபால்' அமைச்சர்கள்.... ஆனாலும் 'ஒருபால்' அமைச்சராய்த் தோன்றினார்கள். ஒரேமாதிரியான கீழ்நோக்கிப் பார்க்கும் கவிழ்ப்புப் பார்வைகள். எதிராளி பேசும்போது,

எங்கேயோ பார்க்கும் பராக்குப் பார்வைகள். கடுவாய்ப் பற்களைக் கடித்தபடியே எவரையோ எதையோ விழுங்கப் போவது போன்ற திறந்தவெளி வாய்கள்... உப்பிப் போன கழுத்துக்கள்... குளிர்சாதன வசதிகளால் வெளுத்துப்போன கருப்புகள். இந்த இரண்டு அமைச்சர்களும், 'இனக்கலவரம்' என்று ஒரேகுரலில் போட்டியிட்டு பேசுகிறார்கள். பழனிச்சாமிக்குக் கோபம் வந்தது. வாய்விட்டே பேசினார். 'தென்மாவட்டங்களில் நடந்ததும், நடப்பதும் இனக்கலவரம் இல்லடா... இல்லடி... சாதிக்கலவரம்... ஒரு இனத்தோட உட்சாதிகள் நடத்தும் கலவரம்'.

பழனிச்சாமி, அந்த அமைச்சர்கள் பேசுவதை முன்பெல்லாம் தட்டிவிடுவார். இப்போது நேரப் போக்காக உற்றுக் கேட்டார். அவர்கள் இனக் கலவரம், இனக் கலவரம் என்று வார்த்தைக்கு வார்த்தை வாயாடுகிறார்கள். இடையிடையே மறக்காமல், தத்தம் தலைவர்களின் பாதங்களை நாக்குகளால் மானசீகமாய் நக்குகிறார்கள். எதிரெதிராய் வாதாடுகிற இவர்களில் ஒருவர், கண்களைத் துடைக்கிறார். உடனே அதற்குப் பதிலடியாய் இன்னொருத்தர் தேம்பித் தேம்பி அழுகிறார். நடுவரான வீரபாண்டியன், சிரிப்புத் தாங்கமுடியாமல் முகத்தை மறைத்துக் கொள்கிறார்.

பழனிச்சாமி, இப்போது அந்த அமைச்சர்களை கோபம் கோபமாய்ப் பார்த்தார். அமைச்சர் பதவிக்கு, அவர்கள் புதுமுகங்கள். ஆனால் அவருக்கோ பழைய முகங்கள். கல்லூரி முகங்கள். இவர்களில் மத்திய அமைச்சர், அப்போதே நல்ல கவிஞர். மாநில அமைச்சர், சிறந்த பேச்சாளர். ஆனால் இந்தப் பழனிச்சாமிக்கு முன்னால், அவர்களின் பேச்சோ, கவிதையோ எடுபட்டதில்லை. கல்லூரிப் பேச்சுப் போட்டிகளில் முதலில்

வந்தவர் இவர். அப்போது ஆலமரமாகி இப்போது கிளையற்றுப்போன சென்னைப் பல்கலைக் கழகம், மாநிலம் தழுவி நடத்திய அனைத்துக் கல்லூரிப் பேச்சுப் போட்டிகளில், இவர்தான் மாநிலத்திலேயே முதலாவதாக வந்தார். பத்திரிகைகளிலும், இந்த அமைச்சரின் கவிதைகளை விட, இவரது கவிதைகளுக்கே மௌசு இருந்த காலம். இந்த இருவரின் ஒத்துழைப்பால் இவரே கல்லூரியில் தமிழ் மாணவர் மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் அளவிற்கு தலைமைப் பண்பு கொண்டிருந்தார். ஏதோ ஒரு பட்டிமண்டபத்தில், இவ்ரது சொற்பொழிவைக் கேட்ட உள்ளூர் அரசியல் வாதி பெரியசாமிக்கு, இவரைப் பிடித்துப் போய்விட்டது. கூடவே சொந்த சாதி அபிமானம். இவரை கட்சி மேடைகளில் பேசச் சொன்னார். தனக்கு உள்ள செல்வாக்கை இவரிடம் தெரியப்படுத்தினார். பேச்சாளர்களே தலைவர்களாகும் காலம் என்பதால், இவரும் ஒரு எதிர்கால அமைச்சர் ஆகலாம் என்று ஆசை காட்டினார். அதில் ஒரு ஆத்ம நேயமும் வெளிப்பட்டது. இவருக்கும் சிறிது ஆசைதான். ஆனாலும் யோசித்துப் பார்த்து மறுத்துவிட்டார். அரசியல் மேடைப் பேச்சில், ஆபாசத்தைக் கலக்க வேண்டும். பழி போட்டு பேசவேண்டும். 'தோல் இருக்க சுளை விழுங்கியே!... முழுப்பாய் சுருட்டியே! கடப்பாரையை விழுங்கிவிட்டு கசாயம் கேட்பவனே!' என்று காட்டமாக எதிர்க்கட்சித் தலைவர்களை வர்ணிக்க வேண்டும். எதிர்க்கட்சிப் பெண் பிரமுகர் என்றால், அவரை 'உன் பிடரிப்பூ கசங்கி இருக்கிறதே ஏன்?... உன் உள்ளாடை நனைந்திருக்கிறதே ஏன்?' என்று பேசியாக வேண்டும். தலைவர்களைப் பார்க்கும்போதெல்லாம், நாம் காரிலோ, சைக்கிளிலோ போகும்போது, 'என்னையும் கூட்டிப்போ' என்பதுமாதிரி, நமது வீட்டு நாய் பார்க்குமே அப்படிப் பார்க்க வேண்டும்....

பழனிச்சாமி, அரசியலில் குதிக்க மறுத்துவிட்டதால், பெரியசாமி சளைக்கவில்லை. இதோ தொலைக்காட்சியில் பேசுகிறாரே மாநில அமைச்சர்... அந்த மாணவரை தயார் படுத்திவிட்டார். இந்த அமைச்சரும் வாயை ஆபாச ஊற்றாக்கி நாடறிந்த பேச்சாளாராகி விட்டார். இந்த அமைச்சரை அதிகமாகப் பிடிக்காத, அதே சமயம் இந்த பழனிச்சாமியின்மேல் ஒரு கண் வைத்திருந்த, அப்போதைய நல்லவளான இந்தப் பெண் அமைச்சர், இன்னொரு கட்சியில் இணைந்தார். கவிஞராயிற்றே.... கட்சித் தலைவர்களுக்கு பிள்ளைத்தமிழ் பாடி, புத்தககங்கள் வெளியிட்டார். பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய ஏழு பருவப் பெண்களாக தன்னை அனுமானித்துக் கொண்டு, தலைவருக்கு உலா பாடினார். தானைத் தலைவரைக் கண்டு, கருத்தழிந்து, காமுற்றதாக காவிய உலாக்களைப் படைத்தார். செயலிலும் இவர் ஒரு வீராங்கனையாக மாறினார். பல்வேறு போராட்டங்களில் - இவரது இடுப்புக்குக் கீழே சேலை இருந்ததே கிடையாது. பாவடையோடு சேர்த்து, மார்புக்குத் திரையாகி விடும். இதனால் கிடைத்த பேரும் புகழும் இவரை முக்கியமான அரசியல் பிரமுகராக்கி, இப்போது அமைச்சராக்கி விட்டது. ஆனால் இவரோ...

பழனிச்சாமிக்கு, அந்த அமைச்சர்களை மேற்கொண்டு பார்க்கப் பிடிக்கவில்லை. தொலைக்காட்சிப் பெட்டியின் மந்திரக் கோலில் ஒரு எண்ணை அழுத்தி, 'டிஸ்கவரி' யில் தோன்றிய மிருகங்களைப் பார்த்தார். ராட்சத பாகற்காய் போன்ற காடு... அதன் மேனி முழுவதும் வியாபித்த துளிர்கள்போல் மரங்கள்... புதர்க் குவியல்கள்... அதன் சிவப்பு விதைகள் போன்ற சதுப்பு நிலக் குட்டைகள்... அதே பாகற்காய்

இரண்டாய்ப் பிளந்து சரித்து வைக்கப்பட்டதுபோன்ற பள்ளத்தாக்குகள்... சதுப்புநிலக்காட்டு கோதுமைச் செடிகளுக்குள் தக்கதும் மிக்கதும் இல்லாமல், சிங்கம் இவரைப் பார்க்கிறது. முன்பெல்லாம் இவரை 'நீயும் நானும் ஒன்று- ஒரே ஒரு வித்தியாசம் நீ சைவம்' என்பதுபோல் பார்க்கும் சிங்கம், இப்போது, அவரையே விழுங்கப் போவதுபோல் கோரப் பற்களைக் காட்டுகிறது. சடுகுடு பாடி வருகிறவனின் காலை வாருவதற்காக, பதுங்குகிற எதிரணி வீரன் போல், பவ்வியமாய்ப் பதுங்கும் புலியின் அழகு, இப்போது, அவருக்கு கோரமாகத் தெரிகிறது. ஆசீர்வதிப்பதுபோல் துதிக்கையை அரைவட்டமாய் மேலே தூக்கித் வைத்தபடி, ஒற்றைக் காலைத் தூக்கி நிற்கும் யானை இப்போது அவரை அதே தும்பிக்கையால் தூக்கி, காலில், அழுத்தப் போகிறது.

பழனிச்சாமி பதறிப்போனார். 'என்னாச்சு எனக்கு?' என்று பல தடவை தன்னைத்தானே பார்த்துக் கொண்டார். கேட்டுக் கொண்டார். எங்கேயாவது கால்போன போக்கில் நடந்து, மனம்போன போக்கில் நடக்க வேண்டும்போல் தோன்றியது.

அதற்குள், அழைப்பு மணியைக் கூட அடிக்காமல், நான்கு பேர் உரிமையோடு உள்ளே வந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் பழனிச்சாமி ஆறடி மனிதரானார். மனம் ஆனந்தக் கூச்சலிட்டது. அவர்களை உட்காரச் சொல்லக்கூட அவருக்குத் தோன்றவில்லை. அவர்கள்தான் உட்கார்ந்து, அவரை உட்காரும்படி கையாட்டினார்கள். புனிதாவைப் பார்த்துவிட்டுப் போன ஐ.ஏ.எஸ் மாப்பிள்ளை சுகுமார் வந்திருக்கிறான். கம்பீரமான அமர்க்களப் பார்வை. ஆண்டான் தோற்றம். மை தடவியது போன்ற மெல்லிய மீசை. இன்னொருத்தர் அவனது

சித்தப்பா. அரைகுறையாய் உரிக்கப்பட்ட தேங்காய்போல் ரோமக்கணைகளைக் காட்டிய முகம். இன்னொருத்தர், உடல் முடுக்கு இல்லாமல், வெறும் தோரணை முடுக்கு மட்டுமே கொண்டவர். ஒரு நடுத்தரம், கையில் ஆளுயுற மாலையுடன் உட்காராமல் நின்றார். சுவரில் சாய்ந்து அந்த மாலையையும் தன்மேல் சாத்திக் கொண்டார். அவர் இடுப்பில் பெரிய பெல்ட்.

பழனிச்சாமி, 'பூமாரி' என்று சொல்லி முடிக்கு முன்பே, வீட்டம்மா அவசர அவசரமாய் கைகளையே தலைக்கு சீப்பாக்கினார். ஓடி வந்து, தனக்கென்று மானசீகமாக கிழித்துக் கொண்ட ஒரு கோட்டைத் தாண்டாமல், அவர்களையே வாய்கொள்ளாச் சிரிப்பாய்ப் பார்த்தார். பக்கவாட்டு பால்கனியில் நின்ற புனிதா, சுகுமாரின் கண்படும் வகையில் முகத்தை மட்டும் நீட்டிக் கொண்டாள். நீட்டியதை அப்படியே நாணத்தோடு நிறுத்திக் கொண்டாள். கடவுள் கைவிடவில்லை. தந்தை ஒதுக்கப்பட வில்லை. கனவுக் காட்சிகள் நினைவாகப் போகின்றன.

மாப்பிள்ளை இளைஞனும், அவனது சித்தப்பாவும் ஒருவரையொருவர் பொருள்படவோ, அல்லது போட்டியாகவோ பார்த்தார்கள். பிறகு இருவருமாய் எழுந்து, பெல்ட்காரரின் கையில் இருந்த ஆளுயுர மாலையை வாங்கப் போனார்கள். அந்த பெல்டோ, அந்த ரோஜாப்பூ மாலையிலிருந்து, அதைச் சுற்றிய தையிலையை எடுக்கப் போனார். முடியாது போகவே, அவற்றைப் பிய்த்து சில இதழ்களையும் உதிர்த்தார். இலையைக் கட்டிய நூல் கயிற்றை, துண்டிக்க முடியாமல், தனது நீண்ட நெடிய பற்களால் கடித்துக் குதறினார் - நாய், அணில் வாலை, காலில் அமுத்திக் கொண்டு, தலையைக் கடிக்குமே அப்படி. இதனால் சரிகை நூல்களும், கிழிந்து ஐந்தாறு

ரோஜாக்கள் கீழே விழுந்து, மாலை பொக்கை வாயைக் காட்டியது. ஈரப்பட்ட குழிகளாகவும் தோன்றியது. கையாளான பெல்ட்காரரை, பல்லைக் கடித்துப் பார்த்தபடியே, மாப்பிள்ளையும், அவன் சித்தப்பாவும், அந்த மாலையைத் தூக்கி, பழனிச்சாமியின் கழுத்தில் திணித்தார்கள். இந்தமாதிரி வரவேற்பை முன்பு ஏற்றுக்கொள்ளாத அவர், இப்போது புனிதாவிற்காக பொறுத்துக் கொண்டார். இதற்குள் பூமாரி, பலகாரத் தட்டுக்களை ஏந்தி வந்தாள். மாப்பிள்ளையை மகளின் சார்பிலும், தாய்மையின் பூரிப்பிலும் அள்ளிப் பருகிக் கொண்டே, சமையல் கட்டிற்குள் மீண்டும் ஓடினாள். பழனிச்சாமி அவர்களை நன்றியோடு பார்த்துக் கேட்டார்.

'கல்யாணத்துக்கு நாள் பார்த்துட்டீங்களா? ஒரு டெலிபோன் செய்துட்டு வந்திருக்கலாமே... பரவாயில்ல. ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் விரல்விட்டு எண்ணக்கூடிய சந்தர்ப்பங்களுலதான் மனதார மகிழ்ச்சி ஏற்படும். எனக்கு இப்போ ஏற்பட்டிருப்பது, அந்த வகையான மகிழ்ச்சி. ஆனந்தக் கூத்து. கல்யாணத்த உங்க ஊர்ல வைத்தாலும், இங்கே வரவேற்பு வைக்கணும்.'

சித்தப்பாக்காரர், அண்ணன் மகனை ஒரு தினுசாகவும், பழனிச்சாமியை இன்னொரு தினுசாகவும் பார்த்துவிட்டு, விவரம் சொன்னார்.

'கல்யாணத்த தள்ளிப் போட்டுருக்கு. கவலைப் படாதீங்க. நிச்சயம் இவன்தான் மாப்பிள்ளை. ஒங்க மகள்தான் பொண்ணு. இப்பவே கல்யாணம் நடத்த முடியாம ஒரு இழவு விழுந்திட்டு எங்க ராமனாதபுரத்துல நடந்த சாதிக் கலவரத்துல, என் அண்ணன -- இவனோட பெரியப்பாவ, அந்த சாதிப் பயலுக கொன்னுட்டானுக. பெண்பார்க்க

வந்தப்போ நீங்கக்கூட கிண்டல் அடிச்சீங்களே! 'ஒங்களுக்கு மீசை பெரிசா... முகம் பெரிசான்'னு கேட்டீங்களே... அவரு, வயலுல தன்னந்தனியா போகும்போது, அந்த சாதிப் பயலுக ஒரே போடா போட்டு கொன்னுட்டானுக. எங்கண்ணன் கையெடுத்துக் கும்பிட்டிருக்கார். அப்படியும் அந்தப் பயலுக விடல -- அது அவங்களோட சாதிப் புத்தி.'

பழனிச்சாமி, இருக்கையிலிருந்து எழுந்தார். தேநீர் கோப்பைத் தட்டோடு வந்த பூமாரி, நடையை நிறுத்தி, நின்ற இடத்திலேயே நின்றாள். பால்கனியில் மாப்பிள்ளைக்கு மட்டும் முகம் காட்டிய புனிதா, அவர்களின் அருகே வந்து அம்மாவின் முதுகிற்கு பின்னால் நின்று, அவள் தோள் வழியாய் முகம் நீட்டினாள். மாப்பிள்ளையின் கண்கள், அவள் கண்களை ஆற்றுப்படுத்தின. பழனிச்சாமி இருக்கையில் உட்காராமலே, வேதனையோடு பேசினார்.

'ஒரு நாய், இன்னொரு நாயைத் துரத்தும்போது, துரத்தப்பட்ட நாய், வாலை, காலுக்குள்ள விட்டாலோ, இல்லன்னா மல்லாக்கப் படுத்து நாலு காலையும் மேலத் தூக்குனாலோ, கடிக்கவந்த நாய், கடிக்காது. ஆனால் இந்த மனுசன் மட்டுந்தான், எதிரி கையெடுத்துக் கும்பிட்டாலும், கும்பிட்ட கைகையே வெட்டுவான். அந்தக் கொலகாரப்பயலுகள விடப்படாது'.

'கவலைப்படாதீக சம்பந்தி... அவனுகளுல இரண்டு பேரைக் காலிபண்ணிட்டோம். இன்னொருத்தனோட பிள்ளைத்தாச்சிப் பெண்டாட்டிய துடிக்கத் துடிக்க வெட்டிப் போட்டோம். மற்றொருத்தனோட வயசான அம்மாவ ஓட ஓட வெட்டி தலையை மட்டும் எடுத்துக்கிட்டோம். இன்னும் ரெண்டுபேர்தான் பாக்கி. சீக்கிரமா முடிச்சிடுவோம்'.

பழனிச்சாமியின் புருவங்கள் மேலோங்கி, மோவாய் குனிந்தபோது, இ.ஆ.ப. மாப்பிள்ளை, மாமாவுக்கு ஆறுதல் சொன்னான்.- அதுவும் புனிதாவைப் பார்த்தபடியே, புதிய புறநானூற்று வீரனாய் சூளுரைத்தான்.

'கவலைப்படாதீங்க மாமா. நானும் என் பங்குக்கு, நம்ம சாதிக்கு எவ்வளவோ செய்திருக்கேன். எங்கெல்லாம் நம்ம சாதி சிறுபான்மையா இருக்குதோ, அங்கெல்லாம் நம்ம சாதி போலீசு இன்ஸ்பெக்டர்களை போட வச்சேன். நம்ம சாதிப் பெரும்பான்மையா இருக்கிற இடங்களுல, அந்த சாதியில உதவாக்கரையா இருக்கிற தாசில்தார்களை நியமிக்க வச்சேன். அந்த சாதிக்காரப் பயல்கள கொலை செய்த நம்ம சாதி ஆட்கள் மேல நீயூசென்ஸ் கேஸ் போட வச்சேன். அந்த சாதியில சும்மா கத்துனவங்கள கொலை கேசுல புக் பண்ண வச்சேன். அதோட நம்ம சாதி ஐ.ஏ.எஸ் காரங்ககிட்டயும், ஐ.பி.எஸ். காரங்ககிட்டயும் தொடர்பு வச்சு, இனிமேல் அந்த சாதிப் பயலுக ஏழேழு ஜெனரேசனுக்கும் தலையெடுக்க முடியாதபடி கடமை ஆற்றணுமுன்னு சொல்லியிருக்கேன்'.

'ஒங்க மாப்பிள்ளைய சும்மா சொல்லப்படாது சம்பந்தி. நம்ம சாதியில ஆயிரம்பேர் செய்ய முடியாத காரியத்த, இவன் ஒருத்தனே செய்து முடிச்சிருக்கான். இவனுக்காக நாமெல்லாம் பெருமைப்படணும்'.

'போங்க சித்தப்பா. என்னோட சமூகக் கடமையைத்தான் நான் செய்தேன். செய்வேன்'.

மாப்பிள்ளை ஐ.ஏ.எஸ், புனிதாவைப் பார்த்து, பெருமிதமாகத் தலையாட்டியபோது, பழனிச்சாமி, 'சமூகக்கடமை, சமூகக்கடமை' என்று மாப்பிள்ளை ஆகப்

போகிறவன் முழங்கிய வார்த்தைகளை, மனதுக்குள் முணுமுணுத்தார். பிறகு அவர்கள் வருகையின் காரணத்தை அறிவதுபோல், பார்வையால் தெரியப்படுத்தினார். உடனே வினாடி வினாவில் அதாரிட்டியான மாப்பிள்ளை விளக்கினான்.

'இப்படிப்பட்ட கொலைகார சமயத்துல எதுக்காக மாலையும் கையுமா வந்தோமுன்னு நினைக்கீங்க. அப்படித் தானே மாமா -- சித்தப்பா நீங்களேச் சொல்லுங்க'.

'சொல்றேன். நம்ம சாதி பிரமுகர்கள் எல்லாரும், முந்தாநாள் சந்திச்சோம். இந்த சந்திப்புல சிதறிக்கிடக்கிற நம்ம சாதி அமைப்புகளோட தலைவர்களும் கலந்துகிட்டாங்க. இனிமேல் அந்தப் பயலுகள விட்டு வைக்கக் கூடாதுன்னு தீர்மானிச்சோம். இதுக்காக, ஒரு ஒருங்கிணைப்புப் பேரவையை உருவாக்கி இருக்கோம். அதுக்கு நீங்கதான் தலைவரா இருக்கணுமுன்னு, உங்க மாப்பிள்ளையான இந்த சப்-கலெக்டரு முன்மொழிஞ்சதும், ஒரே கைதட்டல். இனிமேல் நீங்கதான் எங்க தலைவர். உங்களுக்கு ஒரு கண்டசலா காரையும், ஜீப்பையும் கொடுத்திடுறோம். பாதுகாப்புக்கு நாலைஞ்சு பேர கொடுக்கோம். இவங்க ஜீப்ல நீங்க போகிற இடத்துக்கெல்லாம் வருவாங்க. எல்லாச் செலவும் பேரவை பொறுப்பு. பணம் ஒரு பிரச்சனை இல்ல. நீங்க தமிழ்நாடு முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து நம்ம மக்களோட பேசணும். அவங்க ஏற்பாடு செய்கிற கூட்டங்களில் முழங்கணும். உங்க பேச்சை வெளியிடாத பத்திரிகையோ, தொலைக்காட்சியோ இருக்காது. இருக்கக்கூடாது. அந்த சாதிப் பயலுகள ரெண்டுல ஒண்ணு பார்த்திடணும். உங்களுக்கு பதவி நீட்டிப்பு கொடுக்காத முதலமைச்சரே, உங்கள கூப்பிட்டு பேசற நிலைமையை ஏற்படுத்தணும்'.

பழனிச்சாமி, அருகே நின்ற புனிதாவை பொருட்படுத்தி, அவர்கள் பேசியதை அதிகமாய் பொருட்படுத்தாமல், போகிற போக்கில் பேசுவது போல் பேசினார்.

'அரசியல்வாதி... அரசாங்க அதிகாரி... குறிப்பா ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிங்க -- கவிஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், திரைப்படக் கலைஞர்கள் -- இவங்களுக்கு சாதியே கூடாது. அப்படியே சாதி தேவைன்னா, அது ஒரே ஒரு சாதியாத்தான் இருக்கணும். அதுக்குப்பேர்தான் தமிழ்ச்சாதி. குறிப்பா அதிகாரிங்க... மக்களோட வரிப்பணத்துல சம்பளம் வாங்குறவங்க. இவங்க, எல்லா மக்களையும் ஒரே தட்டுல வச்சுதான் பார்க்கணும்'.

எதிர்கால மாப்பிள்ளை, எதிரி மாப்பிள்ளையாய் ஆனதுபோல் புனிதாவையும், பழனிச்சாமியையும் மாறி மாறியும், கோபம் கோபமாகவும் பார்த்தான். ஆனாலும் அவனைக் கையமர்த்திவிட்டு, சித்தப்பா பூசி மழுப்பினார்.

'பதவியில் இருக்கும்போதுதான், உங்களால நம்ம சாதிக்கு, பைசா பிரயோசனம் கிடையாது. இப்போகூட இவன் முகத்துக்காகத்தான் உங்கள தலைவரா நியமிச்சது. அதோட நீங்க ரிட்டையர்டு ஆகிட்டீங்க. அந்த சாதியில ரிட்டையர்டு ஆனவங்க சொந்த சாதிக்கு கொம்பு சீவி விடும்போது, நீங்க இப்படி பிடிவாதம் பிடிக்கிறதுல நியாயம் இல்ல'.

'நீங்க சொல்ற அதிகாரிங்க, மனச்சாட்சி இல்லாதவங்க. மக்கள் விரோதிங்க. இப்போகூட, எனக்குக் கிடைக்கிற ஓய்வுத் தொகை மக்களோட வரிப்பணத்துல இருந்துதான் வருது. இதனால எல்லா மக்களுமே எனக்கு வேண்டியவங்க'.

'நிறுத்துங்க மாமா! உங்களால முடியுமா... முடியாதா'...

'முடியாது என்கிறத இதுக்குமேல எப்படி மாப்பிள்ளை சொல்றது?'

'எப்படியும் சொல்லுங்க. ஆனா மாப்பிள்ளன்னு மட்டும் சொல்லாதீங்க'.

பழனிச்சாமி, லேசாய் ஆடித்தான் போனார். சிறிது தொலைவில் நின்ற மனைவியையும், அவளை முண்டியடித்து முன்னால் வந்து நின்ற மகளையும் பார்த்தார். தாய்க்காரி கையெடுத்துக் கும்பிடுகிறாள். மகள்காரியோ தாயின் கும்பிட்டக் கைகளை, தனது கைக்குள் இழுத்துப் பிடித்து மறைக்கிறாள். வலது கரத்தை கீழே கொண்டுபோய் துடுப்பு விடுவதுபோல் அதை மேல்நோக்கி கொண்டுபோகிறாள். 'அவங்க கிடக்காங்க... விட்டுத்தள்ளுங்க...'

பழனிச்சாமி, மகளை தாயாகப் பார்க்கிறார். ஆசிரியையாய் அனுமானிக்கிறார். அவருள் பழைய கல்லூரி மாணவன் கிளர்ந்தெழுகிறான். போராளித் துறவி துளுரைக்கிறான். எதை இழந்தாலும் மனிதத் தன்மையை இழக்க விரும்பாத மாவீரனாய் ஆவேசிக்கிறான். வெற்றி பெறுவது மட்டுமல்ல சாதனை... வெற்றி பெறாமல் இருப்பதும் ஒரு சாதனைதான் என்று பெருமிதப் படுகிறான். அந்தப் பெருமிதம் மகளைப் பார்க்கப் பார்க்கக் கூடுகிறது.

பழனிச்சாமி, அவர்களைப் போகலாம் என்பதுபோல் பார்க்கிறார். உடனே அதுவரை பேசாத மூன்றாவது மனிதர், 'இது தேறாத கேஸுன்னு அப்பவேச் சொன்னேன். கேட்டீங்களா? வாங்கப்பா. நம்ம சாதியில ஐ.ஏ.எஸ் அதிகாரிங்க குறைவா... என்ன -- கிறுக்கன்கிட்டல்லாம் வரப்படாதுப்பா'. என்று சொன்னபடியே, அவர்களின் முதுகுகளைத் தள்ளுகிறார்.

ஆவேசமாகப் பேசத்துடித்த புனிதாவை, பழனிச்சாமி கையமர்த்துகிறார். அதற்குள், வேண்டிவந்த விருந்தாளிகள், வேண்டாதவர்களாய் வெளியேறப் போகிறார்கள். பழனிச்சாமி கோபப்படாமலும், புன்னகைக்காமலும், அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறார்.

'இந்தப் பிணமாலையை எடுத்துக்கிட்டுப் போங்க. இதுல இருக்கிற ஒவ்வொரு இதழும், துண்டிக்கப்பட்ட ஒரு மனிதத் தலையாய் எனக்குத் தோணுது. இதனோட நிறம் மனித ரத்தக் கசிவாத் தெரியுது. தயவு செய்து எடுத்துட்டுப் போங்க'

ஆனாலும் அவர்கள், புதுமாலை வாங்கிக் கொள்ளலாம் என்று நினைத்ததுபோல் திரும்பிப் பார்க்காமலே நடக்கிறார்கள்.

**ஆனந்த விகடன் - தோல்வியில் வெற்றி என்ற தலைப்பில், 13-12-98 இதழில் பாரதியாரின் புதிய ஆத்திச்சூடிக் கதையாய் பிரசுரமானது. (தன்மை இழவேல்)**

# பாசக் கணக்கு

ராமையா, தண்ணீர் புரையேற, "மூக்கும் முழியுமாக" திண்டாடினார். அதற்குக் காரணமான அவரது மனைவியோ, அவர் காதுகளில், நீர்த்துளிகள், அந்தக்காலத்து கடுக்கன்கள் மாதிரி மின்னுவதை ரசித்துப் பார்த்தபோது அவருக்கு கோபமும் புரையேறியது. ஆத்திரமாக ஏதோ பேசப்போனார். இதனால் அவர் வாய் குளமாகி, பற்கள் மதகுகளாகி, உதடுகள் நீர் கசியும் கால்வாயானதுதான் மிச்சம். அவர் தண்ணீர் குடிக்கும்போதோ 'இவள் வெற்றிலையை குதப்பும்போதோ எந்தப் பேச்சும் வைத்துக்கொண்டால், கணவர், 'பெர்ராச்சட்டம் மீறப்பட்டது போல் குதிப்பார் என்பது தெரிந்தும் அந்தம்மா அந்தச் செய்தியைச் சொல்லிவிட்டாள். அவர் வந்ததும், வராததுமாக ஒரு செம்புத் தண்ணீரை, அவர் கையில் இவள் திணிக்க, அதை அவர் வாயில் பொருத்தியபோது, மருது டெலி போன் செய்த செய்தியை சொல்லியிருக்கக் கூடாதுதான். ஆனாலும் ஆர்வக்கோளாறில் சொல்லிவிட்டதால், அவரது அய்ம்புலன்களும் கோளாறாகிவிட்டன. அதற்குப் பிராயச்சித்தமாக மிருதங்கத்தைச் சரிபார்ப்பதுபோல், அவரது தலையைத் தட்டியும், குட்டியும், தடவியும் ச்மாதானம் சொன்னாள்:

"ஒங்க பையன் உங்கள நினைக்கான்... அதனாலதான் புரையேறிட்டு..."

ராமையா வாய்க்குள் தேங்கிய தண்ணீரை, ஜன்னல் கம்பிகளின் இடைவெளியில் ஊடுருவ விட்டபோது, அவர் தன்னிடம் பேசப்போவதாகத்தான் அந்தம்மா நினைத்தாள்.

ஆனால் அவரோ பேண்ட்க்குள் கிடந்த உடம்பை லுங்கிக்குள் மாற்றிக் கொண்டு கட்டில் சட்டத்தில் தலைபோட்டு சுவரில் தலை சாய்த்தபோது, அந்தம்மாவுக்கும் கோபம் கரையேறியது. முன் தலையில் நரையேறிய முடியை இழுத்துப் பிடித்துக் கொண்டே கேட்டாள்:

"வாராவாரம் டெலிபோன்ல பேசுற மருது, ஒரு மாசமா பேசலியேன்னு நான் துடித்தது மாதிரி, நீங்களும் தவித்து இருப்பீங்கன்னு நினைச்சது எவ்வளவு பெரிய தப்பாப்போச்சு... அம்மிக்கல் மாதிரி அப்படியே கிடக்கீங்க... ஆனாலும் இவ்வளவு ஆங்காரம் ஆகாதுப்பா."

ராமையா, அவள் பக்கமாய் முகத்தை நிமிர்த்திக்கொண்டே கேட்டார்:

"நான் இருக்காத நேரத்தைப் பார்த்து ஒங்கிட்ட மட்டும் பேசுறான்... இதுல ஒனக்கும் சந்தோஷம்..."

"ஒங்களுக்கு கொஞ்சமாவது ஒரு இது இருக்குதா?... இந்த மெட்ராசுல மத்தியானம் என்கிறது, அமெரிக்காவுல ராத்திரி... ஒங்ககிட்ட அவன் பேசணுமுன்னா, அவன் நடுராத்திரியில எழுந்திரிக்கணும்...."

'சரி அவன் தூக்கம் கெட வேண்டாம்...'

ராமையா, மனைவியை நோக்கிய முகத்தை மறுபுறமாய்த் திருப்பிக் கொண்டார். ஆனாலும் அந்தம்மா, மகனுடன் பேசிய விபரங்களை, சுருக்கிச் சொன்னாள்:

'யுனிவர்சிட்டி பசங்களோட பைக்காரா நீர்வீழ்ச்சியை, பார்க்கப் போனானாம். அப்புறம் கனடா போனானாம். அதனால தான் நம்ம கூட பேச முடியலியாம். ஒரு கார் வாங்கிட்டானாம்.

இரண்டாயிரம் டாலராம்… கேக்கறதுக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா!…'

அசைவற்றுக் கிடந்த ராமையா, கட்டிலில் இருந்து துள்ளிக் குதித்தார்… சிறிது திகைப்படைந்தவர்போல் கண்களை துரத்தியவர், பின்னர் தலை நோகாமல் அடித்துக் கொண்டார். அந்தம்மாவை பகையாளிப் பார்வையாய் பார்த்தபடியே கத்தினார்:

'வீட்டு நிலைமை தெரியாத ஒரு தறுதலைப் பிள்ளையை பெத்துட்டு, அப்படிப் பெற்றதை சாதனையா வேற சொல்றியா… இரண்டாயிரம் டாலர்ன்னா எழுபதாயிரம் ரூபா… இவனுக்கு விசா கட்டணத்துக்கும், இன்சூரன்ஸ் தொகைக்குமுன்னு எங்க ஆபீஸ் பியூன் தேவராஜன்கிட்ட கடனா வாங்கினேன் பாரு… இருபதாயிரம் ரூபா… இவரு அமெரிக்க படிப்புக்கு, பேங்கில கடன் வாங்க, பழைய வீட்டு லோன்… அடைக்கிறதுக்காக மளிகைக்கடை அண்ணாச்சிகிட்ட வாங்கினேன் பாரு முப்பதாயிரம் ரூபா… அப்புறம் இவருக்கு தட்டு முட்டுச் சாமான்கள வாங்கிறதுக்காக, என்னோட படிச்ச ராமசப்புகிட்ட வாங்கினேன் பாரு ஏழாயிரம் ரூபா… இந்தக் கடன்கள எவன் அடைக்கிறது… எப்போ அடைக்கிறது… என் வாய் மொழியையே சட்டமா நினைச்சு, என் நாணயத்தை மட்டுமே நம்பிக் கொடுத்த கடன்கள், அவங்களுக்கு மஞ்சக் கடுதாசி கொடுக்கச் சொல்றியா…'

'ஒங்க நிலைமை புரியுது… ஆனா அவன் நிலைமையும் நினைச்சுப் பாருங்க… அந்த ஊர்ல கார் இல்லாம, எங்கேயும் போக முடியாதாம்… பஸ்கள் ரொம்பக் குறைச்சலாம்…'

'அதே அமெரிக்காவில நம்ம பையன்களும் பொண்ணுகளும் 'பேப்பர்' போட்டும்… 'பேபி சிட்டிங்' செய்தும் பிழைப்பு நடத்தி

படிக்கத்தான் செய்றாங்க... இவ்வளவுக்கும் அவங்க, ஒன் மகன் மாதிரி, 'ஐ.ஐ.டி.'க்கு ஓட்ட சைக்கிள்ல போன பசங்க இல்ல... இந்த ஊர்ல மோட்டார் பைக்கில போயிட்டு, அந்த ஊர்ல பேப்பர் விற்காங்க... நம்ம லலிதா மகன் சேகர் இருக்கான் பாரு...'

'ஊரு பிள்ளைங்கள தலையில தூக்கிக் கொண்டாடுங்க... ஒங்க பிள்ளைய கால்ல போட்டு மிதிங்க... நல்ல தகப்பன்...'

'பிள்ளை பெருசானால், புருஷனை, பெண்டாட்டி மதிக்க மாட்டாள்னு சங்கரகப்பு சொன்னது சரியாத்தான் இருக்கு... அவனுக்காக நான்பட்ட கடன அடைக்க வழி சொல்லிட்டு, அப்புறம் ஒம் மகன் கார் வாங்கின பெருமையை, நீ தெருதூரா தம்பட்டம் அடிக்கலாம்... அமெரிக்கா... பொல்லாத அமெரிக்கா... நம்ம வரிப்பணத்துல படிக்கிற பசங்க அத்தனை பேரும் இப்படி சுயநலமா வெளிநாடு போனால், நாடு உருப்படுமா, இல்ல வீடு உருப்படுமா.'

'ஏன் இப்படி கத்துறீங்க... அக்கம்பக்கத்துல எட்டிப் பாக்காங்க... ஏன் இப்படி பேய்...'

'கோதை... கொஞ்சம் வெளியில போறியா...'

கோதையம்மா, உடனடியாய் வெளியேறினாள். அவர் கோபத்தின் உச்சிக்குப் போகும்போது, அவர் அங்கிருந்து உதிர்க்கும் உயர்ந்தபட்ச வார்த்தைகள் இவை என்பதை உணர்ந்தவள் போனாள்... அப்படி போகாவிட்டால், இவர் போய்விடுவார்... அப்புறம் எப்போ வருவாரோ... எப்படி வருவாரோ...'

என்றாலும், கோதையம்மா, அந்த அறையில் இருந்து, சாதாரணமாய் வெளியேறாமல் வெளிநடப்பு செய்கிறவள்போல் போனாள்...

முன்பெல்லாம் இப்படி வெளியேறும்போது, 'நான் ஏதும் தப்பு செய்திட்டேனோ' என்று குழம்புகிறவள், இப்போது உச்சி முதல் மூக்கு வரை குழப்பத்திற்குப் பதிலாக, கோபத்தை ரெப்பிக் கொண்டு சமையலறைக்குள் வந்துவிட்டாள். சிறிது நேரம் சுவாமி விவேகானந்தர் மாதிரி கைகளைக் கட்டிக் கொண்டு ஒரே சமயத்தில் தூரத்துப் பார்வையாகவும், கிட்டப் பார்வையாகவும், கண்களை மாற்றிக் கொண்டு அசைவற்று நின்றாள்... சிறிது நேரம்தான்... பிறகு முறுக்கி வைத்த உடம்பை, நெகிழ்வாக்கியபடியே, தனக்கே கேட்காத குரலில் முணுமுணுத்தாள்....

'சொந்த மகன், சுய சம்பாத்தியத்துல கார் வாங்கினது பொறுக்காத இவருல்லாம் ஒரு அப்பாவா... படித்த குடும்பத்துல பிறந்திருந்தா காரோட அருமை தெரியும்.... கழுதைக்கு தெரியுமா... சீ... அப்படியெல்லாம் ஒப்பிடக் கூடாது. ஆனாலும் தற்குறி குடும்பத்துல பிறந்த மனுஷன் கார் வாங்குறது கண்டு அரண்டு போவது சகஜம்தான்... இருபத்தைந்து வருடத்துக்கு முன்னால மாமனார் வாங்கிக் கொடுத்த சைக்கிளையே மாற்ற முடியாத மனுசனுக்கு, கார் என்கிறது பெரிய விசயம்தான். வாடகைக் கார்லகூட ஏறாத வம்சத்துக்கு கட்டவண்டி புத்திதான் இருக்கும்... தவமிருந்து பெத்த எம்பிள்ளைக்கு இவரே கண்ணு போட்டுடுவார் போலுக்கே...'

கோதையம்மா, பழைய சாம்பாரை சூடேற்றாமல், பழைய நினைவைச் சூடேற்றிக் கொண்டாள்.

வீட்டிலிருந்து, கால்களுக்கு இருமல் எடுத்தது போல் லொக்கு, லொக்கு என்று நடந்து, அந்தக் காலத்து டபிள் விசில் பஸ்களில் தொங்கியபடியே இவர் செகரட்டேரியேட்டில் ஒரு லோலுபட்ட வேலைக்கு போனது, அந்தம்மா மனதில் கருப்பு,

சிகப்பு படமாக விழுந்தது... அதில் அவர் லெவலுக்கு பெரிய இடத்துப் பெண்ணான தன்னை அளவுக்கு மீறிய பண்பாடு உள்ளவளாகவும், இவரை அதே விகிதாச்சாரத்தில் காட்டானாகவும் எடிட் செய்து கொண்டாள். அப்புறம் பத்து வருடமாக பிள்ளையில்லாத இடைவேளை; இதற்குள் இந்த மன்மதருக்கு அடுத்த கல்யாணம் பேசிய மாமனார்... மாமியார்... அவர்களிடமிருந்து தன்னை தற்காக்க வீட்டில் ஒரு சின்ன அறையை பூஜையறையாக ஆக்கியது... அப்படியும் பிள்ளை பிறக்காததால் மருந்தீஸ்வரர் கோவிலில் மண்சோறு சாப்பிட்டது... அம்மா சன்னதி முன்னால் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாய்க் குவியலாய் இருக்கும் மண்ணில் சில துகள்களை புறங்கைகட்டி குனிய முடியாமல் குனிந்து உண்டது... இவர் அந்தக் கோவில் பக்கமே தலைகாட்டாதது... அப்புறம் மகள் பிறந்தது... இதனால் மாமனாரும், மாமியாரும் ஒட்டிக்கு ரெட்டியாய் திட்டியது... மீண்டும் மனமுடைந்து அதே கோவிலில் அங்கப்பிரதட்சணம் செய்தது... அடுத்த ஆண்டே ஆண் குழந்தை பிறந்தது... அவனுக்கு மருந்தீஸ்வரர் நினைவாய் பேர் வச்சது... கர்நாடகப் பேராய் வைக்கிறியேன்னு இவரு கிளப் டான்ஸ் ஆடுனது.. 'என் பேரை ஏன் வைக்கலே'ன்னு மாமனார் உதிரமாடன் குதியாய்க் குதித்தது... பிள்ளைகள் பெரியவர்கள் ஆகிக்கொண்டு வந்தது... இவரு ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு பிரமோசன் வீதம் இரண்டு பிரமோசன் வாங்கினது... மாமானார், மாமியார் மண்டையைப் போட்டது...

கோதையம்மாவின் மனதிற்குள், கருப்பு வெள்ளையாகவும், பிறகு கோவாக் கலரிலும் ஓடிய நினைவுப்படம் திடீரென்று வண்ணப்படமானது.

மகள் அம்பிகாவை நல்லபடியாய் கரை சேர்த்த, வீடியோ சாட்சியான திருமணக் காட்சிகள்... அடுத்த மறுவாரம் மருது தன்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டே ஜி.ஆர்.ஏ... என்கிற தலையைச் சுற்றுகிற பரீட்சையில் ஆசியாவிலே ஏழாவது இடத்தில் தான் வந்திருப்பதை தெரிவித்தபோது ஏற்பட்ட, 'ஈன்ற பொழுதினிலும், பெரிதுவந்த ஆனந்தக்காட்சி...' பிறகு, 'கேம்பஸ் இண்டர்வியூவில கிடைத்த பத்தாயிரம் ரூபாய் வேலையில சேரு... அமெரிக்காவில போய் எம்.எஸ். படிக்க வேண்டியதில்லே' என்று இவரு குதியாய்க் குதித்த வில்லத்தனமான காட்சிகள்... இதையடுத்து மருது நடத்திய உண்ணாவிரதப் போராட்டம்... எப்படியோ இந்தக் குறுக்குத்தெரு மருது, அமெரிக்க மருதாக புறப்பட்ட பிரிவுக் காட்சி... அவன் போய்ச் சேர்ந்த உடனேயே அவனுக்காக டீச்சிங் அஸைன்மென்ட் காத்திருந்ததாய் மருது டெலிபோனில் சொல்லும்போது ஏற்பட்ட புளகாங்கிதம்... இப்போது அவன் கார் வாங்கியதைக் கேள்விப்பட்ட பரமானந்தம்... இதோ மருது கழுத்தில் டை கட்டி, வெள்ளைக்காரன் மாதிரி உடம்பை லேசாய் சாய்த்து, கார் கதவைத் திறந்து இருக்கையில் உட்கார்ந்தபடியே ஏதோ ஒரு தூக்கலான இடத்தில் நிற்கும் நண்பர்களைப் பார்த்து கையாட்டுகிறான்...

கோதையம்மா, அந்த நண்பர் குழுவில் இருந்த ரெண்டு பெண்களை எடிட் செய்தபடியே, மகன் காரை ஓட்டும் கண்கொள்ளாக் காட்சியை ரசித்தாள்... 'பாத்து ஓட்டுடா என் ராசா' என்று தன்னை அறியாமலேயே முணுமுணுத்தாள்.

கோதையம்மாவின் மனப்படம், ஒரு இருமல் சத்தத்தால் அறுந்தது... பக்கத்தறையில் அந்த மனுசன், 'ஒரு தடவை இருமிவிட்டுப் போகாமல், தொடர் இருமலை மேற்கொண்டார்...

அவளுக்கும் புரிந்துவிட்டது... அவளோடு 'டூ' போடும் போதெல்லாம். 'வயிறு பசிக்குது, சோறு கொண்டு வா' என்று சொல்லாமல் சொல்லும், கள்ளத்தனமான இருமல்...

அவருக்குக் காபி கொடுக்காததும், அந்தம்மாவுக்கு உறைத்தது... இப்போது போய்க் கொடுத்தால், எகிறுவார்... ஆகையால் கேஸ் அடுப்பை ஒளிமயமாக்கினாள்... மிக்ஸியை தட்டி விட்டாள்... பருப்பைக் கடைந்தாள்... முட்டையை உடைத்தாள்... பாத்திரங்களைக் கழுவினாள்... அரை மணி நேரத்திற்குள் எல்லாவற்றையும் முடித்துவிட்டு, சாப்பாட்டு மேசைக்கு தட்டையும், இதர வகையறாக்களையும் கொண்டுவந்துவிட்டு, அவர் இருந்த அறைக்குள் போனாள். ராமையா குப்புறக் கிடந்தார்... இரண்டு கைகளையும் விரித்துப் போட்டு வேணுமானால் ஆணியடித்துக் கொள் என்கிற மாதிரி ஆடாமல் அசையாமல் கிடந்தார்... கோதையம்மா உரக்கக் கூவினாள்...

'பெத்த மனம் பித்து... பிள்ளை மனம் கல்லுன்னு' சொல்வாக... ஆனா இந்த வீட்டுல பாதி உல்ட்டா... சரி சாப்பிட வாங்க... சூடு ஆறிடும்...'

ராமையா, கட்டிலிலிருந்து மீண்டும் துள்ளிக் குதித்தார்... அவள் கண்களை விரலை ஆட்டாத குறையாக, கிட்டே போனார்... பின்னர் அந்த அறையில் குறுக்கும் நெடுக்குமாய் சுற்றிச் சுற்றி வந்தார்... அவ்வப்போது நின்று நின்று, அந்தம்மா நெருங்கி நெருங்கி அடங்காச் சினத்தோடும், ஆற்ற முடியாத சுய பரிதாபத்தோடும், அவற்றிற்கேற்ப, ஏற்ற இறக்கமான குரலோடும், பொரிந்து தள்ளினார்...

"கடனைக் கேட்க கூச்சப்பட்டு... அதேசமயம் என்னைப் பாத்து கையை நெறிக்கானே... எங்க ஆபீஸ் பியூன் தேவராஜன்...

அவன் என் கழுத்த நெறிக்கணும் என்கிறியா... கூட்டம் நகராம இருக்க, எல்லார்கிட்டயும் காச வாங்கி கல்லாவில் போட்டுட்டு, அப்புறம் என்ன சரக்குன்னு கேட்கிற... கறார் பேர்வழியான மளிகைக் கடை அண்ணாச்சி என் கழுத்துல துண்டைப்போட்டு இழுக்கணும்கிறியா... எல்லாவற்றிற்கும் மேலாய், நான் நேர்மையானவன்னு என் மனசில ஒரு பெருமிதம் இருக்குதே... அது ஒரேயடியாய் ஓடிப் போயிரணும் என்கிறியா... நூறு டாலர் மிச்சம் படுத்தி இருக்கான்னு நீ கிரிக்கெட் ஸ்கோர் மாதிரி சொன்னபோது, மொத்தமா அனுப்பப் போறான்... வாக்குத் தவறாம வாங்குன கடன அடைச்கடலாம்முன்னு, நினைச்ச என்னன ஒரேடியாய் நாக் அவுட் செய்திட்டானே...."

மேற்கொண்டு பேசமுடியமல், ஆத்திரம் நாக்கை அடைக்க, ஆவேசம் தொண்டையை இழுக்க, அல்லோகல்லோலப்பட்ட ராமையா, மேஜையிலிருந்த ஒரு கவரை எடுத்து, தரையில் வீசப் போனார். நீளவாகு கவரின் அடிவாரத்தில் வீட்டுக்கதவு மாதிரி, ஜிகினா காகிதத்திற்குள், அவரது அருமைப் பையனின் பெயரும், முகவரியும் எழுதப்பட்டிருந்தது... இரண்டு கைகளையும் தலையில் வைத்தபடி, 'மோசம் போயிட்டேனே! மோசம் போயிட்டேனே!... என்றார்.... பிறகு மீண்டும் ஆவேசியாகி, எழுந்தார்... அந்தக் கவருக்குள் இருந்த காகிதத்தை, கோதையம்மாவின் முகத்திற்கு முன்னே நீட்டியபடியே கத்தினார்...

"இதோ பாத்தியா... பேங்க் கடனுக்காக இவருக்கு எடுத்த ஆறு லெட்ச ரூபா இன்சூரன்ஸ்க்கு பிரீமியம் கட்டச் சொல்லி வந்திருக்கிற ஆறாயிரம் ரூபாய் நோட்டீஸ்... உனக்கு தெரிஞ்சவங்க யாராவது இருந்தால் சொல்லு... அவங்ககிட்ட கையேந்துகிறேன்... அதுலே மிச்சம் இருந்தால், ஓம் பையன்

காருக்கு சீன் போட்டு அலங்கரிக்க அவனுக்கே அனுப்பலாம்... எல்லாம் நீ கொடுத்த இளக்காரம்... இங்க கிடைக்கிற பத்தாயிரம் ரூபாய் வேலையில சேருடான்னு நீ எப்பவாவது சொல்லி இருக்கியா... கடைசில, நான்தான் அனாதையா போயிட்டேன்... பேசாம எம்மேல கார ஏத்திக் கொல்லச் சொல்லு... இந்த இன்சூரன்ஸ் பணத்த எப்படிக் கட்டப் போறோம்?... வாங்குற சம்பளமே எல்லா பிடிப்புக்கும், மஞ்ச மசாலா அரிசிக்கும் போயிடுது... இந்த ஆறாயிரம் ரூபாய்க்கு எங்க போறது?.... எங்கேயாவது ஓடிப்போகப் போறேன்... இதனால உனக்கும் நிம்மதி... அவனுக்கும் நிம்மதி..."

ராமையா, கையிலிருந்த இன்சூரன்ஸ் கடிதத்தை கிழிக்கப் போனார்... கோதையம்மா அதை லாவகமாக பிடுங்கிக் கொண்டு, அவர் தோளில் கை போட்டாள். அவரது கட்சியின் நியாயம், அவளுக்கு புரிந்தது. அப்படிப் புரியப் புரிய, மகன்மீதிருந்த அனுதாபம், கோபமாகவும், கணவன் மீதிருந்த கோபம் அனுதாபமாகவும் மாறிக் கொண்டிருந்தன... அவளது பேச்சிலும் இது புலப்பட்டது.

'பேயனுக்கு வீட்டு நிலைமை தெரியாமப் போச்சே... பிள்ளையா அவன்... சரி... சாப்பிட வாங்க... எதுக்கும் ஒரு வழி பிறக்கும்... காலையில பேசிக்கலாம்... சரி சாப்பிடவாங்க...'

"நான், இனிமேல் இந்த வீட்டுல சாப்பிடணுமுன்னா, நீ ஒரு, வாக்குக் கொடுக்கணும்..."

"சொல்லுங்க... நீங்க சாப்பிடுறதுதான் எனக்கு முக்கியம்..."

"அடுத்த தடவை அவன் டெலிபோனுல பேசும்போது, அவன் வாங்குன கார வித்துட்டு, நமக்கு பணம் அனுப்பச் சொல்லு... சொல்வியா... சொல்லுவியா..."

கோதையம்மா கைகளை நெறித்தாள்... கண்களை இறுக்கினாள்... கண்ணாடி பிரேமுக்குள் சுருங்கிப் போன படம்போல, வலுவான எலும்புக் கூட்டிற்குள் சதையற்ற உடம்பு அங்குமிங்குமாய் ஆடியது... அவள் பேசாமல் நின்றாள்... உடனே ராமையா மீண்டும் கட்டிலில் ஏறி, குப்புறப் படுக்கப் போனார்... கோதையம்மா அவர் மார்பில், கரங்களை அணையாய்ப் போட்டு, அவரை சரியாய் உட்கார வைத்தபடியே, "சரிப்பா... எப்படியோ மனசை கல்லாக்கிக்கிட்டு சொல்லிடுறேன்... அப்படிப் பாக்காதிக... அவன் செய்ததும் நியாயமில்லை" என்றாள்...

ராமையா சாப்பிடுவதற்கு ஆயத்தமாய் எழுந்தார்... மனைவி வாக்குக் கொடுத்துவிட்டாள்... அதை நிறைவேற்றிவிடுவாள் என்ற நம்பிக்கை திருப்தியுடன் அடம்பிடித்து வெற்றி கண்ட குழந்தைபோல் எழுந்தார்... அதற்குள் டெலிபோன் சத்தம்... கோதையம்மாதான் எடுத்தாள்...

"ஹலோ, மருதுவா... மத்தியானம்தானடா பேசுனே... என்னடா நீ... எப்ப வேணும்னாலும் பேசலாம்... யார் வாரது... பஞ்சாப் பிள்ளயானாலும் அவன் என் பிள்ளைதான்... ரெண்டு நாள் என்ன... எவ்வளவு நாள் வேணுமுன்னாலும் இருக்கட்டும்... அவன்கிட்ட உனக்கு ஏதாவது கொடுத்தனுப்பணுமா... அப்பாவா... இருக்...இருக்கார்... கொடுக்கேன்... கொடுக்கேன்... அப்பாகிட்ட பேசிட்டு போனை வச்சுடாதே... ஒரு முக்கியமான விசயமா உன்கிட்ட நான் பேசணும்..."

கோதையம்மா நீட்டிய டெலிபோனை, ஒரு பயில்வான், கர்லாக் கட்டையை எடுப்பதுபோல் ராமையா எடுத்தார்... ஆத்திரத்தில் டெலிபோன் குமிழை, திருதராஷ்டிரன் வீமன் சிலையைப் பிடித்ததுபோல் பிடித்தபடியே, ஏகத்தாளமான குரலில் கேட்டார்:

"சொல்டா... அதான் நீ கார் வாங்கின மகிமையை ஒங்க அம்மா சொல்லிட்டாளே... சரி... என்ன சொல்ற... நீ ஒருத்தன்... அதுக்கு நீ இங்க வரணும்... இல்லாட்டா நாங்க அங்க வரணும்... நல்ல காரத்தானே வாங்குனே... நீ பழகின பிறகு காரை ஓட்டு... டிசம்பர்லயா... வா... வா... இல்லல்ல கண்டிப்பா நீ வரணும்... என்னடா பெரிய மனுசன் மாதிரி பேசுறே... வாங்குன கடனை எங்களுக்கு அடைக்கத் தெரியாதோ... பெரிசா பேசுறான் பாரு பேச்சு... டிசம்பர்ல கண்டிப்பா வாடா... உன் முகம் என் கண்ணுக்குள்ளேயே... கண்ணுக்குள்ளே... அழலடா... வாய்க்குள் கொசு போயிட்டு... அதனால்தான்... கண்டிப்பா வந்துடு..."

கோதையம்மா அவரை புதிராய் பார்த்தபோது, ராமைய்யா அவள் கண்களுக்குள் அகப்படாமல் டெலிபோன் பேச்சைத் தொடர்ந்தார்.

"அதெப்படிடா... கடனை அடைக்காம இருப்பேன்? இன்னும் ஒரு வருசத்திலே ரிட்டயர்டு ஆகிறேனா... அதுல மூணு லட்ச ரூபா கிராஜிட்டி வருமா... இதக்காட்டி என்னோட உதவியால தொழில் துவங்கி இருக்கானே சங்கரன், அவன்கிட்ட ஒரு லட்ச ரூபாய் கடன் வாங்கி, வாங்கின கடனை எல்லாம் அடைச்சிடுவேன். அப்படியே அவன் தராட்டாலும், இருக்கவே இருக்கு... வாலண்டரி ரிட்டயர்மெண்ட்... உனக்கெதுக்குடா இந்த அதிக பிரசங்கித்தனம்? வார பாட்டுக்கு வந்துட்டு போற பாட்டுக்கு போ... மறந்துடாதே டிசம்பர்லே கண்டிப்பா வந்துடணும்... அம்மா கிட்ட பேசணுமா... இப்பதான் அவசரமா... பாத்ரூமுக்கு போயிருக்காள்.... அப்படி ஒண்ணும் முக்கிய விஷயம் எதுவும் இல்லியே... சரி வச்சுடறேன்..."

ராமைய்யா டெலிபோனை வைக்க மனம் இல்லாமல் வைத்தார்... கோதையம்மா, அவரைப் பார்த்து குறுஞ்

சிரிப்பாய்ச் சிரித்தபடி... "என்ன மாவீரரே... என்ன நடந்தது... எங்க போச்சு... உங்க அதட்டல்? உருட்டல் என்றாள்". ராமைய்யா, அவள் கண்களை மீண்டும் தவிர்த்து வேறுபுறமாக திரும்பிக்கொண்டு யாருக்கோ சொல்வதுபோல் சொன்னார்.

"நம்ம ரெண்டு பேரையும்... கார்ல உட்கார வைச்சு பார்க்க அவனுக்கு ஆசையாம். டிசம்பர்க்குள்ள இரண்டாயிரம் டாலர் சேர்த்துவிடுவானாம்.... அந்த பணத்துல டிசம்பர் லீவுல இங்கே வந்து நம்மை பார்த்துட்டு போக ஆசையாம்... ஆனால் நமக்கு கடன் இருக்கிறதே நினைச்சு பார்த்து மனசைக் கல்லாக்கி பணத்தை அனுப்புவானாம்... பெரிய புத்தரு... இந்த வயசிலேயே ஆசைய அடக்குறார்... பிள்ளையா வளர்த்திருக்கே... பிள்ளை."

"எங்கே... இன்னொரு தடவை, என்னை பார்த்து நேருக்கு நேராய் சொல்லுங்க...."

கோதையம்மா, அந்த ஐம்பது வயது கணவரின் முகத்தை, செல்லமாகத் திருப்பினாள். அப்பொழுது, அவர் முதலிரவு கோதைபோல் நாணப்பட, இவளோ, அதே இரவு ராமைய்யாபோல் அவர் முதுகை தட்டிக்கொடுக்க இருவரும் உருவம் மாறாமலே உணர்வு மாறி நின்றார்கள்.

- 'செம்மலர்' ஆகஸ்ட் 1996.

# பாக்கு மரம்

"நீங்க சரியான பத்தாம்பசலி மேடம்.... இந்தக் கம்மலை கழற்றி எறிஞ்சிட்டுப் பேசாமல் ரிங் போடுங்க... பார்க்கிறதுக்கு அழகாய் இருப்பீங்க, அதாவது இப்போ இருக்கறதைவிட..."

அவள் கோபப்பட்டவள் போல, கதவுமேல் போட்ட இடது கரத்தையும், தங்க வளையல் அலங்கரித்த வலது கரத்தையும், இடுப்பில் அம்புக்குறிபோல் வைத்தாள். பின்னர் வாசலுக்கு வெளியே நின்றவனின் முகத்தில் அடிக்காத குறையாகக் கதவை மூடுவதற்காக, தனது கரங்களை இடுப்பிலிருந்து விடுவித்தாள். அதற்குள் அவன் முந்திக் கொண்டான்.

"நானும் என் ஸிஸ்டர்கிட்டேயும் இதுக்கு எதிர்ப்பதமாய்ச் சொல்லிச் சொல்லிப் பார்க்கேன்., எந்த ஸிஸ்டர், அண்ணனோட பேச்சைக் கேட்டாள் - இவள் கேட்கிறதுக்கு?"

அவள், இப்போது, அவனை லேசான சிரிப்போடு பார்த்தாள். அப்புறம் லேசாய் யோசித்து முகம் சுழித்தாள். அவனோ தன் கருத்துக்கு உரையாசிரியனாய் ஆகிவிட்டான்.

"ஒங்க முகம் வட்ட முகம். இந்தக் காதுங்கள்ல ரிங் போட்டால் ஒரு பௌர்ணமி நிலா பக்கத்துல இரண்டு குட்டி நிலாக்கள் வட்டமடிக்கற மாதிரி தெரியும். என்னோட ஸிஸ்டர் முகமோ, நீண்ட முகம். கம்மல் மாட்ட வேண்டிய காதுல ரிங் போட்டிருக்காள். அதனால வளையத்துக்குள்ளே நுழையற சர்க்கஸ் புலி மாதிரி தெரியறாள். எவ்வளவு பெரிய ரிங் என்கிறீங்க. அதுக்குள்ளே அவள் முகத்தையே திணிச்சுடலாம்."

அவளுக்கு, கோபமும் சிரிப்பும் ஒன்றாய் வந்தன. கூடவே எச்சரிக்கை உணர்வும் இயல்பாய் வந்தது. சீ... இப்படியா ஒருத்திகிட்டே பேசுறது...?

அவள் மனதுக்குள் கோபமாய்த்தான் "சீச்சீ" சொல்லப் போகிறாள். ஆனால் அந்த வார்த்தையோ செல்லத்தனமான சீயாகவே ஒலித்தது.

"அதோ மிஸ்டர் சுப்பு வராரே... அவர் கிட்டேயே கேட்கேன்."

அவள் பதறிப்போனாள். 'இதையெல்லாம் அவர்கிட்ட சொல்லக் கூடாதுங்க' என்று அவனிடம் சொல்லப் போனாள். பிறகு இவனிடம் மட்டும் இதை எப்படிச் சொல்ல முடியும் என்று யோசித்தாள். அவளால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. எதிர்த்திசையில் சுப்பு வந்து கொண்டிருந்தான். உடனே இவன், அவனைப் பிடித்துக் கொண்டான்.

"ஹலோ மிஸ்டர் சுப்பு... என்ன அதிசயம், ஈவினிங் ஏழு மணிக்கு வாரவங்க நாலு மணிக்கே வந்துட்டீங்க."

சுப்பு, அவனைப் பார்த்து முக்கல் முனங்கலோடு பல்லைக் காட்டினான். அதையே பதில் கேள்வியாய் உருவகப்படுத்தி இவன் பதிலளித்தான்.

"நீங்க மட்டும் எப்படி என்கிறீங்களா? என் பிழைப்புத்தான் தெரியுமே... விக்கிரமாதித்தன் பிழைப்பு... ஆபீஸாறு மாதம்... டூராறு மாதம். அதனால ஆபீஸ் ஒர்க் முடிச்சுட்டு ரெஸ்ட் எடுத்துக்க வந்துட்டேன். நாளைக்குக் குல்பர்க்கா போறேன். இருபது நாள் டூர். என்ன மிஸ்டர் சுப்பு! ஒரு மாதிரி இருக்கிறாப்போல..."

சுப்பு, தன்னையே பார்த்துக் கொண்டிருந்த மனைவியையும், அவனையும் பொதுப்படையாகப் பார்த்துவிட்டு, பொதுப் படையாகவே பதிலளித்தான்.

"லேசாய் பிரஷர். தலை சுத்துச்சு. வந்துட்டேன். ஓ.கே. மிஸ்டர் அப்பாத்துரை... நான் போய் ரெஸ்ட் எடுத்துக்கிறேன்."

"என்ன ஸார் நீங்க. பிரஷரை ஈஸியாய் எடுத்துக்கப்படாது. வாங்கோ... என் ஆபீஸ் கார் இங்கேதான் நிற்குது. டாக்டர்கிட்டே போயிட்டு வரலாம்."

சுப்பு, தர்மசங்கடமாய் நின்றபோது, அவள் கோபத்தோடு பேசினாள்.

"மொதல்ல உங்க பிரஷரைப் பாருங்கோ ஸார். நீங்க கத்துற கத்தலையும் பதறுற பதறலையும் பார்த்தால் உங்களுக்கும் இவரைவிட அதிகமாகவே இருக்கும்... மொதல்ல நீங்கதான் டாக்டர்கிட்ட போகணும்."

அவள் கணவனைக் கண்டிப்புடன் பார்த்தாள். அவன் உள்ளே போனதும், கதவைத் தாழிடப் போனாள். அப்பாத்துரை, நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருந்தான். அவள் முகம் நேருக்கு நேராய்க் கதவோடு சேர்ந்து நீண்டபோது, விலகிக் கொண்டான்.

உள்ளே வந்தவள், கணவனின் பூட்ஸ்களை எடுத்து ஒரு பக்கமாக வைத்தாள். சாய்வு நாற்காலியின் நுனியில் உட்கார்ந்திருந்தவனை, லேசாய்ப் பின்னுக்குச் சாய்த்து, அவன் நெற்றியைத் தடவி விட்டாள். பிறகு சமையற் கட்டிற்குள் ஒரு கையில் கண்ணாடி டம்ளருடனும், இன்னொரு கையில் மாத்திரையுடனும் வந்தாள். அவளின் இரு விரல்களும் கண்ணாடிக்குள் பிம்பங்களாய்ப் பிரதிபலித்து, உள்ளே இருந்த

பாதித் தண்ணீருக்கு வேலி கட்டியதுபோல் இருந்தன. அவன் தலையை இழுத்துப் பிடித்து, மாத்திரையை வாயில் போட்டுவிட்டு, டம்ளரை நீட்டினாள். அவனையே பார்த்தாள். "நீ அவரை அப்படிப் பேசியிருக்கக் கூடாது" என்று பேசுவார் என்று பார்த்தாள். பேச வேண்டும் என்று நினைத்தவள் போல், அவனையே முகத்தில் குற்ற உணர்வை அழுத்தி வைத்துப் பார்த்தாள். அவனும் பேசினான். அப்பாத்துரையைப் பற்றி அல்ல.

"சந்திரா! என்னை பெட்ரூமுக்குக் கூட்டிட்டுப் போ! தலை கத்துது. உட்கார முடியலை... என்னை லேசாய்த் தூக்குறியா?"

"அட கடவுளே... என்னங்க பண்ணுது... டாக்டரைக் கூட்டிட்டு வரட்டுமா?..."

"வேண்டாம். நீ என் பக்கத்துலேயே இருக்கணும்..."

அவள், அவனைத் தூக்கி நிறுத்தினாள். அவனைத் தோளோடு சாய்த்தபடி, படுக்கை அறைக்குள் கூட்டிப் போனாள். அவன், அவளிடமிருந்து நழுவிக் கட்டிலில் விழுந்தான். பிறகு 'தலையணை தலையணை என்றான். உடனே அவள் தலைமாட்டில் உட்கார்ந்து, அவன் தலையை மெல்லத் தூக்கித் தன் மடியில் போட்டாள். அவன், அவளை அண்ணாந்து பார்த்தான். லேசாய் உணர்ச்சிவசப் பட்டவனாய், கைகளை பின்னுக்குக் கொண்டுபோய் அவள் முதுகில் சங்கிலிப்பிடி போட்டான்.

கால்மணி நேரம் போனது தெரியாமல் போனது.

அவன், அவள் முதுகில் சுற்றிய கைகளை எடுக்கப் போனபோது, அவள் அதைத் தடுத்துவிட்டாள். அவனின் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டாள். பிறகு கேட்டாள்.

"டாக்டர்கிட்டே போகலாமா?"

"வேண்டாம். இப்போ தேவலை."

"இனிமேல் பக்கத்து வீட்டுக்காரர்கிட்டே ராத்திரியெல்லாம் அரட்டை அடிங்கோ… அப்புறம் சொல்றேன்… அந்த ஆள்கிட்டே பேசிப் பேசியே ஒங்க எனர்ஜி வேஸ்டாப் போகுது… என்ன மனிதரோ, யாரும் ஆளில்லாதபோதுகூட அவர் வாய் பேசிக்கிட்டேதான் இருக்குது…"

"மற்றவங்களைப் பற்றி நமக்கென்ன பேச்சு…"

"அதுவும் சரிதான்…. ஆமா… முடிவெட்டப் போறதில்லையா… என்னை மாதிரியே கொண்டை வச்சுக்கப் போறீங்களா?"

அவள், அவன் தலையைச் செல்லமாகக் கோதிவிட்டாள். அவன் தன் தலையை மேலே மேலே உயர்த்திக் கொண்டு போனபோது, அவள் உம் என்று அதட்டினாள். அவன் அவள் முதுகை இறுகப் பிடித்தபடியே சிணுங்கினான். அந்த இறுக்கத்திலும், செல்லக் கிறுக்கிலும் மெய்மறந்து போன அவள், தன் மடியை ஆட்டி, அவனைத் தாலாட்ட, அவன் தொட்டில் குழந்தையாகித் தூங்கிப் போனான்.

மறுநாள் காலையில், அலுவலகம் புறப்பட்ட கணவனிடம், வாசலுக்கு வெளியே வந்து சின்னஞ்சிறு சூட்கேஸைக் கொடுத்தாள். ஆறு வீடுகளை வரிசையாகக் கொண்ட அந்தக் குடியிருப்பு வராந்தாவை அப்பாத்துரை கடந்து கொண்டிருந்தான். அவனுக்கு முன்னால் பெட்டி படுக்கையோடு டிரைவர் போய்க் கொண்டிருந்தான். அவளுக்கு என்னவோ போலிருந்தது. இப்படி நெடு நாள் டூர் போகும்போது, வீட்டுக்கு வந்து சொல்லிவிட்டுப் போகிறவர்.

இன்றைக்கு ஏன் சொல்லவில்லை? எப்படிச் சொல்வார்? நான்தான் முகத்தில் அடித்தாற்போல் பேசி விட்டேனே... அவருக்கு மட்டும் சுயமரியாதை இருக்காதா என்ன...?

அவள், சுயக்கட்டுப்பாட்டுடன், கதவைச் சாத்தினாள். ஒரு நிமிடத்திற்கு மேல் அவளால் உள்ளே இருக்க முடியவில்லை. பின்கதவைத் திறந்தபடியே, பால்கனி மாதிரியான பகுதியில் நின்றாள். அதன் சுவரில் சாய்ந்தபடியே, வெளியே எக்கிப் பார்த்தாள். அவள் கணவனும், அவனும் ஜோடியாக நடந்து போனார்கள். ஒரு தடவை அவன், "பாருங்க, நம்மோட பெயர்ப் பொருத்தத்தை... நீங்க சுப்பு... நான் அப்பு..." என்று சொன்னது அவளுக்கு நெஞ்சில் மீண்டும் வேரூன்றிச் செடியாய் வளர்கிறது. வாயில் பூவாய்ப் புன்னகைத்தது. அதே சமயம், நெஞ்சுக்குள் ஒரு சின்ன நெருடல். ஆஜானுபாகுவாய் சதைப் பெருக்கமோ குறையோ இன்றி அவன் கம்பீரமாக நடந்து போகிறான். ஆனால் அருகில் அவரோ குள்ளங் குள்ளமாய் நடக்கிறார். உதிர்ந்து போகப் போவது மாதிரியான பூஞ்சை உடம்பு. இது போதாது என்று இந்த வயதிலேயே பிளட் பிரஷர்... கல்யாணத்திற்கு முன்பே இருந்திருக்கு... ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் என் தலையில்...'

அவள், தனக்குள்ளேயே 'ஏய்' என்று சொல்லிக் கொண்டாள். பின் கதவை அடைத்துவிட்டு, முன் கதவைத் திறந்தாள். கணவன் மீது, கோபப்பட்டதற்காக, தன் மீது கோபப்பட்டாள். இதற்குக் காரணமான அவன்மீதும் கோபம் வந்தது. ஒரு பெண்ணிடம் அளவோடு பழகத் தெரியாத மனிதர்...

அவள், அவனைப் பின்னோக்கிப் பார்த்தாள்.

அவளுக்கு மேற்கொண்டு சிந்திக்கக்கூட பயமாக இருந்தது. ஐந்தாண்டுக் கால இல்லறக் குடத்தில், இரண்டு மாதகாலப்

பரிச்சய நஞ்சு விழுந்துவிடக் கூடாதே என்று பயப்பட்டவள் போல், தலையில் கைபோட்டாள். சுவரில் தலையைச் சாத்தினாள்.

இந்த அரசாங்கக் குடியிருப்பில் காலியாய் இருந்த முதல் வீட்டிற்கு, அவன் வந்த மறுநாள், இவளோடும், இவள் கணவனோடும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். அறிமுகம் நட்பாகியது. இவர்களிடம் மட்டுமல்ல. எல்லோரிடமும் இன்முகமாகவே இருப்பான். குழந்தைகள் "அங்கிள், அங்கிள்" என்று முதுகில் ஏற, அவன் குதிரையாவான். கல்லூரிப் பையன்களின் கிரிக்கெட்டுக்கு அம்பயராவான். கிழவர்களோடு கிழம்போல் நடந்தபடியே வேதாந்தி ஆவான். இதுவரை இந்தச் சந்திராவுக்கு, அவன் பதவி மூலமோ குடும்ப மூலமோ துல்லியமாகத் தெரியாது. அடிக்கடி டூர் போகிற, கார் வைத்திருக்கிற பதவி. சென்னையில் வயதான அம்மாவும்... வயசுக்கு வந்த தங்கையும் இருக்கிறார்களாம். ஒரு தடவை வழக்கம்போல வீட்டுக்கு வந்திருந்தபோது, "வீட்ல எப்போ கூட்டி வருவீங்க" என்று சுப்பு கேட்டான். அவன் பேசாமல் இருப்பதைப் பார்த்துவிட்டு, "கல்யாணம் ஆகலியா?" என்று இவள் கேட்டாள். உடனே அவன் பூசி மழுப்பினான். "ஏதோ ஆச்சுது... எப்படியோ ஆச்சுது, அம்மாவும், தங்கையும்தான் உலகம்" என்றான்.

அவன் அப்போது கண் கலங்கியதை இப்போது நினைத்தபோது சந்திராவுக்கு மீண்டும் கண் கலங்கியது. அவன் மீது தான் கொண்டிருப்பது "வெறும் அனுதாபந்தான்" என்று பல தடவை வலிய நினைத்தாள். மனத்துக்குத் தெம்பு வந்தது.

இருபது நாட்களும் போய், இருபத்தொன்றாவதும் வந்துவிட்டது. இந்த நாட்களில் - சுப்பு - அவள் கணவன் தெளிவாக இருந்தான். பிரஷர் போன இடம் தெரியவில்லை.

அவளிடம், பத்து வயது குறைந்தவன் போல் நடந்து கொண்டான். சிலசமயம் மாத்திரைகளைக்கூட மறுத்து விட்டான். "பார்த்தியா... மாத்திரை சாப்பிடாட்டியும் பிரஷர் ஏறல பாரு" என்று சொல்லிக் கொண்டான்.

அவன் - அப்பாத்துரை, வந்துவிட்டான் போலும்.

அவன் வீட்டில், ரேடியோ சத்தம் கேட்டது. சந்திரா அந்தப் பாட்டுக்கு ஏற்ப முணுமுணுத்தாள். அவன் கதவைப் பூட்டும் சத்தம் கேட்டது. அவன், தன் வீட்டுக் கதவைத் தட்டுவான் அல்லது காலிங் பெல்லை அடிப்பான் என்று கதவருகே வந்தாள். எதுவுமே நடக்கவில்லை. உரக்கக் கிளம்பிய அவன் காலடிச் சத்தம், சன்னஞ் சன்னமாயக் குறைந்து கொண்டிருந்தது.

அவள், கதவைத் திறக்கப் போனாள். பிறகு அவளுள்ளும் ஒரு வைராக்கியம். 'ஒங்களை மனம்நோகப் பேசிவிட்டேன். மன்னிச்சிடுங்க....' என்று மட்டும்தான் பேசப் போனால், ரொம்பத்தான் பிகு செய்யுறார்... வீட்ல டெலிபோன்காரர்கள் டெலிபோன் பிக்ஸ் செய்வதற்காக வீட்டுச் சாவியைக் கொடுத்துவிட்டுப் போகிறவர்... ரூருக்கு முன்னாலும் கொடுக்கல, பின்னாலும் கொடுக்கல. அடியே வெளியே போகாதடி... சும்மாக்கிட, டெலிபோன் வந்துட்டான்னு ஒயரைத்தான் பார்க்கப் போறேன், அவரை அல்ல.'

அவள், கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். டெலிபோன் ஒயர் இல்லை. அதாவது அவருக்கு இன்னும் டெலிபோன் வரவில்லை. சாவியை ஏன்... என்னிடம்...?

பூட்டிப்போட்ட அவள் மனம் திறந்தது. அவன் யதார்த்தமாகவும் - ஒரு வேளை விகற்பம் இல்லாமலும் முன்பு சொன்ன கமெண்ட் இப்போது அவளுக்குக் காமனாய்த் தோன்றியது.

"மேடம்! முகத்தைப் பார்க்கிறதுக்கு மட்டும் கண்ணாடியைப் பாருங்க. ஒங்க நிறத்தையும் பார்க்கணுமுன்னால், பீர்க்கம்பூவைப் பாருங்க. மஞ்சள் ஷேட்ல சிவப்பு நிறமாய் இருக்கும். அதுதான் உங்க நிறம்."

"மேடம்... காட்டுப் பகுதிக்குப் போயிருக்கீங்களா...? கோணலான தென்னை மரங்கள் பக்கத்துல, முள்ளம் பன்றி மாதிரியான ஈச்சமரங்களின் அருகில் கன்னங்கரேலென்று இருக்கிற பனைமரங்களுக்குச் சமீபத்துல ஒரு மரவகை மட்டும் பளபளப்பாய், ஆகாயத்துக்கும் பூமிக்கும் இடையே நேர்கோடு போட்டது மாதிரி நளினமாய் ஒயிலாய் நிற்கும். அதுதான் பாக்குமரம். இந்தக் குடியிருப்புக் காட்ல வெவ்வேறு பெண் மரங்கள்ல நீங்க ஒரு பாக்குமரம். எஸ் மேடம், யூ ஆர் எ அரக்னட் ட்ரீ. வேணுமுன்னால் மிஸ்டர் கப்புகிட்டே..."

அப்போது காதுகளில் உதாசீனமாய் வாங்கிய வார்த்தைகளை இப்போது அவள் வாயில் புன்னகையாய் மென்று விழுங்கினாள். கண்களில் ஒளியாய்க் காட்டினாள். நெஞ்சிலே ஒரு சின்னச் சுகம். அதைப் பெரிதாக்குவதுபோல, அதோ அவன் வந்து கொண்டிருந்தான். அவனைப் பாராததுபோல் உள்ளே போகப் போனாள். அவனோ சிரித்தபடியே வந்து அவளை நிற்க வைத்தான். அவள் வார்த்தைகளால் கட்டவிழ்த்தாள். நெகிழ்ச்சிக் குரலில், உள்ளத்தை, தேங்கயாய் உடைத்துக் காட்டினாள்.

"என் பேர் சந்திரா. இந்த வீட்லதான் இருக்கோம். மறந்து போறதுக்கு ஆறாவது ஏழாவது வீடுல்ல."

"ஒங்களை மறக்க முடியுமா மேடம்? காட்டுப் பகுதியில் கார்ல போகும்போது பாக்கு மரத்தைப் பார்க்கேன். அப்போ ஒங்க

ஞாபகம் வருது. இதனால ஒங்களை நினைக்காமல் இருக்க முடியல. உங்களை மறக்கிறதுக்கு நீங்களே ஒரு வழி சொல்லுங்க, மேடம்..."

"அப்படின்னா பாக்கு மரத்தைப் பார்க்காதீங்க..."

"அதெப்படி... நோக்கும் இடமெல்லாம் பாக்கு மரம். பாக்குமரமே... ஹலோ மிஸ்டர் கப்பு! ஸாரி - நேற்று நைட்ல லேட்டாய் வந்தேன், அதனால ஒங்களைப் பார்க்க முடியல. எப்படி இருக்கீங்க?... காலையிலேயே வந்துட்டீங்க..."

"ஐ ஆம் பிஸி மிஸ்டர் அப்பு. புராஜெக்ட் ரிப்போர்ட்டை எடுக்க மறந்திட்டேன். ஓ.கே... அப்புறம் பார்க்கலாம்."

கப்பு மேற்கொண்டு பேசாமல் உள்ளே போனான். தொடர்ந்து வந்த மனைவிக்கு வழிவிட்டு வாசலில் கதவைப் பூட்டினான்.

அரைமணி நேரமாய் அங்குமிங்கும் குடைந்து, இருவரும் புராஜெக்ட் ரிப்போர்ட்டைக் கண்டுபிடித்தார்கள். அதைக் கையில் வைத்து உருட்டியபடியே, பேசாமல் இருந்தவனைப் பார்த்து, அவள்தான் கேட்டாள்.

"ஆபீஸ் போகலையா...?"

"நாம் நம்புறபடி எதுவும் நடக்குதா என்ன....?"

"என்ன சொல்றீங்க...?"

"பழையபடியும் தலை சுத்துது, சந்திரா, வா சந்திரா, என்னைப் பிடிச்சுக்கோ.... அய்யய்யோ."

சந்திரா, பதறிப் போனாள். அவனைக் கைத்தாங்கலாகக் கட்டிலுக்குக் கூட்டிப் போனாள். அவசர அவசரமாய்,

மாத்திரையைக் கொடுத்தாள். அவனோ தலையை, பலமாய் ஆட்டினான். அவள் பார்வையைத் தவிர்த்தபடியே, "எம்மா, எப்பா" என்றான்.

"அடக் கடவுளே... பழையபடியும் பிரஷரா... டாக்டர்கிட்டே போகலாம். ஸ்கூட்டர் கூட்டிட்டிட்டு வாரேன்..."

"வேண்டாம்... சந்திரா... நீ என்னை விட்டு எங்கேயும் போகவேண்டாம். போகப்படாது."

"அப்போ மிஸ்டர் அப்பாத்துரையை, ஆட்டோ கொண்டுட்டு வர..."

"யார் போனாலும் அந்த அயோக்கியன் போகக் கூடாது. யப்பா... எப்படி தலை சுற்றுது..."

சந்திரா, அவனைப் பிடித்துக் கொண்டாள். மெல்லத் தூக்கி அவன் முதுகைத் தன் மார்போடு சாய்த்துக் கொண்டு, நகர்த்தி நகர்த்தி படுக்கையறைக்குக் கூட்டி வந்தாள். ஆடைகளைச் சிறிது தளர்த்தி விட்டாள். தலையைத் தூக்கி, தலையணையை வைக்கப் போனாள். அவனோ அவள் மடியில் தலை போட்டான். சந்திரா... சந்திரா... என்று கூவியபடியே அவள் இடுப்பைச் சுற்றிப் பிடித்தான்.

அவள் யோசித்தாள். சத்தம் போட்டே சொன்னாள்.

"இருபது நாட்களாய் வராமல் இருந்துட்டு... அட கடவுளே!"

அவனைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு ஏதோ ஒன்று தட்டுப்பட்டது. அவனுக்குக் கொடுக்க வேண்டிய மருந்து புரிந்தது. தப்பு -- தப்பு. தானே உட்கொண்டு... அவனைக் குணப்படுத்த வேண்டிய மருந்து. யாரோ ஒருவனுக்குக் காதலியாக ஆகப்போவதுபோல் பயந்தவள், இப்போது

இவனுக்குத் தாயானாள். குழந்தைகளுக்குச் சொல்வதுபோல், குழந்தைத்தனமான செய்தியைச் சொன்னாள். நெஞ்சை நிமிர்த்தி, குரலை நிர்த்தாட்சண்யமாக்கிப் பேசினாள்.

"நீங்க பக்கத்து வீட்டுக்காரரோட சவகாசத்தைக் குறைக்கணும். நீங்க இல்லாத சமயத்துல சும்மாச் சும்மா வந்து பேசறார். மனிதருக்கு ஹார்ட்ல ஒண்ணும் இல்லதான். பட்... எனக்கு சங்கடமா இருக்குது... நீங்க ஆபீஸ் போயிட்டு வாரது வரைக்கும் நான் படும் பாடு, பெரும்பாடு."

அவன் பதிலேதும் பேசவில்லை. தன்னையே பார்த்தவளின் முகத்தை இழுத்துத் தன் மார்பில் போட்டுக் கொண்டான். அவள் முதுகைத் தட்டித் தட்டி விட்டான். பிறகு அப்படியே தூங்கிப் போனான்.

சமையல் வேலையில் கவனமாய் இருந்த சந்திரா, வெளியே இருந்து உள்ளே வந்த கணவனை அதட்டினாள்.

"பிரஷர்தான் விடமாட்டேங்கே. ஏன் வெளில போனீங்க...?"

"இப்போ பிரஷர் இல்ல. துப்புரவாய் இல்லை. சந்திரா... சந்திரா... ஒரு விஷயத்தைக் கேளேன்... பக்கத்து வீட்டுக்காரன் கிட்டேதான் போனேன். 'ஏன் ஸார், நான் இல்லாத சமயத்துல என் ஒய்புகிட்டே பேசுனே'ன்னு அதட்டினேன். ஆசாமி பயந்துட்டான். அய்ந்து நிமிஷம் பித்துப் பிடித்தவன் மாதிரி இருந்தான். அப்புறம் அயாம் ஸாரி, தப்பு என் மேலதான். இதுமாதிரி இனிமேல் நடக்காதுன்னான். குவார்ட்டர்ஸக் காலி செய்துவிடுவானாம். ஆசாமி பேச்சுலதான் வீரன். ஆனால் பயந்தாங்கொள்ளி. நான் எச்சரித்ததும் படுக்கையில் குப்புற விழுந்தான். சரி... நான் ஆபீஸ் போயிட்டு வாரேன்... இனிமேல் நான்கூட இவன்கிட்டே பேச மாட்டேன்... எதுவும் ஹார்ட்ல

இல்லன்னு நீ சொன்னதைச் சொல்லல. சொன்னால் குளிர் விட்டுடும்."

சுப்பு, போய்விட்டான்.

சந்திரா, கைகளைப் பிசைந்தாள். வியர்த்துக் கொட்டிய முகத்தைத் துடைக்கும் சுரணை கூட இல்லாமல் வெளியே வந்தாள். அப்போது கதவை மூடிவிட்டு, வெளியே வந்தவள் அப்பாத்துரையைப் பார்த்துவிட்டு வீட்டிற்குள் ஓடோடி வந்தாள். அவன் தனது வாசலைக் கடக்கும்போது கதவைப் படாரென்று ஒப்பாரி வைப்பதுபோல் சாத்தினாள். அவன் "இதுக்கு மேல யாரும் என்னை அவமானப்படுத்த வேண்டாம். குடித்தனத்துக்கு மட்டுமில்ல... குடியிருப்பு பகுதியில் வாழக்கூட ராசியில்லாதவன் நான். வேற வீடு பார்க்கத்தான் புறப்படுறேன்" என்று நின்று நிதானித்துச் சொல்வது கேட்டது.

சந்திரா, கதவைத் திறக்கப் போனாள். 'ஒங்க முகத்தில் விழிக்க எனக்குத் தகுதியில்லன்னுதான் கதவை மூடினேன்' என்று தனக்குத் தானே அரற்றினாள். ஆனாலும் -

திருமதி சந்திரா சுப்பு, கதவைத் திறக்கவில்லை. வாயில் அரற்றியபடி வாசலுக்கு வந்து சொல்லவில்லை. எப்படிச் சொல்ல முடியும்?

அப்படிச் சொன்னால், குளிர்விட்டு விடாதா? - அதாவது அவளுக்கு....

- கல்கி, விடுமுறை மலர் - 1987

# ஏகலைவன் பதிப்பகத்தின் வெளியீடுகள்

1. ***ஒரு மாமரமும் மரம் கொத்திப் பறவைகளும்***
*சிறுகதைத் தொகுப்பு - 1996* *விலை ரூ.* 40

2. ***எனது கதைகளின் கதைகள்***
*கட்டுரைத் தொகுப்பு - 1996* *விலை ரூ.* 45

3. ***மூட்டம்***
*நாவல் - 1996* *விலை ரூ.* 30

4. ***பாலைப்புறா***
*நாவல் - 1998* *விலை ரூ.* 75

5. ***கோரைப்புற்கள்***
*சிறுகதைத் தொகுப்பு - 1998* *விலை ரூ.* 35

6. ***ஈச்சம்பாய்***
*சிறுகதைத் தொகுப்பு - 1998* *விலை - ரூ.* 35

➘ முதல் மூன்று படைப்புகள், 26-7-97 அன்று, கலைஞர் முதல்வர் அவர்களால் சென்னையில் வெளியிடப்பட்டன.

➘ மத நல்லிணக்கத்தை வற்புறுத்தும் மூட்டம் நாவல் 16-9-98 அன்று சென்னைக் காமராஜர் அரங்கில் நடைபெற்ற அகில இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி மாநாட்டில், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த விடியல் கலைக் குழுவால் நாடகமாக அரங்கேறியது. இந்த நாவல் சென்னைக் கிறித்துவக் கல்லூரியிலும், திருச்சியில் புனித சேவியர் கல்லூரியிலும், பாலக்காடு பல்கலைக் கழகத்திலும் பாடநூல்.

➘ பாலைப்புறா - சென்னை வானொலி நிலையத்தின் மூலம் நாவல் வாசிப்பாக ஒலிபரப்பானது. மாநில சுகாதார அமைச்சர் திரு.ஆர்க்காடு வீராசாமி அவர்களால் வெளியிடப்பட்ட எய்ட்ஸ் விழிப்புணர்வு நாவல்.

➘ விலைக்குரிய பணம் அனுப்பினால், நூலை அனுப்புவதற்கான தபால் செலவையோ, அல்லது கூரியர் செலவையோ பதிப்பகம் ஏற்றுக் கொள்ளும்.

சு. சமுத்திரம் இன்றைய இயல்பையும் நாளைய யதார்த்தையும் தொலை நோக்கில் கலந்து எழுதும் மக்கள் எழுத்தாளர்களில் ஒருவர். என்றாலும் இந்த இலக்கியத்திலிருந்து உடனடி பயன்பாட்டு இலக்கியம் என்ற ஒரு வகையைமகிளை பிரித்திருக்கிறார்.

இவரது வாடாமல்லி. பாலைப்புறா நாவல்கள் இதற்கு எடுத்துக்காட்டுகள். வாடாமல்லி பாவப்பட்ட அலிகளை. அரானிகள் சங்கம் என்று ஒரு குடையின் கீழ் கொண்டுவந்துள்ளது. இவரையும் அதில் ஒன்றிக்க வைத்திருக்கிறது. ஒரு எய்ட்ஸ் நோயாளி. தனது எதிர்காலத் துணைக்குத் தெரியப்படுத்தாமல் திருமணம் செய்யக்கூடாது என்ற பாலைப் புறாவின் மையக் கருத்து அலட்சியப்படுத்தப்பட்டபோது. அதே கருத்து இப்போது உச்சநீதிமன்றத் தீர்ப்பாகி உள்ளது.

